AHB 1038/75

அனுபோக வைத்திய நவநீதம்

முதற் பாகம்

LC
N75.1
113879

தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
மருத்துவநூல் வெளியீட்டுக்குழு
1975

வெளியீட்டுத் தொடர் எண் : 1

அனுபோக வைத்திய நவநீதம்

முதற் பாகம்

ஆசிரியர் :

ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்

COMPLIMENTARY

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது.

கி.பி. 1975 விலை ரூ.

முதற் பதிப்பு : 1905

இரண்டாம் பதிப்பு :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சி. ம. நூ. வெ. குழு—1975ஆம் ஆண்டு

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

அச்சிட்டோர் :

இரத்தினம் கிளை அச்சகம்,
65, திருப்பள்ளி தெரு,
சென்னை-600001.

அருள்மிகு
பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி.எஸ்ஸி. அறங்காவலர்

திரு என். நாச்சிமுத்து எம். எல். ஏ. ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ. ,,

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ் கோதண்டபாணி பி.எஸ்ஸி ,பி.எல்.
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி.

அருள்மிகு
பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி.ஸி.ஐ.எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர்குழு
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். — உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி.எஸ்ஸி., பி.எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். — ,,

டாக்டர் பு. மு. வேணுகோபால் எச்.பி.ஐ.எம்., ... சிறப்பு
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, — அழைப்பினர்
சென்னை-600029.

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு

உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. — தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச்.பி.ஐ.எம்.
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, — செயலர்
சென்னை-600029. — உறுப்பினர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச்.பி.ஐ.எம்.
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை
சென்னை-600005. — உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்
இராமநாதபுரம். — ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஐ.
மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வடஆற்காடு. — ,,

6. டாக்டர் எ. சிறில்ஹென்றி எல்.ஐ.எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. — ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜீ.ஸி.ஐ.எம்.
தலைவர்,
தமிழக அரசு இந்திய மருத்துவமத்தியக் கழகம்,
சென்னை-600005. உறுப்பினர்

8. டாக்டர் ப. சிற்சபை ஆர்.ஐ.எம்.பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை-600005. ,,

9. பண்டிட் பெ. முத்துகருப்பப்பிள்ளை ஆர்.ஐ.எம்.பீ.
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை. ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், செண்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என். சேது ரகுநாதன்,
தமிழ்ப்பேராசிரியர், விருதுநகர். ,,

12. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை,
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை. ,,

சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன், குருசிரோன்மணி பி.ஏ., ஜி.ஸி.ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எல்.ஐ,எம்.,
பேராசிரியார், மேல் பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி,
கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஹைதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் பி.எஸ்ஸி,
எம்.டி.எம்.ஆர்.சி.பி. (லண்டன்)
சென்னை-600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., அவர்கள்

அளித்த

அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழிவழியாகவும் கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளி வந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாண

வரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்பு நோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப் படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும்—அதன் தலைவர் பு. மனோகரன் அவர்களும்—இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன் வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே அனுபோக வைத்திய நவநீதம்—ஒன்று முதல் பத்துப் பாகங்களும் அவற்றின் திறவுகோலும்—ஆகும் இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் வெளிவருவது மிகுந்த பயன் தர வல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர்—சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்—இளமை முதலே—தமது முன்னோர்தம் மருத்துவக்

கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று, தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து, தெளிந்து—உலகோர்க்குப் பயன்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள்—இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு—ஒளி காண்பதற்கு வழிகண்ட வல்லுநரில் அவர் தலை சிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்ற லுடனும், நெறியுடனும், பொறுப்புடனும் எளிய இனிய தமிழில்—இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம்—ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எந் நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

" மிகக் கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும். சிறப் புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

> "அறுவை செய்தல் முதலிய இரண மருத்து வத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கிலவைத் தியமே அதிகம் சிறந்தது ; ஆனால், நாட்பட்ட நோய் களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு. மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரம மாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை.'' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகு மாறு—மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற—ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு,

> "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்."

என்னும் குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப் படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
20-3-1975.

க. அன்பழகன்

இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ் மொழி; அதுபோல் தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம், கடற்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில, மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம்மருத்துவக் கலையைத் தொன்று தொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சி சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவ மனைகளையும் அமைத்து இயங்கச் செய்து

சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறு மலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப் படி கற்பிக்கப் போதிய பாட புத்தகங்களும் முதல் (மூல) நூல் களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாட புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட், வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளி யிட்ட நஞ்சுநூல், பாலவாகடம் என்னும் நூல்களைப் பார்வை யிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லாநெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாட நூல்களும் துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவ தாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட் டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்ட வணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணி கள் செய்ய (Pharmacopea Committee 1966 G. O. M. S. 2163 Dt. 23—8—60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற்குழு என்று (G.O.M.S. No. 1060 Health Dt. 13—6—66) ஒரு குழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளி வந்தன.

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும் ஒரு குழுவைத் (G.O.M.S No. 2571 of 23—10—73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச் சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளி வந்து விற்பனையில் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப்படிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக்கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகுவிரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் "அனுபோக வைத்திய நவநீதம்" பத்துப் பாகங்களும் திறவுகோலும் வெளியிடப் படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை, ஜார்ஜ் டவுனில் அப்பு மேஸ்திரி தெருவில் 12ஆம் எண்ணுள்ள வீட்டில்

வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித் தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த யூனானி ஆகிய இருமுறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்க தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவமனையும், மருந்து செய்சாலை யும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர்நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரை நடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல், அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மை யால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன் பதிப்பிலி ருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்து பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப் படுகிறது. இந்த பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல்வார்க்கு மிக நன்றாக விளங்கும். அவ் வந்நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்கு பெருந் தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர் திரு. க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப் பித்தார், மேலும் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோ கரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக் கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள்

விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகளுக்கிடையேயும் இக்குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு வி. எஸ். கோதண்டபாணி, பி.எஸ்ஸி., அவர்களுக்கும், இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து வரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக்குழுத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும், பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் எச்.பி.ஐ.எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சடிக்கும் தாள்கள் அடக்க விலையில் திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து மிகவிரைவில் கிடைக்கும் படி செய்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும் இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக் குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வை. முரு. முத்துக்குமாரசாமி, வ. வே. வாசுதேவன் ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய சித்த மருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு. கே. சீனிவாசன், திரு. மு. சௌரிராசன் ஆகியோருக்கும், அந்நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருத்துவர்கள் திரு. டி. வி. கல்யாணசுந்தரம், திரு. மு. பூசலிங்கம் ஆகியோருக்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக்கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக்குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
தலைவர்,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி,
திருக்கோயில் சித்த மருத்துவ நூல்
வெளியீட்டுக்குழு.

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

முதற்பதிப்பின் முகவுரை

சகோதரர்களே! இந்த அருமையான நூலை அச்சிட்டு வெளிப்படுத்த யான் பலவந்தப்படுத்தப்பட்ட காரணம் இன்னதென இதன் அடியில் கூறப்படும் கருத்துகளால் வெள்ளிடை மலையேபோல தெள்ளிதாய் விளங்கும்,

கடவுளின் அருளினாலும், பெரியோர்களின் வாழ்த்துதவி னாலும், பற்பல மருத்துவ அறிஞர்களின் துணையினாலும் அடியேனால் இயற்றப்பட்டவைகளும், வெளிப்படுத்தப்பட்ட வைகளுமான யூனானி வைத்திய தாதுவிருத்தி போதினி முதல் சரபேந்திர கப மருந்து மஞ்சரி ஈருகவுள்ள பல உயரிய யூனானி தமிழ் வைத்திய நூல்களை யாவரும் ஏற்றுக்கொண்டு அவற்றில் சொல்லி இருக்கப்பட்ட மருத்துவ நடைமுறைகளைக் கையாண்டும் நமது இராச மருந்துசாலையில் விற்கப்படும் பற்பல மருந்துகளைக் கையாண்டும் அளவிறந்த பயன்களை அடைந்து ஆனந்தித்து வருவதைக் கடிதமுகத்தானும், பிற வாற்றானும், எமக்கறிவித்து நம்மைப் பலவிதத்தாலும் ஊக்கப் படுத்தி ஆதரித்துவரும் நாட்டுப்பற்று மிகுந்தவர்களான பல வள்ளல் பெருமக்களின் நற்கோரிக்கை யாவது :—

தற்காலத்தில் ஆங்கில வைத்தியமானது எங்கும் விரை வாகப் பரவி வருகிறது. நமது அருட்தன்மையுள்ள அரசினர் தம் குடிமக்களின் நலன்கருதி ஒவ்வொரு சிற்றூரிலும் கூட ஒவ்வொரு மருத்துவமனை ஏற்படுத்தி, அதன் மூலமாக யாவ ருக்கும் பலவித நன்மைகளைச் செய்து வருகின்றனர். ஆனால் நமது நாட்டு வைத்தியமோ 'தாயற்ற சேயைப்போல' எடுப்பார் கைக்குழந்தையாகவும், வளர்ப்பார் கைக்குழந்தையாகவும் சீர்கெட்டிருக்கின்றது. நம்மவர்களுள் அநேகர் சொல்கிற பயனில்லாப் பேச்சிற்கு ஓர் அளவில்லை. தகுந்த ஆசானிடத் தில் ஒழுக்க முறையோடு பல சாத்திரங்களையும் கற்றுப் பல்லாண்டு அனுபவசித்தி பெற்று மருத்துவனாக வேண்டியது முறை. அவ்விதமானவர்கள் நூற்றில் இரண்டொருவர் தேறு வதும் மிக அரிது. அதற்கு மாறாகப் பெரும்பாலார் "தான் தோன்றித் தம்பிரான்கள்தான்." சாத்திரங்களின் பெயரை யும் கேட்டறியார்கள். மருத்துவமென்பதும் இன்ன தன்மைய தெனத் தெரியாது. தம் நாட்டுமொழி, தம் தாய்மொழி

ஆகியவைகளில் எதுவும் செம்மையாகத் தெரியாது. முற்காலத்தில் எல்லா நாட்டிலும் மருத்துவமானது சிறந்த தொழிலாய் இருந்தது. தற்காலத்திலோ இது இங்கு மலிந்த தொழிலாகிவிட்டது. இது உழைப்பில்லாத பிழைப்பாக இப்போது மதிக்கப்பட்டு இருக்கிறது. கண்டவர்களும் மருத்துவர்களே; நின்றவர்களும் மருத்துவர்களே; வந்தவர்களும் மருத்துவர்களே; இருந்தவர்களும் மருத்துவர்களே; பார்த்தவர்களும் மருத்துவர்களே; அயல்வீட்டாரும் மருத்துவர்களே; எதிர்வீட்டாரும் மருத்துவர்களே; துறவியரும் மருத்துவர்களே; சாமியார்களும் மருத்துவர்களே; குருமார்களும் மருத்துவர்களே; பச்சிலை விற்பவர்களும் மருத்துவர்களே; சரக்கு விற்பவர்களும் மருத்துவர்களே; மருத்துவமனை, மருந்து கடைகளிலும் உள்ள எலிக்குஞ்சுகளும் மருத்துவர்களே; அங்குள்ள பூனைக்குட்டிகளும் மருத்துவர்களே; அங்குள்ள பானை சட்டிகளும் மருத்துவர்களே; 'எதிர்த்துப்பேச எவருமே இல்லாவிட்டால் எங்களப்பன் சண்டப்பிரசண்டன்' என்பது போல கேள்விமுறை இல்லாதபடியால் டாக்டர், ஹக்கீம், பண்டிதர், மருத்துவர் ஆகிய பட்டங்களை (அள்ளி எரியுங் கிள்ளுக்கீரைப்போல பாவித்துக் கள்ளிக்கட்டைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல்) தாங்களே சூட்டிக்கொள்கின்றார்கள். கண்டிப்பான ஒரு ஏற்பாடு உண்டாகி இருந்தால் இப்படிக் கனவிலும் நடவாது. இவ்விதம் நமது மருத்துவம் இப்போது இங்கு வரன்முறையின்றி பதங்குலைந்து அலைந்து கிடக்கின்றது.

ஆகையால், நமது அருட்தன்மை உள்ள அரசினர் ஆங்கிலமுறை வைத்தியத்தைக் கவனிப்பது போலவே இதையும் சற்றுக் கவனித்து இன்னின்ன சாத்திரங்களில் தேர்ந்து தேர்வு கொடுத்துத் தகுதிச் சான்றிதழ்கள் பெற்றவர்களே மருத்துவம் செய்யவேண்டுமென ஒரு ஏற்பாடு செய்தால், இந்த அருமையான தொழில் இவ்வளவு கீழ்நிலையை அடையுமா? ஒருபோதும் ஆகாதே. தாமே இரண்டுவரி எழுதச் சக்தி இல்லாவிட்டாலும் (கூலிக்கு மாரடிக்கச் செய்வதுபோல) கூலி கொடுத்து விளம்பரங்களை எழுதுவித்து இலட்சக் கணக்காக அச்சடிப்பித்து வெளிப்படுத்தி வருகின்றார்கள். சத்தியம் அசத்தியமென்னும் இருவகையிலும் விளம்பரம் வெளிப்பட வேண்டியது அவசியமோ? இவ்விருவகையிலும் எதுமெய், எதுபொய், என எப்படி அறியக்கூடும்? விளம்பரத்தை வெளிப்படுத்துகிறவர்கள் கல்வி, அறிவு, கேள்வி, செய்முறைப் பயிற்சி ஆகியவைகளில் எவ்வளவு தேர்ச்சி அடைந்

தவர்களென அவர்களை நேரில் சென்று கண்டு பேசித் தெரிந்து நிச்சயிக்க எவர்கள்தாம் முயல்கின்றார்கள்? உண்மையில் ஒருவருமே அப்படி முயற்சி செய்வதில்லை. அப்படிச் செய்ய நேர்ந்தால் அநேக போலி மருத்துவர்கள் பதுங்கி ஒதுங்கிவிட நேரிடும். ஐயோ! பாவம்! தூரத் தொலைவிலுள்ளவர்களும், இச் சூதை அறியாத பேதைகளும் என்ன செய்வார்கள்? விளம்பரங்களில் எழுதி இருக்கும் மாயா சால வார்த்தைகளை யும் விலை மலிவையும் கண்டு மகிழ்ந்து ஏமாந்து போகின் றார்கள். இவ்விதம் விளம்பர மருத்துவம் மிகுந்து நமது நாட்டு மருத்துவம் சீர்குலைந்து கிடக்கிறது.

தற்காலத்தில் தமிழில் வெளிப்பட்டுலவும் மருத்துவ நூற் களின் தன்மைகளைச் சற்றுக் கவனத்துடன் பார்ப்போமாகில், அங்கும் பல குறைகள் நிறைந்தே கிடக்கின்றன. இப்போது அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டு இருக்கும் நூற்களுள் பெரும் பான்மையும் செய்யுட்களாகவே இருக்கின்றன. அவ்வகை நூற்களை ஆழ்ந்து ஆராய்ந்தாலோ அந்த ரிஷி செய்தது இந்த முனி செய்தது என்னும் போலி விசித்திர பெயருடையவர்களே யொழிய உண்மையாக அம் மகான்களால் செய்யப்பட்ட வைகள் அல்லவென்பதைக் கல்வியறிவும், பல மருத்துவநூற் பயிற்சியும் உள்ள திறஞ்சார்ந்தோர் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்வார்கள்.

உரைநடையில் வெளிவந்திருக்கும் நூல்களுள் சிறு பான்மைதான் உண்மையானவைகளும் நம்பத்தக்கவைகளு மாம். ஆனால் அவற்றில் நோய்களின் குறிகுணம் முதலிய வைகள் சொல்லப்பட்டு இருக்கின்றனவே ஒழிய மருந்து முறைகள் அதிகமாகச் சொல்லப்படவில்லை. வேறு சில நூல் களோ? பலவித வியப்பான பெயர்களோடு வெளிப்பட்டிருப் பினும் அவற்றிலுள்ள பாகங்களில் பெரும்பான்மையும் நிச்சயப் படுத்தப்படாத அச்சுப் புத்தகங்களில் கண்ட கண்ட பாகங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கிக் கீழ் மேலாகவும் மேல்கீழாகவும் புரட்டி எழுதப்பட்டவைகளே அன்றி உண்மையானவைகளும் உறுதியானவைகளும் நம்பத் தக்கவைகளும் அனுபவசித்தி பெற்றவைகளும் அல்லவென்பது பல மருத்துவநூல் பேரறிஞர்களின் கருத்துமாகும். மேலும் அந்நூற்கள் தகுந்த மருத்துவர்கள் மூலமாக வெளிவராததன் காரணம் நிறை அளவு, செய்முறை, அளவு முதலியவைகளில் பெருத்த வேறுபாடுகள் இருக்கின்றபடியால், அவை நூலறிவு, புத்தி, உத்தி, பட்டறிவு ஆகியவைகளுக்கு ஒவ்வா.

இவ்விதம் வெளிவந்த நூல்களைத் தகுந்தவர்களைக் கொண்டு பரிசோதிக்கப் பெருமல் புலிக்குப் புளியென்றும், வராகனெடைக்கு வீசையென்றும், பத்தியத்திற்குப் பயித்திய மென்றும் பலவாருக வழுக்களை நிறைத்து வெள்ளைத் தாளைக் கறுப்பாக்கி அச்சுப் புத்தகமென வெளிவந்து தலைவிரித்து ஆடுகின்றன. ஆகையால் இவைகளில் எது சத்தியம், எது அசத்தியம் , என நம்புவது ?

பழக்க வன்மையுள்ள மருத்துவர்கள் மூலமாக வெளியிடப் பட்டிருக்கும் நூல்களைப்பற்றி ஒருவருமே ஒன்றும் சொல்லார் கள். அவ்வகைப் புத்தகங்களை யாவரும் ஏற்றுக் கொள் வார்கள்.

மிகக் கொடிய நோய்களையும் அறத் தீர்க்கும் பற்பம் செந் தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பது போல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கின்ருர்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத் துவம் ஆகிய இரண்டினும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டி தர்களின் தீர்மானமாவது : அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கிலமுறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய் வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகஞ் சிறந்தது ; ஆனல், "நாட்பட்ட நோய்களையும், பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத்தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானது. அவற் றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங் களே மிக மேன்மை பெற்றது" என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும், சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

நாட்டு மருந்துகளின் அருமையும் பெருமையும் இப்போது தான் நம்மவர்களுக்குப் பழக்கத்தில் தெரியவந்து அவைகளில் நம்பிக்கை உண்டாகி வருகின்றது. ஆங்கில மொழியில் பீ.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர்களுள் அநேகருக்கு நம் நாட்டு மொழி, நம் நாட்டு மருத்துவம், நம் நாட்டுக் கலாசாரம்

ஆகியவைகளில் ஒருவகை அருவருப்பிருந்தது. இப்போது அது நீங்கி அவர்களுக்கும் நமது நாட்டு மருத்துவ நூல்களில் விருப்பமும் நம்பிக்கையும் உண்டாகி வருகிறது. இவற்றிற்கு அறிகுறியாகக் கல்கத்தா, பனரஸ், தமிழ்நாடு, டில்லி முதலிய நகரங்களில் ஆயுர்வேத பாடசாலை, யூனானி மருத்துவ பாடசாலை ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

இன்னண பல காரணங்கள் பற்றிப் பலதடவைகளில் அனுபவசித்தி பெற்றவைகளும் மருத்துவநூல் கருத்துப்படியும் நம் நாட்டில் இலகுவாகக் கிடைக்ககூடிய பச்சிலைகள் சம்பந்த மானவைகளும் எல்லோராலும் செய்துகொள்ளக் கூடியவை களுமான பற்பங்கள், செந்தூரங்கள், மாத்திரைகள், இளகங்கள், சூரணங்கள் முதலிய நானுவகை மருந்துவகைகள் அடங்கிய ஒரு திட்டமான நூல் அடியேனுல் வெளிப்படுத்தப் படவேண்டும் என்பதேயாம்.

ஆனுல், அடியேன் இவ்வளவு உத்தரவாதமான வேலைக் குத் தகுந்த அவ்வளவு சக்தியுள்ளவனுக இல்லாவிட்டாலும், நம்மைப் பலவிதத்திலும் ஆதரித்து மேன்மைப்படுத்திவரும் நாட்டுப்பற்று உடையவர்களின் நன்னேக்கத்தை அவல மாக்கத் திடமற்றவனுய் அடியேனது சக்திக்கு ஏற்றவாறு முயற்சி செய்து அவ்வித நூலை எவ்விதத்திலும் வெளியிட வேண்டும் என்னும் அடங்கா ஆவலும் விருப்பமும் உண்டாயின.

அதைத் தவிரவும் அடியேனது பெருமைக்குரிய தாய் ந்தையர்களின் இருவழியிலும் பரம்பரை மருத்துவர்களே; அவர்களுள் அநேகர் சிறந்த கலைஞர்களாகவும் புகழ்மிக்க மருத்துவ அறிஞர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கைப்பழக்கமாய்ச் சிறப்பாக முடிந்த முறைகளை அட்டவணை ரூபமாக எழுதி மிக மறை பொருளாக வைத்து வந்தார்கள். இவ்விதம் அநேக நூற் ருண்டுகளாகச் செய்யப்பட்டு வருவதால் ஒவ்வொரு வகை களிலும் பல நூற்றுக்கணக்கான முறைகளாய் நிறைவாகி வந்தன. (துறைகோடி தொந்தங்கோடி என்பது சத்திய வாக்கு.) அவ்வித நூல்கள் எல்லாம் இறையருளாலும், பெரி யோர்களின் வாழ்த்தினுலும் பொற் புதையலைப்போல ஒரு அற் புதமாக அடியேனிடம் வந்து சேர்ந்தன. (இது என்ன தேவ மறைபொருளோ! அல்லது உலகத்தாரின் நல்வாய்ப்போ! அல்லது, நல்வினையாளர்களின் நல்லெண்ணத்தின் பலனே!

அல்லது அவர்களின் உழைப்பெல்லாம் வீணே இழந்திடாமல் அவர்கள் பேரும் புகழும் நிலேத்திருக்க வேண்டுமென்னும் கட்டளேயோ!)

இன்னும் அடியேனும் இளமைக் காலந்தொட்டே இத் தொழிலிலேயே அதிக விருப்பமுள்ளவனுகப் பல மகான் களுக்குத் தொண்டுசெய்து வந்தபடியால், அவர்கள் மிகக் கருணையுடன் அநேக அருமையான பாகங்களேயும் நூற்களேயும் தந்து வாழ்த்தி இருக்கின்ருர்கள்.

இவையன்றி, அநேகப் பெரியோர்கள் மிகுந்த விருப்ப முடன் வலியவந்து பல மறைவான முறைகளேயும் பல அரிய நூற்களேயும் தந்து (தொட்டது துலங்கும்படி இறைவன் உதவி புரிவாராக) என வாழ்த்தியும் இருக்கின்ருர்கள்.

இத்தகைய உதவிகள் இருந்தும் என்னே? முன்ஞேர்களின் கொள்கையைப் போலவே இவ்வளவு மிக மறைவான முறை களே அச்சிட்டு வெளிப்படுத்தலாகாது. நமது வழிவந்தவர் களுக்கே சொந்தமாக வைக்க வேண்டும் என்னும் கொள்கை யானது வெகு காலமாக அடியேன் மனதில் குடிகொண்டு இருந்தது. அப்படி அது தோன்றும் போதெல்லாம் மனசாட்சி யானது அதற்கு மாருகவே எதிர்த்துச் 'சுயநல நோக்கத்தைக் காட்டிலும் பொதுநல நோக்கம் உடைத்தாயிருப்பதே ஆண் மைத் தன்மை' என்று இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள பேதா பேதத்தை எடுத்துக் காண்பித்து வற்புறுத்தி வந்தது. அவை பின்வருமாறும் :—

நல்வாய்ப்பினுலும் பல தொல்லேகளுக்கு இடையிலும் இவ்வருஞ் செல்வமானது சிதைவுருவண்ணம் பலமான ஒரு அரணுள்ள ஓரிடத்தில் காப்பாற்றப்படல் வேண்டும். அங்கு கள்ளர், நெருப்பு, வெள்ளம் முதலிய ஆபத்திற்கு உள்ளாகிச் சேதமாகாமல் நலமுற்று இருக்கவும் வேண்டும். அது எல் லோருக்கும் பயன்படும்படியாகவும் இருக்க வேண்டும். அதனே எவ்வளவாகச் செலவிட்டாலும் அது குறையாமல் நிறைவாகவும் இருக்க வேண்டும். இத்தனே நிபந்தனேகளுக் கும் மேற்கண்ட இரண்டு வகைகளுள் எதில் அடங்கி இருக் கின்றன என்பதே ஆய்வாகும்.

அடியேனது வழிவந்தவர்களுக்குச் சொந்தமாக வைக்க வேண்டியதாய் இருந்தால், எத்தனேபேர்கள் இருக்கின்ருர் களோ அத்தனே பேர்களுக்கும் அத்தனே படிகள் கைம்முறி யாகவே எழுதல் வேண்டும். அதற்காக அடியேனே எழுதவும்

வேண்டும். பிறரால் எழுதுவித்தால் முறைகள் வெளியாக ஏதுவாகும். ஒருசார்பின்றிச் செய்யவேண்டும். ஆகையால், ஒன்றைப் போலவே எல்லாப் படிகளும் வகை விபரமாகவும், வெளியாகவும், தெளிவாகவும் எழுதப்படல் வேண்டும். ஏனெனில், சாதாரணமாய் நாம் குறிப்பெழுதி வருவதெல்லாம் மாற்று மொழியாகவும், வேற்று மொழியாகவும் மறைவாகவும் குறிப்பாகவும் எழுதி வருவது வழக்கம். இவ்விதமே அந்தப் படிகளிலும் எழுதப்பட்டு இருக்கின்றன. இக் கருத்துகளை எல்லாம் தெரிந்தவர்களிடம் அல்லது பழக்கப்பட்டவர்களிடம் கேட்டறிந்து கொள்ள வேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் ஒருபோதும் செம்மையாக விளங்காது என்பதே. ஆகையால், இவ்விதங்களாகச் செய்வது அடியேனுக்கு மிகமிகக் கடினமானதே. ஒருவேளை அப்படியே செய்யினும் எல்லோரும் ஒருவரைப் போலவே பாதுகாப்பது சாத்தியமாகுமா? ஒருபோதும் ஆகாதே. உலகத்தின் சுபாவம் அப்படியன்றே. எல்லோரும் ஒருவரைப் போலவே அப்படிப் பாதுகாப்பினும் எலி, சிதல், களவு, நெருப்பு முதலியவைகளால் உண்டாகும் அபாயத்திற்கு உள்ளாகாமல் இருக்குமென்பது என்ன நம்பிக்கை? அப்படி அபாயத்திற்கு உள்ளாகாமல் இருந்தாலும் இச்சிலர் உலகம் முழுவதற்கும் நலனை உண்டாக்குவார்கள் என்பது சாத்தியமாகுமா? இது ஒருபோதும் இருபோதும் முப்போதும் ஆகவே ஆகாது.

ஆகையால் மேற்கண்டபடி நம் வழிவந்தவர்களை முன்னிட்டு மாற்று மொழியாகவும், வேற்று மொழியாகவும் மறைப்பு மொழியாகவும் (பரிபாஷை) இருப்பதை நமது நாட்டுமொழியாகிய தமிழ் மொழியில் எளிய நடையாகவும், கரவாக இருப்பதைத் தெளிவாகவும், மறைவாக இருப்பதை வெளிப்படையாகவும், குறிப்பாக இருப்பதை விரிவாகவும் எழுதி அச்சிட்டு இவ்வரும்பெருஞ் செல்வத்தைப் பல மக்கட்குழுக் களஞ்சியத்தில் பத்திரப்படுத்தி வைப்பதினால், மேற்கண்ட எல்லா நிபந்தனைகளுக்கும் ஏதுவாகி விடுகிறதென்பது உலகேற்கும் கருத்தாம்.

இவ்விதம் வெளிப்படுத்தக் காரண கர்த்தாக்கள் யார் எனின் :—அக்கீம் ஆதம் சாகிபு, சிரஞ்சீவி முகம்மது அப்துஸ் சலாம் சாகிபு, சிரஞ்சீவி முகம்மது அப்துர் ரஹ்மான் சாகிபு, சிரஞ்சீவி முகம்மது அப்துர் ரஹீம் சாகிபு, சிரஞ்சீவி முகம்மது தாவூத்பாட்சா சாகிபு ஆகியவர்களேயாம். அல்லாகுத்த ஆலா இவர்களுக்கு நீண்ட ஆயுளைத் தருவானாக.

மேற்கண்ட இவர்களுக்காக மேற்கண்டபடி மேற்படி நூற்களை வகை விவரமாக எழுதிவைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

நம்மால் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு நூலையும் ஏற்றுக் கொண்டு நம்மைப் பலவிதத்தாலும் மேன்மைப்படுத்திவரும் நாட்டுப்பற்று மிக்கவர்களான சான்றோர்களின் விருப்பத்தை யும் முன்கண்டபடி நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

நமக்கு அடிக்கடி உண்டாம் சாத்திர சம்பந்தமான பற்பல வேலைகளின் மிகுதியின் காரணமாகவும், வயது முதிர்ச்சியின் காரணமாகவும், சில சமயங்களில் உடல்நலமில்லாமைக்கு ஏதுவாகி விடுகிறது. ஆகையால் இனிச் சற்றும் தாமதிக்க லாகாது. இயற்கையினது அருளினுல் உடனே அந்த வேலையை நிறைவேற்றிவிட வேண்டியதும் இன்றியமையாத தாகும்.

இன்னண காரணங்களால் அநுபோக வைத்திய ரத்தினகரம், அநுபோக வைத்திய நவநீதம், அநுபோக வைத்திய மஞ்சரி, என்னும் மூன்று வகைகளாகப் பிரித்து, அவற்றுள் நவநீதம் என்னும் இந்நூலை முன்னர் அச்சிட்டு வெளிப்படுத்த மன முவந்தேன். இதில் சொல்லப்படும் முறைகள் மிகவும் அருமை யானவைகளும் அதிகம் சிறந்தவைகளுமாம். இதுவரையில் தமிழில் உரைநடையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வித நூல்களில் இது ஒப்பற்றதென்பது இதனைப் படிக்கும் ஒவ் வொரு மருத்துவப் பயிற்சியரும் ஒருவர் எடுத்துச் சொல்லா மலே தெரிந்து கொள்வார்கள். இதில் பற்பல மறைபொரு ளான குருமுறைகள், பற்பல புதுமையான உசித முறைகள், பற்பல நுட்ப முறைகள், எல்லாத் தாதுக்களின் பற்பங்கள், செந்தூரங்கள், உபதாதுக்களின் பற்பங்கள், செந்தூரங்கள் இவைத் தொடர்பான பற்பல அரிய முறைகள், பலவகை மாத் திரைகள், வடகங்கள், பதங்கங்கள், இளகங்கள் இவைகளின் தனித்தனி துணைமருந்துகள் ஆகிய அநேக புதிய முறைகள் வகை விவரமாக எழுதப்பட்டு இருக்கின்றன. இவற்றுள் பரம்பரைதோறும் மிகவும் மறைவாக வைக்கப்பட்ட பல முறைகளும் கேள்விவழியாக கைம்முறையாக வைக்கப்பட்டு வந்த பல முறைகளும் சொல்லப்பட்டு இருகின்றன. ஒருவ ரிடம் பல்லாண்டு தொண்டு செய்யினும் இவ்வித முறைகளை முழுமனதுடன் எளிதிற் சொல்லமாட்டார்கள்,

இவ்விதமான அருமை பெருமை வாய்ந்த முறைகளை எல்லாம் ஒன்றுபடத் திரட்டி முறையே ஒழுங்குபடுத்தி ஒவ்

வொன்றின் சிறப்பான செய்பாகம், கைபாகம், அரைப்புபாகம், புடபாகம், துணைமருந்துகள் முதலிய எல்லாவற்றையும் மருத்துவர்கள், மருத்துவர் அல்லாதவர்கள் ஆகிய எவரும் சந்தேகமறத் தெரிந்து செய்து பயன்படுத்தும்படியாக அதிகத் தெளிவாக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதற்காக எவ்வளவு உடல் உழைப்பு, எவ்வளவு பணச்செலவு, எத்தனை நாள்கள் நேரிடும் என்பது வைத்திய நூற்பயிற்சி, கல்வியறிவு, பழக்கம் முதலியவைகள் உள்ள மருத்துவ அறிஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் விளங்காமல் போகாது. மேலும் மிக மறைவாக வைக்கத்தக்க இந் நூலானது உயிர்நலன்கள் கருதியும், பிறர்க்குதவும் நோக்குடனும், உலகமக்களுக்காகவும் வெளிப்படுத்தப்பட்டதே தவிர மற்றப்படியன்று. இதில் சொல்லப்பட்டு இருக்கிற ஒவ்வொரு முறையும் பல தடவை களிலும் கைவந்தவைகள். ஏட்டிலிருந்ததை எடுத்தெழுதி விடுத்ததல்ல. ஆகையால் இதனை ஆழ்ந்த கருத்துடன் கண்ணுறும் ஒவ்வொரு மருத்துவரும் இதன் உண்மையைத் தெரிந்து கொள்ளாமலிரார்.

சித்த, ஆயுள்வேத மருத்துவர்களையும், மற்ற நண்பர்களையும் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்ளும் விண்ணப்பமாவது:—இந்தப் புதுமையான நூலில் மனிதப் பண்பினது தவறுதலினாலும் மற்றவைகளாலும் நேரிடும் பிழை முதலியவைகளை பேரருட் தன்மையுடன் மன்னித்தருள வேண்டுமென்பதே.

இந்த நவநீதத்தில் ஒவ்வொரு வகைகளிலும் பலவகைகளை எழுத வேண்டியது அவசியமாகக் காணப்பட்டது. ஏனெனில், இது பலருக்கும் பயன்பட வேண்டும் என்னும் நோக்கம் அமைந்ததாகையால், இடம் பொருள் ஏவல் ஆகியவைகளுத் தகுந்தபடி செய்துகொள்ளக் கூடும் என்பதே. ஆகையால், இது நமது உத்தேசத்திலும் அதிகம் விரிவெய்தினது; ஆனது பற்றி, இதுவரையில் ஒரு பாகமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இதனல் வாங்குபவர்களுக்கும் இதனை வெளிப்படுத்தும் அடியேனுக்கும் பலவகையிலும் எளிதாகவும் உதவியாகவும் இருக்கும். இதிலுள்ள முறைகளின் அருமையையும் பெருமையையும் கவனிக்குங்கால், இதற்கு ஏற்படுத்தப்பட்டு இருக்கிற விலையானது அதிகஞ் சொற்பமென்பது பழக்கம் உள்ளவர்களுக்குச் செவ்வனே விளங்கும். ஏழைகள் முதலிய யாவருக்கும் இது பயன்பட வேண்டுமென்னும் நன்னோக்கத்துடனேயே இவ்விதம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

இந்தப் பாகத்தையும் இதற்கு அடுத்த பாகங்களையும் முதல் தொட்டு இறுதிவரை கூர்ந்து படித்து, அவைகளில் சொல்லப்படும் முறைகளை முறைப்படி செய்து கொள்பவர்களுக்கு மிக்க வல்லமையுள்ளவர்களான சிறந்த மருத்துவர்களே அருகிலிருந்து உற்ற சமயத்தில் ஊன்றுகோல் போல் நின்று உதவி செய்வதற்கு ஒப்பானது என்பதில் சந்தேகமில்லை.

ஆனதுபற்றி, நோயற்றவாழ்வு, ஆயுள்விருத்தி முதலிய இம்மைக்குரிய பல விருத்திகளை விரும்புகின்ற ஒவ்வொருவரும் இந்தப் பாகத்தையும் இதற்கு அடுத்த பாகங்களையும் அலட்சியம் செய்யாமல் மனங்கனிந்து மனப்பூர்வமாக அங்கீகரித்து ஏற்று முறைப்படி செய்து, செய்யும் மருத்துவத்தால் இம்மைக்கு உரிய பலன்களை இனிது பெற்று அனுபவித்துத் திடகாத்திர உடலினராக இன்பம் நுகர்ந்து வாழ்வார்களாக.

ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஹக்கீம் பா. மு. அப்துல்லா,
12, அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ டவுன், சென்னை.

பொருளடக்கம்

		பக்கம்
அட்டபாண்டு விநோதமெழுகு	...	101
அட்டலோக மாரணச் சரக்கால் லோகங்களைச் செந்தூரிக்கும் வகைகளுக்கு எடுத்துக்காட்டாக எழுதிய ஒரு முறை	...	65
அட்டலோக மாரண தாம்பிரச் செந்தூரம்	...	156
அமிர்த கிரணம்	...	113—114
அமுதாதி எண்ணெய்	...	29
அயக்காந்த பற்பம்	...	73— 75
அயத் தூய்மை	...	14, 77
அயச்சத்து	...	33
அயச்சத்துச் செந்தூரம்	...	32
அயச் சூரணம்	...	36
அயத்தாம்பிரச் செந்தூரம்	...	158
அய பற்பம்	...	15— 19
அயப்பொடி இளகம்	...	37— 38
அயப்பாவனை	...	105
அய மெழுகு	...	33— 34
அயவீரச் செந்தூரம்	...	105—113
அறுமுக சம்பீர கற்பம்	...	100
அறுமுகச் சூரணம்	...	98
அறுமுகச் செந்தூரம்	...	93— 95
அறுமுக இளகம்	...	99
அறுமுக வடகம்	...	100
இரசத் தூய்மை	...	78
இலிங்க பாவனை	...	106
எஃகின் தூய்மை	...	50— 51
எஃகு பற்பம்	...	51— 52
எஃகு சுவர்ணச் செந்தூரம்	...	56

		பக்கம்
எஃகுகாந்தச் செந்தூரம்	...	81
எஃகுச் செந்தூரம்	...	54— 55
கட்டுவகை நீர்	...	12
காந்தத் தூய்மை	...	68, 77
காந்தச் செந்தூரம்	...	61— 63
காந்த பற்பம்	...	59— 60
காந்தமெழுகு	...	73
காந்த ரச வில்லை	...	68
காந்தாதிக் குளிகை	...	67
காந்தாதிச் சூரணம்	...	66
காரலோக செந்தூரம்	...	23
குமாரவீரியக் காந்தச் செந்தூரம்	...	102
குருச் சுண்ணம்	...	5— 7
கெந்தகத் தூய்மை	...	78
கெந்தக பாவனை	...	110
சங்குச் சுண்ணம்	...	93
சத்தாதி மாஜுன்	...	39
சம்பீரகற்பம்	...	35
சிற்றண்டச் சிந்தாமணி	...	103
சுண்ணலோக செந்தூரம்	...	30
சுயமக்கினிச் செந்தூரம்	...	83— 86
சுவர்ணலோக காந்தச் செந்தூரம்	...	76
சுவர்ணலோக செந்தூரம்	...	27
சுவர்ண லோகத் திராவகம்	...	40
சூதக் கருப்பு	...	9
தண்டவாளச் செந்தூரம்	...	58
தாம்பிரக் களங்கு	...	83, 157
தாம்பிரக் குரு செயநீர்	...	145
தாம்பிரத் தூய்மை	...	117
தாம்பிரச் செந்தூரம்	...	151—155
தாம்பிர பற்பம்	...	117—149
தாம்பிர பூபதி மாத்திரை	...	159

		பக்கம்
தாம்பிரம்	...	115
தாம்பிர வகைகள்	..	117
தாம்பிராதி மாத்திரை	...	158
தாளகக் கருப்பு		8
திரியாக்கினி செந்தூரம்	...	90
துவாதச லோகமாரண செந்தூரம்	...	22
துவாதச லோகமாரணத் தாம்பிரச் செந்தூரம்	...	157
தேவகிருபா உசிதம்	...	2— 5
நவச்சார பாவனை	...	107
பஞ்சாக்கினிச் செந்தூரம்	...	91
பவளக் கருப்பு	...	11
பாலரச பாவனை	...	105
பாவன லோகம்	...	40
பிரண்டைப் பாவனை	...	98
பீடிகை	...	1
பூநாகத் தூய்மை	...	26
பூநாக உற்பத்தி முறை	...	27
பூரக் கருப்பு	...	10
மகாசுயமக்கினிச் செந்தூரம்	...	86
மண்டூரத் தூய்மை	...	42
மண்டூர செந்தூரம்	...	44
மண்டூரச் சூரணம்	...	45
மண்டூர பற்பம்	...	42
மண்டூர பாவனை	...	41
மண்டூர மாத்திரை	...	46
மன்மத லோக செந்தூரம்	...	25
லிங்கக் கருப்பு	...	9
லோக செந்தூரம்	...	20— 21
லோக மண்டூர மாத்திரை	...	47
லோக மண்டூர இளகம்	...	48
லோக மண்டூர வட்டு	...	49
லோகமாரண காந்தச் செந்தூரம்	...	64
வண்ணலோக செந்தூரம்	...	29

பக்கம்

வாளக் கருப்பு ... 11

வீரக் கருப்பு ... 10

வீர பாவனை ... 106

வெள்ளைப் பாடாணத் தூய்மை ... 68

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அநுபோக வைத்திய நவநீதம்

முதற்பாகம்

கடவுள் வணக்கம்

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்;
அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ஸய்யிதில்
முர்ஸலீன்; வ ஆலிஹி, வ அஸ்ஹாபிஹி
அஜ்ம ஈன்.

காப்பு

வெண்பா

மாவா ரனுபோக வைத்திய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே—நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

குரு வணக்கம்

வெண்பா

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம்பணிந்து கொண்டு—வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்.

பீடிகை

கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினுலும் இதிலெழுதப்படும் முறைகளெல்லாம் நமது பரம்பரையிலுள்ள பண்டித சிரோமணிகளாலும், அரிய நண்பர்களான வேறு மகா பண்டித சிகாமணிகளாலும், அடியேனுலும்

கையாண்டு அநுபவ சித்திபெற்ற பாகங்களை ஆராய்ந்து தெரிந்து தெளிந்து திரட்டப்பட்டவைகள். இவற்றின் அருமை பெருமைகளை இவற்றைக் கையாள்பவர்களாகிய அறிஞர்கள் நன்குணர்ந்து கொள்வார்கள். இவற்றைச் செய்பவர்களின் கைபாகஞ் செய்பாக முதலியவற்றால், மருந்துகள் ஒருவேளை பூரணமாய் முடியாவிட்டால், முறைகளின் மீது குறை சொல்லாமல் இரண்டொரு தடவை மடக்கி மடக்கி மனந்தளராது ஊக்கத்துடன் செய்வார்களேயானால் கடவுளினது கிருபையால் நிச்சயமாகச் சித்திபெறுவார்களென்பது சத்தியம். இவற்றுள் அநேக முறைகள் கன்ன பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வந்தவைகள்; லிகிதமூலமாக எழுதி வைக்கப்பட்டவைகளல்ல. இன்னும் இதில் அநேகமுறைகள் எமது பரம்பரைக்குள்ளேயே பரம ரகசியமாக வைக்கப்பட்டு வந்தவைகள்; ஆகையால், இது ஜீவகாருண்யத்துடனும் பரோபகாரச் சிந்தையுடனும் வெளிப்படுத்தப்பட் டிருப்பதால், பல விசித்திர நாமங்களோடு உலாவித்திரியும் சில பல போலிக் கிரந்தங்களைப் போல் இதனையும் எண்ணி அலட்சியமாகப் பாவிக்காமல், இதிலுள்ள முறைகளை இதில் சொல்லியிருக்கிற கிரமப்படி செய்து உலகத்தாருக்குப் பிரயோசனப்படும்படி சமையோசிதமாக உபயோகித்துப் பேறும் புகழும் புண்ணியமும் பொருளும் பெற்றுக் கீர்த்தியை நிலைநிறுத்தி இம் முறைகளின் மூல கருத்தாக்களுக்கு மிகுந்த நன்றியுந் துதியுஞ் செலுத்துவார்களென நம்புகின்றோம். இதனால் பிரயோசனமடையும் ஒவ்வொருவரும் அவ்விதமே நன்றியும், துதியும் செலுத்தக் கடமைப்பட்டவர்களென்பதும் நமது துணிபு.

1. தேவகிருபா வுசிதம்

(சிவகரந்தை கற்பம்)

சிவகரந்தையை நிழலிலுலர்த்தி யெரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளவேண்டும். இந்தச் சாம்பல் படி 1, பனிஜலம் அல்லது சுத்தஜலம் படி 2, ஒரு மண்பாண்டத்தில் சாம்பலைக் கொட்டி முன் ஜலத்தையும் ஊற்றி நன்றாய்க் கலக்கிவிட்டுக் காற்றில்லாத விடத்தில் வைத்து வேறு மண்பாத்திரத்தால் மூடிவிட வேண்டும். பிரதிதினமும் நாலைந்து தடவை மரக் கொம்பினால் கலக்கியும் வரவேண்டும். இவ்விதம் மூன்று நாள் சென்ற பின்பு நாலாம்நாள் கலக்காமல் வைத்து ஐந்தாம் நாள் தெளிவை யிறுத்து மண்பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து வரவேண்டும். அப்போது இதனை அடிக்கடி மரத்துடுப்பால் துழாவியும் வரவேண்டும். குழம்புப்

பதமானவுடன் ஒரு ஈர்க்குச்சியினுல் தொட்டு நகத்தின்மீது வைத்து ஆறினபின் இறுகிக் கெட்டியாகிவிட்டால் பதமெனக் கீழிறக்கி ஒரு பீங்கான் பாத்திரத்தில் வழித்துவிட்டு வெயிலில் வைத்து வந்தால், ஈரமுலர்ந்து சத்தாகிவிடும். இதுவே சிவ கரந்தைச் சத்தாம்.

அளவு :—குன்றிமணி யெடை 1 முதல் 4 வரையில் ;

துணைமருந்து :—தேன், சருக்கரை, நெய், வெண்ணெய் முதலியவைகளில் காலை மாலை ஆகிய இருவேளையும் உள்ளுக்கு உபயோகிக்கலாம்.

உபயோகம் :—இரத்த சம்பந்தமான வியாதிகளெல்லாந் தீர்ந்து இரத்தஞ் சுத்தியாகி தேகதிடம், தேகபலம், தேக வசீகரம் முதலியவை யுண்டாகி ஆத்மசக்தி விருத்தியாகும். இதனை எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம். வேறு லேகியம் சூரணம் முதலியவைகளிலும் பிரமாணத்திற்குத் தகுந்த அளவு சேர்த்து உபயோகிப்பதால் அந்தந்த மருந்து களுக்குரிய குணங்களைச் சிறப்புறச் செய்யும். இரசவாத முறை களில் இரசம் முதலிய சரக்குகளைக் கட்டவும் உபயோகமாம்.

குறிப்பு

இது கடவுளுடைய நாமம் பூண்ட சிறந்த மூலிகை; இதன் விசேட குணத்தைப்பற்றி, யூனானி வைத்தியர்களும், வெகுவாய்ப் புகழ்ந்து கையாண்டு வருகின்றார்கள். இது சூரண மாகவும், லேகியமாகவும், கஷாயமாகவும், தீநீராகவும், சர்பத் தாகவும் உபயோகப் படுத்தப்படுகிறது. இதன் தீநீருக்கு யூனானியில் (அரகே ஜவாஹிர்) இரத்தினத் தீநீர் அல்லது இரத்தினத் திராவகம் என்று வழங்கப்படுகிறது. இதன் சிறந்த குணத்தின் விசேடம் பற்றியே இவ்வித வுயர்ந்த நாமம் இதற்கிடப் பட்டிருக்கிறது. இது தஞ்சாவூர் ஜில்லா திருவாரூர், விஜயபுரம் முதலியவூர்களில் விசேஷமாகக் கிடைக் கின்றது. இது பச்சையாக அகப்படாத வூர்களில் உலர்ந் ததை உபயோகித்துக் கொள்ளலாம். இதற்குப் பதிலாக, கொட்டைக்கரந்தையை உபயோகிக்கின்றார்கள். இதற்கும் அதற்கும் பெருத்த வித்தியாச முண்டென நாமிங்குச் சொல்ல வேண்டியதில்லை ; அநுபவத்தில் தாம் தாமே தெரிந்துகொள் வார்கள். இதனைத் தீநீர் முதலியவைகளாக உபயோகிப் பதைப் பார்க்கிலும் மேற்கண்ட விதமாகச் சத்தெடுத்து உப யோகிப்பதே அநுபவசித்திபெற்ற முறை.

2, தேவகிருபா வுசிதம் (வேறு)

(சிறுசின்னி கற்பம்)

சிறுசின்னியின் சமூலத்தை நிழலிலுலர்த்தி யெரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளவேண்டும். இதை உலர்த்து முன்னமேயே இதனுடன்வேறு சாதி இலைகளில்லாமல் ஆய்ந்து நீக்கிச் சுத்திசெய்ய வேண்டும். மேற்கண்ட சாம்பல் படி 1. இதனை ஒரு மண்பாண்டத்திற்போட்டு, பனிநீர் அல்லது சுத்தநீர் 2 படி அதில் விட்டு மூன்றுநாள் வைக்கவேண்டும். இதனைப் பிரதிதினமும் ஐந்தாறு தடவை ஒரு மூங்கிற்குச்சியாற் கலக்கியும் வரவேண்டும். நாலாம் நாள் தெளிவை யிறுத்து வேறொரு மண்பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி மெதுவாக எரித்து வரவேண்டும். அடிக்கடியும் அதனை மூங்கிற்குச்சியால் அல்லது மரத்துடுப்பினாற்றுழாவிக் கொடுத்தும் வரவேண்டும். முடிவில் குழம்புப் பதமாக வருகையில், ஒரு ஈர்க்கு நுனியில் நனைத்து நகத்தின்மீது வைத்து ஆறவிட்டுப் பார்த்தால், இறுகிக் கெட்டியாகிவிட்டால் பதமென இறக்கி உடனே ஒரு பீங்கான் பாத்திரத்தில் வழித்துவிட்டு வெயிலில் வைத்துலர்த்த உப்பாகிவிடும். இதை ஈரமில்லாமலுலர்த்தி ஒரு புட்டியில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு :—1 முதல் 4 குன்றிமணி யெடை. தேன், சர்க்கரை, சுக்குக்குடிநீர், மிளகுக்குடிநீர், முதலிய அநுபானங்களில் தினம் இரண்டு மூன்று தடவை உபயோகிக்கலாம்.

தீரும் நோய் :—சுரம், ஜன்னி, அசீரணம், குன்மநோய் சூலைநோய், விடபேதி முதலிய எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். ஆண், பெண், பாலர், விருத்தர் முதலிய எல்லோருக்கும் எக்காலத்திலும், எத்தேசத்திலும் உபயோகிக்கலாம். நச்சுப் பிராணிகளான பாம்பு, எலி முதலியவற்றின் விடங்களுக்கும், நாய் விடத்திற்கும் உபயோகப்படும். எந்த வியாதிகண்டும் மூர்க்கமாயிருக்கிற காலத்தில் இதனை 4 குன்றிமணியெடை யுள்ளே செலுத்திவிட்டால் வியாதியை மீறவிடாமல் தடுத்துக்கொள்ளும். இது இரசவாதம், வைத்தியமென்னும் இருவகையிலும் பலவற்றிற்கு உபயோகப்படுகிறபடியால் அறிவாளிகள் இதனைச் சமயோசிதமாக உபயோகித்துப் பயன் பெறுவார்கள்.

3. தேவகிருபா வுசிதம் (வேறு)

(காட்டுவெற்றிலைக் கற்பம்)

காட்டு வெற்றிலை, (இது, சேலம் அல்லது அதற்கடுத்த மலைநாடுகளில் விசேடமாகக் கிடைக்கிறது; அங்கு இது சாதாரணமாகக் கிடைக்கிற மூலிகை.) இதனை மேற்கண்ட பாகப்படியே செய்து உப்பெடுத்து மேற்கண்டவிதமே உபயோகிக்க வேண்டியது.

மேற்கண்ட இரண்டு உப்புகளையும் சமபாகமாகச் சேர்த்துத் தனியே ஒரு புட்டியில் வைத்துக்கொண்டு, மேற்கண்டபடி எல்லா நோய்களிலும் உபயோகித்தால் அதிக சீக்கிரமாகக் குணத்தைத் தரும். குட்டம் முதலிய பெரிய நோய்களும் தீரும்.

குறிப்பு

இப்போது சாத்திர அறிவு அதிகரித்த ஜெர்மனி, அமெரிக்க தேசத்துப் பண்டிதர்களால் கொடிவேலி, வேலிப்பருத்தி, குப்பைமேனி ஆகியவை போன்ற 20, மூலிகைகளின் தனித்தனி சத்தெடுத்து, தனித்தனி உபயோகித்து பல கொடிய நோய்கள் குணப்படுவதாகக் கண்டு விளம்பரப்படுத்தியிருக்கின்றார்கள். அது உண்மை யெனவும் அநேகர் அத்தாட்சியுங் கொடுத்திருக்கின்றார்கள். அவை பல ஆங்கில மருந்துக் கடைகளிலும் விற்கப்படுகின்றன. இவ்விஷயத்தை இங்கெழுதவேண்டிய காரணமாவது: ஐரோப்பியர் வார்த்தை நமது இந்தியர்களுக்குப் பரம குருவார்த்தை யாகையால், ஐரோப்பியர்கள் இம்முறைகளை இப்போது கையாடிவரினும் நம் முன்னோர்கள் பூர்வத்திலேயே அவற்றைக்கண்டு நிச்சயித்திருக்கின்றார்களென்பதை வற்புறுத்த வேண்டியேயாம்.

4. குருச்சுண்ணம்

சுத்திசெய்த பூநீறு பங்கு 1, தாளிக்காத கற்சுண்ணும்பு பங்கு 1, பனிநீர் அல்லது சுத்தநீர் பங்கு 4.

ஒரு மண் பாண்டத்தில் முன்னர் பூநீற்றைப் போட்டுப் பிறகு கற்சுண்ணத்தைப் போட்டு 1 பங்கு நீரைவிட்டு மூடிவைக்க வேண்டும், பத்து நிமிஷம் சென்றபின் மற்ற மூன்று பங்கு நீரையும் விட்டு நன்ருகக் கலக்கி அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயா யெரித்து இரண்டுகொதி வருகிறவரையில் கொதிக்கவைத்து எப்போதும் வெயிற்படும்படியான இடத்தில் வைத்து மூங்கிற்றட்டால் மூடியும் வைக்கவேண்டும். மூன்று நாள்வரையில் இதனைப் பிரதிதினமும் காலையில் இரண்டொரு

தடவை மூங்கிற் குச்சியாற் கலக்கியும் வரவேண்டும். பிறகு கலக்கவேண்டியதில்லை. நாலாம்நாள் மாலையில் பார்த்தால் அந்த நீரின்மீது நுரையைப்போல் ஒருவிதச் சத்து படிந்திருக்கும். அதனை விழிப்பாக பனையோலைத் துண்டினால் அல்லது தந்தப் பலகையால் வழித்து வேறொரு பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஒரு வாரம் அல்லது பத்து நாள் வரையில் அல்லது அதில் சத்துப் பூத்துக் கொண்டிருக்கிற வரையில் முன்போல் வழித்தெடுத்து வெயிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். இதுவே குருச் சுண்ணமாம். இதற்கு வைத்தியமுப்பூ என்று மறுபெயருமுண்டு.

உபயோகம் ;—இந்தச் சுண்ணத்தை, அதனதன் பிரமாணத்திற்குத் தகுந்த அளவு வேறு லேகியங்கள், சூரணங்கள், தயிலங்கள் ஆகியவைகளிற் கலந்து உபயோகிப்பதால் அந்தந்த மருந்துகளிற் சொல்லிய குணங்களைத் தவறாமற் கொடுக்கும். வேறு பற்பங்கள், செந்தூரங்கள் ஆகியவைகளுடனும் இதனைச் சேர்ப்பதால் அதிக விசேட குணத்தையும் தரும். இதன் மூலமாக, பாடாணம், வீரம், பூரம் முதலிய சரக்குகளை நெருப்பிற்கு ஓடாமல் நிறுத்தி நீற்றிக்கொள்ளலாம். இம்முறைகளை இனி உடனே அச்சிடப்படும் அனுபோக வைத்திய ரத்தினாகரத்தில் எழுதுவோம். அனுபோகசாலிகளான அறிவாளிகள் இதன் மூலமாக இன்னும் அனேக யோகத்தையும், பாகத்தையுஞ் செய்துகொள்வார்கள் ; இதன் விசேஷ குணத்தைத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தமக்கு விருப்பமான ஏதேனுமொரு லேகியத்தை அல்லது சூரணத்தைச் செய்து அதைத் தனியாக உபயோகித்தும், மேற்கண்ட குருச்சுண்ணத்தை அத்துடன் சேர்த்து உபயோகித்தும் இவ்விரண்டிற் கிடையிலுள்ள வித்தியாசத்தைக் *கரதலாமலகம் போலக் கண்டு நிச்சயித்துக் கொள்ளலாம்.

குறிப்பு

பூநீற்றைச் சுத்திசெய்யும் அல்லது பாகப்படுத்தும் முறைகள் பல நமது இரசவாத சிந்தாமணி முதற்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. பூநீற்றை நாமெவ்வளவுக் கெவ்வளவு தீட்சை செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு குருச்சுண்ணமும் குணமுடையதா மென்பது நிச்சயம். இவ்விதமே, இதிற் சேர்க்கப்படும் கற்சுண்ணமும் உயர்தரமானதா யிருக்க வேண்டுமென்பது அவசியம். ஆகையால், இக் கற்சுண்

* உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

ணத்தை நாமே தயாரித்துக் கொள்வது நல்லது. அதன் விவரம் :—

சுண்ணும்புக்கல்லை குழியம்மியிற் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு அரைக்கவேண்டும். அளவிற்குத் தகுந்த படி இரண்டு மூன்று சாமங்களரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து ஈரமில்லாமல் வெயிலிலுலர்த்திச் சிறு சட்டியிலிட்டு வாய்மூடிச் சீலைசெய்யாமல் இரு துருத்தியுள்ள அல்லது சீமைத் துருத்தியுள்ள கொல்லுலையில் வைத்துச் சட்டி அழுகும்படியாக ஊதியெடுத்து ஆறவிட்டுச் சுண்ணும்பை யெடுத்துக் கொள்ள வேண்டும். இச்சுண்ணும்பையே முன்போல் அரைத்து உலர்த்தி மறுபடியும் ஊதி எடுத்துக்கொண்டால் அதிக விசேஷ குணமுடையதா யிருக்கும். இக்கற்சுண்ணத்தை வெள்ளெருக்கம்பால் அண்டக்கரு முதலியவைகளை விட்ட ரைத்துச் செய்வதுமுண்டு. வேறு பலமுறைகளுமுண்டு. அவையெல்லாம் இங்கு அனுவசியம். மேற்கண்ட பாகம் ஒன்றே இங்கு போதுமானது. மேற்கண்ட விதமாகச் செய்து கொள்ள ஏலாதவர்கள் சுண்ணும்புக்கல்லை உலையில்வைத்துத் தழுக்கில்லாமல் வெந்துபோகும் அளவிற்கு ஊதி வேக வைத்துச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்விதமும் செய்ய ஏலாதவர்கள் சாதாரணமாக விற்குங் கற்சுண்ணும்பைத்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

5. குருச்சுண்ணம் (வேறு)

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு பங்கு 4, (இதனை நமது இரச வாத சிந்தாமணி முதற்பாகத்திற் சொல்லியிருக்கிறபடி சுத்தி செய்துகொள்ளவேண்டும்) பாகப்படுத்தின பூநீறு பங்கு 2, இவ்விரண்டையுஞ் சேர்த்து இரும்புச் சட்டியிற்போட்டு அடுப்பேற்றித் தீயெரித்தால் இரண்டும் உருகி நீர்போலாகி யிருக்கும். பிறகு, இதனை மெதுவாயெரித்துக் கொண்டு வந் தால் இறுகிக் கெட்டியாகிவிடும். இதனைக் கீழேயிறக்கி ஆறினபின் உளியாலுடைத் தெடுக்கவேண்டும். பிறகு, இதனைக் கல்வத்திலிட்டு ஒருபங்கு சுத்திசெய்த வீரத்தைச் சேர்த்துப் பொடித்து வெள்ளெருக்கம் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து இக்கவசத் தின் எடைக்குப் பத்துப்பங்கு எடை வறட்டியிற் புடமிட வேண்டும். பிறகு, எடுத்துப் பார்க்கச் சுத்த வெண்மையான சுண்ணமாயிருந்தால் பதம்; அப்படியில்லாமற் கருத்திருந்தால்

முன்போல் வெள்ளெருக்கம் பாலைவிட்டு அரைத்து முன்போற் புடமிடவேண்டும். அப்போது சுத்த வெண்மையான சுண்ண மாகிவிடும். இது வெடியுப்புச் சுண்ணமெனவும் வழங்கப் படும்.

இதன் உபயோகம்:—நெருப்புக்கு ஓடும்படியான தாளகம், லிங்கம், இரசம், இரசகற்பூரம், வீரம், பாடாணம் முதலிய சரக்குகளை நெருப்புக் கோடாமல் நிறுத்தி நீற்றிக்கொள்ளலாம்.

குறிப்பு

இந்த வெடியுப்புச் சுண்ணத்தை அதிகக் காரமுள்ளதாகச் செய்து கொள்ளலாம், இது இரசவாதத்திற்கே உபயோகமாம். ஆனல், நாமிங்கு வைத்தியத்தைக் குறித்தெழுதி வருகிறபடியால், மேற்கண்ட பாகமானது வைத்தியத்திற்கு மிகவும் உபயோகமான தாகையால் இம்மட்டில் நிறுத்தினேம். இதனை உபயோகிக்கும் வகை பின்வருமாறு:—

(அ) தாளகக்கருப்பு:—சுத்திசெய்த தாளகம் ஒரு பங்கு, மேற்படி வெடியுப்புச் சுண்ணம் ஒருபங்கு, பூவரசங்கொழுந்து அல்லது வெண்தாமரைப் பூவிதழ் எட்டுப்பங்கு.

செய்முறை:—முன்னர் தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பிறகு சுண்ணத்தைச் சேர்த்து அரைத்துப் பிறகு மூலிகையைச் சேர்த்து இரண்டு சாமமரைத்து, பில்லைசெய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு எட்டுப்பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ளவேண்டும். இதன் வண்ணம் கறுப்பாயிருக்கும். ஆயினும் இதன் குணம் வியப்பைத் தரத் தக்கதாம். தாளகபற்பம், தாளகச் சுண்ணம் ஆகியவை உபயோகப்படும் நோய்களுக்கெல்லாம் இதனை வைத்தியர்கள் அபிப்பிராயப்படி சமயோசிதமாக உபயோகிக்கலாம்.

அளவு:—குன்றிமணியெடை ½, 1, 1½.

துணைமருந்து:—நெய், தேன், அதிமதுரக்குடிநீர், சிறிகாஞ்சோறிவேர்க் குடிநீர், கூழ்ப்பாண்டக் கிருதம் ஆகியவைகளும் இவை போன்றவைகளுமாம்.

தீரும் நோய்:—சுரநோய்கள், முறைச்சுரங்கள், சயம், காசம், இருமல், இரைப்பு, மந்தாரகாசம், துட்டவிரணம், குட்டநோய் முதலிய பலநோய்களும் தீரும்.

குறிப்பு

தாளகத்தின் துர்க்குணங்கள் இத் தாளகக் கருப்பில் கிடையாது. நோய்பலம், உடல்பலம் ஆகியவைகளுக்குத் தகுந்த லேகியம், கிருதம், சூரணம் முதலியவைகளுடன் சம்பந்தப் படுத்தி உபயோகித்தால் அனேக நலன்களுண்டாகும். இவையெல்லாம் வைத்தியர்களின் அனுபோகத்தையும் புத்தி நுட்பத்தையும் சேர்ந்தது.

(ஆ) லிங்கக்கருப்பு :—தூய்மைசெய்த சாதிலிங்கம் 1 பங்கு மேற்படி வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு. மருதோன்றிக் கொழுந்து 1 பங்கு, வெடியுப்புத் திராவகம் 10 பங்கு (ஆங்கில மருந்து கடையில் விற்கிற வெடியுப்புத் திராவகம் (Nitric Acid) போதுமானது.

செய்முறை :—முன் சரக்குகளைக் கல்வத்திற் போட்டு மேற்படி திராவகத்தைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் மரைத்துப் பில்லைசெய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண்செய்து கவசத்தினெடைக்கு எட்டுப் பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கவும். இதன் வண்ணம் கருப்பாயிருக்கும்.

அளவு :—குன்றிமணி யெடை 1 முதல் 2.

துணைமருந்து :—தேன், நெய் சமயோசிதமாக வேறுவகை துணைமருந்துகளுடனும் உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள் :—சுரநோய்கள், வாயுநோய்கள், அதி மூத்திரநோய், கழிச்சல், சன்னிபாதநோய் ஆகியவைகள் தீரும்.

(இ) சூதக்கருப்பு :—தூய்மைசெய்த ரசம் 1 பங்கு, மேற்படி வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு, விடத்தேரின்பட்டை 8 பங்கு.

செய்முறை :—முன் சரக்குகளைக் கல்வத்திலிட்டரைத்து மேற்சொல்லிய விதம்போற் புடமிட்டெடுத்துக் கொள்ளவும். இதுவும் கருப்பு வண்ணமாகவேயிருக்கும்.

அளவு :—குன்றிமணி யெடை 1 முதல் 2.

துணைமருந்து :—நெய், தேன்.

தீரும் நோய்கள் :—வாயுநோய், விரணநோய், நரம்புக் கிரந்தி, குன்மநோய், கீல்பிடிப்புகள் ஆகியவை தீரும். நரம்புகளுக்கு முறுக்கேறிப் பலமுண்டாகும். இன்னும் இது அநேக நோய்களில் உபயோகப்படுகிறது. புத்திமான்கள் சமயோசிதம்போல் உபயோகித்துப் பலனடைவார்கள்.

குறிப்பு

இந்த செய்முறையில் விடத்தேரின் வேர்த்தோல் ஈரமுள்ள புதிய வேராயிருக்கவேண்டும். அவ்விதம் ஈரமுள்ள புதிய வேரகப்படாத காலங்களில் உலர்ந்த வேர்த்தோல் 4 பங்கைச் சேர்த்துச் செய்யவேண்டும். அரைப்பு, குப்பைமேனிச்சாறு அல்லது இதுபோன்ற வேறு சாற்றை விட்டு அரைத்துக் கொள்ளலாம்.

(ஈ) பூரக்கருப்பு :—சுத்திசெய்த இரசகர்ப்பூரம் 1 பங்கு, மேற்படி வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு, காட்டாமணக்கின் கொழுந்து எட்டு பங்கு.

செய்முறை :—மேற்கண்ட பாகப்படியே செய்து கொள்ள வேண்டும்.

அளவு :—குன்றிமணி யெடை 1—2.

துணைமருந்து :—நெய், தேன் முதலியவைகள்.

தீரும்நோய்கள் :—வாயுநோய்கள், சூலைநோய்கள், விரண நோய்கள், சுரநோய்கள் ஆகியவை தீரும்.

(உ) வீரக்கருப்பு :—சுத்திசெய்த சவ்வீரம் பங்கு 1, மேற்படி வெடியுப்புச் சுண்ணம் பங்கு 1, பிரமதண்டின் கொழுந்து 8 பங்கு.

செய்முறை :—மேற்கண்ட முறைப்படியேயாம்.

அளவு:—¼ முதல் ½ குன்றிமணியெடை.

துணைமருந்து :—முன் சொன்னவைகளேயாம்.

தீரும் நோய்கள் :—மகாவாதங்கள், கீல்பிடிப்புகள், குன்ம நோய்கள், குறைநோய், சன்னிபாதநோய்கள், முதலிய பிணிகள் தீரும். புத்திமான்கள் இதன் குணத்தைத் தம்தம் அனுபவத்தால் நிச்சயித்தறிந்து சமயோசிதம்போற் செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு

இந்த வீரக்கருப்பானது வாய்பிடிக்குங் குணமுடையது. சில உடலினர்க்கு மூன்று அல்லது ஐந்து நேரங்களுக்குள் வாய் பிடிக்கிறது. சில உடலினர்க்கு பத்துவேளை கொடுத்தும் வாய் பிடிக்கவில்லை. ஆகையால் மகளிர், சிறுவர்கள், குழவிகள், இளைஞர்கள் ஆகியவர்களுக்கு உபயோகிக்க நேரிட்டால் மிகவும் விழிப்போடு கொடுக்கவேண்டும். ஆனால், அடியில்

சொல்லப்படும் கட்டுவகை நீரில் பாகப்படுத்தித் தூய்மை செய்துகொண்டால் வாய்பிடிக்குந் தீக்குணம் நீங்கிப்போம்.[1]

(ஊ) பவளக்கருப்பு :—நல்ல திறமான செம்பவளம் 1 பங்கு மேற்படி வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு, இலந்தைக்கொழுந்து 8 பங்கு.[2]

செய்முறை :—மேற்கண்ட செய்முறைப்படியே செய்ய வேண்டும்.

அளவு :—குன்றிமணியெடை 2 முதல் 4 வரை.

துணைமருந்து :—தேன், நெய் முதலியவைகள்.

தீரும் நோய்கள் :—ஐயநோய்கள், இருமல்நோய், என்பு சூடு, என்புவெட்டை, சுக்கிலட்சீணம் முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இவ்விதமே நன்முத்து, கஹரூபா முதலியவைகளைப் பாகப்படுத்தி அததற்குத் தகுந்த பிணிகளில் உபயோகிக்கத் தீரும்.

(எ) வாளக்கருப்பு:—தூய்மைசெய்த நேர்வாளம் 1 பங்கு,[3] மேற்படி வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு, சோற்றுக்கற்றாழைச் சோறு 8 பங்கு.

செய்முறை :—மேற்கண்ட செய்முறைப் படியேயாம். ஆனால் கவசத்தின் நாலு அல்லது ஐந்து பங்கு எடை விராட்டியில் இலகு புடமா யிட்டுக்கொள்ள வேண்டும்.

அளவு :—குன்றிமணியெடை 1 முதல் 4 வரையில் சமயோசிதமாகத் உடல் பலத்திற்குத் தகுந்தபடி உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள் :—வாயுநோய், மலபந்தநோய், குன்மநோய் ஆகியவைகள் தீரும்.

---

1. மேற்கூறப்பட்ட வீரக்கருப்பு மருந்துடன் வைத்திய முப்பு முடித்துவைத்திருக்கும் மருத்துவ வல்லுனர்கள் $\frac{1}{2}$ முதல் 1 அரிசி யெடைச் சேர்த்துக் கொடுக்க வாய்பிடிக்காது.

2. இலந்தைக் கொழுந்துக்குப் பதிலாக சாறுவிட்டரைத்தல் நலம்.

3. முறைப்படி தூய்மைசெய்த நேர்வாளத்தை பெரிய நெல்லிக்காய்ச் சாற்றில் 6 மணி நேரம் ஊறவைத்துப் பயன்படுத்துவது சிறப்பாகும்.

குறிப்பு

மேற்கண்ட விதமாக எட்டிக்கொட்டை, சேராங் கொட்டை, ஆமணக்குப் பருப்பு ஆகியவைகளையும் பாகப் படுத்தி அதற்கினமானபிணிகளிலும் உபயோகிக்கத் தீரும்.

சிறப்புக் குறிப்பு

மேற்கண்ட விதமாகவே மற்றநேக சரக்குகளைப் பாகப் படுத்திக் கொள்ளலாம். அந்தந்தச் சரக்குகள் குணமாக்கக் கூடிய நோய்களில் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணை மருந்துகளில் சேர்த்துக் கொடுத்து மருத்துவம் செய்யவேண்டியது. இவையெல்லாம் வைத்தியர்களுடைய அனுபவத்தையும் புத்திநுட்பத்தையும் பற்றினது.

மேற்கண்ட கருப்புவகைகள் பூபதி முதலிய மாத்திரைகளில் சேர்க்கவேண்டிய பற்பங்கள், செந்தூரங்கள் ஆகியவைகளுக்குப் பதிலாகச் சேர்த்துச் செய்துக்கொள்ளலாம்.

மேற்கண்ட வீரம், பூரம், லிங்கம் முதலிய சரக்குகளைக் கீழ்ச்சொல்லிய செய்முறைப்படி கட்டிப் பாகப்படுத்தினுல் இன்னும் அதிக மேன்மையான குணத்தைத் தருவதுமின்றி வாய் பிடிக்குந் தீக்குணமும் நீங்கிப்போம்.

6. கட்டுவகை நீர்

நாலாங்காய்ச்சல் வெடியுப்பை ஒரு பாத்திரத்தில்வைத்துக் கொளுத்திவிட்டால், அது எரிந்து சிட்டமாகி நிற்கும். அந்தச் சிட்டத்திற்குச் சமனெடை கற்சுண்ணும்பைச் சேர்த்துச் சுத்த நீர் விட்டரைத்து உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு ஒரு ஓட்டில் கற்சுண்ணும்பைப் போட்டு அதன்மேல் முன் பில்லையைவைத்து பில்லை மறையும்படியாக மேலே சுண்ணும்பைக்கொட்டி மேலோடுமூடி சீலைமண்செய்து கவசத்திற்கு நாலுபங்கெடை விராட்டியிற் புடமிடவேண்டும். ஆறினபின் பில்லையை யெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போற் நீர்விட்டு அரைத்து முன்போல் பில்லைசெய்துலர்த்தி முன் போற் புடமிட வேண்டும். ஆனுல், ஒருபங்கு விராட்டியை அதிகப்படுத்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவை புடமிடவேண்டும். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருபங்கு விராட்டியை அதிகப்படுத்திக்கொண்டே போக வேண்டும். இவ்விதம் பத்துப் புடமிட்டால் வெடியுப்புச் சுண்ணமாயிருக்கும்.

இச்சுண்ணம் பலம் 4, (140 கிராம்) சுத்திசெய்த பூநீறு பலம் 4, (140 கிராம்) இவ்விரண்டையுஞ் சேர்த்துப் பொடித்து அயச்சட்டியில் வைத்தெரிக்க இரண்டும் உருகும். உருகும் சமயத்தில் 2 பலம் (70 கிராம்) வெண்காரத்தைப் பொடித்துப் போட்டு எரிக்க எல்லாஞ்சேர்ந்துருகி நீர்போலிருக்கும். அந்த திரவத்தில் வீரம், பூரம், பாடாணம் முதலிய சரக்குகளைப் போட்டு வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். அதன் விவரம்: ஒரே கட்டியாயுள்ள 35 கிராம் வீரத்தை மேற்கண்ட திரவத்துள் போட்டு தீயை மெதுவாயெரித்து, அந்த திரவ மெல்லாம் சுண்டுகிற வரையில் அந்தக் கட்டியைப் புறட்டிக் கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்துவருவதால் திரவ மெல்லாஞ் சுண்டி கட்டியின்மீது கவசம்போலப் பிடித்திருக் கும். குளிர ஆறினபின் கத்தியால் மெதுவாகச் சீவி நீக்கி மருந்தை யெடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமே மற்றச் சரக்குகளையும் செய்துகொள்ள வேண்டும். இப்படிச் செய்வ தால் அவை தூய்மையாகி நெருப்பிற்கோடாமல் கட்டுப் பட்டுப்போம்; இவ்விதம் கட்டினதை நெருப்பின்மீது வைத்து சோதிக்க சோதனைக்கு ஒத்திருந்தால் உத்தமம். இல்லாவிட் டால் இன்னொரு தடவையும் மடக்கிச் செய்துகொள்ள பூரணக் கட்டாகிவிடும். நெருப்பிற்கோடுஞ் சரக்குகளை இவ் விதஞ் செய்வதால் அந்தச் சரக்குகள் தூய்மையாவதுடன் கட்டுப்பட்டும் சிறந்த குணத்தைத் தரும்.

இதற்காக, ஓய்வான நேரங்களில் மேற்கண்டபடி வெடி யுப்பைச் சுண்ணமாக்கி [1]சித்தமாக வைத்துக்கொள்ள வேண் டும். அவசியமானபோது உடனுக்குடன் செய்துகொள்ளுவ தானல் அதிக தொல்லையாயிருக்கும்.

குறிப்பு

வைத்தியரா யுள்ளவர்களிடத்தில் குருச்சுண்ணம், குருச் சுண்ணம் போன்றவைகள் அவசியம் இருக்கவேண்டும். தகுந்த ஆயுதங்களும், அவற்றை உபயோகிக்கும் பழக்கமு முள்ளவொருவன் எவ்விதம் தன்னைக் கொல்லவரும் எதிரிக்குப் பயப்படாமல் துணிந்து எதிர்த்து வரிசைக்கிரமமா யுத்தஞ் செய்வானே அவ்விதமே மேற்கண்ட முறைகளுள்ள மருத் துவன் மனிதனைக் கொல்லவரும் எந்த பிணியையும் எதிர்த்து மருந்துகளாகிய ஆயுதங்களைக் முறைப்படி உபயோகித்து வென்று வெற்றிபெறுவதற்கு ஆயத்தமாயிருப்பான். அவ்வாறு

1. கையிருப்பாக.

இல்லாதவனே, அஞ்சிப்பயந்து பின்வாங்க வேண்டுமென்பது உலகறிந்ததாகும். ஆகையால், வைத்தியஞ் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் மேற்கண்ட குருமுறைகளைச் சற்றுக் கடினப் பட்டுச் செய்துகொள்வார்களானல் அருமையான மருந்துக ளெல்லாம் தங்கள் கைவசமாகிச் சிறுமையைத் தருங் கொடிய நோய்களை அழித்து அறவேநீக்கிப் பெருமையையும் கீர்த்தி யையும் பெற்றுச் சுகமே வாழலாம். விளம்பர வைத்தியத்தை நம்பி ஏமாந்து பரிதவிக்கும் பலரைக் காப்பாற்றி வீண்மோசம் போகாமல் சகாயஞ்செய்யவும் ஏதுவாகும். நாமிதுவரையில் வைத்தியர்களுக்கு முக்கியமாக வேண்டிய பொது விவரங்களை எழுதினேம். வைத்தியத்திற் விருப்பமுள்ள ஒவ்வொருவருக் கும் இங்கு சொல்லப்பட்டவைகள் போதுமானவைகள். இது சுருக்கமாகையால், இது இதற்குமேலிடந்தராது. ஆகை யால், இனி உடனே அச்சிடப்படும் அனுபோக வைத்திய இரத் நாகரத்தில் நம்மாலியன்றவரையில் விரிவாக எழுதுவோம். ஆகையால், இனி முக்கியமான முறைகளை யெழுதத்தொடங்கு கின்ருேம்.

அயச்சுத்தி

அய அரப்பொடி பலம் 5 (175 கிராம்). இதனை ஒரு சிறு மண்கிண்ணத்திற்போட்டுக் கொல்லுலையில் வைத்து ஊதிச் சற்று சிவந்தவுடனே வேறு மண்சட்டியில் பத்துப்பலம் (350 கிராம்) காடியைவிட்டு முன் அயத்தை இதிற்கொட்ட வேண்டும். ஆறினபின் காடியை யிறுத்துவிட்டு வேறு மண் கிண்ணத்தில் அயத்தைப் போட்டு உலையில் வைத்து முன் போற் காய்ச்சவேண்டும். முன்சாய்த்த சட்டியைத் தூய்மை செய்து புதிதாகப் பத்துப்பலம் (350 கிராம்) காடியை முன் போல் விட்டு அயம் சிவந்தவுடனே முன்போல் இதிலெடுத்துச் சாய்க்கவேண்டும். இவ்விதமே மூன்ருந்தடவையுஞ் செய்து கொள்ளவேண்டும். இவ்விதமே எள்ளெண்ணெயில் மூன்று தடவையும், பசுவின் மூத்திரத்தில் மூன்றுதடவையும், கொள்ளை வேகவைத்த கியாழத்தில் மூன்றுதடவையும் காய்ச்சிச் சாய்த் துக்கொள்ள வேண்டும். ஒருதடவை சாய்த்த திரவத்தை நீக்கிவிட்டு மறுதடவைக்காகப் புதுத் திரவத்தையே சேர்த் துக்கொள்ள வேண்டும். ஒருதடவை சாய்த்ததில் குற்றமிருக்கு மாகையால். அதை மறுதடவை உபயோகிக்கலாகாது. நாம் தூய்மைசெய்வதில் எவ்வளவுக்கெவ்வளவு விழிப்பாகவும், முறைக்கிரமமாகவுஞ் செய்கிருேமோ மருந்துகளும் அவ்வள வுக்கவ்வளவு சிறப்புக் குணங்களைக் கொடுக்கும். சர்க்கரையை

முறைப்படி தூய்மை செய்துவந்தால் படிகம்போன்ற திரமான கற்கண்டாகிவிடும்; பிறகு முன் சர்க்கரைக்கும், இக்கற்கண்டிற்கும் இடையிலுள்ள பேதம் சிறுவர்களுக்கும் தானே விளங்கும். நாம் முறைப்படி தூய்மைசெய்யாமல் மருந்துகளைச் செய்வதாற்ருன் பலவகைகளிலும் ஏமாந்து மோசம்போகின்ருேம். ஆகையால் சிரமத்தைப் பாராமல் இதிற் சொல்லியிருக்கிறபடி தூய்மைசெய்து மருந்துகளைச் செய்தால் அனுபவத்தில் மேலான குணங்களைக்கண்டு மகிழ்ச்சியடைய ஏதுவாகும்.

குறிப்பு

அயமானது உலகத்தில் பலவகை யந்திரங்கள், பலவகைத் தொழிற்கருவிகள் முதலியவை செய்வதற்கு உபயோகமாகி மற்றெல்லா உலோகங்களிலும் மேன்மை பெற்றிருப்பது போலவே, ஆயுள்வேதம், யூனானி, ஆங்கிலம் ஆகிய மூவகை வைத்தியங்களிலும் இன்றியமையாத மேன்மைபெற்ற ஒன்று. அயமானது இலாடத்தை அராவி யெடுத்துக்கொள்வது உயர்ந்ததாக வழங்கப்பட்டு வருகிறது. நாமும் நம்முடைய மருத்துவநூல்களில் அநேகவிடங்களிலும் அப்படியே யெழுதியிருக்கின்ருேம்; ஆனால். உண்மையை விளக்கப்புகின் இக்காலத்திற் செய்யப்படும் இலாடமெல்லாம் ஒருவகை (மெர்க்கியூ) இரும்பு என்னும் தாழ்ந்த வகையாற் செய்யப்படுகிறது. முற்காலத்திலோ அப்படியன்று. மிகவும் நைப்பான இரும்பினுற் செய்யப்பட்டுவந்தன. ஆகையால் இலாட அரப்பொடியை உபயோகிக்காமல் நாட்டிரும்பின் பொடியை உபயோகிப்பது சிறப்பாகும். அது அகப்படாத சமயங்களில் சீமையிலிருந்துவந்த ஒருவகை நைப்பான இரும்பானது கடையில் விற்கப்படுகிறது. அதைவாங்கி உபயோகித்துக் கொள்ளலாம். இரும்பிலும் பலவகைகளிருக்கின்றன; இவ்விரும்பின் சுத்திமுறைகளும் பலவுள; இவைகளையெல்லாம் நமது அனுபோக வைத்திய ரத்நாகரத்தில் எழுதியிருக்கின்ருேம். இது சுருக்கமானதாகையால் அதிக விரிவிற்கு இடந்தராது. ஆகையால், முக்கியமும் மேன்மையுமான ஒரு சுத்திமுறையோடு நிறுத்தினேம்.

7. அய பற்பம்

தூய்மைசெய்த அய அரப்பொடி பலம் ½ (17½ கிராம்) இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு இதிற் சுமார் 52½ கிராம் உத்தாமணி யென்னும் வேலிப்பருத்தியின் பாலை விட்டு 24 மணிநேரம் ஊறவைக்கவேண்டும். பிறகு, கல்வத்தி

விட்டு 52½ கிராம் மேற்படி புதிய பாலைச் சிறுகச்சிறுகவிட்டு அரைக்கவேண்டும்; பாலெல்லாஞ் சென்று கெட்டிப் பதமானவுடன் வெள்ளி இரண்டணு அளவுள்ள சிறு பில்லைகளாகச் செய்து பீங்கான் தட்டில் வைத்து வெயிலில் ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு கிளிஞ்சலைப் பெருந் துண்டுகளாகப் பொடித்து ஒரு அகலில் சுமார் 2 பலம் (70 கிராம்) பரப்பி அதன்மேல் முன் பில்லைகளை வைத்து மேலும் சுமார் 2 பலம் (70 கிராம்) கிளிஞ்சல் துண்டுகளைப் போட்டு மேலகல்மூடிச் சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தினெடைக்கு 30 பங்கு எடை கொண்ட விராட்டியில் குழிப்புடமிடவும். அதாவது குழியைத் தோண்டிப் பாதி விராட்டியையடுக்கி அதன்மேல் கவசத்தை வைத்து மேலும் பாதி விராட்டியை வைத்து நெருப்பிட்டுப் புடமிடுவதேயாம். புடம் குளிர ஆறின பின் எடுத்துக் கவசத்தைப் பிரித்து மெதுவாய்ச் சுண்ணும்பை நீக்கி பில்லைகளையெடுத்தால் சாம்பல் வண்ணத்துடன் பற்பமாகியிருக்கும். இதனை நான்கு சாமம் செம்மையாக அரைக்க வேண்டும். எத்தனை சாமம் அதிகமாக அரைக்கிறோமோ அதற்குத் தக்கபடி சீக்கிரம் பற்பமாகும். பாலை நாம் எவ்வளவு அதிகமாக விட்டு அரைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாகவும் பற்பமாகும். தீயானது காற்றில்லாத இடத்திற் போட்டு அடர்ந்த தீயாகவுமிருக்கவேண்டும். மேற்கண்ட மூன்று செய்முறைகளும் முறைப்படி இருந்தால் ஒரே புடத்திற் பற்பமாகி விடுகிறது. இதில் ஏதேனும் விகற்பப்பட்டால், ஒரு புடத்தில் பற்பமாகாமல் அரைகுறையாகவே இருக்கும். ஆகையால், முன்போலவே முன் பாலைவிட்டு ஊறவைத்து முன்போல அரைத்து முன்போற் புடம்போட்டால் நிச்சயமாகப் பற்பமாகிவிடும். இதனை எத்தனை தடவை மடக்கிமடக்கி அரைத்துப் புடம்போட்ட போதிலும் இதன்குணம் உயர்ந்ததாகுமே தவிர ஒரு குறைவும் நேரிடாது. மேற்சொல்லிய பாலானது அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடங்களிலுள்ளவர்கள் மடக்கி மடக்கி 3, 5, 7 தடவை புடமிட்டுக் கொள்ளலாம்.

குறிப்பு

மேற்கண்ட உத்தாமணிப் பாலானது எல்லாவிடங்களிலும் கிடைப்பதரிது. இது மதுரை மாவட்டத்தின் கீழ்ப்பாகங்களில் அதிகமாகக் கிடைக்கிறது. அப்படி அரிதாகக் கிடைக்கிற இடங்களிலுள்ளவர்கள் மேற்படி உத்தாமணிப்பூ 2 பங்கு, வெள்ளெருக்கம் பழுப்பு அல்லது வெள்ளெருக்கம்பூ 1 பங்கு இவ்விரண்டையும் சேர்த்திடித்துத் தனிரசமாகப் பிழிந்த சாற்றை விட்டு அரைத்து முன்போற் புடம்போடவும்.

ஆனல் இதற்கு அரைப்பும் சாற்றினளவும் முன்சொல்லியதற்கு இரண்டுபங்காய் இருக்கவேண்டும். இவ்விதம் செய்த பற்பத்திற்கும் தனிப்பாலால் செய்த பற்பத்திற்கும் பெருத்த விகற்பமில்லாதிருக்கவில்லை. நாமிருவகையுஞ் செய்து கையாண்டு வருகின்றபடியால் நமது நண்பர்களும் கைமுறையாகச் செய்து அனுபவிப்பார்களென நம்புகின்றோம். இதனைச் செய்வது பூரணமாக வில்லையென்றல் அவர்கள் கைப்பிசகேயன்றி முறைப்பிசகல்ல. இந்தச் செடியில் பாலெடுப்பதாயிருந்தால் வெய்யில் அதிகமாக ஏறுவதற்கு முன்பாக அதிகாலையில் எடுக்கவேண்டும், வெய்யிலேறினல் பால்வராது.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய், முலைப்பால், இஞ்சிரசம், ஆகியவைகளேயாம். இன்னும் நோய்பலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடியும் மருத்துவர்கள் உத்திப்படியும் இளகம், குடிநீர், சூரணம், முதலானவைகளிலும் சேர்த்து சமயோசிதமாக உபயோகிக்கலாம். துணைமருந்து பொருளானது மருந்திற்கு எண்மடங்காக இருக்கவேண்டும்.

தீரும்நோய்கள் :—பாண்டு நோய்கள், மகோதர நோய்கள், குன்ம நோய்கள், சய நோய்கள், சோகை நோய்கள் ஆகிய அனேக பிணிகள் தீரும்.

மருத்துணவு :—புளிப்புப் பண்டங்கள், புகையிலை முதலிய லாகிரிப் பண்டங்கள், பெண்போகம் ஆகியவைகளை அறவே நீக்கவேண்டியது.

குறிப்பு

அயத்தை வெளுக்கச்செய்வது மிகவும் அரிதான காரியம். வெளுக்கச்செய்தாலும், சிறந்த குணமுள்ளதாகச் செய்வது அரிதிலுமரிது. அதிக குணமுள்ளதாகச் செய்வதிலும் அதிக உழைப்புமில்லாத முறையாயிருப்பது அரிதிலுமரிது. ஆகையால், இந்த இலட்சணங்களெல்லாம் மேற்கண்ட அயபற்பத்திலிருப்பதால் இது மிகவும் அருமையான முறையென்பது நமது துணிபு. ('' கருப்பு வெளுப்பதரிது வெளுப்புச் சிவப்பதரிது'') எனும் பழமொழியும் பண்டைக்காலந் தொடங்கி வழங்கிவருகிறது. அதாவது இரும்பு பற்பமாவதும், வெள்ளி செந்தூரமாவதும் அரிதென்பதேயாம்.

8. அயபற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மைசெய்த அயப்பொடி 1 பலம் (35 கிராம்), சிவப்பு வேங்கைவேர்ப்பட்டைச்சாறு படி $\frac{1}{2}$ மேற்படி பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு அரைக்கவேண்டும். கைவிடாமலும் அரைக்கலாம். சாவகாசமான காலங்களிலும் அரைக்கலாம். இந்தச்சாறு ஒரே தடவையில் அரைப்படி வேண்டுமென்பதும் அவசிய மல்ல. கிடைத்தவரையில் அல்லது அப்போதைக்கப்போது செல்லத்தக்க அளவு சாற்றை எடுத்துக்கொள்ளலாம். எந்த விதத்திலும் மொத்தம் அரைப்படியாக வேண்டியதுதான் அவசியம். எவ்விதமாயினும் மேற்கண்ட சாறுனது மேற் கண்ட அளவு அரைப்பிற் சென்றபின் சிறுபில்லையாகத் தட்டி வெயிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்ந்தபின் ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஏழுசீலைமண் செய்து வெயிலில் வைத்து ஈரமில் லாமல் உலர்ந்தபின் இக்கவசத்திற்கு இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் மருந்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

புடமிட்டெடுத்த மருந்தைக் கல்வத்திலிட்டு கால்படி செங் கரும்பின் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு முன்போல் அரைக்க வேண்டும். இந்தச் சாறெல்லாஞ் சென்றவுடன் சிறுபில்லை களாகச் செய்து முன்போலவே உலர்த்தி கவசஞ்செய் துலர்த்திக் கவசத்தினெடைக்கு இருபத்திரண்டு பங்குள்ள விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த அரைகுறையான பற்பத்தைக் கல்வத்திலிட்டுக் கால்படி புளியமரத்தின் வேர்பட்டைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து முன்போலரைத்து, முன்போலுலர்த்தி, முன்போல் கவசித்துலர்த்தி கவசத்தின் 24 பங்கு எடை விராட்டியில் முன்போல் புடமிடவும். ஆறினபின் எடுத்துக் கொள்ள வேண்டியது.

மேற்படி அரைகுறையான பற்பத்தைக் கல்வத்திலிட்டு அரைக்காற்படி சோற்றுக்கற்றாழை வேர்ச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டரைத்து முன்போலுலர்த்தி முன்போல் கவசித்துக் கவசித்தின் 25 பங்கு எடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்க, இயற்கையினது அருளால் முழுக்கூறும் வெண்மையான பற்பமாயிருக்கும்.

அளவு:—அரை முதல் ஒரு அரிசி எடை சாப்பிடலாம்.

தீரும் நோய்கள் :—முன் அயபற்பத்திற் சொல்லியிருக்கப் பட்ட பிணிகளெல்லாந் தீரும்.

குறிப்பு

இந்தப் பாகமானது இராசவைத்திய மகுடமென்னும் யமகவெண்பாவிற் சொல்லப்பட்டிருப்பினும் அதில் சொல்லி யிருக்கிறபடி செய்வதானுல் சுமார் ஆறுமாதத்திற்கு அதிக மாகவே செல்கிறது. ஆகையால், இதனைச் செய்வதற்கும், செய்கிறவர்களுக்கும் பலவித அசந்தர்ப்பங்கள் நேரிட்டு மருந்து முடியாமல் அரைகுறையாகவே போக நேரிடும் ஆகை யால், அடியேன் மேற்கண்ட பாகப்படி செய்தேன். அது இயற்கையினது அருளால் எவ்விதக் குறைவுமின்றிப் பூரண இலட்சணங்களுடன் பற்பமானது. நோயில் உபயோகித்ததி லும் இயற்கையினது அருளால் சிறந்த குணமே காணப் பட்டது. இப்படிச் செய்யத் துணிவுற்றதற்குக் காரணம் "கரும்பொன் றவளங் கழறுது மொன்றிற்கு" என்னுஞ் செய்யுளானது இடந்தருவதேயாம்.

9. அய பற்பம் (வேறு)

அன்னபேதி 3 பலம் (105 கிராம்), தூய்மைசெய்த பூநீறு $4\frac{1}{2}$ பலம் ($157\frac{1}{2}$ கிராம்) இரண்டையும் கல்வத்திலிட்டுச் சுத்தநீர் விட்டு 2 சாமமரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு கொல்லுலையில் இரும்புத் தகட்டை வைத்து அதன்மேல் மேற்படி பில்லைகளை வைத்து உலையை ஊதி பில்லைகள் சிவந்தவுடன் ஒரு டம்ளரில் நிறையத் தண்ணீர் வார்த்து அதில் மேற்படி பில்லைகளை ஒவ்வொன்ருக எடுத்துப் போடவேண்டும். பிறகு டம்ளரிலுள்ளதை இரண்டு மூன்று தடவை கலக்கிவிட்டுத் தெளியவைத்துத் தெளியத் தெளியத் தெளிவை யிறுத்துக்கொண்டே வரவேண்டும். தெளிவில் லாமல் நீர் குழம்பாகி விட்டால் மறுபடியும் நீரைவிட்டுத் தெளியவைக்கவேண்டும். இப்படி ஏழெட்டுத் தடவை நீரை வார்த்து வார்த்துத் தெளியத் தெளிய இறுத்துக் கொண்டே வரவேண்டும். இவ்விதம் அதிற் கொஞ்சமும் உவர்ப்பில்லாத வரையில் செய்யவேண்டியது, உவர்ப் பானது அறவே நீங்கினவுடன் ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு வெயிலில் வைத்து நன்ருயுலர்ந்தவுடன் எடுத்துப் பொடித்துப் புட்டியில் வைத்துக்கொள்ள வேண்டியது. இந்த முறையானது ஒரு பிரெஞ்சு மருத்துவரால் கண்டு பிடிக்கப் பட்டது. மேற்கண்ட பாகப்படி செய்வதால் அன்னபேதியி

லுள்ள அயச்சத்தெல்லாம் வெண்மையான பற்பமாகி நின்று விடுகிறது. இதன் குணமும் அயபற்பத்திற்குள்ள குணமே யாம். ஆனால் வீறுமிக்க குணமாயில்லாமல் சாந்தமான குணமாயிருக்கிறது. இது மிகவும் சுலபமான முறை.

அளவு:—ஒன்று முதல் மூன்று குன்றிமணி வரையில் நோய்க்குத் தகுந்த துணைமருந்துகளில் கொடுக்கலாம்.

தீரும் நோய்:—மேற்சொல்லிய நோய்கள் யாவும் தீரும்.

10. லோக செந்தூரம்

தூய்மைசெய்த அய அரப்பொடி பலம் 2 (70 கிராம்) [1]சுத்தித்த நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 1 (35 கிராம்) கருவேலம் பட்டையும், இளநீர் மட்டையும் சமபாகமாகச் சேர்த்திடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை,—முன் இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு அரைமணிநேரம் அரைத்து, பிறகு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துக் கைவிடாமல் 2 சாமமரைத்து ஐந்து பூவரசின் பழுப்பை ஒன்றாகச் சேர்த்துப் பரப்பி அதில் வழித்து விட்டுப் பரப்பி அதன்மேலும் ஐந்து பூவரசின் பழுப்பைச் சேர்த்து மூடி ஒரு பீங்கான் தட்டில் வைத்துக் கடுவெயிலில் வைக்கவேண்டியது. ஈரமுலர்ந்தவுடன் புகையெழும்பும்; அதுவே பதமென எடுத்துக் கல்வத்திற் பொடித்துக் கொள்ளவேண்டியது. பிறகு ஒரு புதிய மண்சட்டியை அடுப்பில் வைத்து அடுப்பெரித்துச் சட்டி நன்றாகக் காய்ந்து சூடுண்டானவுடன் முன் பொடியைப் போட்டுப் புகையாமல் வறுக்க வேண்டியது. பொடியைச் சட்டியிற் போட்டபின்பு அடுப்பை மெதுவாக எரிக்கவேண்டியது. வறுக்கும்போது புகையுண்டானால் சட்டியைக் கீழேயிறக்கி வைத்து வறுக்க வேண்டியது. இவ்விதம் சமயோசிதமாகவும் பக்குவமாகவும் வறுத்துவந்தால் முருக்கம் பூவைப்போல சிவந்து நல்ல செந்தூரமாகிவிடும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டியது.

அளவு:—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து:—இலவங்கத்தை வறுத்திடித்த தூள், மேற்றோல் சீவின சுக்குத் தூள், வறுத்திடித்த மிளகுத் தூள், வறுத்திடித்த அரிசித்திப்பிலித் தூள் இவை வகை 1-க்குப் பலம் 1, தேன் பலம் 4, நெய் பலம் 3, தேனைக்காய்ச்சி முன் தூள்களைக் கொட்டி நன்றாய்க் கிண்டிக்கிளறி கீழிறக்கி நெய்யையும்

1. கெந்தக சுத்தி முதலியவை சுத்திக்கிரமப் பிரிவிலெழுதப்படும்.

விட்டு கலக்கும்படி பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு ஒரு வராகனெடை லேகியமெடுத்து அதில் முன் செந்தூரத்தை அளவுப்படி துணைமருந்துடன் கொள்ளவேண்டும். காலை மாலை இரண்டுவேளையும் உட்கொள்ளலாம்.

முன்கண்ட சூரணங்களுள் தனித்தனி ஒவ்வொன்றுடன் நெய்யையுந் தேனையுஞ் சேர்த்து முன் செந்தூரத்தை கலந்து உட்கொள்ளலாம்.

நோய்க்குத் தகுந்தபடி அரை மண்டலம், முக்கால் மண்டலம், ஒரு மண்டலம் உபயோகிக்க வேண்டியது.

தீரும் நோய்கள் :—பித்தவெட்டை, மஞ்சள் நோய், சோகை, காரணமின்றி உடம்பு வெளுத்துப்போதல், இரத்தசோகை, கைகாலசதி, பஞ்சபாண்டு, அறுவகைக் கிராணி, நச்சுபேதி, உஷ்ணவாயு, அக்கினிமந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றிரைச்சல், அசீரணம், அரைச்சோறுபட்டுக் கழிதல், மாந்தக்கழிச்சல் ஆகிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம். நோய் பலமாயிருந்தால், புளி, புகை மூதலியவைகளை அறவே நீக்கவேண்டியது.

11. லோக செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த அயப்பொடி பலம் $1\frac{1}{2}$ ($52\frac{1}{2}$ கிராம்) நீர்கலந்த கெந்தகத் திராவகம் (Diluted sulphuric Acid) 3 பலம் (105 கிராம்).

செய்முறை :—பொடியைக் கல்வத்திலிட்டு, மேற்படி திராவகத்தைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமமரைத்துப் பில்லைசெய்து வெயிலிலுலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி ஒருமுழ சதுரமுள்ள புடமிடவும். குளிர ஆறினபின் எடுக்க நன்ருய்ச் சிவந்த நிறமுள்ள செந்தூரமாயிருக்கும். அப்படியிராவிட்டால் எலுமிச்சம்பழச் சாற்றைப் போதிய அளவு விட்டரைத்து முன்போற் புடம் போடவும். நல்ல சிவந்த வண்ணமான செந்தூரமாகும். முன்னர் திராவகம் விட்டரைக்கும்போதும் அவசியமானல் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டும் அரைத்துக்கொள்ளலாம்,

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—நெய், தேன்.

தீரும் நோய்கள் :—பஞ்சபாண்டு, சோகை, பித்த வெட்டை, பெருங்கழிச்சல், கழிச்சல் ஆகியவைகளாம்.

மருத்துணவு :—முன்முறையிற் சொல்லியவைகளேயாம்.

12. துவாதச லோக மாரண செந்தூரம்

கௌரிப்பாடாணம், சங்குப்பாடாணம், குதிரைப்பல்பாடாணம், சீனுக்காரம், நவச்சாரம், வீரம், இரசகர்ப்பூரம், வெண்காரம், பூநீறு, வெடியுப்பு, இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், இப்பன்னிரெண்டும் வகை 1-க்கு விராகனெடை 1 (3½ கிராம்) (இவற்றிற்குச் சுத்தியில்லை). ஈசலிறகுபோல் தட்டின அயத் தகடு பலம் 1 (35 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் விராகனெடை 8 (28 கிராம்), வீரம் விராகனெடை 4, (14 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் பன்னிரண்டு சரக்குகளில், கெந்தகத்தையும், ரசத்தையும் கல்வத்திலிட்டரைத்து நன்ருகக் கருத்தவுடன் மற்ற பத்துச்சரக்குகளையுஞ் சேர்த்துப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு ஒன்றரைமணி நேரமரைத்து அயத் தகட்டின்மீது சமமாகப்பூசி உலர்த்த வேண்டும். ஒருபக்கம் தடவி அதையுலர்த்தி உலர்ந்தபின் மறுபக்கம் தடவியுலர்த்துவது சுலபமார்க்கம். இவ்விதம் உலர்த்தின தகட்டை ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து உலர்த்தவேண்டும், கவசமானது நன்ருக ஈரமில்லாமல் உலர்ந்தபின் கெசபுடமிடவேண்டும். (அதாவது, மூன்றடி நீளம், மூன்றடி அகலம் மூன்றடி ஆழமுள்ள பள்ளத்தில் அது நிறைய விராட்டியை அடுக்கிப் புடமிடுவதே கெசபுடமாம். புடம் ஆறினபின் கவசத்தைப் பிரித்துப் பார்த்தால் அயமானது வெட்டையாகி நொறுங்கும் பக்குவமாயிருக்கும். அதனையெடுத்துக் கல்வத்திற் பொடித்துத் துணியில் வடிகட்டிக்கொண்டு ஏதேனுந் திப்பியிருந்தால், அதை நீக்கி மற்றதை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தூளைக் கல்வத்திவிட்டு, கெந்தகம், வீரம் இரண்டையும் சேர்த்துப் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு 2 சாமமரைத்துப் பில்லைசெய்து வெயிலில் வைத்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடிச் சீலைமண் செய்து உலர்ந்தபின் முன்போற் கெசபுடமிடவும். புடமாறினபின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

அளவு :— ½ முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய்,

தீரும் நோய்கள் :—வாயு சம்பந்தமான எல்லாவகை நோய்களும் தீரும். பக்கவாதம், குடல்வாதம், ஓடுவாயு, பாண்டு, சோகை ஆகியவைகளுந் தீரும்.

மருத்துணவு :—பாலன்னந்தவிர மற்றென்று மாகாது.

குறிப்பு

கெசபுடமிட்டுச் செந்தூரிக்குங் கடினமான இம்முறை யானது அபூர்வமானதா? எனச்சிலர் சந்தேகிக்க இட முண்டு. ஆனுல் கெசபுடமிடுவது பட்டணங்களிலுள்ள சில ருக்குத் தொல்லேயேயொழிய வெளியூர்களிலுள்ள எல்லோருக் கும் ஒருபோதும் சிரமமாகாது. ஆனுல் இம்முறையில் பல சிறப்புகளுமுண்டு. அதில் முக்கியமானதாவது அயத்தைச் செந்தூரிப்பதுபோலவே தங்கம், வெள்ளி, தாம்பிரம், உருக்கு, தண்டவாளம், பித்தளே, வெங்கலம், நாகம், வங்கம், கருவங் கம், நிமிளே ஆகிய உலோகங்களேயும் செந்தூரித்துக் கொள்ள லாம். இது குருமுறைகளி லொன்ருகையாலும், அரிய முறை யாகையாலும் இதனேயிங்கு சிறப்புடையதாக எடுத்தெழுத நேரிட்டது. (பின்வரும் தசலோகமாரணத்தையும் பார்க்க.)

13. காரலோக செந்தூரம்

தூய்மைசெய்த அயபொடி பலம் 5 (175 கிராம்), திறமான கெந்தகத் திராவகம் (Strong Sulphuric Acid) பலம் 5 (175 கிராம்). அயப்பொடியைக் கெட்டியான பீங்கான் பாத்திரத்தில் போட்டுத் தூரமாக இருந்துகொண்டு திராவகத்தை ஊற்ற வேண்டும். உடனே ஒருவகை நீலப்புகை எழும்பும். அந்த புகையானது கண் முதலியவைகளில் படாமல் விழிப்பாக இருந்துகொள்ளவேண்டும். திராவகமானது கை, ஆடை முதலியவைகளிலும் படாமல் பத்திரமாகவு மிருக்கவேண்டும். புகை அடங்கினவுடன் அதில் 10 பலம் (350 கிராம்) சுத்த சலத்தை விட்டால் அது பொங்கும். பிறகு அப்படியே வெயி லில் வைத்து உலர்ந்தபின்பு வேறு ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுக்கொண்டு அரைப்படி தண்ணீர் விட்டு நன்ருய்க் கலக்கித் தெளியவைக்க வேண்டும். சுத்தமாகத் தெளிந் திருக்கிற பாகத்தை இறுத்துக்கொண்டு, கீழ்நிற்கும் வண்டலில் மறுபடியும் 3 ஆழாக்கு நீர்விட்டுத் தெளியவைக்க வேண்டும். முன்னிறுத்த தெளிவை வேருெரு வாயகன்ற கெட்டியான பீங்கான் பாத்திரத்தில் வைத்து வெயிலிலுலர்த்த வேண்டும். இரண்டாந்தடவை இறுத்த தெளிவையும் முன்னிறுத்த தெளி வையும் சேர்த்து உலர்த்தி வரவேண்டும். பிறகு அடியிலுள்ள வண்டலுக்குத் தகுந்தபடி சுத்த தண்ணீர் விட்டுத் தெளியத் தெளியத் தெளிவை இறுத்து முன் தெளிவுடன் சேர்த்து உலர்த்தி வரவேண்டும். இவ்விதம் அந்த வண்டலில் சத் துள்ளவரையில் தண்ணீர் வார்த்து வார்த்துக் கரைத்துத் தெளிவை இறுத்துக்கொள்ள வேண்டும். எல்லாத் தெளிவை

யும் ஒன்ருகச் சேர்த்து வெயிலில் வைத்துலர்த்திக் கெட்டியானவுடன் கையினுலுடைத்துவிட்டுச் சுத்தமாய்க் காய்ந்தபின் வெண்மையான பற்பம்போலிருக்கும். இந்தப் பற்பத்தை ஒரு ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண் செய்து ஈரமில்லாமலுலர்த்தி இக்கவசத்துக்கு இருபது பங்கெடை விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்க முருக்கம்பூப் போன்று செந்தூரமாகி யிருக்கும். இந்தச் செந்தூரத்தைக் கல்வத்திலிட்டு கையாந்தகரைச்சாறு, புளிப்பு மாதுளம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு ஆகியவைகளி லொன்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒருசாமமரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து கவசத்தின் பத்துப்பங்கு எடை விராட்டியிற் புடமிட்டெடுக்க நேர்த்தியான செந்தூரமாம்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய் முதலியவைகளாம். இது ஒவ்வொன்றும் வேளையொன்றுக்கு விராகனெடை 1 (3½ கிராம்) வீதம் எடுத்துக் கொள்ளவேண்டும். தேன் விராகனெடை ½ (1¾ கிராம்), நெய் விராகனெடை ½ (1 கிராம்) இந்த இரண்டையும் கலந்து மருந்துடன் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள் :—பித்தபாண்டு முதலிய பாண்டு வகைகள், சோகை நோய்கள், பித்தவெட்டை, கிராணி, கழிச்சல், விடபேதி, அசீரண நோய்கள், வாயு சம்மந்தமான நோய்கள், பெருவயிறு நோய்கள், பீலிகை நோய்கள், அசதி முதலிய எல்லா நோய்களுக்கும் தகுந்த துணைமருந்துகளுடன் உபயோகிக்கத் தீரும்.

மருத்துணவு :—நோய்பலம், உடல்பலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி புளி, புகை, பெண் ஆகியவைகளை அறவே நீக்கியும், சற்று குறைத்தும் சமயோசிதம்போல் பத்தியங் காக்கவேண்டும்.

குறிப்பு

இதனை உடல் உழைப்பற்றவர்களுக்கு உபயோகிக்க வேண்டியதா யிருந்தால், பொற்றலைக் கையாந்தகரைச்சாறு. அல்லது கையாந்தகரைச்சாறு, புளிப்பு மாதுளம்பழச்சாறு ஆகியவைகளி லொன்றைவிட்டு அரைத்தரைத்து மூன்றுபுடம் போட்டுக்கொண்டால் மிகவும் மேன்மையாக இருக்கும். அப்படிச் செய்யக்கூடாத சமயத்தில் வேண்டிய எடை செந்தூரத்தைக் கல்வத்திலிட்டு சுத்தநீரை விட்டு அரைமணி

நேரம் அரைத்துக் கல்வம் நிறைய நீரைவிட்டு ஒருமணி நேரம் வைத்துத் தெளிந்தவுடன் தெளிவை யிறுத்துவிட வேண்டும். பிறகும் சுத்தநீர் விட்டு முன்போலரைத்து முன் போல் கல்வம் நிறைய நீர்விட்டு முன்போல் தெளியவைத் துத் தெளிவை யிறுத்துவிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவை செய்து முடிவாய் வெயிலில் வைத்துலர்த் திப் பொடித்துப் புட்டியிலடைத்து வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் பாகம் செய்யப்பட்ட செந்தூரமானது நூறு புடமிட்ட அயச்செந்தூரத்துக்குச் சமானமான குணத் தைத் தரும். இது ஒரு சிறந்த செந்தூரமாகையால் புத்தி மான்கள் எல்லாப் பிணிகளிலும் சமயோசிதமாகத் தகுந்த துணைமருந்துகளில் உபயோகித்து இதன் பெருமையைத் தெரிந்துகொள்வார்கள்.

14. மன்மத லோக செந்தூரம்

தூய்மைசெய்த அய அரப்பொடி 4 பலம் (140 கிராம்) தூய்மைசெய்த செம்மண் பூநாகம் 4 பலம் (140 கிராம்).

செய்முறை :—இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு 2 சாமம் கைவிடாம லரைத்து ஒரு ஓட்டில் பரப்பிவைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி 2 அடி சதுரப் புடமிடவும். புடம் ஆறினபின் மருந்தை யெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் 4 பலம் (140 கிராம்) தூய்மைசெய்த செம்மண் பூநாகத்தைச் சேர்த்து இரண்டு சாமமரைத்து முன் போல் ஓட்டிலிட்டு மேலோடுமூடிச் சீலைமண் செய்துலர்த்தி முன்போல் புடமிடவும். பின்பு புடத்தைப் பிரித்து மருந்தை எடுத்து முன்போல் 4 பலம் (140 கிராம்) செம்மண் பூநா கத்தை முன்போலரைத்து முன்போல் புடமிடவும். இவ்விதம் தடவைக்குத் தடவை தூய்மைசெய்த செம்மண் பூநாகம் நந்நான்கு பலம் சேர்த்தரைத்து மடக்கிமடக்கிப் பதினறு புட மிடவேண்டும். பதினேழாம் புடத்தில் பூநாகத்தைச் சேர்க் காமல் தனியே செந்தூரத்தை மட்டும் கல்வத்திலிட்டுப் புளிப்பு மாதுளம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாம மரைத்துச் சிறு பில்லைகளாகத் தட்டி வெயிலில் வைத்து நன்ருய் உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண் செய்து ஈரமில்லாமல் உலர்த்தி இரண்டடி சதுரப் புடம் முன் போலிடவும். இதில் பூநாகத்தின் தாம்பிரமுஞ் சேர்ந்து செந்தூரமாகிக்கொண்டு வருகிறபடியால் பூநாகத்திலுள்ள தாம்பிரத்துக்குத் தகுந்தபடி செந்தூரமானது சுமார் 5 பலம்

முதல் (175 கிராம்) 6 பலம் (210 கிராம்) வரையிலிருக்கும்; இது அருமையான சிறந்த செந்தூரமாம்.

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—வாதுமைஅல்வா, தேன், நெய், பாலேடு, வெண்ணெய் ஆகியவை போன்ற சத்துள்ள இளகம் முதலியவைகளாம். இச் செந்தூரத்தை உட்கொண்டவுடன் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் செரித்தல்திறனுக்கு ஏற்றவாறு ஒரு ஆழாக்கு முதல் இரண்டு மூன்று ஆழாக்கு வரையில் பருக வேண்டும்.

பயன்படுத்தல் :—உடலில் நல்ல ரத்தமுண்டாகி நரம்புகள் முறுக்கேறி, உடல்வன்மை, ஆண்மை சத்து, உடல்சக்தி முதலியவைகள் அதிகரித்து வயோதிகநிலை போய் இளமை உண்டாகும். இதன் பெருமையை எழுதுவதனால் இந்நூல் அதிக விரிவாகிவிடும் எனப் பயந்து, இதனை உண்டு அனுபவித்து வருகிறவர்கள் தாம் தாமே தெரிந்துகொள்ளக்கூடுமாகையாலும் இது ஒரு கற்பத்துக்குச் சமானமாகையாலும் இம்மட்டோடு நிறுத்துகின்றோம். இதனை வருடத்தில் மூன்று மண்டலம் உண்டுவந்தால் எவ்வித நோயும் அணுகாமல் வச்சிர உடலுடையவர்களாய் இருக்கலாமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரியமுள்ளவர்கள் அவ்விதம் சோதித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

பூநாக சுத்தி

செம்மண் பூமியில் வெட்டி எடுத்த பூநாகம் 10 பலம் (350 கிராமம்), புளித்தமோர் படி 1½. இந்த மோரில் அரைப் படியை ஒரு பாத்திரத்தில் விட்டு மேற்படி பூநாகத்தை அதிற் போட்டு இரண்டு மணிநேரம் மூடிவைத்துப் பிறகு மோரை இறுத்து விட்டுத் தண்ணீர்விட்டு நன்றாயலம்பி எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதால் பூநாகத்தின் வயிற்றிலுள்ள மண்ணெல்லாம் வெளிப்பட்டுப்போம். இரண்டாந்தடவையும் ஒரு பாத்திரத்தில் அரைப்படி மோரை விட்டு முன் கழுவியெடுத்த பூநாகத்தைப் போட்டு முன்போல் ஊறவைத்து கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். எத்தனை தடவையாயினும் பூச்சிகளின் வயிற்றில் மண்ணில்லாமல் தூய்மைசெய்து கொள்வதே முக்கியமானது. இப்பூநாகத்தின் வயிற்றிலுள்ள மண்ணை அறவே தூய்மைசெய்யாவிட்டால், செந்தூரத்துடன் சேர்ந்து எடை அதிகமாகிவிடும். ஆகையால் செந்தூரத்தின் வன்மை குறைந்துபோம்.

பூநாக வுற்பத்தி முறை

சற்று ஈரமுள்ள செம்மண் பூமியில் ஒருகெச சதுரமுள்ள பள்ளந் தோண்டி, அதில் வரகு வைக்கோலை ஒரு அங்குலக் கனம் பரப்பி அதன்மேல் தண்ணீரைத் தெளித்துக் குழியின் மேல் கீற்று, பாய் முதலியவைகளைப் போட்டு மூடிவைக்கவேண்டும். நாள்தோறும் ஒருதடவை தண்ணீர் தெளித்து மூடிவிட வேண்டும். இவ்விதம் ஒருவாரம் அல்லது பத்துநாள் செய்து வரின் மண்புழுக்கள் உண்டாகிவிடும்.

15. சுவர்ணலோக செந்தூரம்

தூய்மைசெய்த அய அரப்பொடி பலம் $1\frac{3}{4}$ ($26\frac{1}{2}$ கிராம்) அப்பிரேக செந்தூரம் பலம் $\frac{1}{2}$ ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த காரீயம், தூய்மைசெய்த ரசம், தூய்மைசெய்த ஊசிக்காந்தம், தூய்மைசெய்த பொன்னரிதாரம், தூய்மைசெய்த மனேசிலை, தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், பவளம், அப்பிரேக பற்பம் இவை வகை 1-க்குப் பலம் $\frac{1}{4}$ ($8\frac{3}{4}$ கிராம்) தங்க அரப்பொடி விராகனெடை $\frac{1}{2}$ ($1\frac{3}{4}$ கிராம்) ஆகச்சரக்குப் பதினொன்றிற்கு விராகனெடை 43 ($150\frac{1}{2}$ கிராம்) தங்கரேக்கு 40, முற்றியதும் பருமனுமான சீந்திற்கொடியின் மேற் சருகை நீக்கித் துண்டித்துக் காடி தெளித்து இடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு செல்லத்தக்க அளவு, சோற்றுக் கற்றாழைச் சோறு செல்லத்தக்க அளவு, எலுமிச்சம்பழச் சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :- காரீயத்தையும். ரசத்தையும் தொந்தித்துக் கொள்ளவும். காந்தம், அரிதாரம், மனேசிலை, கெந்தகம், பவளம் ஆகியவைகளைத் தனித்தனி மைபோல் பொடித்துக் கொள்ளவும். தங்கரேக்கு நீங்கலாக மற்ற பதினொரு சரக்கு களையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணிநேரம் அரைத்துப் பிறகு சீந்திற்கொடிச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு 8 சாமமரைத்துச் சிறு பில்லைகளாகத் தட்டி வெய்யிலில் வைத் துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து குக்குடப் புடமிடவும். புடம் ஆறினபின் எடுக்கவும்.

பிறகு புடமிட்ட மருந்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அவுரியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு 4 சாமமரைத்துச் சிறு பில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டிலிட்டு மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி முன்போலவே குக்குடப் புடமிடவும். குளிர ஆறினபின் எடுக்கவும்.

இதன் பிறகு, மேற்படி மருந்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சோற்றுக் கற்ருழைச் சோற்றைச் சிறுகச்சிறுக விட்டு 2 சாமம் அரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து வெயிலி லுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் குக்குடப் புடமிடவும். குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போலவே சோற்றுக்கற்ருழைச் சோற்றையிட்டு 2 சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி முன்போல் புடமிடவும். இவ்விதம் சோற்றுக் கற்ருழைச் சோற்றில் மடக்கி மடக்கி மொத்தம் 4 புடமிடவும்.

அதன் பிறகு மருந்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் தங்கரேக்கையுஞ் சேர்த்து ஒருமணி நேரமரைத்து கலக்கச் செய்து கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து 4 சாமமரைத்துச் சிறு பில்லைகளாகச் செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 3 சீலைமண் செய்து உலர்த்திக் குக்குடப் புடமிடவும். புடமாறினபின் மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் பழச்சாற்றை விட்டு 4 சாமமரைத்து முன்போல் புடமிடவும். இவ்விதம் பழச் சாற்றில் மடக்கி மடக்கி நான்கு புடமிடவும். ஆகப் புடம் 10-ம் தீர்ந்ததானுல் கடவுளினது அருளினுலும், பெரியோர் களினது வாழ்த்துதலாலும் மகா அற்புதமான செந்தூரமாகும்.

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும் பயன்படுத்துதலும் :—காலையில் மேற்கண்ட அளவுப்படி ஒரு விராகனெடை தேனில் கலந்து உட்கொண் டும், மாலையில் ஒரு விராகனெடை கீழ்க்கண்ட அமுதாதி எண்ணெயில் சேர்த்து உட்கொண்டும் வந்தால், சய நோய்கள், இருமல் நோய்கள் ஆகிய எல்லாப் பிணிகளும் தீரும். இரைப்பிருமல், உள்காய்ச்சல், எலும்புருக்கி நோய் ஆகியவைகளும் தீரும். இளைத்த உடல் பெருத்து வலிமை உண்டாகும்.

தேற்ருங்கொட்டை இளகத்தில் அல்லது வெண்ணெயில் அல்லது மதுஸ்நுஹி ரசாயனத்தில் மேற்கண்ட செந்தூரத்தை மேற்கண்ட அளவுப்படி அனுபானித்துக் காலை மாலை இரண்டு வேளையும் உட்கொண்டுவந்தால், இருபத்தொரு மேகங்கள், நீரிழிவு நோய், நீரெரிச்சல், முதலியவைகளும் தீரும். இந்திரிய விருத்தியுண்டாகி தாதுவன்மை அதிகரிக்கும். நோய் களுக்குத் தகுந்தபடி $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 மண்டலம் உபேயாகிக்க வேண்டும்.

மருத்துணவு :—புளி, புகை, போகம் நீக்கவும்.

மதுஸ்நுஹி—பறங்கிப்பட்டை.

அமுதாதி யெண்ணெய்

சிற்ருமணக்கெண்ணெய் 2 பலம் (70 கிராம்), தாளிசப் பத்திரி, மிளகு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), அரிசித் திப்பிலி, அக்கிராகாரம், சடாமாஞ்சில், ஏலரிசி, கசகசா, சீரகம் வகைக்குப் பலம் ¼ (8¾ கிராம்) கற்கண்டு 2 பலம் (70 கிராம்), கோரோசனை வராகனெடை ½, (1¾ கிராம்) குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம் இவை வகை 1-க்கு விராகனெடை ¼.

செய்முறை :—முன் ஏழு சரக்குகளையும் தனித்தனியே வறுத்து இடித்து துணியில் வடிகட்டிக் கொள்ளவேண்டும். பின் மூன்று சரக்குகளையும் ஒன்ருகச் சேர்த்துப் பொடித்து அரைத்துக் கொள்ளவேண்டும். கற்கண்டைத் தனியே பொடித்துக்கொள்ள வேண்டும். ஆக மூன்று வகைகளையும் ஒன்ருகக் கலந்துகொண்டு முன் சிற்ருமணக்கெண்ணெயில் போட்டுக் கலந்து வெய்யிலில் மூன்று அல்லது ஐந்துநாள் வைக்கவேண்டும். நாள்தோறும் ஏழெட்டுத் தடவைகள் நன்ருய்க் கலக்கியும் வரவேண்டும்: இப்படிச் சித்தம்செய்து கொள்வதே அமுதாதி யெண்ணெயாம்.

16. வருணலோக செந்தூரம்

நைப்பான அய அரப்பொடியை எலுமிச்சம் பழச்சாற்றில் 6 மணிநேரம் ஊறவைத்துக் கருப்பு நீங்கக் கழுவிக் கொஞ்சமும் ஈரப்பசையில்லாமல் காயவைத்த அயத்தூள் 1 பலம், (35 கிராம்), துருசு ½ பலம் (17½ கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம், நவச்சாரம், கூடியவரையில் திறமான காந்தம் இம்மூன்றும் வகை 1-க்கு பலம் ¼ (8¾ கிராம்), குப்பைமேனிச் சமூலச் சாறு ஆழாக்கு 1. கீழ்க்காய் நெல்லி சமூலச்சாறு ஆழாக்கு 2, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு, அன்னபேதி செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் ஐந்து சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒருசாமம் வரையிலரைத்துப் பிறகு குப்பைமேனிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைக்கவேண்டும். சாறெல்லாஞ் சென்றபின் மெழுகு பதமாக அரைத்து ஒரேபில்லையாகச் செய்து வெய்யிலில் காயவைக்க வேண்டும். கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு ஒரு ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து, ஈரமுலரக் காயவைத்து 15 பலமுள்ள 20 வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்து நிறுத்தால் வைத்த சரக்குகளைடைக்குக் கொஞ்சம் அதிகமாகவே இருக்

கும். வைத்த சரக்குகளில் ஒன்றேனும் ஓடிப்போகாமல் ஒன்றையொன்று தன்மயமாக்கிக் கொள்ளும்.

பிறகு மேற்படி புடமிட்ட செந்தூரத்தைக் கல்வத்திலிட்டுக் கீழ்க்காய் நெல்லிச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்துச் சாறெல்லாஞ் சுண்டினபின் ஒரே பில்லையாகச் செய்து உலர்த்தி, ஓட்டிவிட்டுச் சீலைமண் செய்து முன்போலவே புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி 3 புடம்போடவும். ஆகமொத்தம் 4 புடமிட்டுத் தீர்க்கவும்.

பின்பு ½ பலம் (17½ கிராம்) அன்னபேதியைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு 2 சாமமரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேலகல்மூடி சீலைமண் பலமாகச்செய்து முன்போல புடம்போடவும். இவ்விதம் இது செம்மையாகச் சிவக்கிறவரையில், அதாவது, முருக்கம்பூ வண்ணமாகிற வரையில் மேற்கண்டபடி அன்னபேதியைச் சேர்த்துப் புடமிடவும்.

அளவு :—¼ முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய் முதலியவைகளில் உட்கொள்ளவேண்டும்.

பயன்படுத்தல் :—எல்லா நோய்களுக்கும் தகுந்த துணை மருந்துகளுடன் அளவுப்படி உபயோகிக்கலாம். இது நூறு புடமிட்ட அய செந்தூரத்துக்கு மேலாகவே குணத்திற் காணப்படும். இதனைக் கையாள்பவர்கள் தாம் தாமே தெரிந்து கொள்ளக்கூடுமாகையால் இவ்விடம் அதிகமாக எழுதாமல் நிறுத்தினோம். விருப்பமானவர்கள் இது சற்றுக் கடினமானதென மலைக்காமல் சற்று ஊக்கத்துடன் செய்து தாமுமனுபவித்துத் தம் சகோதரர்களான மற்றவர்களுக்கும் உபயோகப் படும்படியாகச் செய்வார்களென நம்புகின்றோம்.

குறிப்பு

இச் செந்தூரமானது வெள்ளி முதலிய உலோகத்தை வருணிப்பது போலவே உடலையும் வருணிக்கின்றபடியால் இதற்கு வர்ணலோக செந்தூரமெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

17. சுண்ணலோக செந்தூரம்

தாளித்த கற்சுண்ணும்பு படி 1 (கற்கரடு முதலியவைகளில்லாமல் வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.) இதனை ஒரு மண்பாத்திரத்தில் போட்டு இரண்டுபடி பனிநீர் அல்லது

சுத்த தண்ணீர்விட்டு நன்ருய்க் கலக்கி ஒருநாள் வைத்து மறு நாள் தெளிவை யிறுத்துக்கொள்ள வேண்டும். இத் தெளிநீர் படி 1–க்கு 5 பலம் (175 கிராம்) விகிதம் தூய்மைசெய்த நவாச்சாரத்தைப் பொடித்துச் சேர்த்து ஒரு புட்டியிலிட்டு நன்ருய்க் குலுக்கி புட்டி வாய்க்குக் காரக்கிட்டு கடுவெயிலில் இரண்டு மூன்று நாள் வைத்து எடுத்துக்கொள்வதே சார நீராம்.

தேவையான அளவு தூய்மைசெய்த அயப்பொடியை அயச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்துச் சூடுகண்ட பின்பு முன் சித்தப்படுத்தியிருக்கிற சாரநீரில் அயத்தினெடைவிட்டு இரும்புக் கடப்பாரையால் கடையவேண்டும். நீரானது சுண்டிவிட்டால் முன்னீரை முன்னளவே விட்டு முன் போல கடையவேண்டும். இவ்விதம் கைவிடாமல் இரண்டு சாமம் முன்நீர் சுண்டச்சுண்ட முன்போல் விட்டுவிட்டுக் கடைந்து கீழிறக்கி ஆறவைக்க வேண்டும். ஆறினபின் இந்தத் தூளைக் கல்வத்திலிட்டு முன் சாரநீரையே சிறுகச்சிறுக விட்டு இரண்டு சாமமம் அரைத்து பில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி நன்ருய் உலர்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்து வெய்யிலில் உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு எடை வறட்டியில் புடமிடவேண்டும். புடம் ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன் சாரநீரையே சிறுகச்சிறுக விட்டரைத்து பில்லைசெய்து உலர்த்தி முன்போல் கவசஞ் செய்து புடமிடவும். இதன் பிறகு இவ்விதமே இன்னெரு புடமும் போடவும். ஆகக்கூடிய மொத்தப்புடம் மூன்றில் அயமானது சற்று வெளிறின சிவப்பு நிறமாய் இருக்கும். இதை முருக்கம் பூப்போல சிவக்கும்படி செய்து கொள்ள வேண்டுமானல் அயத்தினெடையில் பத்திலொருபங்கு சீனக் காரத்தைச் சேர்த்தரைத்துப் புடமிட்டால் அவ்விதம் சிவந்து போகும். ஒவ்வொரு புடத்திலும் மேற்கண்ட சீனத்தைச் சேர்த்துக்கொண்டு வரவேண்டும்.

அளவு :—$1\frac{1}{2}$ முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெள்ளரிவிதை, கக்கரி விதை, முலாம்பழ விதை, நெருஞ்சிமுள்ளு ஆகியவைகளில் ஒன்றை அரைத்துப் பிழிந்தசாறு, இன்னும் சமயோசிதமாக வேறு இளகம் முதலியவைகளுமாம்.

பயன்படுத்தல் :—பாண்டு, சோகை, பெருவயிறு, பீலிகை (மண்ணீரல் வீக்கம்) முதலிய அநேக நோய்கள் தீரும். நீரைப் பெருக்கும். ஊதின உடலை இளைக்கச்செய்யும். இரத்தவிருத்தி உண்டாக்கி உடலுக்குப் பலத்தையும் கொடுக்

கும். வெட்டை சம்பந்தமான பாண்டு முதலியவைகள் இலகுவில் மருத்துவத்திற்கு வசப்படுகிறதில்லை. அவ்வகை நோயும் இதற்கு வசப்படும். நீர்த்தாரையில் சதை வளர்ச்சி முதலிய காரணங்களால் நீரானது தடைப்பட்டு உண்டான வீக்கம் முதலியவைகளும் தீரும்.

18. அயச்சத்துச் செந்தூரம்

கீழ்ச்சொல்லும் பாகப்படி செய்தெடுத்த அயச்சத்து 1 பலம் (35 கிராம்), புளிப்பு மாதுளம்பழச்சாறு 10 பலம் (350 கிராம்).

செய்முறை :—மேற்படி சத்தைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி பழச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு அரைக்கவேண்டும். நான்கு சாமத்துக்குக் குறையாமல் அரைப்பிடவேண்டும். பிறகு சிறு பில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி நன்ருய் உலர்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி ஒரு முழச் சதுரப் புடமிடவும். குளிர ஆறினபின் எடுக்க நல்ல செந்தூரமாய் இருக்கும். சிலசமயம் காற்று, அரைப்பு முதலியவைகளின் விகற்பத்தால் பூரணமாகச் செந்தூரமாகாதிருந்தால் அரை குறையான செந்தூரத்தைக் கல்வத்திலிட்டு முன் பழச்சாற்றை சிறுகச் சிறுகவிட்டு முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி 3—5 புடமிட்டுக் கொள்வதால் செந்தூரத்தின் குணமும் பலமும் அதிகப்படும்.

மருத்துணவு :—நோய்பலம், உடல்பலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி புளி, புகை, பெண் ஆகியவைகளை அறவே நீக்கிவைக்க வேண்டியது.

குறிப்பு

இந்தச் செந்தூரத்தின் எடைக்குப் பத்திலொருபங்கு தங்க ரேக்கை அல்லது தங்கப்பொடியைச் சேர்த்துப் புடமிட்டுக் கொள்வதனுல் சிறப்புடைய குணம் தருமென நாமிங்குச் சொல்லவேண்டியதில்லை.

அளவு :—$\frac{3}{4}$ முதல் $1\frac{1}{4}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :—நெய், தேன், சமயோசிதமான இளகம் முதலியவைகள்.

பயன்படுத்தல் :—இது சாதாரணமாக எல்லா நோய்களிலும் உபயோகப்படும். இரத்தத்திலுள்ள குற்றத்தை நீக்கி

அதைச் சுத்தப்படுத்தி உடல்பலத்தையும், மனோபலத்தையும் அதிகரிக்கச் செய்யும். பாண்டு முதலிய இரத்தக் குறைவு நோய்களும் தீரும். அனுபவசாலிகள் இதன் பிரயோசனத்தைத் தெரிந்து கொள்வார்களாகையால் நாம் இதைப்பற்றி விதந்து எழுதாமல் நிறுத்துகின்றோம்.

மருத்துணவு :—சமயோசிதம்போல் வைத்துக் கொள்ள வேண்டும்.

அயச்சத்து

அயச்சத்தெடுக்கும் விதம் பலவுள. அவற்றுள் பின்வரும் முறை மிகவும் இலகுவான முறையாகையால் அதனை இங்கு எழுதுகின்றோம். அய அரப்பொடி 2 பலம் (70 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்) மாசக்காய்த் தோலை இடித்துத் துணியினால் வடிகட்டிய சூரணம் ½ பலம் (17½ கிராம்) பொரித்த வெண்காரம் பலம் ¼ (8¾ கிராம்).

செய்முறை :—இவை எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு ஒருசாமம் நன்றாயரைத்து அடிகனத்த மூசையில் போடவேண்டும். மூசையில் மருந்தைப் போடுமுன் அதை நன்றாய்ச் சிவக்கும்படி சுட்டுக்கொள்ள வேண்டும். மருந்தானது மூசைக்கு முக்கால் வாசிதான் இருக்கவேண்டும். இன்னும் இதற்கும் குறைவாக இருந்தாலும் நன்மையேயாம். மூசையிலுள்ள மருந்தைக் கைப் பெருவிரலால் நன்றாய் அழுத்திவிட்டு மூசை வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு இருதுருத்தி அல்லது சீமைத் துருத்தியுள்ள கொல்லுலையில் வைத்து மூசை அழுகும்படியாக ஊதி ஆற வைத்துக் குளிர ஆறினபின் மூசையை உடைத்து மருந்தை எடுத்துத் தூளாக்கிப் புடைத்து அதில் மணிமணியாக உருண்டை வடிவாக இருப்பதை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே அயத்தின் சத்தாம்.

அய அரப்பொடியைச் செந்தூரிப்பது போல் இதனைச் செந்தூரித்து உபயோகித்தால் அதிக சிறப்பான குணத்தைத் தருமென்பதில் ஐயமில்லை.

19. அயமெழுகு

தூய்மைசெய்த அர அரப்பொடி 2 பலம் (70 கிராம்) தூய்மைசெய்து பொரித்த வெண்காரம் 1 பலம் (35 கிராம்) சிறுநாவற்பட்டைச் சாறு 1 ஆழாக்கு.

செய்முறை :—முன்னர் வெண்காரத்தைப் பொடித்துக் கொண்டு பிறகு அதனுடன் அயத்தைச் சேர்த்து ஏறக்குறைய அரைமணி நேரமரைத்து இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு மேற்படி சாற்றைவிட்டு வெய்யிலில் வைத்து ஒரு குச்சியால் கிளறி வரவேண்டும்; காலை முதல் மாலை வரையில் வெய்யிலிலேயே இருக்கவேண்டும். நாள்தோறும் நாலைந்து தடவைகள் நன்ருய்க் கிளறிக் கொடுத்துவர வேண்டும். கடுவெய்யிலானுல் மூன்று நாளும் மந்த வெய்யிலானுல் ஐந்து நாளும் போதுமானது. பிறகு மெழுகான பக்குவத்தில் மறு பீங்கான் பாத்திரத்தில் வழித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :—½ (1¾ கிராம்) முதல் 1 (3½ கிராம்) விராகன் எடை.

துணைமருந்து :—சர்க்கரை, தேன், நெய் ஆகியவைகள் ஆகும்.

பயன்படுத்தல் :—பித்தவெட்டை, பித்தபாண்டு, சோகை, மஞ்சள் நோய், ஊதுகணம் முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

20. அயமெழுகு (வேறு)

தூய்மைசெய்த அய அரப்பொடி 2 பலம் (70 கிராம்) தூய்மைசெய்து பொரித்த வெண்காரம் 1 பலம் (35 கிராம்) தூய்மைசெய்த நவச்சாரம் ¼ பலம் (8¾ கிராம்) புளிப்பு மாதுளம்பழச்சாறு 20 பலம் (700 கிராம்).

செய்முறை :—முன் மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒரு சாமமரைத்து அயச்சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்து மேற்படி சாற்றைச் சிறுக விட்டுக் கிளறிக் கொடுத்து வரவேண்டும். சாறெல்லாஞ் சென்று கசடில்லாமல் மெழுகுபோலாகி விட்டால் பதமாம். அப்படிப் பதமாகாதிருந்தால் இன்னும் அந்தச் சாற்றையே பதமாகிற வரையில் சுறுக்கிட வேண்டும். சாறு எவ்வளவு சென்றபோதிலும் பாதகமில்லை. அவ்வளவும் குணமே கொடுக்கும். பிறகு வேறு பீங்கான் பாத்திரத்தில் எடுத்துவைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு, துணைமருந்து, பயன்படுத்தல், மருத்துணவு முதலியவைகளெல்லாம் முன் சொன்னது போலவேயாம்.

குறிப்பு

முன் சொல்லியிருக்கிறபடி அயம், வெண்காரம் ஆகிய இரண்டையும் சேர்த்து ஆழாக்கு மாதுளம் பழச்சாற்றை விட்டு அங்குச் சொல்லியிருக்கிறபடி வெய்யிலில் வைத்துப் பக்குவப்படுத்தி அங்குச் சொல்லியிருக்கிற நோய்களுக்கு உபயோகிக்கலாம்.

21. சம்பீர கற்பம்

தூய்மைசெய்த அய அரப்பொடி 10 பலம் (350 கிராம்) இடித்துத் துணியில் வடிகட்டிய மிளகுத்தூள் 10 பலம் (350 கிராம்) மேல்தோல் நீக்கின வெள்ளைப்பூண்டிதழ் 5 பலம் (175 கிராம்) சமபருமனுன எலுமிச்சம்பழம் 40 கழுவின நாட்டு எள்ளெண்ணெய் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :—எலுமிச்சம் பழங்களை நந்நான்காகப் பிளந்து அதிலுள்ள விதைகளை நீக்கி வைத்துக்கொள்ள வேண்டும். பூண்டுத்திரியைச் சிதைத்து மிளகுத்தூளுடன் நன்ருய்ப் புரட்டிச் சற்றேறக்குறையச் சமமான நாற்பது பங்காகச் செய்து முன் சித்தப்படுத்தி இருக்கும் நாற்பது பழத்திலும் வைத்து ஒரு வாயகன்ற மண்பாத்திரத்துக்குள் வரிசையாக ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கி எண்ணெயை அதன்மேல் விட்டுப் பானை வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து ஒன்றரைக் கெசம் பள்ளந்தோண்டி அதற்குள் பானையை வைத்து மெதுவாக மண்ணைத் தள்ளி மூடிவிட வேண்டும். நாற்பது நாள் சென்றபின் எடுத்துச் சிறுகச்சிறுக அம்மியில் வைத்தரைத்து மெழுகாகவும் உபயோகிக்கலாம்.

ஒரு விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்தும் கொள்ளலாம். இந்த மாத்திரைகளை எண்ணெயிற் போட்டு வைத்திருந்தால் எத்தனை நாளாயினுங் குணங்கெடாதிருக்கும். எண்ணெயிற் போடாமல் தனியாக உலர்த்தி வைத்துக்கொள்ளலாம். ஆனுல், உபயோகிக்கும்போது மாத்திரைகளை எலுமிச்சம்பழச் சாறுவிட்டரைத்து உபயோகிக்க வேண்டும். எண்ணெயிற் போட்டுக்கொள்வதே சிறப்பாகும்.

அளவு :—மெழுகானுல் விராகனெடை 1 ($3\frac{1}{2}$ கிராம்) 2 (7 கிராம்). மாத்திரையானுல் 1, $1\frac{1}{2}$.

துணைமருந்து :—தேன், சருக்கரை, நெய்.

பயன்படுத்தல் :—பித்த பாண்டு, சோகை, இரத்தக் குறைவு, அசதி, சோம்பல் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு

இதனை நாம் நமது அனுபவப்படி இங்கெழுதி இருக்கின்றோம். வேறு சிலர் வேறு வகையாகவும் உபயோகித்திருக்கின்றார்கள். ஆனால் பின்னதை விட முன்னதே சிறந்ததாகக் காணப்பட்டபடியால் அதனையே இங்கெழுத மனமுவந்தோம்.

22. அயச்சூரணம்

தூய்மைசெய்த அய அரப்பொடி 5 பலம் (175 கிராம்) மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல், கொத்து மல்லிவிதை, கொடிவேலி வேர்ப்பட்டை, நற்சீரகம், சிற்றரத்தை, (சந்நராஷ்டம்) இப்பத்தும் வகை 1-க்கு 1 பலம் (35 கிராம்) ஓமம் 10 பலம் (350 கிராம்) கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் அயந் தவிர மற்றசரக்குகளை எல்லாம் இடித்துத் துணியில் வடிகட்டிக் கொண்டு தூளுடன் அயப்பொடியையுஞ் சேர்த்து அதில் கையாந்தகரைச் சாற்றை விட்டுப் பிசறிக்கொள்ளவும். மண்சட்டியை அடுப்பில்வைத்து அதில் முன் சித்தப்படுத்தினதைப் போட்டுக் கரண்டியால் துழாவிக் கருகாமல் பதமாய் வறுக்கவேண்டும். வறுபட்ட பின்பு எடுத்து முன்போல் கையாந்தகரைச் சாற்றைவிட்டுப் பிசறி முன்போலக் கருகாமல் பதமாய் வறுக்கவேண்டும். இவ்விதம் சாற்றை விட்டு விட்டுப் பிசறிப் பிசறி 21 தடவை வறுக்கவேண்டும். வறுப்பதில் பதந்தப்பிக் கருகிவிட்டால் குணங்கெட்டுப் போகும். ஆகையால், சர்வசாக்கிரதையுடன் நல்லபதமாய் வறுத்து எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும்.

ஆய்ந்தறிதல் :—இது பதமாய் முடிந்ததற்குச் சோதனையாவது ; இந்தப் பொடியைக் கொஞ்சமெடுத்துத் தண்ணீரில் போட்டு அதன்மேல் ஒரு நெல்லை வைத்தால் அந்த நெல்லானது தண்ணீருக்குள் ஆழ்ந்துபோகாமல் மிதக்கவேண்டும். அப்படி மிதந்தால்தான் பதம்; அப்படி மிதக்காவிட்டால் கையாந்தகரைச் சாற்றை விட்டு விட்டுப் பிசறி முன்போல் வறுத்தெடுக்க வேண்டும். இப்படி இரண்டொரு தடவை செய்வதால் பக்குவமாகிவிடும்.

அளவு :—10. முதல் 14 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய் ஆகியவைகளாம்.

COMPLIMENTARY

பயன்படுத்தல் :—எல்லாவகைப் பாண்டுகள், எல்லா வகைக் கிராணிகள், சோகை நோய்கள், பலவகைக் கழிச்சல், இரைச்சல் முதலியவை தீரும்.

மருத்துணவு :—நோய் இலகுவாயிருந்தால் இச்சா பத்திய மாக உபயோகிக்கவும். நோய் கடினமானதாக இருக்கு மானல் கைப்பு, புளிப்பு ஆகியவைகளை நீக்கி உபயோகிக்க வும். இவையெல்லாம் வைத்தியர்களையும் நோயாளிகளையும் சேர்ந்தது.

குறிப்பு

இந்த முறையில் சொல்லப்பட்டிருக்கும் சரக்குகளைத் தனித்தனியாக இடித்துத் துணியில் வடிகட்டி தனித்தனி ஒவ் வொரு பலமெடுத்துக் கொள்ளவேண்டும். ஓமத்தைச் சற்று இளவறுப்பாய் வறுத்து இடித்துத் துணியில் வடிகட்டி பத்துப் பலம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

23. அயப்பொடி இளகம்

(அ) தூய்மைசெய்த அய அரப்பொடி 8 பலம் (280 கிராம்) நெல்லிக்காய்ச் சாறு 4 பலம் (140 கிராம்) கீழ்க்காய் நெல்லிச்சமூலத்தை இடித்துப்பிழிந்த சாறு 4 பலம் (140 கிராம்), கையாந்தகரைச் சமூலத்தை இடித்துப் பிழிந்து வடி கட்டின சாறு 3 பலம் (105 கிராம்).

(ஆ) திறமான தேன் 2½ பலம் (87½ கிராம்) சீனிச்சருக் கரை 2 பலம் (70 கிராம்).

செய்முறை :—(அ) லுள்ள எல்லாச் சாறுகளையும் ஒன்று கக்கலந்து அயபொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமமரைத்து மிகுதியாயிருக்கிற சாற்றில் குழப்பி அயச்சட்டியில் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாய் எரித்து அயக்கரண்டியால் துழாவிவர வேண்டும். சாறெல் லாஞ் சுண்டிக் குழம்புப்பதமான பக்குவத்தில் (ஆ) லுள்ள தேனையும் சருக்கரையையும் சேர்த்துப் பாகுபதத்திலிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :—¾ முதல் (2⅝ கிராம்), 1½ (5¼ கிராம்) வராகன் எடை.

பயன்படுத்தல் :—பித்தபாண்டு, பித்தவெட்டை சோகை, மஞ்சள் நோய் முதலிய பலநோய்கள் தீர்ந்து இரத்த விருத்தி உண்டாகி உடல்வலிமை, உடல்நலம் முதலியவை உண் டாகும்.

மருத்துணவு :—நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவை களுக்கு ஏற்றவிதமாக புளி, புகை, போகம் ஆகியவைகளை நீக்க வேண்டும். நோய் பலத்திற்குத் தகுந்தபடி அரை முதல் ஒருமண்டலம் உபயோகிக்கலாம்.

24. அயப்பொடி இளகம் (வேறு)

(அ) தூய்மைசெய்த அய அரப்பொடி 10 பலம் (350 கிராம்), நல்லெண்ணெய், காடி, எலுமிச்சம்பழச்சாறு, புளி இலைச்சாறு இவை வகைக்குப் ¼ படி.

(ஆ) மேல்தோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு, நற்சீரகம், கண்டந்திப்பிலி, வாய்விளங்கம், ஓமம், மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல், கோட்டம், சடாமாஞ்சில், கொத்துமல்லிவிதை, ஏலம், இலவங்கம், தாளிசபத்திரி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, யானைத்திப்பிலி, பறங்கிப்பட்டை இவற்றைத் தனித்தனியாக இடித்துத் துணியில் வடிகட்டிய தூள்கள் வகை 1-க்கு ½ பலம் (17½ கிராம்).

(இ) புளியிலைச் சாறு ½ படி, காடி 1 படி, பனைவெல்லம் 10 பலம் (350 கிராம்), சேலம் சருக்கரை 5 பலம் (175 கிராம்) தேன் 5 பலம் (175 கிராம்), பசுவின் நெய் 5 பலம் (175 கிராம்).

செய்முறை :—(அ) லுள்ள அய அரப்பொடியை அயச் சட்டியிலிட்டு வறுத்துச் சூடுகண்டவுடன் (அ) லுள்ள எண்ணெயில் ஒரு கரண்டிவீதம் எடுத்துவிட்டு வறுக்கவேண்டும். அது வறண்டவுடன் முன்போல் ஒருகரண்டி எண்ணெயை விட்டு வறுக்கவேண்டும். இவ்விதம் காற்படி எண்ணெயையும் விட்டு வறுக்கவேண்டும். பிறகு இவ்விதமே காடியைச் சிறுகச் சிறுக விட்டு வறுக்கவேண்டும். இதன்பிறகு எலுமிச் சம்பழச் சாற்றை முன்போலவே சிறுகச் சிறுகவிட்டு வறுக்க வேண்டும். முடிவாக (அ) லுள்ள ¼ படி புளியிலைச் சாற்றையும் முன்போலவே சிறுகச் சிறுகவிட்டு வறுத்தானபின் எடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டுசாமம் அரைத்துக்கொள்ள வேண்டும். பிறகு (ஆ) லுள்ள தூள்கள் எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து மேற்படி அயத்தூளுடன் சேர்த்து ஒருசாமம் அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

(இ) லுள்ள புளியிலைச் சாற்றையும் காடியையும் ஒன்ருகக் கலந்து அதில் பனைவெல்லத்தையும் சருக்கரையையும் கரைத்து வடிகட்டித் திப்பி முதலியவைகளை நீக்கி அடுப்

பேற்றிச் சிறுதீயாய் எரித்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தி இருக்கிற தூள்களைச் சிறுகச் சிறுகத் தூவி மத்தினால் கடைந்து எல்லாத் தூள்களையும் தூவினபின் கீழிறக்கி நெய்யையும் தேனையும் விட்டுப் பிறகும் நன்றாய்க் கலந்து ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு:—1 (3½ கிராம்) முதல் 1½ (5¼ கிராம்) விராகன் எடை.

பயன்படுத்தல்:—பாண்டு நோய்கள், சோகை நோய்கள், மஞ்சள் நோய்கள், செரியாமை நோய்கள், பித்தசம்பந்த நோய்கள், முதலிய அநேக நோய்கள் தீரும். நல்ல பசியுண்டாகி செரித்தல்சத்து உண்டாகும். கக்கல், சுவையின்மை முதலியவைகளுந் தீரும். கிராணி வகைகள், கழிச்சல் நோய், ஆகியவைகளுந் தீரும். இரத்தவிருத்தி உண்டாகி உடல் வன்மை, உடல்நலம் ஆகியவை உண்டாகும். மாங்கொட்டையைப் போல வெளுத்த உடல், வண்டைப்போல கறுத்த வண்ணம்பெற்று வலுக்கும்.

மருத்துணவு:—இச்சா பத்தியம்; ஆயினும், நோய்பலம் முதலியவைகளை நிதானித்துச் சமயோசிதமாக இலகு பத்தியங் கடும்பத்தியம் வைக்கவேண்டும்.

குறிப்பு:—நோய்பலம், உடல்பலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டும்.

25. சத்தாதிமாஜூன்

இதன் முறை முதலிய விவரங்களெல்லாம் நமது யூனானி தாருட்ய விர்த்திபோதினி இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இது நமது அநுபவசித்தமாகக் கையாண்டு வரப்பட்ட முறையாதலாலும் மேற்படி நூலை வாங்கி அதிலுள்ள முறைகளைச் செய்து கையாண்ட பலருக்கும் இது அதிக திருப்திகரமான குணத்தைத் தந்ததாக, நேராகவும் கடித முகத்தாலும், பிறவாற்றாலும் எமக்கறிவித்திருக்கின்ற படியாலும் இது இந் நவநீதத்துட் சேர்க்கப்பட்டது. ஏனெனில், பலருக்கும் பல தடவை அனுபவசித்தமான அநேக முறைகளில் ஆங்காங்கு இலைமறைகாய் போலிருக்கும் அரிய முறைகளைப் பொறுக்கி நவநீதமாகத் திரட்டி இருப்பதே காரணம்.

26. பாவன லோகம்

இதுவும் மேற்கண்ட பாகத்தைப் போன்றதே. இம்முறை நமது யூனானி வைத்திய தாருட்ய விருத்தி போதினி முதல் பாகத்தில் பக்குவ லட்சணம் என்னும் பிரிவில் இரும்பு, எஃகு என்ற தலைப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது.

27. சுவர்ணலோகத் திராவகம்

மடித்திருக்கிற மெல்லிய அயக்கம்பி வராகனெடை 1, (3½ கிராம்) இதனைச் சன்னத் துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ளவேண்டும். அக்கினித் திராவகம் (Strong Nitric Acid) விராகனெடை 3 (10½ கிராம்).

செய்முறை :—மேற்படி கம்பித் துண்டுகளைக் பளிங்கு மூடியுள்ள ஒரு புட்டியில் போட்டு மேற்படி திராவகத்தை விட்டு புட்டியின் வாயை மூடாமல் அரை நாழிகை (அதாவது 12 நிமிட நேரம்) வரையில் தாமதிக்கவேண்டும். அப்போது அதிலிருந்து ஒருவகை நீலப்புகை எழும்பும். அந்தப் புகையானது கண் முதலியவைகளில் படாமல் சற்று எட்டி இருக்க வேண்டும். பிறகு 17 விராகனெடை தண்ணீரைப் புட்டியில் விட்டு 24 மணிநேரம் புட்டியின் வாயை மூடாமல் வைத்துப் பார்த்தால் கம்பியெல்லாம் கரைந்துபோய் இருக்கும். பிறகு 12 பலம் (420 கிராம்) தண்ணீரை அதில் விட்டு நன்றாகக் குலுக்கி இரண்டொரு நாள் வைக்கவேண்டும். பிரதிதினமும் இரண்டு மூன்று தடவை குலுக்கியும் வரவேண்டும். பிறகு மெல்லிய துணியில் வடிகட்டித் திப்பியை நீக்கித் திராவகத்தைச் சுத்த வெண்மையான வேறு புட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும். இதன் வண்ணம் சுவர்ணம்போலிருக்குமாகையால் இதற்குச் சுவர்ணலோகத் திராவகம் (Sulphate of Quinine) எனப் பெயரிடப்பட்டது.

அளவு :—1 (3½ கிராம்) முதல் 1½ (5¼ கிராம்) விராகன் எடை.

துணைமருந்து :—திராவகத்தின் எடைக்கு 10 பங்கு தண்ணீரில் கலந்து கொடுக்கலாம்.

பயன்படுத்தல் :—மேகசுரம், குளிர்சுரம், தீராதசுரம், நாட்பட்டசுரம் முதலிய பலவகைச் சுரங்களுக்குக் கொடுக்கலாம்.

குறிப்பு

நாட்பட்ட சுரமாயிருந்து இதனை உபயோகித்தும் தீரா விட்டால், வேளை ஒன்றிற்கு 3, 4 குன்றிமணியெடை கொய்னைவை (Sulphanate of Quinine) மேற்படி திராவகத்தில் கலந்து

மேற்கண்ட அளவே கொடுத்துவர வெகு சீக்கிரம் குணமாகும். இன்னும் அந்தந்தச் சுரக் கியாழத்துடன் இதனை சேர்த்துக் கொடுத்தால் அந்தந்தச் சுரங்கள் உடனே தீரும். திராவகம் காரமாயிருக்குமாகையால் அவசியமான அளவு தண்ணீரை கலந்து வீறுதனைக் குறைத்துக் கொள்ளலாம். இதன் பெருமையை நாம் இங்கு எழுதப் புகின் இந்நூல் விரிவெய்துமாகையால் அறிவாளிகள் தாங்களே அனுபவத்தில் தெரிந்து நிச்சயித்துக் கொள்வார்களென இம்மட்டோடு நிறுத்தினேம். இது வைத்திய இரகசிய முறைகளில் ஒன்று.

மருத்துணவு :—சுரத்தில் கவனிக்கவேண்டிய பத்தியமே இதற்குமாம்.

28. மண்டூரப் பாவனை

வல்லத்துக்கிட்டம் தேவையான அளவு (எந்தக்கிட்டமாயினும் ஆகும்) ஆனால் தஞ்சாவூருக்கு அண்மையிலுள்ள வல்லம் என்னும் ஊரில் எடுக்கப்படுவது மிகவும் உயர்வானதாகும். இக்கிட்டத்தை உரலிலிட்டு இடித்துத் துணியில் வடிகட்டி ஒரு பீங்கான் பாத்திரத்தில்போட்டு அதன்மேல் நான்கு அங்குலம் நிற்கும்படியாக காரமான சீமைக்காடி வார்த்து இரண்டுவாரம் ஊறவிட்டு வெள்ளைப்பூண்டுத் தாளை அல்லது பூண்டை இடித்துப் பிழிந்த சாறு முன்போல விட்டு ஒருவாரம் ஊறவிட வேண்டும்: இதற்கிடையில் ஊறவைத்த சாற்றை ஊற்றிவிட்டு வேறு சாறு புதிதாய் விடவேண்டும். பின்பு எடுத்து வாதுமை நெய் அல்லது பசுவின்நெய் வார்த்துக் கிட்டத்தை நன்றாய் வறுத்துப் பொடித்து எடுத்துக்கொள்வதே கிட்டத்தின் பாகமாம் அல்லது பாவனையாம்.

அளவு :—2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :—மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி இம்மூன்றையும் சமமாயிடித்து துணியில் வடிகட்டிய தூள் விராகனெடை $\frac{1}{2}$ ($1\frac{3}{4}$ கிராம்) யுடன் மேற்படி மண்டூரத்தை மேற்கண்ட அளவுப்படி சேர்த்துத் தேன்விட்டு இழைத்து உட்கொண்டுவர இரைப்பு, கபகோபம், காசம் ஆகியவை தீரும்.

கையாந்தகரை இலையயரைத்த விழுது 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), மிளகுத்தூள் $\frac{1}{4}$ வராகனெடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி பாவனை மண்டூரத்தை அளவுப்படி சேர்த்து

உட்கொண்டுவரச் சோகை நோய்கள், வீக்கங்கள், உடல் வெளிறல், விட பாகங்கள் ஆகியவைகள் தீரும்.

மேற்கண்ட சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவைகளின் சூரணம் விராகனெடை 1 (3½ கிராம்) நெய் விராகனெடை 1 (3½ கிராம்) இரண்டையும் கலந்து மேற்கண்ட மண்டூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர மந்தாக்கினி நோய், செரியாமை நோய், உப்பிச நோய் ஆகியவைகள் தீரும்.

காலையில் தேனிலும், மாலையில் நெய்யிலும் மேற்கண்ட மண்டூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர குருதிக் குறைவு சம்பந்த நோய்கள் தீர்ந்து இரத்தவிருத்தி உண்டாகி உடல்நலம், உடல்வன்மை ஆகியவைகள் அதிகரிக்கும்.

குறிப்பு

கீழ்க்காணும் முறைகளில் பாவன மண்டூரம் அல்லது பாகப்படுத்தின மண்டூரம் என்னும் முறைகளில் மேற்கண்ட மண்டூரத்தையே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மண்டூரத் தூய்மை

பழமையான இரும்புக்கிட்டத்தைக் கல்லுரலில் இட்டு இரும்புக் கட்டப்பாறையால் மணல்போல் இடித்து ஒரு பெரிய வாயகன்ற மண்சட்டியிலிட்டு அதன்மேல் கிட்டத்தின் எடையின் நாலுபங்கு எடை புளியிலையைப் போட்டு எட்டுப்பங்கு தண்ணீரை விட்டு ஒரு சாமநேரம் அல்லது இலையெல்லாம் வெந்து குழகுழத்துப் போகும்படியாக வேகவைத்து கீழிறக்கி ஆறினபின் இலையையும் பொடியையுஞ் சேர்த்து நன்றாய்த் தேய்த்துக்கழுவி உலர்த்தி முறத்தில்போட்டுப் புடைத்து இலையை நீக்கிவிடவேண்டும்.

பிறகு மேற்படி பொடியை அம்மியில் வைத்துப் பொடித்து ஒரு சட்டியிலிட்டு இப் பொடியின் எடைக்கு எட்டுப்பங்கு கோமூத்திரத்தை அதிலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாய் எரித்து மூத்திரமெல்லாஞ் சுண்டினபின் இறக்கித் தண்ணீரை விட்டுக் கழுவி எடுத்துக்கொள்வதே மண்டூர தூய்மையாம்.

29. மண்டூர பற்பம்

மேற்கண்ட பாகப்படி தூய்மைசெய்த மண்டூரம் 2½ பலம் (87½ கிராம்) கையாந்தகரைச் சாறு 5 பலம் (175 கிராம்) பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக

விட்டு அரைத்துச் சாறெல்லாஞ் சென்றபின் பில்லைசெய்து காயவைத்து ஓட்டிவிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் 5 பங்கு எடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்கவும்.

மேற்கண்டவாறே 5 பலம் (175 கிராம்) நீர்முள்ளிச் சாற்றில் ஒரு புடமும், 5 பலம் (175 கிராம்) கண்டங்கத்திரிச் சாற்றில் ஒரு புடமும், 5 பலம் (175 கிராம்) ஆடாதோடைச் சாற்றில் ஒரு புடமும், 5 பலம் (175 கிராம்) வெண்ணொச்சிச் சாற்றில் ஒரு புடமும். 5 பலம் (175 கிராம்) துளசிச் சாற்றில் ஒரு புடமும், 5 பலம் (175 கிராம்) வெள்ளாட்டுப் பாலில் ஒரு புடமும், முடிவாய் 5 பலம் (175 கிராம்) வெள்ளாட்டு நெய்யில் ஒரு புடமும் ஆகப் புடம் எட்டுமிட்டுத் தீர்ந்தால் இயற்கையினது அருளால் வெண்மையான பற்பமாயிருக்கும்.

பற்பத்தின் தேர்வு :—ஒரு பாத்திரத்தின் நிறையத் தண்ணீர் வார்த்து அதில் மேற்படி பற்பத்தில் கொஞ்சம் எடுத்துப் போட்டால் அது மிதக்கும். பிறகு அதன்மேல் இரண்டு நெல்லை வைத்தால் அழுந்தாமல் மிதந்தால் பதம். அழுந்தினுல் முன் எட்டு வகைகளையும் சமபாகமாகச் சேர்த்துச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமமரைத்துப் புடம்போட்டு எடுக்கச் சோதனைக்கு நிற்கும்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—அரை விராகனெடை மேற்ருேல் சீவின சுக்கை எருமை மோரைவிட்டு மைபோல் அரைத்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வேண்டும். நோயாளன் பழைய சாதம் சாப்பிட்டு அதன்மேல் மருந்தைச் சாப்பிடவேண்டும். வெறும் வயிற்றில் சாப்பிடலாகாது.

பயன்படுத்தல் :—பாண்டு வகைகள், சோகை வகைகள், மஞ்சள்நோய் வகைகள் ஆகியவைகள் தீர்ந்து இரத்த விருத்தி உண்டாகி உடல் ஒளி அதிகரிக்கும்.

மருத்துணவு :—பால், நெய், மோர், புடலங்காய், சிறுகீரை, பொன்னுங்காணிக்கீரை, துவரை ஆகியவைகளும் இவைபோன்ற மற்றவைகளும் ஆகும். தாம்பூலம், புளி ஆகியவைகள் ஆகா.

குறிப்பு

மேற்கண்ட எட்டு வகைகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சாமத்திற்குக் குறையாமல் அரைக்கவேண்டும். கால நோய் நிலைக்கேற்றவாறு தக்க துணைமருந்துகளில் கொடுக்க பல நோய்கள் குணமாகும்.

30. மண்டூர செந்தூரம்

பாவன மண்டூரம் 1 பலம் (35 கிராம்) சோற்றுக்கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு 4 மணி நேரம் அரைத்துப் பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 10 அல்லது 15 பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கக் கருஞ் சிவப்பான செந்தூரமாகும். அவசியமானுல் முன்போல் இன் ெனாரு புடமும் போட்டுக் கொள்ளலாம்.

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—வெண்ணெய், தேன், பாலேடு ஆகியவை யாம்.

பயன்படுத்தல் :—இந்திரிய ஒழுக்கு நோய், துரித ஸ்கலித நோய் ஆகியவைகள் தீர்ந்து இரத்தவிருத்தி உண்டாகி உடல்பலம் முதலியவை அதிகரிக்கும்.

31. மண்டூர செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த மண்டூரப் பொடி ½ பலம் (17½ கிராம்) கறியுப்பு, வெடியுப்பு, அட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், மேற்ருேல் சீவின சுக்குத் தூள், மிளகுத் தூள், அரிசித்திப்பிலித் தூள் என்னும் பத்துவகையும் வகை ஒன்றுக்கு ½ வராகனெடை (1¾ கிராம்) கையாந்தகரைச்சாறு 10 பலம் (350 கிராம்)

செய்முறை :—முன்கண்ட சரக்குகளில் கெந்தகத்தையும், இரசத்தையும் தொந்தித்தரைத்து நன்ருய்க் கருத்தபின் மற்ற சரக்குகளையும் சேர்த்து முன் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்கவேண்டும். சாறெல்லாஞ் சென்றபின்பு பில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு இருபது பங்கு எடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேற்படி அறைகுறையான செந்தூரத்தைக் கல்வத்திலிட் டுப் பத்துப் பலம் துளசிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன்போலரைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து புடமிடவும். மயிலின் கழுத்தைப் போன்று கருமையும் செம்மையுங் கலந்த ஊதா நிறமான செந்தூரமாகி இருக்கும்.

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து :—தேன், நெய், நோய்களுக்குத் தகுந்த குடிநீர் ஆகியவைகளாம்.

பயன்படுத்தல் :—பெருவயிறு, அடிவயிற்றில் இரைச்சல், வலுவின்மை, அன்னத்துவேஷம், பொய்ப்பசி, இந்திரிய ஒழுக்கு, துரிதஸ்கலிதம், ஆண்குறித் தளர்ச்சி, ஐம்புலன்களின் கலக்கம், நீரேற்றம், துர்ப்பலத்தால் உண்டாகும் நடுக்கம், குரக்குவலிபோல் விரல்களெல்லாம் இழுத்தல் முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :—அய செந்தூரத்துக்குச் சொன்னவைகளே இதற்குமாம்.

குறிப்பு

மேற்கண்ட மண்டூர செந்தூரங்களைக் கீழ்க்கண்ட முறையுடன் கலந்து கொடுக்கச் சிறப்பான குணம் காணப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறுகும்.

பொற்றலைக் கையாந்தகரைச் சாறு, மிளகுக் குடிநீர், பசுவின் நெய் இம்மூன்றும் வகைக்குப் பலம் 5, (175 கிராம்) இவைகளைக் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நீர் சுண்டியவுடன் ஒரு விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) மஞ்சள் கடுக்காய்த் தோல் தூளைப்போட்டுக் கலந்துகொண்டு பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். இந்த நெய்யில் ஒரு விராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) எடுத்து அதனுடன் மண்டூர செந்தூரத்தைக் கலந்து உட்கொண்டால் பாண்டு முதலிய அநேக குருதிக் குறைவு நோய்கள் குணமாகிறது.

மருத்துணவு :—புளி, வெங்காயம் ஆகியவைகளைத் தள்ளவும். பால், புளியாரைக் கீரை, பயற்றம்பருப்பு ஆகியவைகளைச் சேர்க்கவும்.

32. மண்டூரச் சூரணம்

பழைய இரும்புக்கிட்டம் 8 பலம் (280 கிராம்). இதனைக் கொல்லுலையில் காய்ச்சிப் பசுவின் கோமயத்தில் தோய்க்க வேண்டும். கோமயமானது இக்கிட்டம் அமிழ்ந்திருக்கும்படியாய் இருக்கவேண்டியது. ஒரு தடவை தோய்த்த கோமயத்தை மறுதடவைக்கு உபயோகிக்கலாகாது. மறுபடி முன்போல் அந்தக் கிட்டத்தைக் காய்ச்சி முன்போல் கோமயத்தில் தோய்க்கவேண்டும். இவ்விதம் காய்ச்சிக் காய்ச்சி ஏழு தடவை தோய்க்கவேண்டும். ஒவ்வொரு தடதையும் புதிதாகக் கோமயத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பிறகு

நன்ருய் வெய்யிலிலுலர்த்திக் கல்லுரலில் இடித்து துணியில் வடிகட்டி ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு அதில் 4 பலம் (140 கிராம்) கையாந்தகரைச் சாற்றை விட்டு உலர்த்த வேண்டும். பிறகு 4 பலம் (140 கிராம்) குப்பைமேனிச் சாற்றை விட்டு உலர்த்தவேண்டும். அதன் பிறகு 4 பலம் (140 கிராம்) எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு உலர்த்த வேண்டும்.

ஓமம் 2 பலம் (70 கிராம்) மேல்தோல்சீவின சுக்கு 2 பலம் (70 கிராம்), மிளகு 2 பலம் (70 கிராம்), உலர்த்தின பிரண்டைக் கொழுந்து, உலர்த்தின கையாந்தகரைக் கொழுந்து, உலர்த்தின குப்பைமேனிக் கொழுந்து, நற்சீரகம் இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :—இவை எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டி புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு :—1 ($3\frac{1}{2}$ கிராம்) முதல் 2 (7 கிராம்) விராகன் எடை.

துணைமருந்து :—நெய், தேன், சமயோசிதமான குடிநீர்கள் ஆகியவைகளாம். நோய் வன்மைக்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

பயன்படுத்தல் :—பித்தவெட்டை, சோகை, பாண்டு, ஆகியவைகள் நாட்பட்டவை ஆயினும் தீரும்.

மருத்துணவு :—நெய், பசுவின் மோர், மிளகு, சீரகம், பூண்டு ஆகியவைகளாம். அசைவ உணவு உண்பதானல் வெள்ளாட்டு உப்புக்கண்டம் ஆகும். திருக்கைக் கருவாட்டைக் கையாந்தகரைச் சாற்றில் பாவனை செய்து உலர்த்திப் பூண்டு, மிளகு, சீரகம் சேர்த்துக் குழம்பிட்டுப் பிரதிதினமும் உபயோகிக்க வேண்டியது. அல்லது ஒன்றை விட்டொரு நாளாவது உபயோகித்தால் சீக்கிரமாக நோய் குணப்படும்.

33. மண்டூர மாத்திரை

தூய்மைசெய்த மண்டூரம் அல்லது பாவனை செய்த மண்டூரம் 1 பலம் (35 கிராம்), கம்பி வெடியுப்பு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), காவிக்கல் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), ரேவல் சின்னிப்பால் 56 குன்றிமணி எடை.

செய்முறை :—முன்னர் ரேவல் சின்னிப்பாலைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்றவைகளைச் சேர்த்துத் தண்ணீர்விட்டு 2 சாமமரைத்து 27 மாத்திரைகளாகச் செய்துகொள்ளவும்.

அளவு :—1 மாத்திரை காலையில் மட்டும் கொடுக்க வேண்டும்.

துணைமருந்து :—மேற்படி மாத்திரைகளைச் சர்க்கரை, தேன் முதலியவைகளில் கலந்து உட்கொண்டு இரண்டரைப் பலம் வல்லாரைச் சாற்றையும், இரண்டரைப்பலம் வெண்ணிற மான வெங்காயச் சாற்றையும் கலந்து மேலே பருகிட வேண்டும். நாள் முழுவதும் தண்ணீருக்குப் பதிலாகப் பெருஞ்சீரகத் தீநீரை அல்லது குடிநீரை பருகுதல் உத்தமம். இதனால் இரண்டு மூன்று தடவை கழிச்சலாகும். அதிகமாகக் கழிச்சலானால் மாத்திரையை அளவில் குறைத்துக் கொள் ளவும்.

பயன்படுத்தல் :—பாண்டுவகைகள் எல்லாம் தீரும்.

மருத்துணவு :—முன் சொன்னவைகளேயாம்.

34. லோக மண்டூர மாத்திரை

தூய்மைசெய்த அய அரப்பொடி 1 பலம் (35 கிராம்) தூய்மைசெய்த மண்டூரம் 1 பலம் (35 கிராம்), ஊசிமல்லிகை வேர்ப்பட்டை $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்) நாகமல்லிகை வேர்ப் பட்டை $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), வட்டத்திருப்பி வேர்ப்பட்டை, வட்டக் கிலுகிலுப்பை வேர்ப்பட்டை, வெண்சாரணை வேர்ப் பட்டை, வெண்காக்கிரட்டான் வேர்ப்பட்டை, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், வால்மிளகுத் தூள், மிளகுத் தூள், ஏலக்காய்த்தூள், கசகசா, கொட்டை கோது முதலியவை நீக்கின பழம் புளி இவை வகை 1-க்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) பனைவெல்லம் 3 பலம் (105 கிராம்) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன்னம் அரப்பொடியையும், பழங்கிட்டத் தையும் கல்வத்திலிட்டு மைபோல் பொடித்துத் தனியே எடுத் துக் கொள்ளவும். பிறகு வேர் வகைகளை எல்லாம் அம்மியில் வைத்து எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு மைபோலரைத்துத் தனியே எடுத்துக் கொள்ளவும். பிறகு கசகசாவைக் கல்வத் தில் வைத்து எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு மைபோலரைத் துப் புளி முதலிய தூள்களையுஞ் சேர்த்து அரைத்து முன் சித்தப்படுத்தியிருக்கிற இருவகைகளையுஞ் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு நான்கு சாமமரைத்து முக்கால் விராகன் எடையுள்ள மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வாயகன்ற ஒரு புட்டியில் பத்துப்பலம் காய்ச்சி நுரைநீக்கின

தேனை விட்டு அதில் மேல்படி மாத்திரைகளைப் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு :—1 மாத்திரை ஐந்துநாள் 10 வேளை சாப்பிட்டு நிறுத்திவிட வேண்டும்.

மருத்துணவு :—பூண்டு, மிளகு ஆகியவைகளை அதிக மாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதாவது மிளகுக் குழம்பு, பூண்டுக் குழம்பு செய்துகொள்வதேயாம். அசைவ உணவு உண்பவர்களாகுல் வெள்ளாட்டு உப்புக்கண்டம், சுருக் கருவாடு ஆகியவைகளை உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

பயன்படுத்தல் :—பித்தவெட்டை, பாண்டு வகைகள், சோகை நோய்கள், காமாலை நோய்கள் ஆகியவைகள் தீரும்.

35. லோகமண்டூர இளகம்

(அ) துருப்பிடித்த அயம் 50 பலம் (1 கிலோ 750 கிராம்) கிட்டம் 25 பலம் (875 கிராம்) இவ்விரண்டையும் தனித் தனியே இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். காடி 16 படி, புளியிலை 100 பலம் (3 கிலோ 500 கிராம்).

(ஆ) பனைவெல்லம் 40 பலம் (1 கிலோ 400 கிராம்), தேன் 10 பலம் [350 கிராம்].

(இ) மேல்தோல் சீவின சுக்கு, மிளகு, அரிசிதிப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி வற்றல், சிறுநாகப்பூ, கொத்துமல்லி விதை, சாதிக்காய், அக்கிராகாரம், அதிமதுரம், சித்திரமூல வேர்ப்பட்டை, வாய் விளங்கம், லவங்கம், சிறுதேக்கு, லவங்கப்பட்டை, ஏலம், சிற்றரத்தை, லவங்கபத்திரி, நற்சீரகம், பெருஞ்சீரகம், தாளிசபத்திரி, கண்டந்திப்பிலி, ஓமம், கோட்டம், விலாமிச் சம்வேர் இவை வகை 1-க்கு விராகனெடை 6¼. இவை எல்லாவற்றையும் இடித்துத் தூளாக்கித் துணியில் வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

செய்முறை :—(அ) லுள்ளவைகளை ஒன்ருகக் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாய் எரித்து எட்டில் ஒரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டித் திப்பி நீக்கின கியாழத்தை எடுத்து அதில் (ஆ) லுள்ள வெல்லத்தைக் கரைத்து அடுப் பேற்றிப் பாகுசெய்து பாகு பதத்தில் (இ) லுள்ள தூள்களைத் தூவிக் கிளறி இறக்கித் தேனை விட்டு நன்ருகக் கலந்து ஆறினபின் வேறு பாத்திரத்தில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு:—1½ (5¼ கிராம்) முதல் 2½ (8¾ கிராம்) விராகன் எடை. நோய் பலத்திற்குத் தகுந்தபடி ½ முதல் 1 மண்டலம் உபயோகிக்கவும்,

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

பயன்படுத்தல் :—பாண்டு வகைகள், சோகை வகைகள், மஞ்சள்நோய் வகைகள், குருதிக்குறைவு நோய்கள் ஆகிய வைகளெல்லாந் தீர்ந்து இரத்தவிருத்தி உண்டாகி உடல் வலிமை அதிகமாகும்.

குறிப்பு

மேற்கண்ட இளகமானது ஆங்கில முறைப்படி செய்து விற்கப்படும். விபுரோனு முதலிய மருந்துகளைப் பார்க்கிலும் ஆயிரம்பங்கு அதிகமான குணத்தைத் தரும். இதை ஆண், பெண், முதியவர், இளைஞர், குழவியர் ஆகிய எல்லோரும் உப யோகிக்கலாம். இதில் சொல்லப்படாத இன்னும் அநேக நோய்களுக்கும் இது உபயோகப்படுகிறது. இதன் சிறந்த குணத்தை அனுபவசாலிகளாகிய பண்டிதர்கள் நன்கு உணர்ந்துகொள்வார்கள். இது எத்தனை நாள் இருந்தபோதி லும் கெட்டுப்போகிறதில்லை. உலர்ந்துவிட்டால் நன்ருகப் பொடித்துத் தேனை விட்டரைத்து இளகம்போல் செய்து உப யோகித்துக் கொள்ளலாம். அல்லது இதனைப் பொடித்துக் கொஞ்சம் வெல்லத்தைப் பாகுசெய்து பாகில் தூளைச்சேர்த்து இளகம்போல் செய்துகொண்டு உபயோகிக்கலாம்.

36. லோகமண்டூர வட்டு

(அ) தூய்மைசெய்த அய அரப்பொடி 4 பலம், (140 கிராம்) சுத்திசெய்த மண்டூரம் 6 பலம், (210 கிராம்) கையாந்தகரைச் சாறு 1 படி எலுமிச்சம்பழச்சாறு 1 படி.

(ஆ) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு தூள்களையும் கல்வத்தி லிட்டு மேற்படி கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமமரைத்து வழித்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு மீதியாய் இருக்கிற கையாந்தகரைச் சாற்றை அதில் விட்டு வெய்யிலில் உலர்த்த வேண்டும். அப்படி உலர்த்தும் போது தூசு, தும்பு விழாதபடி அதிகச் சன்னமான துணியை அல்லது வலையைக் கட்டிவைக்க வேண்டும். நாள்தோறும் ஐந்தாறு தடவை கலக்கியும் வரவேண்டும். சாறெல்லாஞ் சுண்டி வறண்டபின் (அ) விலுள்ள எலுமிச்சம் பழச்சாற்றை

விட்டு முன்போல் வெய்யிலில் உலர்த்த வேண்டும். இதுவும் நன்ருய் உலர்ந்தபின்பு எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு இரண்டு சாமம் வரையிலரைத்து (ஆ) விலுள்ள எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்துப் பாகுபதமாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு ஆலம்பழுப்பு ஒவ் வொன்றில் ஒவ்வொரு சிறிய தொன்னைகள் செய்து ஒவ்வொன் றிலும் முக்கால்வாசி விட்டு ஒரு பீங்கான் தட்டில் அது கொள்ளுகிற வரையில் ஒன்ருேடொன்ருய் அடுக்கி வெய் யிலில் உலர்த்த வேண்டும். ஈரமில்லாமல் நன்ருய் உலர்ந் தால் புட்டிவெல்லத்தைப்போல் இருக்கும். மேலேயுள்ள இலையை எடுத்துவிட்டு ஒவ்வொன்ருய்த் தூள்செய்து எல்லா வற்றையும் ஒன்ருய்ச் சேர்த்து மைபோல் அரைத்து துணியில் வடிகட்டி பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—3 முதல் 4 குன்றிமணி எடை. (காலை, மாலை இருவேளை)

துணைமருந்து :—தேன், நெய், சருக்கரை, தயிர் ஆகிய வைகளும், இன்னும் நோய்நிலைக்கேற்ப துணைமருந்துகளாம். உடல் பலத்திற்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் சாப்பிடலாம்.

மருத்துணவு :—புளி, புகை, புணர்ச்சி நீக்கிவிடவேண்டும்.

பயன்படுத்தல் :—குருதிக் கெடுதலினுல் உண்டான எல்லா நோய்களும், முக்குற்றக் கெடுதியினுல் நேரிட்ட நோய்களும், அசதி, வலுக்குறைவு ஆகியவைகளும், அதைப்பு, வீக்கம், பாண்டு, பித்தவெட்டை முதலிய நோய் களும் தீரும்.

எஃகின் தூய்மை

எஃகு என்னும் உளியைப் புளியிலைக் கனமான தகடடித்து உலையிற் சிவக்கக் காய்ச்சி அயத் தூய்மைக்காகச் சொல்லி இருக்கிற திரவங்களில் மூன்று மூன்று தடவை தோய்த்துக் கொள்ளவேண்டும். அதாவது, காடி, எள்ளெண்ணெய், பசுவின் மூத்திரம், கொள்ளை வேகவைத்த குடிநீர் ஆகியவை களாம். இப்படிக் காய்ச்சித் தோய்த்த பின்பு அதை அரத் தால் ராவி மருந்துகளில் உபயோகிக்க வேண்டும். இது சற்று கடினமான வழியாகையாலும், குணத்தில் சற்று குறைவானது ஆகையாலும் உளியை ராவி அயத்தூய்மையில் சொல்லி இருப்பதுபோல் செய்துகொள்வதே சுலபமான வழியாகவும், அதிக குணமுள்ளதாகவும் அநுபவத்தால் நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. ஆகையால் விருப்பமுள்ளவர்கள் அயப் பொடி

யைப் போலவே தூய்மைசெய்து கொள்வார்களென நம்பு கின்றோம்.

எஃகு தூய்மை (வேறு)

எஃகுவின் அரப் பொடி 5 பலம் (175 கிராம்). இதனை ஒரு சிறு மண் கிண்ணத்தில் போட்டுக் கொல்லுலையில் வைத்து ஊதிச் சிவந்தவுடனே வேறு மண் சட்டியில் பத்துப் பலம் கொட்டை முந்திரிகைப் பூச்சாற்றை விட்டு அதில் கொட்ட வேண்டும். ஆறினபின் அந்தச் சாற்றை இறுத்துவிட்டு வேறு மண் கிண்ணத்தில் முன் எஃகு அரப்பொடியைப் போட்டு உலையில் வைத்து முன்போல் சிவக்கக் காய்ச்ச வேண்டும். முன் சாய்த்த சட்டியைத் தூய்மைசெய்து புதிதாகப் பத்துப்பலம் முன் பூச்சாற்றை விட்டு முன் பொடியை முன் போல் இதில் சாய்க்கவேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கி 11 தடவை காய்ச்சிச் சாய்த்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் எஃகுவானது நல்ல தூய்மையாகும்.

இந்தத் தூய்மையானது அதிகத் திறமானதாயினும் எப்போதும் எல்லா இடங்களிலும் மேற்கண்ட கொட்டை முந்திரிகைப் பூவானது கிடைப்பது அரிது. இது தஞ்சாவூர், புதுச்சேரி முதலான இடங்களில் இது மலரும் பருவங்களில் அதிகமாக கிடைக்கும். அந்தச் சமயங்களில் மேற்படி எஃகைத் தூய்மைசெய்து வைத்துக்கொண்டு விருப்பமான நேரங்களில் பற்பித்துக் கொள்ளலாம். அப்படிச் செய்யக் கூடாதவர்கள் முன்கண்ட முறைப்படி செய்துகொள்ள வேண்டும்,

37. எஃகுப் பற்பம்

தூய்மைசெய்த எஃகு அரப்பொடி 1 பலம், (35 கிராம்) கருவேலம் வேர்ப்பட்டைச்சாறு 10 பலம், (350 கிராம்) மாமர வேர்ப்பட்டைச்சாறு 10 பலம், (350 கிராம்) ஊனுங் கொடி வேர்ப் பட்டைச் சாறு 10 பலம். (350 கிராம்)

செய்முறை :—மேற்படி பொடியைக் கல்வத்திலிட்டு கருவேலம் வேர்ப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு 4 சாமம் அரைக்கவேண்டும். இதனைத் தொடர்ந்தாற்போல் அரைக்க வேண்டும் என்பதும் அவசியம் இல்லை; எல்லாச் சாற்றையும் ஏகமாய் விட்டரைக்க வேண்டுமென்பதும் அவசியமில்லை; சாவகாசமாகவும் கிடைத்தவரையில் சாற்றைவிட்டும் அரைத்துக்கொள்ளலாம். எவ்விதமாயினும் மேற்கண்ட

சாறுனது மேற்கண்ட அளவு அரைப்பிற் சென்றபின் சிறு பில்லைகளாகத் தட்டி வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்ந்தபின் ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்ந்தபின் இக் கவசத்திற்கு 24 பங்கு எடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

புடமிட்டெடுத்த மருந்தைக் கல்வத்திலிட்டு மேற்படி மாமர வேர்ப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன்போல் அரைக்கவேண்டும். இந்தச் சாறெல்லாம் தீர்ந்து பில்லை தட்டும் பக்குவம் வரை அரைத்து சிறு பில்லைகளாகச் செய்து முன்போலவே உலர்த்தி, கவசஞ்செய்து உலர்த்தி கவசத்தின் எடைக்கு 26 பங்குள்ள வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த அரைகுறையான பற்பத்தை மேற்படி [1]ஊஞங் கொடி வேர்ச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன்போல் அரைத்து, முன்போல் உலர்த்தி, முன்போல் கவசித்துலர்த்தி கவசத்தின் 26 பங்கு எடை வறட்டியில் முன்போல் புடமிட வும். குளிர ஆறினபின் எடுக்க இயற்கையினது அருளினுல் வெண்மையான பற்பமாய் இருக்கும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை சாப்பிடலாம்.

துணைமருந்து :—நெய், தேன், வெண்ணெய், வெள்ளுள்ளிச்சாறு, தேங்காய்ப்பால் ஆகியவைகளும், இன்னும் நோய் நிலைக்கேற்ற துணைமருந்துகளாம்.

பயன்படுத்தல் :—உடல் வெளுப்பு, வலுக்குறைவு, நீர்த்த விந்து, வீக்கம் முதலியவை தீர்ந்து இரத்தவிருத்தி உண்டாகி உடல் வலிமை அதிகரிக்கும். இன்னும் இதனைச் சமயோசித மாக அநேக நோய்களிலும் உபயோகிக்கலாம்.

மருத்துணவு :—முக்கியமாய்ப் புளியை நீக்கி வைக்க வேண்டியது. உடலின் தன்மைக்கு ஏற்றவாறு புகையும் புணர்ச்சியும் நீக்குதல் நலமாகும்.

38. எஃகு பற்பம் (வேறு)

தூய்மைசெய்த எஃகு அரப்பொடி 1 பலம் (35 கிராம்) புளிப்பு மாதுளம்பழச்சாறு செல்லத்தக்க அளவு, கறுத்த மணித்தக்காளிச் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எஃகு அரப்பொடியை ஒரு சிறிய பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் சுமார் 5 பலம் (175 கிராம்)

---

1. ஒஞ்ஞன்கொடி.

புளிப்பு மாதுளம்பழச்சாற்றை விடவேண்டும். இந்தச் சாறுனது பாத்திரத்தின் உதட்டினளவிற்கு இருக்கவேண்டும். இதனைக் கடுவெய்யிலில் வைத்தால் பொங்கி வழியும். பிறகு சாயந்திரம் எடுத்துப் பாத்திரத்திலுள்ள சாற்றை இறுத்து நீக்கித் தண்ணீரை விட்டுக் கழுவித் தூய்மைசெய்து கொள்ள வேண்டும். இரண்டாம் நாளும் அந்தப் பொடியை முன் பாத்திரத்தில் போட்டு முன்போல் புளிப்பு மாதுளம்பழச் சாற்றை விட்டு முன்போல் வெய்யிலில் வைத்துப் பொங்கி வழிந்தபின் முன்போல் சாற்றை இறுத்துத் தண்ணீரை விட்டுக் கழுவி பாவனை செய்துகொள்ள வேண்டும். இவ்விதமே மூன்றுந் தடவையும் பாவனைசெய்து கொள்ளவும்.

இவ்விதம் பாவனை செய்து உலர்த்தி, இந்தத் தூளைக் கல்வத்திலிட்டுக் கறுப்பு மணித்தக்காளிச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமமரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி இரண்டடி சதுரப் புடமிடவும். நன்றுய்க் குளிர ஆறினபின் எடுக்க வெண்மையான பற்பமாகி இருக்கும். பாக விகற்பத்தால் ஒரு புடத்தில் வெண்மையான பற்பமாகா விட்டால், முன் கறுப்பு மணித்தக்காளிச் சாற்றையே மறுபடியும் விட்டு அரைத்து முன்போல் இரண்டு புடம்போட்டுக் கொள்ளவும். இம் மூலிகையில் மடக்கி மடக்கி இரண்டு அல்லது மூன்று புடம் போட்டுக்கொள்வதனுல் மருந்தின் குணம் கெட்டுப்போகாது.

குறிப்பு

இதனைப் பாவனைச் செய்வதற்காகப் புளிப்பு மாதுளம் பழச்சாற்றை விட்டு அப்பாத்திரத்தின் வாயை மூடி வெய்யிலில் வைத்தால் அது சீக்கிரம் பொங்கி விடும். உடனே எடுத்து அந்தச் சாற்றை இறுத்துவிட்டு மறுசாற்றை விட்டு முன்போல் மூடிவைக்கலாம். இவ்விதம் ஒரே நாளில் மூன்று தடவையும் பாவனைச் செய்து கொள்ளலாம்.

அளவு :—$1\frac{1}{2}$ முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—சருக்கரை, நெய், தேன், சந்தன சர்பத்து, பன்னீர் சர்பத்து ஆகியவைகளும் சமயோசிதமான இளகம் முதலியவைகளுமாம்.

சீரகத்தை இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 விராகன் எடை, ($3\frac{1}{2}$ கிராம்) தேன் 1 விராகன் எடை, ($3\frac{1}{2}$ கிராம்) இவ் விரண்டையும் கலந்துகொண்டு மேற்படி பற்பத்தை அளவுப்

படி கலந்து உட்கொள்ள சூலை நோய்கள், கைகால் முடக்கு, கீல்வாயு முதலிய வாயு சம்பந்த நோய்கள் தீரும்.

கருஞ்சீரகத்தை வறுத்திடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 விராகன் எடை, (3½ கிராம்) தேன் 1 விராகன் எடை, (3½ கிராம்) இவ்விரண்டையும் கலந்துகொண்டு மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி குழைத்து உட்கொள்ள கருமேகம், புள்ளிமேகம், மேகப்புண் முதலியவை தீரும்.

இன்னும் அனேக நோய்களுக்கு அதனதன் துணைமருந்துடன் கொடுத்தால் அவைகளும் தீரும். ஆனால் இது மருத்துவர்களின் புத்திநுட்பத்தை அனுசரித்தது.

39. எஃகுச் செந்தூரம்

எஃகு 10 பலம், (350 கிராம்) இது ஒரே துண்டாய் இருக்கவேண்டும். எட்டியிலைச்சாறு செல்லத்தக்க அளவு, மருதம்பட்டைச் சாறு செல்லத்தக்க அளவு, நாவல் பட்டைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இந்த எஃகை அரையணுக் கனமும் 4 அங்குல அகலமும் உள்ளதாகத் தகடடித்துக் கொள்ளவேண்டும். நீளம் எத்தனை அங்குலம் உள்ளதாக இருந்தபோதிலும் பாதகமில்லை. அதனை இரண்டு மூன்று துண்டுகளாகவுந் துண்டித்துக் கொண்டால் நல்லது. இந்தத் துண்டுகளைக் கொல்லுலையில் வைத்து ஊதவேண்டும். ஒரு வாயகன்ற மண்சட்டியில் சுமார் இரண்டு இரண்டரைப்படி எட்டியிலைச் சாற்றை விட்டு வைத்துக் கொள்ளவேண்டும். மேற்படி எஃகுத் துண்டுகள் நன்றாய்ப் பளபளெனச் சிவந்த பிறகு அவற்றை ஒவ்வொன்றாகக் குறட்டாலெடுத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சாற்றில் போடவேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் அந்தத் துண்டுகளை எடுத்து முன்போல் உலையில் வைத்து ஊதவேண்டும். நன்றாய்ப் பழுத்தபின் முன்போலவே முன் சாற்றில் விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 10 அல்லது 12 தடவைகள் செய்யின் எல்லாம் உதிரி உதிரியாகச் சட்டியில் உதிர்ந்து கிடக்கும். அதனை எடுத்து வெய்யிலில் ஈரமில்லாமல் உலர்த்தி நன்றாய்ப் பொடித்துக் கொள்ள வேண்டும். இந்தத் தூள் 1 பலம் (35 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டு மருதம்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்துச் சிறு பில்லைகளாகச் செய்து வெய்யிலிலுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 24 பங்கு எடை வறட்டியிற் புடமிடவும். குளிர ஆறினபின் எடுக்கவேண்டும்.

இவ்விதம் புடமிட்ட மருந்தைக் கல்வத்திலிட்டு நாவற் பட்டைச் சாற்றை சிறுகச் சிறுகவிட்டு 2 சாமமரைத்து முன் போல் பில்லைசெய்து முன்போல் புடமிடவும். இவ்விதம் நாவல்பட்டைச் சாற்றிலே மடக்கி மடக்கி மூன்று புடமிட்டு எடுத்துக்கொண்டால் அருட்தன்மையுள்ள செந்தூரமாகும்.

அளவு :—1½ முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—வெண்ணெய், நெய், தேன், கருப்பஞ் சாறு, வெள்ளைப்பூண்டுச்சாறு முதலியவைகளும். சமயோசித மான மற்ற துணைமருந்துகளுமாம்.

பயன்படுத்தல் :—பாண்டு நோய்கள், காச நோய்கள், குன்ம நோய்கள், முக்குற்றங்கள், கிருமி நோய்கள், வாயு நோய்கள் முதலியவைகள் போம். இது நரம்புகளுக்கு முறுக் கேற்றி உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உண்டாக்கும். இதனை எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம்.

மருத்துணவு :—தேக சுபாவம், உடல்பலம், நோய்பலம் ஆகியவைகளுக்கு ஏற்றவிதமாக இலகு பத்தியமாகவும், கடின பத்தியமாகவும் உபயோகிக்க வேண்டும்.

40. எஃகுச் செந்தூரம் (வேறு)

முன் துவாதசலோகமாரண செந்தூரத்தில் சொல்லப்பட் டிருக்கும் 12 சரக்குகளும் வகை 1-க்கு 1 விராகன் எடை, (3½ கிராம்). எஃகு 1 பலம் (35 கிராம்) இது ஒரே துண் டாக இருக்கவேண்டும். இதனை [1]அரையணுக் கனமுள்ள தகடாக அடித்து மேற்கண்ட சரக்குகளில் கெந்தகத்தையும் ரசத்தையும் முதலில் தொந்தித்தரைத்து மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒருமணிநேரம் அரைத்து முன் எஃகுத் துண்டிற்கு இரண்டுபக்கமும் பக்குவமாகப்பூசி உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி இரண்டடிக்குக் குறையாத புடமிடவும். ஆறினபின் எடுத்துத் தகட்டைத் தட்டினால் உதிரி உதிரும். அதையெல்லாம் தனியே எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு முன் பன்னிரெண்டு சரக்கையும் முன்போலரைத்து, முன்போல் தடவி, முன்போல் புடமிட்டு எடுத்துத் தட்டி உதிரும் உதிரிகளை எடுத்துக்கொள்ள வேண் டும். இவ்விதம் மடக்கி மடக்கி நாலைந்து தடவைகள் செய்ய எல்லாம் உதிரியாக உதிர்ந்துபோம். இதனைத் தூள்செய்து இதற்குச் சமனெடை தூய்மைசெய்த கெந்தகம், இவ்விரண்

1, 2-25 மில்லிமீட்டர் கனம்.

டின் மொத்த எடைக்கு காற்பங்கு எடை தூய்மைசெய்த வீரம் ஆகிய மூன்றையும் கல்வத்திலிட்டுப் பழச்சாறு விட்டு 2 சாம மரைத்துப் பில்லைசெய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து ஒருமுழச்சதுரப் புடமிடவும். குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு முன்போலரைத்து, முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று அல்லது நான்கு புடமிட்டால் நல்ல செந்தூரமாகிவிடும். அல்லது செந்தூரமாகிற வரையில் புடமிடவும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—கூழ்ப்பாண்ட நெய், கூழ்ப்பாண்ட இளகம், வாதுமை சர்பத்து, சுரைக்காய் இளகம், வெண்ணெய், நெய் ஆகியவைகளும் உடல் பலத்திற்கும், நோய்க்கும் அனுகூலமானவைகளுமாம்.

பயன்படுத்தல் :—பக்கவாதம், கைகால் பிடிப்பு, யானைக் கால்வாதம், நெரிகட்டுச்சுரம், முறைச்சுரம், நச்சுக்கழிச்சல், சன்னி, பெருவயிறு, குன்மநோய் முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :—நோய், உடல் தன்மை முதலியவைகளின் பலத்திற்குத் தகுந்தபடி சமயோசிதமாக இலகு அல்லது கடின பத்தியம் வைக்கவேண்டியது.

குறிப்பு

இது மிகவும் அருமையான மருந்து; இதனால் தனுர் வாதம், குதிரை வலிப்பு, குமரகண்டன் வலிப்பு, வாய் கோணல், நரித்தலை வாதம் முதலிய நோய்கள் தீருகின்றன. ஆனால் சமயோசிதமாகப் பறங்கிப்பட்டை இளகம், சித்திர மூலநெய், சுக்குஇளகம் முதலியவைகளில் கலந்துக் கொடுக்க வேண்டும். இம்முறைகள் எல்லாம் பின் எழுதப்படும்.

பின் சொல்லப்படும் காந்தசெந்தூர பாகத்திலுள்ள தசலோக மாரண முறைப்படியாகவும் எஃகைச் செந்தூரித்துக் கொள்ளலாம்.

41. எஃகு சுவர்ணச் செந்தூரம்

தூய்மைசெய்த எஃகுப்பொடி 1 பலம், (35 கிராம்) தங்க அரப்பொடி 2½ (8¾ கிராம்) விராகன் எடை, கலப்பைக் கிழங்குச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் இரண்டு சரக்கையும் நன்னிக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து 4 சாமம் அரைக்கவேண்டும். பிறகு சிறு பில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 7 பங்கு எடை வறட்டியில் புடமிடவும். குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு முன்போல் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி, கவசித்து, முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி 21 புடங்களிட்டால் இயற்கையின் அருளினுல் குங்குமம்போல் சிவந்து செந்தூரமாகும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—தேன், பாலேடு, பால்அல்வா, கோதுமைப்பால் அல்வா ஆகியவைகளும் இவை போன்றவைகளுமாம். சமயத்திற்குத் தக்கபடி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

பயன்படுத்தல் :—இது ஒரு கற்பமுறை. இதின் பலன் பலவுள. இதனுல் நரைதிரை மாறும்; குருதியிலுள்ள மாசுகளெல்லாம் நீங்கிக் குருதித் தூய்மையுண்டாகி உடல்நலம், உடல் வலிமை, உடற்கட்டழகு, வீரத்துவம், ஆண்மைத்துவம் முதலியவை அதிகரிக்கும். இதனைக் கையாண்டு உடல் திடப்பட்டு விட்டால், பிறகு எந்த நோயுமணுகாது. பாண்டு, சோகை, அசதி, ஓய்ச்சல், சயம், இரத்தங்கக்கல், மூளை நலக் குறைவு ஆகிய எல்லா நோய்களும் நீங்கும். இதனைக் கையாள்பவர்களே இதன் சிறந்த குணத்தைக் கண்டுகொள்வார்கள்.

மருத்துணவு :—கடுகு, எள்ளெண்ணெய், மீன், புளி, புணர்ச்சி ஆகியவற்றையும், இவை போன்றவைகளையும் நீக்க வேண்டும். பால், சருக்கரை முதலியவைகளையும், இவை போன்றவைகளையும் சிறப்பாகச் சேர்க்கவேண்டியது.

குறிப்பு

உலகத்தில் அநேகர் விரும்புவதாவது: எந்த மருந்து செய்முறையும் அதிக சுலபமாகவும், செலவு மிகவும் குறைவுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்பதே. ஆனுல் அப்படி எல்லா மருந்தும் கிடைப்பது அரிதாகும். ஏனெனில், சில மருந்துகளைப் பலமுறை அடுத்தடுத்துப் புடமிடுவதால் அந்தந்த மூலிகையிலுள்ள சத்தானது அதிகமாகச் சேர்ந்து அந்த

மருந்திற்கு அதிக பலத்தையும், அதிக சக்தியையும் உண்டாக்க ஏதுவாகும். குறைந்த மாற்றுள்ள பொன்னைத் தங்கமாக்க வேண்டுமானால், அதனை முறைப்படி முறையாய்ப் புடம் போட்டாலொழிய அது தங்கமாகாது. அதனை ஒரே தடவையில் பெரும் புடமாகப் போட்டால் அது கருகி உள்ள பொன்னும் நாசமாகி விடும். ஆகையால் சில மருந்துகளை முறையாய்ப் புடம்போட்டால்தான் அதிலுள்ள குற்றங்கள் நீங்கி அதற்கு வீறுண்டாகி அற்புத குணங்களைக் கொடுக்கும் சக்தியுண்டாகும். "சோம்பேரிக்கு வாழைப்பழம் தோலுடன்" என்பதுபோல இருபத்தொரு புடம் என்றவுடன் மலைத்து விலவிலத்துப் போகாமல் மருந்தின் சிறந்த குணத்தையும் அதன் மகிமையையும் கவனித்து மன ஊக்கத்துடனும், மன உற்சாகத்துடனும் செய்து உலகத்தாருக்குப் பயன்படும்படியாக முயற்சிசெய்வதே சான்ருண்மையாகும்.

42. தண்டவாளச் செந்தூரம்

இதனை எஃகுவைப் போலவே தூய்மைசெய்து கொள்ள வேண்டும். துவாதச லோகமாரணச் சரக்குகளைக் கவசித்துப் புடமிட்டு எஃகுவின் உதிரி எடுத்ததுபோலவே இதனையும் எடுத்துக் கெந்தகத்தையும் வீரத்தையும் கணக்கின்படி சேர்த்துப் புடமிட்டுச் செந்தூரித்துக் கொள்ளவேண்டும்.

அளவு :—1 முதல் 1½ குன்றிமணி எடை.

பயன்படுத்தல் :—அக்கினிமாந்தம், குன்ம நோய், பாண்டு நோய், ஆகியவைகள் தீரும். குருதி வளமை, உடற்செழிப்பு உண்டாகும். நோயானது மும்முரமாய் இருக்கும்போது இந்த மருந்தைக் கொடுக்கலாகாது. நோயின் ஆரம்பத்தில் அல்லது நோய் நாள்பட்டபின் கொடுக்கலாம்.

மேற்ருேல் சீவின சுக்குத்தூள் ¼ விராகன் எடை, கொத்துமல்லி விதைத்தூள் ¼ விராகன் எடை, தேன் ½ விராகன் எடை (1¾ கிராம்) இவற்றைக் கலந்துகொண்டு மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள பித்தசுரம், பித்த குன்மம் ஆகியவைகள் தீரும்.

மேற்ருேல் சீவின சுக்கு, சிறுநாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், ஏலம் இவை வகை 1-க்கு ½ பலம் (17½ கிராம்) இவற்றைத் தனித்தனி வாதுமைநெய்யில் அல்லது பசுவின் நெய்யில் வறுத்துக்கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்திடித்து மெல்லிய தூளாகச்செய்து 2 பலம் (70 கிராம்) தேனைக்காய்ச்சி அதில் மேற்படி தூள்களைப் போட்டு கிண்டிக்

கிளறி இளகமாகச் செய்துக்கொள்ளவும். இந்த இளகம் விராகன் எடை ஒன்றில் (3½ கிராம்) மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள, கழிச்சல், பெருங் கழிச்சல், எருவாய்முளை நோய் ஆகியவை தீரும்.

இஞ்சிச்சாறு 1 விராகன் எடை, (3½ கிராம்), கற்கண்டுத் தூள் 1 விராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து கொண்டு மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள அக்கினிமந்த நோய், குன்ம நோய் ஆகியவை தீரும்.

முன் சொல்லியிருக்கிற லோகமண்டூர இளகம் 1 விராகன் எடை (3½ கிராம்) இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப் படி கலந்து உட்கொள்ள, பாண்டு நோய்கள், சோகை நோய்கள் ஆகியவைகள் தீரும்.

காந்தத் தூய்மை

ஏழு ஊசி பிடிக்கும் காந்தத்தைச் சிறு துண்டுகளாக ஒடித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு எலுமிச்சம் பழச் சாற்றை விடவேண்டும். அந்தக் காந்தமானது மேற்படி சாற்றில் சுமார் ஒரு அங்குலம் ஆழ்ந்திருக்க வேண்டும். இரண்டு மணிநேரம் இவ்விதம் ஊறவைத்துச் சாற்றை இறுத்துவிட்டு, தண்ணீரைவிட்டுக் கழுவி முன்போல் பீங்கான் பாத்திரத்தில் போட்டு முற்றும் புளித்த மோரை முன்போல் விட்டு இரண்டுமணி நேரம் ஊறவைக்க வேண்டும். முன் போல் மோரை இறுத்துவிட்டு தண்ணீர் விட்டுக் கழுவி முன் போல் பீங்கான் பாத்திரத்தில் விட்டு முன்போல் காடியை விட்டு இரண்டுமணி நேரம் ஊறவைத்து முன்போல் கழுவித் தூய்மைசெய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பு

காந்தத் தூய்மை வகைகள் இன்னும் பலவுள. அவை எல்லாவற்றையும் நமது அநுபோக வைத்திய இரத்திநகரத்தில் எழுதியிருக்கின்றோ மாகையால், விருப்பமுள்ளவர்கள் அந் நூலைப் பார்த்துக்கொள்ளவும். இது மிகவும் சுருக்கமான நூலாகையால் இங்கு அவசியமான ஒன்றிரண்டை மட்டும் எழுதியிருக்கின்றோம்.

43. காந்த பற்பம்

மேற்கண்டபடி தூய்மைசெய்த காந்தம் 2 பலம், (70 கிராம்) தூய்மைசெய்த நெல்லிக்காய் கெந்தகம் ½ பலம், (17½ கிராம்)

எருக்கம்பால் செல்லத்தக்க அளவு (வெள்ளெருக்கங் பாலாக இருந்தால் உத்தமம்) பெரும்பீளைச்சாறு செல்லத்தக்க அளவு புரசம்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—காந்தத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்குசாமம் அரைத்துச் சிறு பில்லைகளாகச் செய்து வெய்யிலில் வைத்து நன்றாய் உலர்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து நன்றாய் உலர்த்திக் கவசத்தின் நூறுபங்கு எடை வறட்டியில் புடமிடவேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்க அரைகுறையான பற்பமாய் இருக்கும்.

இந்த அரைகுறையான பற்பத்தைக் கல்வத்திலிட்டுப் பெரும்பீளைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு நான்குசாமம் முன்போல் அரைத்து, உலர்த்தி, கவசித்துலர்த்தி முன்போல் புடமிடவும்.

இதனையெடுத்துக் கல்வத்திலிட்டுப் புரசம்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்குசாமம் அரைத்து உலர்த்தி, முன்போல் கவசித்துலர்த்தி முன்போல் புடமிடவும். நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்கக் இயற்கையின் அருளினால் வெண்மை நிறமான பற்பமாய் இருக்கும்.

அளவு :—1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—பூண்டுத் தயிலம், மிளகுத் தயிலம், துளசிச்சாறு ஆகியவைகளாம்,

பயன்படுத்தல் :—பித்தபாண்டு, மஞ்சள் நோய், குழவிப் பெருங்கழிச்சல், பெரும்பாடு, பெருங்கழிச்சல், வெப்புப்பிணி, இரத்த காசநோய், மார்புநோய், பக்கநோய், விடாவேர்வை, எரிகுன்மம் பாண்டு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :—புளி, தயிர், கடுகு, கொள்ளு, கள், எள், மோர், காடி, புகையிலை ஆகியவைகளும், இதற்கினமானவைகளும் ஆகா.

நெய், பால், சருக்கரை, வெண்ணெய், வெங்காயம், கருணைக்கிழங்கு, துவரை, ஆகியவைகளும், இதற்கினமானவைகளும் ஆகும்,

29, காந்த பற்பம் (வேறு)

தூய்மைசெய்த காந்தம் 2 பலம் (70 கிராம்) கடப்பம் வேர்ப்பட்டைச் சாறு, தும்பை வேர்ப்பட்டைச் சாறு, வேப்பம்

பட்டைச்சாறு, செப்பு நெருஞ்சிச் சமூலச் சாறு இவை வகை 1-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி காந்தத்தைக் கல்வத்திலிட்டு கடப்பம் வேர்ப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு 4 சாம மரைத்து மேற்கண்ட பாகத்தில் சொல்லியிருக்கிறபடி புடமிட்டுக் கொள்ளவும்.

பிறகு அரைகுறையான இந்தப் பற்பத்தை தும்பை வேர்ப் பட்டைச்சாறு, வேப்பம் வேர்ப்பட்டைச்சாறு, செப்பு நெருஞ்சிச் சமூலச்சாறு ஆகிய இம்மூன்றிலும் தனித்தனியே அரைத்து முன்போல் தனித்தனி மூன்று புடம்போட்டு எடுத்துக்கொள்ள வெண்மை நிறமான பற்பமாய் இருக்கும்.

அளவு, துணைமருந்து, பயன்படுத்தல், மருத்துணவு ஆகியவைகள் மேற்கண்ட முறையில் சொன்னவைகளேயாம்.

குறிப்பு

இந்தப் பாகத்தை நாம் செய்த அனுபவப்படி இங்கெழுதி இருக்கின்றோம்.

45. காந்தச் செந்தூரம்

தூய்மைசெய்த காந்தம் 2 பலம் (70 கிராம்) சோற்றுக் கற்றாழைச் சோறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—காந்தத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சோற்றுக்கற்றாழைச் சோற்றைச் சிறுகச் சிறுகப்போட்டு ஒரு சாமம் அரைத்துப் பில்லைசெய்து ஈரமில்லாமல் உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி 5 சீலைமண் செய்து ஈரமில்லாமல் உலர்த்தவும். பிறகு இக்கவசத்தின் 2 பங்கு எடை வறட்டியில் புடமிடவும். பிறகு மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு முன் சோற்றையிட்டு முன்போல் ஒரு சாமமரைத்து பில்லை செய்து உலர்த்தி கவசித்து உலர்த்தி கவசத்தின் இரண்டரைப் பங்கு எடை வறட்டியிற் புடமிடவேண்டும். இவ்விதமே கற்றாழஞ்சோற்றை இட்டரைத்து பத்துப் புடமிடவும் வேண்டும். ஆனால் ஒவ்வொரு புடத்திற்கும் கவசத்தின் எடைக்கு அரைப்பங்கு எடை வறட்டியை உயர்த்திப் புடமிடவேண்டும். அதாவது மூன்றாவது புடத்தில் கவசத்தின் எடைக்கு மூன்று பங்கு வறட்டியிலும், நான்காவது புடத்தில் கவசத்தின் எடைக்கு மூன்றரைப் பங்கு எடை வறட்டியிலும், ஐந்தாவது புடத்தில் நாலு பங்கு எடை வறட்டியிலும், ஆறாவது புடத்தில் நாலரைப்பங்கு எடை வறட்டியிலுமாக இவ்விதமே உயர்த்திப்

பத்தாவது புடத்தில் ஆறரைப் பங்கு எடை வறட்டியில் புடமிடவேண்டும். இப்படிச் செய்வதினால் இயற்கையின் அருளினால் குங்கும போன்ற சிவப்பான செந்தூரமாகும்.

அளவு :—3 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்தும், பயன்படுத்தலும் :—வசம்புத் தூள் 1½ விராகன் எடை, (5¼ கிராம்) திப்பிலித்தூள் 1½ விராகன் எடை (5¼ கிராம்) இவ்விரண்டையும் கலந்து கால் ஆழாக்கு ஆடா தோடைச் சாற்றில் கலக்கி, இரைப்பிருமல் நோய்க்குக் கொடுத்தால் வாந்தியாகும். பிறகு மேற்படி ஆடாதோடைச் சாறு 1 விராகனெடை, (3½ கிராம்) முன் திப்பிலித்தூள் ¼ விராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து 1 விராகன் எடை (3½ கிராம்) தேனையும் கலந்து மேற்படி செந்தூரத்தை அள வுப்படி கலந்து உட்கொள்ள மேற்கண்ட இரைப்பிருமல் நோய் தீரும்.

கையாந்தகரைச்சாறு 6 விராகன் எடை, (21 கிராம்) இதில் ஒரு விராகன் எடை (3½ கிராம்) சாற்றை எடுத்து அதற் குச் சமன் தேனைச் சேர்த்துக் கலந்து மேற்கண்ட செந்தூ ரத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு அதன்மேல் முன் மிகுத்து வைத்திருக்கிற ஐந்து விராகன் எடை (17½ கிராம்) சாற்றை மேலே பருகிட வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்துவர, மஞ்சள் நோய், பாண்டு, சோகை முதலியவை தீரும்.

மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, தூது வளைப் பழத்தின் விதை, கண்டங்கத்திரிப் பழத்தின் விதை, பூனைக்காலி விதை, அக்கிராகாரம், சுட்டெரித்த வசம்பு இவை வகை 1-க்கு 1 பலம் (35 கிராம்) இவற்றை இடித்துத் துணியில் வடிகட்டிய தூளில் ஆடாதோடைச் சாற்றை வார்த் துக் குழம்புப் பதமாகக் குழைத்துப் பிறகு வெய்யிலில் உலர்த் திப் பொடித்து வைத்துக்கொள்ளவும். இந்தத் தூளுடன் 1 விராகன் எடை (3½ கிராம்) மேற்படி செந்தூரத்தை அளவுடன் கலந்து உட்கொண்டுவர, சயம், சயகாசம் முதலியவை தீரும்.

இன்னும் இதனைத் தகுந்த துணைமருந்துகளிலிட அநேக நோய்கள் தீரும். ஆனால், இது மருத்துவர்களின் புத்திநுட்பத் தையும், அனுபவத்தையும் ஒட்டினது.

46. காந்தச் செந்தூரம்

தூய்மைசெய்த காந்தம் 8 பலம் (280 கிராம்) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—காந்தத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைக்க வேண்டும். பிறகு அரைக்காமல் அப்படியே கல்வத்துடன் மூடிவைத்து விடவேண்டும். மறுநாள் எலுமிச்சம் பழச் சாற்றையே சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமம் அரைத்துக் கல்வத்தோடு வைத்துவிட வேண்டும். மூன்ரும் நாளும் மேற்படி பழச்சாற்ருல் ஒரு சாமமரைத்து மேற்படி சாற்றையே விட்டுப் பாகைப் போலக் கரைத்து ஒரு கலயத்தில் விட்டு அக்கலயத்தின் வாய்க்கு மட்டமாகப் பொருந்தும்படியான வேறு கலயத்தால் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒரு கெச அகலம், நீளம், ஆழமுள்ள பள்ளத்தில் அதுகொண்ட வறட்டி அடுக்கிப் புடமிடவேண்டும். குளிர ஆறினபின் எடுக்க இயற்கையின் அருளினுல் செந்தூரம் நன்ருய்ச் சிவந்து முருக்கம் பூப்போலிருக்கும்.

அளவு :—3 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :—ஏலரிசி, கசகசா, நற்சீரகம், மிளகு இவை எல்லாவற்றையும் சமபாகமாக இடித்துத் துணியில் வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இந்தக் கலவைத்தூள் ¼ விராகன் எடை, நெய் அல்லது வெண்ணெய் 1 விராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் கலந்துகொண்டு மேற்படி செந்தூரத்தை அளவுப்படி அனுபானித்து உட்கொள்ள வேண்டும்.

பயன்படுத்தல் :—பித்தபாண்டு, சோகை, மஞ்சள் நோய், கிராணி, மூலவாயு, சூசிகவாயு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம், நோய் பலமாயிருந்தால் சமயோசிதம்போல மருத்துணவு வைத்துக்கொள்ளவும்.

47. காந்தச் செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த காந்தம் 2 பலம், (70 கிராம்) ஆவாரம் வேர்ப்பட்டைத்தோல் (உலர்த்தப்பட்டது) தூள் 2½ பலம், (87½ கிராம்) சோற்றுக் கற்ருழைச்சோறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—காந்தத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் தூளதனைச் சேர்த்து அரைத்துக் கற்ருழைச் சோற்றைச் சிறுகச் சிறுகப் போட்டுப் பன்னிரண்டு சாமம் அரைத்துச் சிறு பில்லைகளாச் செய்து வெய்யிலில் உலர்த்தவும். அதாவது கணீர்கணீரெனச் சத்தம் கேட்கும்படியாக உலர்த்தவேண்

டும். பின் அடிகனத்த செந்தூரச் சட்டியில் பில்லைகளை ஒன்றின்மேல் ஒன்று இல்லாமலும். பில்லைகளுக்கிடையில் அதிகச் சந்தில்லாமலும் வரிசையாக அடுக்கி மேற்சட்டி வாய் பொருந்தும்படியாக மூடி ஏழு சீலைமண்செய்து ஈரமில்லாமல் வெய்யிலில் உலரவைத்துப் பன்னிரண்டு சாமம் (36 மணி) எரிக்க வேண்டும். ஒரு நாள் ஆறவிட்டு மருந்தை எடுத்துப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு, துணைமருந்து, பயன்படுத்தல், மருத்துணவு ஆகியவை முன் சொல்லப்பட்டு இருப்பவைகளாம்,

மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், கடலழிஞ்சிப்பட்டை, ஆவாரம்பட்டை இவை வகை 1–க்கு ½ பலம் (17½ கிராம்) இவற்றைச் சிதைத்து 2 ஆழாக்குத் தண்ணீரில் போட்டு முக்கால் ஆழாக்காகச் சுண்டவைத்து வடிகட்டின குடிநீருடன் மேற்படி செந்தூரத்தை அனுபானித்து உட்கொண்டு வந்தால் நீரிழிவு, மதுமேகம், நீரெரிச்சல், பிரமேகம் முதலியவைகள் தீரும். இன்னும் இதனை அநுபவசாலிகள் தங்கள் அநுபவத்துக்குத் தக்கபடி பல நோய்களிலும் உபயோகித்துக் கொள்வார்கள்.

48. லோகமாரண காந்தச் செந்தூரம்

தூய்மைசெய்த காந்தம் 1 பலம், (35 கிராம்) வெண்காரம், நவச்சாரம், வீரம், இரச கர்ப்பூரம், வெள்ளைப் பாடாணம், வெடியுப்பு, நெல்லிக்காய்க் கெந்தகம், இரசம் இவ்வெட்டுச் சரக்கும் வகை 1–க்கு 1¼ விராகன் எடை எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து மற்ற சரக்குகளையும் முறையே சேர்த்துப் பொடித்துக் கொள்ளவேண்டும், பிறகு காந்தத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சித்தப்படுத்தின மருந்தையும் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு மூன்று சாம (9 மணி) மரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி இரண்டடி சதுரக் குழியில் வறட்டியை அடுக்கிப் புடமிடவேண்டும். குளிர ஆறினபின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

அளவு :—1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வாதுமை அல்வா, வெண்ணெய் ஆகியவைகளும், சமயோசிதமான இளகங்களுமாம்,

பயன்படுத்தல் :—வாயு சம்பந்தமான பாண்டு நோய்கள், சோகை, மஞ்சள்நோய், குன்மம், செரியாமை, முறை நோய் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :—நோய்வலிமை, உடல் வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி புளி முதலியவைகளை நீக்கி உண்ண வேண்டும்.

குறிப்பு.

இம்முறையில் சொல்லியிருக்கிற வெண்காரம் முதல் இரசம் இறுதியாய் உள்ள 8 சரக்கிற்கும் அட்டலோக மாரணச்சரக்கு என்று பெயர். இச் சரக்கினால் தாம்பிரம், வெள்ளி, பொன், அயம், காந்தம், எஃகு முதலிய லோகங்களைச் செந்தூரித்துக் கொள்ளலாம். இந்த அட்டலோக மாரணச் சரக்குடன் சீனக் காரம், பூநீறு, புனுகு ஆகிய மூன்று சரக்கையும் சேர்த்த யோகத்திற்கு ஏகமூலிகை யோகமெனப் பெயர். இச் சரக்குகளையும் சேர்த்துச் செந்தூரித்தால் அதிக சிறப்பான குணத்தைத் தரும்.

அட்டலோகமாரணச் சரக்கால் லோகங்களைச் செந்தூரிக்கும் வகைகளுக்கு எடுத்துக்காட்டாக ஒரு முறையை இங்கு எழுதுகின்றோம். அது பின்வருகிற விதமாம்.

தூய்மைசெய்த தாம்பிரத் தகடு 1 பலம் (35 கிராம்), மேற்கண்ட அட்டலோகமாரணச் சரக்கு எட்டும் வகை 1-க்கு $1\frac{1}{4}$ விராகன் எடை. அதாவது செந்தூரிக்க வேண்டிய லோகத்தின் எடைக்கு அந்த எட்டுச் சரக்கின் எடையும் சமமாயிருக்க வேண்டியது. தகட்டை அதிகக் கனமில்லாமல் சற்று இலேசாக அடித்துக்கொள்ள வேண்டும். இந்த எட்டுச் சரக்குகளையுங் கல்வத்திலிட்டுப் பாகப்படி கலந்தரைத்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 2 சாமமரைத்து நான்கு பங்காகப் பகிர்ந்து ஒரு பங்கை முன் தகட்டில் இருபுறமும் பூசி ஒட்டி விட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்தி அரை கெசச் சதுரப் புடமிடவும். பிறகு எடுத்துத் தகட்டைத் தட்டினால் உதிரி உதிரும். அதை எடுத்துத் தனியே வைத்துக் கொள்ளவும். மறுபடியும் அந்தத் தகட்டிற்கு முன்னெடுத்திருக்கும் மூன்று பாகத்தில் ஒரு பங்கைப் பூசி முன்போற் புடமிட்டு உதிரி எடுத்துக்கொள்ளவும். இவ்விதமே மற்ற இரண்டு பங்கையும் புடமிட்டு உதிரி எடுத்துக்கொள்ளவும். அந்த உதிரியெடை மொத்தத்திற்குச் சமன் தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், இவ்விரண்டின் மொத்த எடைக்குக் கால்பங்கு வீரம் சேர்த்துப் பழச்சாற்றை விட்டு ஒரு சாமம்

அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து அரைக் கெசத்துக்குக் குறை யாத புடமிடவும். மருந்தானது நன்றாகச் சிவக்கிற வரையில் புடமிட வேண்டும். இதனுடன் சீனக்காரம், பூநீறு, புனுகு ஆகியவைகளையுஞ் சேர்த்து அரைத்துப் புடமிட்டால் செந்தூர மானது அதிகக் காரமாகவும், அதிகக் குணமுள்ளதாகவும் இருக்கும். இவ்விதமே மற்ற உலோகங்களையும் செந்தூரித்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு.

இங்குச் சில பொருள்களைப் பற்றி விரிவாக எழுதவேண்டி இருக்கிறது. ஆனால் இந் நூலானது சுருக்கமானபடியால் அப் பொருள்களைப்பற்றித் தனியே எழுதப்படும். ஆயினும், இங்கு குறிப்பாக எழுதுவாம். அது யாதெனில், "பற்பம், செந்தூரம் ஆகியவைகள் பச்சிலை சம்பந்தமாகச் செய்யப்படுவது உயர் வானதென்றும், காரசார சம்பந்தச் சரக்குகளினால் செய்யப் படுவது அதிக மேன்மையானதல்ல என்றும் வீண்பிரமை பிடித்த சிலருண்டு" அவர்கள் அப்படிப் பிரமை கொள்வதற் குக் காரணம் மேற்கண்ட இருவகையாகவுஞ் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களைத் தாங்கள் சுயமாக அனுபவிக்காததே யாம். சொல்வார் பேச்சைக்கேட்டுச் சொல்பவர்களே தவிர அனுபவசித்தமாக இருவகையாகச் செய்யப்பட்ட பற்ப செந் தூரங்களை உபயோகஞ் செய்து சோதித்துச் சொல்பவர்க ளல்ல. அவ்விதம் சோதித்து நிச்சயித்திருந்தால் அவர்கள் ஒருபோதும் அவ்விதஞ் சொல்லவும் மாட்டார்கள், அப்படிச் சொல்பவர்களின் வார்த்தையை நம்பவும் மாட்டார்கள். மூலி கைகளில் கார சாரங்களில்லாமல் வேறென்ன இருக்கிறது? மூலிகைகளில் நச்சுச் சத்தும் இருக்கிறது. ஒவ்வொரு மூலிகை யிலும் ஒவவொரு நச்சுச்சத்தும் ஒவ்வொருவித நஞ்சுமில்லா மல் போகவில்லை. முடிவாய் யோசிக்குங்கால் இரண்டும் ஒன் றாகவே முடியும். ஆனால் சிற்சில செய்முறைகளில் ஒன்றை யொன்று மிகவுங் கூடும். இதன் செய்முறைகளெல்லாம் நாம் தனியே எழுதும் நூலில் விளக்கமாகத் தெரியும்.

49. காந்தாதிச் சூரணம்.

தூய்மை செய்த காந்தம் 2½ விராகனெடை (8¾ கிராம்), மேற்றோல் சீவின சுக்குத்தூள் 6 விராகனெடை (21 கிராம்), பொரித்த பெருங்காயத்தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள், வறுத்த கருஞ்சீரகத்தூள், மிளகுத்தூள், தூய்மைசெய்த சாதி லிங்கம் வகைக்கு 1 விராகனெடை (3½ கிராம்).

செய்முறை :— காந்தத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பிறகு லிங்கத்தையும் சேர்த்தரைத்து, பிறகு மற்ற தூள்களையுஞ் சேர்த்து ஒருசாமமரைத்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $\frac{1}{4}$ முதல் $\frac{3}{4}$ வராகனெடை.

துணைமருந்து :— வெந்நீர், நெய், தேன்.

தீரும் நோய்கள்:—சூதகவாயு, கருப்பைவாயு, பெருவயிறு, பிலீகை[1], வறட்சி, வெப்பு, நீர்க்கோவை, பித்தகாசம், எண் வகைக் குன்மம் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

50. காந்தாதிக் குளிகை.

தூய்மைசெய்த காந்தம், தூய்மைசெய்த தாளகம், தூய்மை செய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், மேற்றேல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித்தூள், மஞ்சள் கடுக்காய்த்தோல் தூள். தான்றிக்காய்த்தோல் தூள், நெல்லி வற்றல் தூள், இந்துப்பு, தூய்மை செய்த நாபி, பொரித்த வெண்காரம், பொரித்த சீனக்காரம், தூய்மை செய்த நேர் வாளப் பருப்பு இவை வகை 1-க்கு 4 வராகனெடை. (14 கிராம்). அவுரிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் கெந்தகத்தையும், இரசத்தையும் சேர்த்தரைத்து நன்ருகக் கறுத்தவுடன் தனியே எடுத்துக் கொள்ளவும். தாளகத்தைத் தனியே அரைத்துப் பொடித்துக் கொள்ளவும் காந்தம், இந்துப்பு ஆகியவைகளையும் தனித் தனியே பொடித்து எடுத்துக்கொள்ளவும். சீனக்காரம், வெண்காரம் ஆகிய இரண்டையும் சேர்த்து அரைத்துப் பொடித்துக் கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து நன்ருகக் கலந்து அவுரியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 2 சாமமரைத்து குன்றிமணியெடை அளவுள்ள மாத்தி ரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ மாத்திரை.

துணைமருந்து :— வெண்ணெய், வெல்லம், வில்வாதி இளகம், பறங்கிப்பட்டை இளகம் முதலியவைகளாம். காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம். பத்துநாள் உபயோகித்து, நாலைந்துநாள் நிறுத்தி, மறுபடியும் பத்துநாள்

1. இடைப்பாட்டிரல் நோய். 2. சுரம்.

உபயோகிப்பது உத்தமம். நோய் பலத்திற்குத் தகுந்தபடி ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

தீரும் நோய்கள் :— சூலை, குன்மம், குடல்வாதம் முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :— நோய் வலிமைக்குத் தகுந்தபடியும், உடல் தன்மைக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

51. காந்த ரசபில்லை.

அடியில் சொல்லுகிறபடி தூய்மை செய்த காந்தம் (இது குறைந்த அளவு இரண்டு ஊசியாகிலும் பிடிக்கும் சத்துள்ளதாயிருக்கவேண்டியது. (ஏழு ஊசி பிடிக்கும் காந்தம் அகப்பட்டால் மிகவும் மேன்மையாக இருக்கும்.) தூய்மை செய்த வாலை ரசம், தூய்மை செய்த உலாந்தாலிங்கம், அரிசித்திப்பிலித் தூள், மேற்றோலைச் சீவியிடித்து துணியில் வடிகட்டிய சுக்குத் தூள், மஞ்சிட்டி, (இதனைப் பொடித்துப் பார்த்தால் உள்ளும் புறமும் சிவப்பாய் இருக்கவேண்டும்; வெளுத்திருப்பதும், மற்றவகை வண்ணமுள்ளதாய் இருப்பதும் உதவாது.) கார்போகரிசித்தூள், வால்மிளகுத்தூள் இவை வகை 1-க்கு 2 வராகனெடை (7 கிராம்). கீழ்க்கண்டபடி தூய்மைசெய்யப்பட்ட வெள்ளைப் பாடாணம், சூடன் இவை வகை 1-க்கு 1 விராகனெடை (3½ கிராம்).

காந்தத் தூய்மை:— காந்தத்தைக் கரிநெருப்பில் காய்ச்சிக் கொள்ளுக் கியாழத்தில் தோய்க்கவேண்டும். இந்தக் கியாழமானது காந்தம் நன்றாக ஆழ்ந்து கிடக்கும்படியான அளவு இருக்க வேண்டியது. நன்றாய் ஆறினபின் எடுத்து முன்போல் கரி நெருப்பில் காய்ச்சி முன்போல் தோய்க்கவேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி 5 தடவை காய்ச்சித் தோய்க்கவும். ஒவ்வொரு தடவையும் கொள்ளுக் கியாழத்தைப் புதிது புதிதாக விட்டுக்கொள்ள வேண்டும். பிறகு மெல்லிய துணியால் துடைத்து வெய்யிலில்வைத்து ஈரமில்லாமலுலர்த்தி மேற்கண்ட நிறை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

வெள்ளைப் பாடாணத் தூய்மை:— தாளித்த கற்சுண்ணாம்பு அல்லது கிளிஞ்சிற் சுண்ணாம்பு ½ படி. இதனை ஒரு மண் பாண்டத்திலிட்டு ஒருபடி தண்ணீரைவிட்டு நன்றாகக் கலக்கி மூன்று மணிநேரம் வைத்துப் பிறகு மேற்றெளிவை இறுத்துக்கொள்ள வேண்டும். இதனை ஒரு சிறு மண்பானையில் விட்டு 5 விராகன் எடை (17½ கிராம்) பாடாணத்தைச் சிறு துண்டுகளாகச்

செய்து மெல்லிய துணியில் முடிந்து கிழிகட்டி மேற்படி மண் பாத்திரத்தில் தொங்கவிட வேண்டும். இந்த முடிப் பானது பானையின் அடியில் படாமல் சுமார் 1 அங்குல உயரத் தில் அந்தத் தண்ணீருக்குள் ஆழ்ந்திருக்க வேண்டும். இதை அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்துச் சுண்ணும்பு நீரெல்லாஞ் சுண்டினபின் கீழே இறக்கி வைக்கவும். சூடாறினபின் பாடா ணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு ஒரு பருமனுன கொம்புப்பாகற் பழத்தைக் கீறி அதற்குள் முன் பாடாணத் துண்டுகளைச் செலுத்தி நூலால் சுற்றிச் சந்தில்லாமல் பொருந் தப்பார்த்து இரண்டு மண்சீலை செய்துகொள்ளவும். அரைப் படி உமியை வாய்குறுகின சிறு மண்சட்டியில் போட்டு அதன் நடுவில் முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்து நெருப் பிட்டுப் புடமிட வேண்டியது. குளிர ஆறினபின் எடுத்து முன்போல் கொம்புப்பாகற் பழத்திற்குள் செலுத்தி கவசித்து முன்போல் புடமிட்டுக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்தெடுக்க பாடாணம் தூய்மை யாகிவிடும். ஈரமில்லாமல் உலர்த்தி மேற்கண்ட எடை நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

செய்முறை :— மேற்கண்ட பத்து வகைகளுள் இரசம், லிங்கம், பாடாணம் ஆகிய மூன்றையும் முன்னர் அரைத்து இரசம் மடிந்தபின் காந்தத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு மற்ற தூள்களையும் சேர்த்து அரைக்கவேண்டும். சுமார் மூன்றுமணி நேரம் அரைத்துப் பிறகு குளிர்ந்த நீரைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமம் அரைக்கவேண்டும். இதனைக் கைவிடாமலும் தொடர்ச்சியாகவும் அரைக்கலாம். விட்டு விட்டும் அரைக்க லாம். எவ்விதமும் நான்குசாமம் அரைத்துத் தீரவேண்டியது முக்கியம். பிறகு ஒவ்வொரு விராகனெடையுள்ள வில்லைகளா கச்செய்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு மெல்லிய துணியில் இந்த வில்லைகளைப் பரப்பி மேலும் மெல்லிய துணியால் மூடி 45 நாள் தானியப்புடம் வைக்கவேண்டும். அதாவது சுமார் 20 படி நெல்லில் 10 படி நெல்லை ஒரு பாண் டத்தில் போட்டு அதன் நடுவில் முன் சித்தப்படுத்தியிருக்கிற வில்லைகளை வைத்து அதன்மேல் மற்றப் பத்துப்படி நெல்லையும் போட்டுப் பானை வாயை ஓட்டால் மூடி ஈரமில்லாத நிலத்தில் குழிதோண்டி அந்தப் பானையை புதைத்துவிட வேண்டும். 45 நாள் சென்றபின் விழிப்பாக எடுத்து விழிப்பாக மேலுள்ள நெல்லை எடுத்துவிட்டுப் பத்திரமாக மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். வில்லைகளைப் பொடிக்காமல் அப்படியே குப்பியில் போட்டுவைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு:—1 முதல் 2 உளுந்து நிறை. இது ஒரு சிறந்த மருந்தாயினும் இதின் அளவை உடலின் தன்மைக்குத் தகுந்ததுபோல் ஏற்படுத்துவதற்குக் கொஞ்சம் பழக்கமும் வேண்டியதாய் இருக்கிறது; இதில் கொஞ்சம் அனுபவப்பட்டு இதனை உபயோகிக்கும் விதமும் தெரிந்துவிட்டால் அறுவை மருத்துவத்தினுலேயே தீரவேண்டுமென்னும் அநேக நோய்கள் இதனுல் தீர்ந்து போகும். இந்த மருந்தினது பெருமைக்கு எதிராக இதற்கு ஏற்பட்டிருக்கும் பத்தியமானது கடினமாய் இருக்கிறது. அதுவும் இம் மருந்திற்கு ஒருவிதமான குறை. ஆகையால் இதன் அளவையும் பத்தியபாகத்தையும் இத்தனை நாள் உபயோகிக்க வேண்டியதென்ற நாட்கணக்கையும் மருத்துவர்கள் தம் மருந்தறிவு நுட்பத்தினுலும், அனுபோகத்தினுலும் நிச்சயித்துக்கொண்டால் பெருங்கீர்த்திக்கு ஏதுவாகும்.

துணைமருந்து:—திறமான பனைவெல்லம் 1 விராகனெடை (3½ கிராம்). இதனை உள்ளங்கையில் வைத்துப் பெருவிரலால் தேய்த்தாலும் அல்லது சந்தனக் கல்லில் வைத்து நசுக்கி அரைத்தாலும் நைப்பாய் மெழுகுபோலாகிவிடும். அதனை உருண்டையாகச் செய்து மேற்கண்ட மருந்தைப் பொடித்து அளவுப்படி அதற்குள் வைத்துருட்டி வாயில் போட்டு விழுங்கிவிட வேண்டும். அதன்மேல் 1 விராகன் எடை (3½ கிராம்) பனைவெல்லத்தையும் போட்டு மென்று சாப்பிட வேண்டும். இவ்விதம் உடல்வளமை, நோய்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏழு, பதினான்கு, இருபத்தொரு நாள் உபயோகிக்க வேண்டும். நோயாளி வலிவற்றவராய் இருந்தால் ஏழுநாள் கொடுத்து இடையில் ஒருவாரம் அல்லது பத்துநாள் விட்டு மறுபடியும் கொடுக்கவேண்டும். இதுவும் மருத்துவர்களின் புத்தி நுட்பத்தையும், பழக்கத்தையும் சார்ந்தது.

தீரும் நோய்கள்:—லிங்கப்புற்று, அல்குல்புற்று, கன்னப்புற்று, கபாலக்கிரந்தி, கள்ளிப்பூக்கிரந்தி, நுணுக்காய்க் கிரந்தி முதலிய பதினெட்டுவகைக் கிரந்திகளும் தீரும். மேகசூலை, வெடிசூலை, கரட்டுச்சூலை, முரட்டுச்சூலை முதலிய பதினெட்டு வகைச் சூலைகளும் தீரும். நரித்தலை வாதம், முடக்குவாதம், கரட்டுவாதம் முதலிய வாத நோய்களும் தீரும்.

மருத்துணவு:—உப்பில்லாமல் கடும் பத்தியமாக இருக்க வேண்டியது. இதனை உபயோகிக்கும்போது சிலருக்கு கக்கல்[1] காணும். அதற்காக அஞ்சிப் பயந்து நடுங்கிவிடாமல் தைரியமாய்க் கொடுத்துவர வேண்டும். சிலருக்குக் கொஞ்சமும்

1. வாந்தி.

கக்கல் காணவே காணுது. மருந்தைவிட்ட மறுநாள் ஓமத்தை அரைத்துத் தேய்த்து வெந்நீரில் தலைமுழுக்குச் செய்யவேண்டும். பிறகு உப்பை வெடியடங்க வறுத்துக் கூட்டிக்கொள்ள வேண்டும். பச்சைப்பயறு, துவரம்பருப்பு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, மிளகு, மிளகாய், மஞ்சள் ஆகிய வைகளை முன் மருந்து சாப்பிட்ட மறு ஏழுநாள் (அதாவது) ஏழுநாள் சாப்பிட்டால் மறு ஏழுநாள் வரையிலும், பதினன்கு நாள் சாப்பிட்டால் மறு பதினன்குநாள் வரையிலும் சேர்த்துக் கொண்டு மறு பத்தியம் இருக்கவேண்டியது. மேற்கண்டவை களைத் தவிர மற்றவைகளும் தாளிதமும் ஆகாது. மறுபத்திய மான பின்பு புளியைச் சுட்டுச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மருந்து சாப்பிட்டு விட்டவுடனே உடலில் வலி, கடுப்பு இல்லாதிருந்தால் அடுத்தநாள் ஓமம் தேய்த்து முழுகினபின் விளக்கெண்ணெய் தேய்த்துத்தலைமுழுக்குச் செய்யவேண்டும். இவ்விதம் மறுபத்தியத்திற்குள் விளக்கெண்ணெயில் இரண்டு மூன்று தலைமுழுக்குச் செய்யவும். உடலில் வலி கடுப்பிருந் தால் மறுபத்தியமானபின் விளக்கெண்ணெய் தலைமுழுக்குச் செய்ய வேண்டியது. மருந்தை விட்டவுடன் உடலில் வலி கடுப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஓமத் தலைமுழுக்குச் செய்யவேண்டியதவசியம். விளக்கெண்ணெய் தலைமுழுக்குக்கு மாத்திரந்தான் இந்த நிபந்தனை. பிறகு வழக்கம்போல் நல் லெண்ணெய் தேய்த்து தலைமுழுக்குச் செய்துவர வேண்டியது. இந்த மருந்தை உபயோகித்தபின் கை, காலில் திமிர்காணுமாயி னும், மேற்கண்டபடி ஏதேனும் தீயகுணம் காணுமாயினும் அவுரிவேர் 2 விராகனெடை (7 கிராம்), மிளகு 2 விராக னெடை, (7 கிராம்) இவ்விரண்டையும் சிதைத்து ஒரு ஆழாக்கு தண்ணீரிலிட்டுக் காய்ச்சி அரை ஆழாக்காகச் சுண்டவைத்து வடிகட்டித் திப்பிநீக்கிக் குடிக்கச் செய்யவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் ஐந்துநாள், ஏழுநாள் சமயோசி தம்போல் செய்யவும். எல்லாவிதத் தீயகுணங்களும் தீரும்.

குறிப்பு

இது மிகவும் சிறந்த முறைகளிலொன்று. இதில் உள்ள சரக்குகளில் வெள்ளைப் பாடாணமொன்றே கொடிய சரக்கு. அதுவும் திறமான தூய்மை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் வீசம் முதல் அரைக்கால் உளுந்து நிறை, பாடாணத்தை உள் ளுந்து உபயோகிக்கலாம். மேலும் மேற்படி மருந்தில் ஒரு

உளுந்து நிறையில் சுமார் அரைக்கால் உளுந்துதான் பாடாண மிருக்கிறது. ஆகையால் இது அளவுக்கு அதிகப்படவில்லை என்பது நிச்சயம். ஆகையால், இதனால் இதற்கு இவ்வளவு [1]வீறு உண்டாகி இருக்கிறதென்பதாகக் காணப்படவில்லை. ஆனால், மேற்கண்ட பத்துச் சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்த வுடனே ஆச்சரியப்படும்படியாக நூதனமான வேகமும் வீறும் உண்டாகிவிடுகிறது. இதனை ஏற்படுத்தின பெரியோர்களின் அறிவே வியக்கத்தக்கது. இதன் பெருமையை இதனை உப யோகித்து அனுபவசித்தி பெற்றவர்கள்தாம் நன்கு உணர் வார்கள். மற்றவர்க்கு அவ்வளவாகத் தெரியாது "நல்ல மரத்திற் புல்லுருவி பாய்ந்ததுபோல" இதன் சிறப்பான குணத்துடன் கடினமான பத்தியமுங்கூட ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. ஆயினும் நோயால் வாழ்நாள் முழுவதும் படவேண்டிய துன்பத்தையும் இதன் பத்தியத்தால் உண்டா கும் துன்பத்தையும் ஒத்துப்பார்க்கின் நோயின் தொல்லையே அளவில்லாததென்று யாவரும் உணர்வார்கள். இதில் கோடிக்கும் காணிக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ அவ் வளவு வேறுபாடு இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. நமது பழக்கத்தில் லிங்கப்புற்று அல்லது [2]அல்குல்புற்று (Cancer) என்னும் கொடிய விரணத்தால் அருமையான அநேக சகோ தரிகள் துன்பப்படுகின்றதாகத் தெரியவருகிறது. ஆனால், மகளிர் சம்பந்த நோயாகையால் ஆங்கிலேய வைத்திய வல்லு நர்களால் ஆய்வு செய்விக்கப்படுகிறது. அவர்கள் ஆராய்ந்து இதனை அறுவை மருத்துவம் செய்து நிவர்த்திக்க வேண்டிய தென்று அல்லது இது தீராதென்று சொல்லிவிடுகிறார்கள். இதைக் கேட்டபொழுதே அறுவை மருத்துவம் செய்துகொள்வ தற்குப் பயந்து மனமில்லாமல் ஏங்கி விடுகின்றார்கள். தீராது என்னும் சொல்லைக் கேட்டவுடனே அரைவாசிப் பிராணனை இழந்து விடுகின்றார்கள். இவ்விருவகையாலும் தங்கள் ஆயுள் முழுவதும் தாங்கக்கூடாத துன்பத்தை அனுபவித்து முடிவில் அதற்கே இரையாகி விடுகின்றார்கள். ஆனால், இவ்வகை நோய்க்குட்பட்டவர்கள் நமது மருத்துவத்தினால், வாலறிவன் அருளாலும், பெரியோர்களின் வாழ்த்துதலினாலும் முழுவதும் குணப்பட்டுச் சந்ததி முதலியவைகளுமுண்டாகி நலமே வாழ்ந்து வருகின்றார்கள். இந்த பெரும் பீடையாகிய நோயி னின்றும் நமது அருமைச் சகோதரிகளை மலர்மிசையான் காப்பாற்றிக் காத்தருள வேண்டும்.

---

1. வேகம். 2. யோனிப்புற்று.

52. காந்த மெழுகு.

தூய்மைசெய்த காந்தம், தூய்மைசெய்த இரசகர்ப்பூரம், தூய்மைசெய்த இலிங்கம், மேற்றேல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசிதிப்பிலித்தூள், வகை 1-க்கு 2½ விராகன் எடை (8¾ கிராம்) தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன் மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு நன்றுகப் பொடித்தரைத்துப் பிறகு மற்ற மூன்றுவகைத் தூள் களையும் சேர்த்து அரைமணி நேரமரைத்துப் பிறகு கெட்டித் தேனைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமத்திற்குக் குறையாமல் அரைக்கவேண்டும். எவ்வளவுநேரம் நாம் அதிகமாய் அரைக் கின்றேமோ அவ்வளவுக் கவ்வளவு சிறப்பான குணமுண்டு. இதை மெழுகு பதமாக பீங்கான் அல்லது கொம்புச்சிமிழில் எடுத்துப் பாதுகாப்புப் படுத்தவேண்டும்.

அளவு :— 3 முதல் 6 குன்றிமணி எடை. மூன்று குன்றி மணி எடை மெழுகில் அரைக் குன்றிமணி எடை அல்லது ஒரு கிரேய்ன் இரசகர்ப்பூரமிருக்கிறது.

துணைமருந்து :— சுக்குக் குடிநீர், வறுத்த இலவங்கக் குடிநீர், கசகசா சர்பத்து ஆகியவைகளும் இன்னுஞ் சமயோ சிதமான துணை மருந்துகளுமாகும்.

தீரும் நோய்கள் :— குன்மம், பெருங்கழிச்சல்கள், தீமந்தம், இருமல் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

53. அயக்காந்தப் பற்பம்.

தூய்மைசெய்த அய அரப்பொடி, தூய்மைசெய்த காந்தம் இவையிரண்டும் வகையொன்றிற்கு 1 பலம் (35 கிராம்), வாழைக்கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒருமணி நேரம் அரைத்து வாழைக்கிழங்குச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு நான்குசாமம் அரைக்கவேண்டும். பிறகு ஒரே வில்லையாகச் செய்து வெய்யிலில் வைத்து நன்றுயுலர்த்தி ஒரு ஓட்டில் வைத்து மேலோடு மூடாமல் சர உலையில் வைத்து மருந்தின் கீழும்மேலும் கரியிட்டு ஊத வேண்டும். வில்லை நன்றுய்ச் சிவந்தவுடன் எடுத்துக் கரி முதலியவைகளெல்லாம் நீக்கி மேற்படி வாழைக்கிழங்குச் சாற்றில் விட்டுவிட வேண்டும். அந்தச் சாறுனது வில்லை முழுகி ஆழ்ந்திருக்கும்படியாக இருக்கவேண்டியது. பிறகு

ஆறினபின் வில்லையைக் கல்வத்திலிட்டு முன் சாற்றையே சிறுகச் சிறுகவிட்டு 2 சாமமரைத்துப் வில்லைசெய்து முன்போல் உலர்த்தி, சர உலையில் வைத்தூதி வாழைக்கிழங்குச் சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மேற்படி சாற்றில் இரண்டிரண்டு சாமமரைத்து சர உலையில் வைத்தூதி எடுக்கவேண்டும். இந்த வில்லையானது வெளுக்க ஆரம்பித்தால், ஒவ்வொரு சாம மரைத்தால் போதுமானது. வெளுக்காத வரையில் இரண்டிரண்டுசாமமே அரைத்து வரவேண்டும். இது செய்பாகத்தில் சேதமாகுமாகையால் செய்யும் போது அதிக விழிப்புடன் செய்ய வேண்டியது. மேற்கண்டபடி 21 தடவையும் சர உலையில் ஊதி எடுத்தால் முல்லைப்பூ நிறம் போன்ற சுண்ணம் அல்லது பற்பமாகும். இது சுண்ணம் அல்லது பற்பமாவது நெருப்பின் வேறுபாட்டாலும், அரைப்பின் வேறுபாட்டாலும் நேரிடுகிறது. இதில் கொஞ்சமெடுத்து அரைத்த மஞ்சளுடன் கலந்துகொண்டால் அது சிவப்பு நிறமாகும். அப்படிச் சிவந்தால் அது சுண்ணமானதென்றும், அப்படிச் சிவக்காவிட்டால் பற்பமென்றுந் தெரிந்து கொள்ள வேண்டியது.

அளவு :— 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :— மேற்றேல் சீவின சுக்குத் தூள், மிளகுத் தூள், அரிசித்திப்பிலித் தூள் இவை வகை 1-க்கு 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த தேன் 3 பலம் (105 கிராம்). தேனைக் காய்ச்சி முன் மூன்றுவகைத் தூள்களையும் ஒன்ருய்க் கலந்து அதில் கொட்டிக் கிளறி இளகம்போல் செய்து கொள்ளவும். இந்த இளகம் விராகனெடை ஒன்றுடன் ($3\frac{1}{2}$ கிராம்) மேற்படி சுண்ணம் அல்லது பற்பத்தை சேர்த்து உட்கொள்ளவும். வேறு துணைமருந்துகளிலும் சமயோசிதம்போல் சேர்த்து பயன்படுத்தலாம். இவையெல்லாம் மருத்துவர்களின் அறிவு நுட்பத்தையும் கல்வித் திறத்தையுஞ் சேர்ந்தது. அறிவாளிகளுக்குக் குறிப்பொன்றே போதும். அவர்களுக்கு அதிகமாக வற்புறுத்திச் சொல்வது அவசியமில்லை.

தீரும் நோய்கள் :— இதனை மேற்கண்ட துணைமருந்தில் அல்லது சமயோசிதமான துணைமருந்துடன் ஒரு மண்டலம் உட்கொண்டால் துரும்புபோல் மெலிந்த உடல் தூண் போல் பெருக்கும். உடல்வளம், உடல் வலிமை, உடல் அழுத்தம் ஆகியவைகள் உண்டாகும். விந்துவானது நுங்கைப்போல் இறுகிக்கட்டும். இருகண்களிலும் செவ்வரியுண்டாகும். குருதியிலுள்ள மாசுகளை நீக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்துகிற சக்தியிருக்கிறபடியால் எல்லா நோய்

களிலும் பயன்படுத்தலாம். மருத்துவர்கள் அனுபவத்தில் இதன் குணத்தைத் தெரிந்து நிச்சயித்துக் கொள்ள வேண்டியது.

மருத்துணவு :— இதனை உபயோகிக்கும்போது பசியுணர்வு அதிகப்படும்; ஆகையால் செரித்தல் சத்திக்குத் தகுந்தபடி பசுவின்பால், பால்பாயசம், பால்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், மிட்டாய் வகைகள், வாதுமைப் பருப்பு அல்வா, கோதுமைச்சத்து அல்வா ஆகியவைகளையும், நெய், வெண்ணெய், பாலேடு, சத்துள்ள கறிவகைகளையும், அதிகமாகக் கையாண்டு வரவேண்டியது. அசைவ உணவு உண்போர் ஆட்டிறைச்சி, பட்சிகளினிறைச்சி முதலியவைகளையும் புலவுச் சாதம், கிச்சிடிச்சாதம் முதலியவைகளையும் பயன்படுத்தி வரலாம்.

குறிப்பு.

இது ஒரு கற்பத்துக்குச் சமமானது. இதனைக் கைபாகமாகச் செய்து முடித்துக் கொள்வதுதான் கொஞ்சம் கடினம். ஆனால், அறிவாளிகள் கைபாகமாகவும், சமயோசிதமாகவும் செய்து முடிப்பார்களென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. முறையோ மிகவும் சுலபமானதாயினும் மிகவும் அருமையானது. ஆகையால், பழக்கப்பட்டவர்களுக்கு இதன் முறையைப் பார்த்தவுடனே நன்றாய் விளங்கிப் போகுமாகையால், இதைப் பற்றி சிறப்பித்து நாமிங்கு எழுத வேண்டியதில்லை. இதற்குக் காந்தம் எவ்வளவு திறமாய்க் கிடைக்குமோ அவ்வளவு சிறப்பான குணமுள்ளதாக விளங்கும். காந்தமானது திறமானதாக இல்லாவிட்டால் பற்பமானது சற்று சிவந்த வண்ணமாகக் காணும். எந்த நிறமுடையதாயினும் குணத்தில் எல்லாம் சமமாகவே இருக்கும்.

54. அயக்காந்தப் பற்பம் (வேறு).

தூய்மை செய்த அய அரப்பொடி 8 பலம் (280 கிராம்) முதல் 10 பலம் (350 கிராம்) வரை, தூய்மை செய்த காந்தம் 6 பலம், (210 கிராம்) தூய்மை செய்த துருசு, தூய்மை செய்த துத்தம், தூய்மை செய்த வெண்காரம், தூய்மைசெய்த இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மை செய்த லிங்கம் இவை வகை 1-க்கு 3 விராகனெடை (10½ கிராம்), மேற்றோல் சீவின சுக்குத் தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித் தூள் இவை வகை 1-க்கு 2 விராகனெடை (7 கிராம்), கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் இரசத்தையுங் கெந்தகத்தையும் தொந்தித்து நன்ருய்க் கறுக்கிறவரையில் அரைத்துப் பிறகு மற்ற நான்கு சரக்கையுஞ் சேர்த்தரைத்து அதன்பிறகு மூன்று வகைத் தூள்களையும் சேர்த்து அரைத்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். காந்தத்தைத் தனியே பொடித்து அரப் பொடியையும் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து முன் சித்தப் படுத்தினவைகளையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்துப் பிறகு கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்கவேண்டியது. நான்கு சாமம் அரைப்பேறின பின் உருக்கூசியைப் பிடித்தால் ஊசியில் மருந்து பிடித்துக் கொள்ளும். அதுதான் பதம். அவ்வாறுப் பிடிக்காவிட்டால் முன்சாற்றையே விட்டு இன்னுமரைக்க வேண்டியது. இவ் விதம் சோதித்துக் கொண்டே அரைத்து உருக்கூசியைப் பிடித்துப் பார்த்துப் பிடிக்குந் தருணத்தில் வெய்யிலில் வைத்து உலர்த்தி மூசையிலிட்டுச் சில்லிட்டு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 25 பங்கு எடை வறட் டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க வெண்மையான பற்பமாய் இருக்கும். மூசையின் கனத்திற்குத் தகுந்தபடி நெருப்பு கொஞ்சம் அதிகமாகச் செல்வதுமுண்டு. கொஞ்சம் குறை வாகச் செல்லுவதுமுண்டு. இது பழக்கத்தில் தனக்குத்தானே தெரிந்துபோம். இரண்டு மூன்று புடம் போடுவதினுல் குணம் கெட்டுப்போகாது.

அளவு :— 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய், சமயோசிதமான இளகங் களுமாகும்.

தீரும் நோய்கள் :— வாதசூலை, குன்மசூலை, கடுப்பு, இளைப்பு எல்லாவித வயிற்றுநோய்கள், ஊதல்[1], எண்வகைப் பாண்டு, மஞ்சள்நோய், சோகை முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு

இதனை இலகு புடமாகவே இடவேண்டும். தீ அதிகரித் தால் மருந்தின் குணம் கெட்டுப்போகும். இதில் களிம்பிருந்தால் கையாந்தகரைச் சாற்றினுல் முன்போலரைத்து இரண்டொரு புடமிட்டுக் கொண்டால் களிம்பற்றுத் தூய்மையாகிவிடும்.

55. சுவர்ணலோக காந்தச்செந்தூரம்

கீழ்க்கண்டபடி தூய்மைசெய்த அயப்பொடி, கீழ்க்கண்ட படி தூய்மை செய்த காந்தம், கீழ்க்கண்டபடி தூய்மைசெய்த

1. வீக்கம்.

கெந்தகம், கீழ்க்கண்டபடி தூய்மைசெய்த இரசம் வகை 1-க்கு 2 பலம் (70 கிராம்), சுவர்ண அரப்பொடி சக்தியானுசாரம். கற்ருழைவேரை இடித்துப் பிழிந்த சாறு செல்லத்தக்க அளவு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு செல்லத் தக்க அளவு, புளிப்பு மாதுளம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

அயப்பொடித் தூய்மை :— அயப்பொடியைப் பழச்சாற்றில் ஊறவைக்க வேண்டும். பொடியின்மேல் பழச்சாருனது ஒரு அங்குலம் இருக்க வேண்டும். மறுநாள் கல்வத்திலிட்டரைத்து தண்ணீரை விட்டுக் கழுவி எடுத்து, மறுபடியும் முன்போல் முன்சாற்றில் ஊறவைக்க வேண்டும். அடுத்தநாள் அதையும் அரைத்துக் கழுவி மூன்ருந்தடவையும் முன்போல் ஊறவைத்துக் கழுவியெடுத்து நிழலில் ஈரமில்லாமல் உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு அயப்பொடியின் எடைக்கு இரண்டுபங்கு நல்லெண்ணெயில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் அந்த எண்ணெய்யை இறுத்து நீக்கி அந்த அளவே வேறு புதிய எண்ணெய்ச் சட்டியில் விட்டு மேற்படி பொடியைப்போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து எண்ணெயெல்லாஞ் சுண்டி எண்ணெய்ப்பசை போகும்படியாக வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் பாவனை செய்யப்பட்ட அயப்பொடியில் மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இதற்காக நான்கு (140 கிராம்) அல்லது ஐந்துபலம் (175 கிராம்) அரப்பொடியை மேற்கண்டபடி பாவனைசெய்தால் முன்கண்ட எடை தேறும்.

காந்தத் தூய்மை :— ஏழு ஊசிபிடிக்கிற காந்தம் அகப்பட்டால் உத்தமம். அப்படி அகப்படாவிட்டால் குறைந்த அளவு மூன்று ஊசியேனும் பிடிக்கும் சக்தியுள்ள காந்தமாயிருக்க வேண்டும். இந்தக் காந்தத்தைக் கரிநெருப்பில் காய்ச்சி நன்ருய்ச் சூடுகண்ட பின்பு பசுவின் கோமயத்தில் தோய்க்க வேண்டும். [1]கோமயமானது துண்டுகள் நன்ருய் ஆழ்ந்துகிடக்கும்படியாக இருக்க வேண்டியது. அந்தக் கோமயத்தையிறுத்து நீக்கிவிட்டு, முன்போல் காந்தத்தை நெருப்பில் காய்ச்சி வேறு புதிதாய்விட்ட கோமயத்தில் முன்போல் தோய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிக் காய்ச்சி ஏழு தடவை கோமயத்தில் சாய்க்க வேண்டும். ஒருதடவை தோய்த்த கோமயம் மறுதடவைக்கு உதவாதாகையால் தடவைக்குத் தடவை புதிதாய்க் கோமயத்தை விட்டுக்கொள்ள வேண்டும். இவ்விதமே கொள்ளுக் குடிநீரிலும் மடக்கி மடக்கி

---

1. பசுமூத்திரம். (கோஜலம் என்று கூறவேண்டுவது உலக வழக்கில் கோமயம் என்று வழங்குகிறது. (கோமயம்=பசுவின் சாணி)

ஏழுதடவை காய்ச்சிக் காய்ச்சித் தோய்த்துக் கொள்ளவேண்டும். இங்கும் ஒவ்வொரு தடவைக்கும் கொள்ளுக் குடிநீர் புதிதுபுதிதாய் விட்டுக்கொள்ள வேண்டுமென நாம் சொல்லாமலே நன்குவிளங்கும். இவ்விதம் ஏழுதடவையானபின், தண்ணீரைவிட்டுக் கழுவி வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்தி முன்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இதற்காகவும் சுமார் நாலைந்து பலம் (140—175 கிராம்) காந்தத்தைத் தூய்மை செய்தால்தான் மேற்கண்ட எடை கிட்டும்.

கெந்தகத் தூய்மை:— சுமார் எட்டுப்பலம் (280 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகத்தை இரும்புக்கரண்டியில் வைத்து அதன்மேல் அரைப்பலம் (17½ கிராம்) பசுவின் நெய்யைத் தெளித்து உருக்கவேண்டும். முள்ளங்கிக் கிழங்கை இடித்துப் பிழிந்தசாறு ½ படி இதனை வாயகன்ற ஒரு ஓட்டிலிட்டு முன்கெந்தகம் உருகினவுடனே அதில் சாய்க்கவேண்டும். நன்ருகஆறின பின் கெந்தகத்தை எடுத்துக் கரண்டியில் போட்டு முன்போல் நெய்யைத் தெளித்து உருக்க வேண்டும். முன்சாய்த்த முள்ளங்கிச் சாற்றை ஊற்றிவிட்டு புதிதாய்க் காற்படி சாறுவிட்டுக் கெந்தகம் உருகினவுடன் அதில் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 21 தடவை நெய்யைத் தெளித்துத் தெளித்து முள்ளங்கிச் சாற்றில் சாய்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் முள்ளங்கிச் சாற்றைப் புதிது புதிதாக சேர்க்க வேண்டுமென அறிந்திருக்க வேண்டும். பிறகு தண்ணீர் விட்டுக் கெந்தகத்தை நன்ருய்க் கழுவி மெல்லிய துணியால் துடைத்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் சுத்தமாக உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு இதனைக் கல்வத்தி விட்டுப் பொடித்துச் சிறுதக்காளிச் சமூலச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒருசாமமரைத்து வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் உலர்த்திக்கொள்ள வேண்டும். இவ்விதம் பாவனை செய்யப்பட்ட கெந்தகத்தில் மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

இரசத் தூய்மை:—இரசம் 6 பலம் (210 கிராம்), கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள் 6 பலம் (210 கிராம்). இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு தூய்மையான நீர்விட்டு இரசம் மடிந்துபோகிற வரையில் அரைக்கவேண்டும். இரசம் மடிந்து போனபின்பு ஒரே வில்லையாகச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு இரண்டுபடி கொள்ளும்படியான ஒரு பானையில் அரைப்படி பலப்பக்கல் மாவைப்போட்டுச் சமமாக அழுத்தி அதன் மேல் முன் சித்தப்படுத்தின இரச அடையை வைத்து அதன்

மேலும் அரைப்படி பலப்பக்கல் மாவைப்போட்டு வாய் பொருந்தும்படியான மேல்பானை ஒன்று கவிழ்த்துச் சந்தில்லாமல் இரண்டு சீலைமண்செய்து இரண்டு பானையின் வாயிலும் சணல்நார்க் கயிறு அல்லது நூல்கயிற்றினால் சுற்றிப் பின்னலாகக் கட்டி அதன்மேல் ஐந்து சீலைமண் வலுவாகச் செய்து வெய்யிலில் உலர்ந்தவேண்டும். நன்றாய் உலர்ந்த பின் அடுப்பேற்றி எட்டுச் சாமம் எரிக்க வேண்டும். இப்படி எரிக்கும்போது சாமத்திற்கு ஒரு தடவை கீழ்ப்பானை மேலாகவும் மேல்பானை கீழாகவும் மாற்றிவிடவும் வேண்டும். இப்படிச் செய்யும்போது அவசரப்படாமல் மெதுவாகத் திருப்பிவிட வேண்டும். ஏனெனில் உள்ளேயிருக்கிற மருந்தானது வேகமாய் வந்து விழாமல் மெதுவாய் விழும்படியாகச் செய்யவேண்டியதே முக்கியமானதாகும். தீயானது ஒரு சாமம் வரையில் மெதுவாய் எரிக்கவேண்டும். பிறகு காடாக்கினியாய் எரிக்க வேண்டும். பானையை மேல் கீழாக மாற்றுவதும் இரண்டு சாமம் எரித்த பின்புதான் ஆரம்பிக்க வேண்டும். இவ்விதம் எட்டுச்சாமம் சென்றபின் அடுப்புடனேயே குளிர ஆறவிட்டு விடவேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் கவசத்தைப் பிரித்து உள்ளிருக்கிற மாவை எடுத்து முறத்தில் போட்டு மெதுவாகப் புடைத்து இரசத்தையெல்லாம் ஒன்றாகச்சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த இரசத்தை ஒரு கெட்டித் துணியில் வைத்துப் பதினொரு தடவைக்குக் குறையாமல் பிழிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் பாவனை செய்யப்பட்ட இரசமானது மிகத் தூய்மையானதா இருக்கும். இவ்விதம் தூய்மை செய்யப்பட்ட இரசத்தில் மேற்கண்ட எடை நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

செய்முறை:— முன் நான்கு சரக்குகளில் மேற்கண்ட இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாய்க் கறுக்கும்படியாக அரைத்துக் கொள்ளவேண்டும். பிறகு அதைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். காந்தத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தூள்செய்து பிறகு அயத்தைச் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து முன் சித்தப்படுத்தியிருக்கிற இரச கெந்தகத் தூளையுஞ் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து குமரிவேர்ச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஆறுசாமம் அரைக்க வேண்டும். இதனை ஒரேதடவையாகக் கைவிடாமல் அரைக்க வேண்டுமென்பது அவசியமல்ல. சாவகாசப்படியாயினும் மொத்தம் ஆறு சாமம் அரைப்பிட வேண்டியதுதான் இன்றியமையாததாகும். இதனை ஒரே வில்லையாகச் செய்து ஒரு பீங்கான் தட்டில் வைத்து ஒரு கூடை

யைப் போட்டுக் கவிழ்த்து வைக்கவும். கொஞ்சநேரம் சென்று பார்த்தால் பீங்கானில் சூடுண்டாகிவிடும். இதுவே இதன் தேர்வாகும். பின்பெடுத்து வெய்யிலில் காயவைத்து ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்தி 5 பலமுள்ள (175 கிராம்) 25 வறட்டியில் புடமிடவும். புடம் ஆறினபின் எடுத்துக் கல்வத்தி லிட்டுப் பொடித்து முன்போலவே கற்றாழை வேர்ச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஆறுசாமம் அரைத்து வில்லைசெய்து வெய்யிலில் உலர்த்தி முன்போலவே ஓட்டிலிட்டு மேலோடு மூடி முன்போல் சீலைமண் செய்துலர்த்தி முன்போல் புடம் போடவும். இவ்விதமே மூன்றுவதும் கற்றாழைவேர்ச் சாற்றில் புடமிடவும். இந்த மூன்று புடமும் தீர்ந்தபின்பு பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றில் முன்போலவே மூன்று புடமிடவும். இந்த மூன்று புடமும் தீர்ந்தபின்பு புளிப்பு மாதுளம்பழச் சாற்றில் மூன்று புடமிடவும். அப்படி இட்டபின் செந்தூரமாகி விடும். சக்தியில்லாதவர்கள் இம்மட்டோடு நிறுத்திக்கொள்ள லாம். சக்தியுள்ளவர்கள் அவர்களின் சக்திக்குத் தகுந்தபடி ஒரு விராகனெடை முதல் ($3\frac{1}{2}$ கிராம்) பத்து விராகனெடை (35 கிராம்) வரையில் தங்க அரப்பொடியைச் சேர்த்து சோற் றுக் கற்றாழை வேர்ச்சாறு, பொற்றலைக் கையாந்தகரைச்சாறு, புளிப்பு மாதுளம்பழச்சாறு ஆகியவைகளில் முறையே இரண் டிரண்டு அல்லது மும்மூன்று புடம்போட்டுக் கொண்டால் அருணோதயம் போன்ற செந்தூரமாகி இருக்கும். இதனை எடுத்துப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— நெய், தேன். இது எல்லா நோய்களிலும் பயன்படுமாகையால் அந்தந்த நோய்களுக்கேற்ற குடிநீர், கலவைத்தூள், இளகம், நெய்கள், மணப்பாகுகள் ஆகியவை களுடன் கலந்து கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள் :— இந்த யோகத்தின் அருமையை அறி வாளிகள் தெரிந்துகொள்வார்கள். ஆகையால் இதைப்பற்றி நாம் இங்கு சிறப்பாக எழுதுவது அவசியமன்று. இது எல்லா நோய்களுக்கும் பயன்படுமென்பது பழக்கமானவர்களுக்கு விளக்கமாகத் தெரிந்ததாகும்; ஆயினும் பழக்கமில்லாதவர் களுக்கும் பயன்படும்படியாக இதனை பயன்படுத்தத் தகுந்த நோய்களைக் குறிப்பாக எழுதுகின்றோம். அவையாவன :— சயம்[1], இருமல், இரத்த சயம், குருதிஇருமல் முதலிய நுரை

1. சயம்=க்ஷயம் (ஈளை).

யீரல் சம்பந்தமான நோய்களும்; நீரிழிவு, மதுமேகம் முதலிய நீர்நோய்களும்; பாண்டு, சோகை, முதலிய குருதிக்குறைவு நோய்களும் தீரும். குருதியிலுள்ள மாசுகளை நீக்கி குருதிப் பெருக்கை உண்டாக்குமாகையால், தாது நட்டம், விந்து நட்டம் முதலியவைகள் நீங்கி உடல்வலிமை, மனவலிமை ஆகியவைகள் உண்டாகும். உடல் வலுப்பட்டு வச்சிரதேக மாகும். இன்னும் இதன் பெருமையை அவரவர்கள் தம்தம் பழக்கத்தில் தெரிந்து கொள்வார்கள்.

மருத்துணவு:— அவரவர்களின் செரித்தல் திறனுக்குத் தக்கபடி வளமையைக் கொடுக்கும் உணவுகளான பால், பால் பாயசம், பால் அல்வா, வாதுமை அல்வா, கோதுமைப்பால் அல்வா, மிட்டாய் வகைகள் ஆகியவைகளை உபயோகிக்க வேண்டியது, அசைவ உணவினர் ஆட்டிறைச்சி, உள்ளான், காடை, கௌதாரி, புருக்குஞ்சு, கோழிக்குஞ்சு முதலியவைகளை உபயோகிக்க வேண்டியது.

குறிப்பு

இது, மிகவும் ஓர் அருமையான முறை. இது தேரையர் வாகடத்தில் சொல்லப்பட்டது. இது நமது பரம்பரைக்குள் வெகு மறைவாகவே வைத்து உபயோகித்து வரப்பட்டது. இதனை உலக நன்மைக்காகவும், உயிர்களின் நலங்கருதியும் வெளிப்படுத்தினோம். ஆனால் ஊக்கமில்லாதவர்களும், சோம்ப லுள்ளவர்களுமான சிலருக்கு இதனைப் பார்த்தவுடனே மனங் கலங்கித் திகைப்பு உண்டாகும். "பணமும் பத்தாயிருக்க வேண்டும், பெண்ணும் முத்தாய் இருக்கவேண்டும்" என்பது எக்காலத்திலும் எந்த விவகாரத்திலும் கைகூடுமென்பது மிக்க அருமை. முறையான உழைப்பிற்குத் தகுந்த கூலி எப்போதும் நிச்சயமாகக் கிடைக்கும், "மாவுக்குத் தகுந்த பணியாரம்" என்பது உலகறிந்த செய்தியாகும்.

56. எஃகு காந்தச் செந்தூரம்.

தூய்மை செய்த உளி அரப்பொடி 5 பலம் (175 கிராம்), தூய்மை செய்த காந்தம் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), கீழ்க்காணும் முறைப்படி செய்யப்பட்ட தாம்பிரக்களங்கு $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), புளிப்பு மாதுளம் பழச்சாறு செல்லத்தக்க அளவு. இஞ்சியை மேற்றோல் நீக்கி இடித்துப் பிழிந்த சாறு செல்லத் தக்க அளவு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன் மூன்று சரக்கையும் சேர்த்தரைத்துப் பொடித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு புளிப்பு மாதுளம்பழச் சாற்றைவிட்டு இரண்டுநாள் ஊறவைக்கவேண்டும். இந்தச் சாருனது பொடிகளின்மீது ஒரு அங்குலம் நிற்க வேண்டியது. மூன்றும்நாள் எடுத்துச் சாற்றை மெதுவாக இறுத்துப் பொடியைக் கல்வத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். பிறகு புதிதாய் புளிப்பு மாதுளம்பழச்சாறு 10 பலம் (350 கிராம்). இதனைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்துச் சாறெல்லாஞ் சென்றபின்பு வில்லை செய்து காயவைத்து நன்று யுலர்ந்தபின்பு ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு கவசத்தின் எடைக்கு 20 பங்கு எடை வறட்டியில் புடமிடவேண்டும். குளிர ஆறினபின் மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு 10 பலம் (350 கிராம்) இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். சாறெல்லாஞ் சென்றபின் வில்லைசெய்து உலர்த்தி முன்போல் கவசித்துப் புடமிடவேண்டும். மூன்றுவது முன் மருந்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பத்துப்பலம் (350 கிராம்) புளிப்பு மாதுளம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு அரைத்து, சாரெல்லாஞ் சென்றபின்பு முன்போல் வில்லை செய்து கவசித்து புடமிடவும். பிறகு எடுத்துக் கல்வத்தில் பொடித்துப் பத்துப்பலம் (350 கிராம்) பொற்றலைக் கையாந்த கரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன்போல் அரைத்து கவசித்து புடமிடவும். இவ்விதம் நாலு புடமுமிட்டுத் தீர்ந்தால் உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய் இன்னும் நோய் நிலைக் கேற்ற துணைமருந்துகளும் ஆகும்.

தீரும் நோய்கள் :— பாண்டு, சோகை, பெருவயிறு, குன்மம், செரியாமைநோய், பெருங்கழிச்சல், ஆகிய பல நோய்கள் தீரும். நரம்புகள் முறுக்கேறி தாதுவிருத்தி, உடல் வலிமை, மனவலிமை, முயற்சி, துணிவு ஆகியவைகள் உண்டாகும். விந்துக் குறைவு, வேகவிந்து வெளிப்பாடு ஆகியவைகள் தீர்ந்து ஆண்மை உண்டாகும். சயம், காசம் முதலிய நோய்களும் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்; ஆயினும் நோய்பலம், உடல்தன்மை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி இலகு பத்திய மாகவும், கடும்பத்தியமாகவும் வைக்கவேண்டியது. தாது

விருத்திக்கான வலுவைத் தரும் இளகங்கள், ஆகாரங்கள் முதலியவைகளை உபயோகிக்க வேண்டும். மேலும் இதனை உட்கொண்டவுடன் செரிக்குஞ் சக்திக்குத் தகுந்தவாறு அரை அல்லது ஒரு ஆழாக்கு காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பாலைப் பருகிக்கொண்டு வரவேண்டும்.

தாம்பிரக் களங்கு :— தாம்பிரத்துட்டு 8, அதனெடையில் அரைவாசி அரிதாரம். இதனை நல்ல வேளைச் சாற்றைவிட்டு அரைத்துத் துட்டின்மேல் பூசி உலர்த்திக் கொள்ளவேண்டும். சாறு பிழிந்த மேற்படி இலைச்சக்கையுடன் துட்டின் எடையில் கால்பங்கு எடை அரிதாரத்தைச் சேர்த்தரைத்து துட்டின்மேல் கவசஞ் செய்ய வேண்டியது. அந்தக் கவசந் தெரியாமல் வெள்ளீயத் தகட்டைச்சுற்றி மூடிவிடவேண்டும். வெள்ளீயத் தகட்டின்மீது இரண்டு சீலைமண் செய்து ஈரமுலர்ந்தபின் 5 பலமுள்ள (175 கிராம்) பத்து எருவில் புடமிட்டுப் புடம் ஆறினபின் எடுக்க வெண்ணிறமாயிருக்கும். இதனைப் பற்ப மென்றும் களங்கென்றுஞ் சொல்கிறார்கள். இவர்கள் நமக்கு அவசியமான 5 அல்லது 6 துட்டுகளைச் செய்து மேற்கண்ட எடை நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு நாகூர்ச் சல்லிதான் அதிக உபயோகமாக இருக்கும். இதனையும் தூய்மை செய்து கொண்டால் அதிக நன்மை தருவதாகும். இந்த நாகூர்ச்சல்லிகள் அகப்படாவிட்டால் காலணாவைச் சமமாகத் தட்டி அயத் தூய்மையில் சொல்லியிருக்கிறபடி தூய்மை செய்து கொள்ளலாம்.

57. சுயமக்கினிச் செந்தூரம்.

தூய்மை செய்த அய அரப்பொடி 16 விராகனெடை (56 கிராம்), தூய்மை செய்த காந்தம் 8 விராகனெடை (28 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 6 விராகனெடை (21 கிராம்), தூய்மை செய்த இரசம் 4 வராகனெடை (14 கிராம்), தூய்மை செய்த மனோசிலை 2 விராகனெடை (7 கிராம்), சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன்னர் கெந்தகத்தையும், இரசத்தையும் நன்றாய்க் கறுக்கிறவரையில் அரைத்துத் தனியே எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு மனோசிலையைத் தனியே தூள் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு அயத்தையும் காந்தத்தையும் சேர்த்தரைத்துப் பிறகு மனோசிலைத் தூளைச் சேர்த்தரைத்து, முடிவாக இரசகெந்தித் தூளைச் சேர்த்துக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுப் பதினாறு சாமம்

அரைக்கவேண்டியது. கைவிடாமல் அரைக்க வேண்டும் என்னும் நிபந்தனை கிடையாது. சமயோசிதமாக சாவகாசம் போல் அரைத்துக்கொள்ளலாம். மேற்படி கணக்கின்படி அரைத்த பின்பு ஒரே வில்லையாகச் செய்து வெய்யிலில் உலர்த்த வேண்டும். கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்ருய் உலர்ந்தபின்பு ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்து கவசத்தை வெய்யிலில் உலர்த்தவேண்டும். கவசம் நன்ருய் உலர்ந்தபின்பு கவசத்தின் எடைக்கு 20 பங்கு எடை வறட்டியில் புடமிட்டு நன்ருய் ஆறினபின் எடுக்க நல்ல செந்தூரமாகி இருக்கும்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும் நோய்கள் :— முக்காவேளை $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), கருவேப்பிலை உலர்ந்ததானுல் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), பச்சையானுல் 1 பலம் (35 கிராம்), (இதனைத் தனியே ஓட்டில் வறுத்துக் கருக்கிக் கொள்ளவேண்டும்.) மிளகு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) (இதனைத் தனியே வறுத்துக்கொள்ள வேண்டும்). இம் மூன்றையும் ஆழாக்கு தண்ணீரில் போட்டு அரை ஆழாக்காகச் சுண்டவைத்த கியாழத்துடன் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி அனுபானித்துக் கொடுக்கவேண்டும். முன்னர் தேனில் செந்தூரத்தை இழைத்துக் கொடுத்துவிட்டு அதன் மேல் முன் கியாழத்தைக் கொடுப்பது உத்தமம். இவ்விதம் கொடுத்தால் நச்சுக்கழிச்சல், செரியாமைக்கழிச்சல், பெருங் கழிச்சல், சூட்டுக்கழிச்சல் ஆகியவை தீரும், மேற்கண்ட விதமாகக் கியாழம் செய்யக்கூடாத அவசர காலங்களில் மேற்கண்ட செந்தூரத்தைத் தேனில் குழைத்துக் கொடுத்துவிடலாம்.

மேற்ருேல் சீவின இஞ்சியை இடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு 2 விராகனெடை (7 கிராம்), தேன் 2 விராகனெடை (7 கிராம்). இவ்விரண்டையும் கலந்துகொண்டு மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண அனல்மந்தம், செரியாமை, வயிற்றுப்பொருமல் ஆகியவை தீர்ந்து சீரணுக்கினி அதிகப்பட்டு நல்ல பசி உண்டாகும்,

மேற்ருேல் சீவின சுக்கின்மீது சுண்ணும்பைக் கவசித்து உமிக்காந்தலிற் செருக்கிச் சுட்டெடுத்துச் சுண்ணும்பை நீக்கிவிட்டு அதனையிடித்து துணியில் வடிகட்டியத் தூள் $\frac{3}{4}$ விராகன் எடை ($2\frac{5}{8}$ கிராம்), சோம்பு அல்லது பெருஞ்சீரகத்தை இடித்து துணியில் வடிகட்டியத் தூள் $\frac{1}{2}$ விராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்) தேன் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவற்றை கலந்து மேற்

கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர, குன்மநோய், வயிற்றுவலி, பித்தவாயு ஆகியவை தீரும்.

தேன், நெய் ஆகியவைகளிலும் இன்னும் சமயோசிதமாக இஞ்சி இளகம், எலுமிச்சம்பழ இளகம் முதலிவைகளிலும் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டு வர, மந்தாக்கினிநோய், பித்தசம்பந்தநோய், கக்கல் ஆகிய நோய்கள் தீரும். குருதிப்பெருக்கு உண்டாகி உடல்வலிமை முதலியவை அதிகரிக்கும்.

மருத்துணவு :— சமயோசிதம்போல் கஞ்சி, புனற்பாகம் முதலிய இலகு உணவுகளை முன்னர் உபயோகிக்க வேண்டியது. பின்னர் எளிதில் செரிக்கத் தக்கதும் சத்துள்ளதுமான உணவுகளை முறையாகவும் சமயோசிதமாகவும் பயன்படுத்தி வரவேண்டியது.

58. சுயமக்கினி (வேறு).

தூய்மைசெய்த அய அரப்பொடி 40 விராகன் எடை (140 கிராம்), தூய்மை செய்த காந்தம் 40 விராகனெடை (140 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 20 விராகனெடை (70 கிராம்), தூய்மை செய்த இரசம் 10 விராகனெடை (35 கிராம்), சோற்றுக் கற்றுழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித்தரைத்து நன்ருய்க் கறுத்தபின் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அயத்தையும் காந்தத்தையும் தொந்தித்து ஒருசாமம் அரைத்துப் பிறகு இரச கெந்தகத் தூளைச் சேர்த்துச் சோற்றுக்கற்றுழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டுப் பதினுறு சாமத்திற்குக் குறையாமல் அரைக்க வேண்டும். இதற்கு எத்தனைக்கு எத்தனை அரைப்பேறு கிறதோ அத்தனைக்கு அத்தனை சிறப்பான குணமுள்ளதாம். ஆகையால், இடம் பொருள் ஏவலுள்ள பெரியோர்கள் இருபது சாமம், இருபத்துநான்கு முப்பத்திரண்டு சாமம், வரையில் அரைத்துக்கொள்ளலாம். இவ்விதம் அரைத்த பின்பு சுமார் ஒவ்வொரு பலமுள்ள சிறு வில்லைகளாகத் தட்டி பீங்கான் தட்டில் வைத்து வெய்யிலில் உலர்த்த வேண்டும். வில்லைகளில் சற்றும் ஈரமில்லாமல் உலர்ந்து விட்டால், சிவந்த வண்ணமுள்ள செந்தூரமாகிவிடும். பிறகு எல்லா வில்லைகளையும் கல்வத்திற் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :— முன் முறையில் சொல்லப்பட்டு இருக்கிற பண்டங்களுடனும் மற்றும் சமயோசிதமான பண்டங்களுடனும் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் :— குன்மம், பெருங்கழிச்சல், அக்கினி மந்தம், சுவையின்மை ஆகிய நோய்கள் தீரும்.

பத்தியம் முதலியவைகளும் மேற்கண்டவைகளேயாம்.

59. சுயமக்கினி (வேறு)

தூய்மை செய்த அய அரப்பொடி 8 விராகனெடை (28 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 4 விராகனெடை (14 கிராம்), தூய்மை செய்த ரசம் 2 விராகனெடை (7 கிராம்), சோற்றுக் கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்து அரைத்துத் தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். அயப் பொடியைக் கல்வத்திலிட்டுக் கற்ருழஞ் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து முன் இரசகெந்தித் தூளைச் சேர்த்துக் கற்ருழஞ் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு, நான்கு சாமம் அரைத்து வெங்கலத்தாலத்தில் இலேசாக அப்பிப் பரப்பிச் சூரிய புடம் வைக்கவேண்டியது. ஈரமில்லாது நன்ருய் உலர்ந்தபின்பு எடுத்துக் கல்வத்தில் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், சமயோசிதமான இளகங்கள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—பெருங்கழிச்சல், குன்மம், வயிற்று இழுப்பு, பாண்டு, எருவாய்நோய், நீர்க்கோவை ஆகியவை தீரும்.

மருத்துணவு :—புளி, புகை, புணர்ச்சி, ஆகியவைகளை நீக்கவேண்டும். வளமான உடலினராளுல் சமயோசிதம்போல் இலகு பத்தியமாக வைத்துக் கொள்ளலாம்.

60. மகா சுயமக்கினிச் செந்தூரம்

தூய்மை செய்த அய அரப்பொடி 5 பலம் (175 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 1 பலம் (35 கிராம்), தூய்மை

செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு, சோற்றுக்கற்ருழைச் சாறு, நாவற்பட்டைச் சாறு, கல்யாண முருக்கிலைச் சாறு, மாதுளையிலைச் சாறு ஆகியவை செல்லத் தக்க அளவு.

செய்முறை :— அயப் பொடியைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு ஒரு மணிநேரம் அரைத்து தண்ணீர் விட்டுக் கழுவி விடவேண்டியது. பிறகு கல்வத்திலிட்டுச் சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்துக் கல்வத்துடனே வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு தூள்செய்து நாவற்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒருசாமம் அரைத்து முன்போலவே வெய்யிலில் உலர்த்திப் பொடித்துத் தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு கெந்தகத்தையும் இரசத்தையும் சேர்த்தரைத்து நன்ருய்க் கருத்தபின்பு முன்னெடுத்து வைத்திருக்கிற அயத் தூளையும் சேர்த்து முருக்கிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒருசாமம் அரைக்கவேண்டும். அதை வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்தபின் எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்த பின் மாதுளையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்து ஒரே பில்லையாகச் செய்து வெய்யிலில் வைத்து உலர்த்தவேண்டும். நன்ருய் ஈரமில்லாமல் முற்றும் உலர்ந்த பின்பு சுமார் 1 வீசை (1400 கிராம்), நாவற்பட்டையைப் பஞ்சுபோல் துவைத்து மேற்படி வில்லையின்மேல் வைக்க வேண்டியது. இந்த நாவல்பட்டையானது சட்டியின் உதடு வரையில் நிறைந்துபோக வேண்டியது. ஒரு வீசை என்னுங் கணக்கு அவசியமில்லை ; ஒரு வீசைக்கு அதிகமாயினும் குறை வாயினும் குற்றமில்லை. பிறகு அந்தச் சட்டியின் வாய் பொருந்தும்படியாகிய வேறு சட்டியைக் கவிழ்த்துச் சட்டி வாய்க்கு ஏழு சீலைமண் வலிவாகச் செய்து வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்தபின்பு அடுப்பேற்றி மூன்றுநாள் அதாவது 24 சாமம் எரிக்க வேண்டும். முதல் நாள் கமலாக்கினியாகவும், இரண்டாம் நாள் தீபாக்கினியாகவும், மூன்ரும் நாள் காடாக்கினியாக வும் எரிக்கவேண்டும். சட்டி நன்ருய்க் குளிர ஆறினபின் மருந்தை எடுத்துக் கல்வத்தில் பொடித்துக் கற்ருழஞ் சோற்றைச் சிறுகச் சிறுகப் போட்டு ஒரு சாமம் அரைத்து முன்போல் வில்லைசெய்து வெய்யிலில் உலர்த்தி வேறு ஒரு புதிய முன் மாதிரிச் சட்டியில் வைத்து அந்தச் சட்டி நிறையக் கற்ருழஞ் சோற்றையிட்டு மேற்சட்டி பொருந்தும்படியாக மூடி ஏழு சீலை மண் செய்து ஈரமுலர்ந்த பின்பு இரண்டடி சதுரப் புடமிடவும்.

புடம் ஆறினபின் மருந்தை எடுத்துக் கல்வத்தில் பொடித்து முன்போல் சோற்றுக் கற்ருழஞ் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து வில்லையை முன்போல் சட்டியிலிட்டு சோற்றுக்கற்ருழைச் சோற்றைச் சட்டி நிறையப் போட்டு மேல்சட்டி மூடி முன்போல் ஏழு சீலை மண் வலுவாகச் செய்து ஈரமுலர்ந்தபின் முன்போல் இரண்டடி சதுரப் புடமிடவும். புடம் ஆறினபின் எடுக்க மலர்மிசை ஏகினுன் அருளினுல் செந்தூரமாய் இருக்கும். ஒருவேளை தீயின் விகற்பத்தால் செந்தூரம் நன்ருய்ச் சிவக்காதிருந்தால் முன்போல் அரைத்துப் புடமிட்டு எடுக்க, நல்ல செந்தூரமாகி இருக்கும்.

அளவு :— 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும் நோயும்:— மேற்ருேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இம் மூன்றையும் தனித்தனி இளவறுப் பாக வறுத்துத் தனித்தனி இடித்துத் தனித்தனி துணியில் வடிகட்டிய தூள்கள் வகை 1-க்கு 3 பலம் (105 கிராம்), இவற்றை ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்தத் திரிகடுகுத் தூளில் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற் கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து காலை மாலை இரண்டு வேளையும் நாற்பது நாள் பயன்படுத்திவர, இருமல், எலிக்கடி, பதினெட்டும், மந்தாரகாசம், இரைப்பிருமல், ஐய பெருக்கத்தி ஞல் தோன்றிய நோய்கள் தொண்ணூற்ருறும், அனல்பெருக் கத்தால் தோன்றிய நோய்கள் நூற்றிருபத்தெட்டும், வளி நோய்கள் எண்பதும், இதிலுண்டான மற்ற நோய்களும், குன்மம் பதினுறும், வாயு இருபத்தாறும் தீரும்.

கையாந்தகரைச் சாறு 2 விராகனெடை (7 கிராம்), தேன் 2 விராகனெடை (7 கிராம்). இவ்விரண்டையும் கலந்து காலை மாலை இரண்டு வேளையும் இருபதுநாள் உட்கொண்டுவர, பித்தபாண்டு, நச்சுப்பாண்டு முதலிய பாண்டுவகைகளும், சோகை வகைள், நச்சுப்பாகம், வீக்கம், சோபம், மஞ்சள் நோய், வறட்சி மஞ்சள் நோய், நீர் மஞ்சள்நோய் முதலிய வைகளும் தீரும்.

கும்மட்டிக்காய்ச் சாறு, சிற்ருமணக்கெண்ணெய், வெங் காயங் சாறு, எலுமிச்சம் பழச்சாறு வகை 1-க்கு 5 பலம் (175 கிராம்), இஞ்சிரசம் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்). இவற்றை ஒன்ருகச் சேர்த்துக் காய்ச்சும்போது சீரகம், கொத்துமல்லி,

சதகுப்பை, இலவங்கம், இலவங்கப்பட்டை, மஞ்சள், ஏலம் இவைகளின் தூள் வகை 1-க்கு ¼ பலம். இவற்றை ஒன்றுகக் கலந்து மேற்கண்ட எண்ணெய்யில் போட்டுக் கடுகு திரண்ட பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும். இந்த எண்ணெய் 1 விராகனெடை (3½ கிராம்) அல்லது 1½ விராகனெடை (5¼ கிராம்) யுடன் மேற்படி செந்நூரத்தை அளவுப்படி கலந்துக் காலையில் மாத்திரம் ஒரு வேளையாக இருபது நாள் உபயோகிக்க வேண்டும். பலமுள்ள உடலாயிருந்தாலும், மலம் அதிகமாய்ப் போகவேண்டிய அவசியமிருந்தாலும் எண்ணெயின் அளவை அதிகப்படுத்திக் கொள்ளலாம். சில சமயங்களில் மாலையிலும் உபயோகித்து வரலாம். இந்த மருந்துமுறையை வைத்தியர்கள் உடல் வலிமை, நோய் வலிமை உடல்பண்பு ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாகத் தம்தம் பழக்கத்தால் நிச்சயித்து நிதானித்துக் கொள்ள வேண்டியது. மேற்கண்ட விதமாக உபயோகித்துவந்தால் வயிற்றிலுண்டாகும் அறுபது பெரிய நோய்களும், ஆறுவகைக் கௌசைகளும், நீராமைகளும், நீர்க்கோவை நோய்களும், எண்வகை பிலீகைகளும், எண்வகைக் குன்மங்களும், பெருவயிறு ஆகிய நோய்களும் தீரும்.

மருத்துணவு :— இவ்வரிய மருந்தால் அநேக கொடிய நோய்கள் தீர்ந்து போகின்றபடியால், உடல் வலிமை, நோய் வலிமை, உடல் தன்மை ஆகியவைகளுக்குத் தகுந்தவிதமாக இலகு பத்தியமாகவும் கடும்பத்தியமாகவும் வைக்கவேண்டியது. இவ்வொவ்வொரு பிரிவுகளையும் பற்றி வகை விபரமாக எழுத இச்சிறிய நூல் இடந்தராது. அனுபவசாலிகளுக்குப் பெரும்பான்மையும் இப்பொருட் பாகுபாடுகள் எல்லாம் நன்ருய்த் தெரிந்தே இருக்கும். பழக்கமில்லாதவர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் நிதானத்துடன் தெரிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும். அல்லது தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்,

குறிப்பு

பெருமக்களே ! இந்தப் பாகத்திற்கும், இதற்கு முன் சொல்லப்பட்டிருக்கும் பாகத்திற்கும் வேறுபாடு என்ன என்பது தங்களுக்கு நன்கு புலப்படும். அதாவது: இந்தப் பாகத்திலும் அயம், கெந்தகம், இரசம் ஆகிய சரக்குகள் மூன்றே இருக்கின்றன. இதற்கடுத்த முன்பாகத்திலும் இந்த அயம், இரசம், கெந்தகம் ஆகிய மூன்றே இருக்கின்றன.

ஆனால், எடைபேதமும், செய்பாக பேதமுமேயாம். அதன் விபரம்—

முன் பாகத்தில் அயம் 8.	பின் பாகத்தில் அயம் 5.
,, இரசம் 2.	,, இரசம் 1.
,, கெந்தகம் 4.	,, கெந்தகம் 3.

இவ்வளவுதான் எடையில் உள்ள வேறுபாடு. இது தவிரச் செய்பாகத்திலுள்ள மாறுபாடுகள் தங்களுக்கு நன்ருகவே புலப்பட்டிருக்கும். அதன் விவரத்தை மேற்படி செய்முறைகளைக் கவனித்துப் பார்ப்பதால் செவ்வனே விளங்கிப்போம். இதனுல் முன் மருந்திற்கும் பின் மருந்திற்கும் இடையில் உள்ள வேற்றுமை எவ்வளவோ காணப்படுகிறது. இவ்விதமே எல்லா மருந்துகளும் சேர்க்கப்படும் எடை விகற்பத்தாலும், செய்யப்படும் முறை விகற்பத்தாலும் ஒன்றிற்கொன்று பெருத்த வித்தியாசம் உடையதாகிவிடும். ஆகையால் பாகங்களைச் செய்ய முயற்சிசெய்யும் மருத்துவப் பெருமக்கள் அதில் எழுதப்பட்டிருக்கும் துய்மை முறை, அரைப்பு, புடத்திட்டம் முதலியவைகளைத் திட்டமாகக் கவனித்து அதில் சொல்லி இருக்கிற சட்டப்படி செய்து உலகத்தார்க்குப் பயன்படுமாறு உதவுவார்களென நம்புகின்ருேம்.

61. திரியாக்கினிச் செந்தூரம்

தூய்மை செய்த அய அரப்பொடி $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த திறமான காந்தம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க்கெந்தகம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த இரசம் 4 விராகனெடை (14 கிராம்), சோற்றுக் கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் நெல்லிக்காய்க் கெந்தகத்தையும், இரசத்தையும் கல்வத்திலிட்டுச் சேர்த்தரைத்து நன்ருய்க் கறுத்தபின் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு காந்தத்தையும் அயத்தையும் சேர்த்து ஒருமணிநேரம் அரைத்துப் பிறகு முன் இரசகெந்தித் தூளையும் சேர்த்துச் சோற்றுக் கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நாலு சாமம் கைவிடாமல் அரைப்பது உத்தமம். அப்படி அரைக்கக் கூடாவிட்டால் இடையில் அதிக நாள்கணக்கான தாமதம் நேரிடாமல் மணிக்கணக்கான தாமதமாய் இருந்தால் குற்றமில்லை. ஏனெனில், இடையில் அதிகத் தாமதம் நேரிடுவதால் இதன் வேகம் குறைந்து போகின்றது. தொடர்ந்தேற்றியாய் அரைப்

பதினுல் இதற்கு வேகமும் வீறும் அதிகமாய் இருப்பதை அநுபவத்தால் நிச்சயித்திருக்கின்ருேம். குறைந்தபட்சம் இரண்டு இரண்டு சாமமாகிலும் தொடர்ந்தேற்றியாய் அரைக்கவேண்டியது. அதாவது, முதல் நாள் இரண்டரை சாமம் தொடர்ச்சியாய் அரைத்து, மறுநாள் தொடர்ந்தேற்றியாய் இரண்டு சாமம் அரைப்பது போலவாம். இதில் சந்தேகமுள்ளவர்கள் மேற்கண்ட இரண்டு விதத்தையும் செய்து இரண்டையும் தனித்தனி உபயோகித்து தங்கள் அனுபத்தினுல் இவற்றின் விகற்பங்களை நிச்சயித்துக் கொள்வார்களாக. நமது அனுபவத்தில் நாம் கண்டறிந்த வரையில் எழுதியிருக்கிருேம். இனி அவர் அவர்கள் விருப்பம்போல் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட விதமாக நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிப் பீங்கான் தட்டில்வைத்து நன்ருய் உலர்த்த வேண்டும். வில்லைக்குள்ளும் கொஞ்சமும் ஈரப்பசை இல்லாமல் உலர்ந்து இருப்பதற்கு அடையாளமாவது வில்லையை விரலினுல் தட்டினுல் கணீர் கணீரெனச் சத்தம் கேட்பதேயாம். இந்நிலையில் மேற்கண்ட வில்லையை ஒரு சட்டியிலிட்டு மேற்சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து கவசத்தின் ஈரத்தை உலர்த்தி வட்டடுப்பில் வைத்து சுடரெரிப்பு, தாமரையெரிப்பு, பரவிய எரிப்பு என்னும் முத்தீயும் போட்டு எட்டுச் சாமம் எரித்து அடுப்புடன் ஆற விட்டுக் குளிர ஆறினபின் எடுக்க மலர்மிசை ஏகினுன் அருளினுல் செந்தூரமாகி இருக்கும்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை,

துணைமருந்து :— நெய், தேன், சீனிச்சருக்கரை முதலியவைகளாம். காலை மாலை இரண்டு வேளையுமாக அரை மண்டலம் ஒரு மண்டலம் பயன்படுத்த வேண்டும்.

தீரும் நோய்கள் :— நீர்மேகம், நீரெரிச்சல், நீரடைப்பு, நீராமை, நீராமைக் கட்டி, கெண்டை, மேகசூலை, உதிரசூலை, பாண்டு, சோகை, மலபந்தவாயு, மாரடைப்பு அறுவகைப் பெருங்கழிச்சல் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— புளி, புகை நீக்கவும்.

62. பஞ்சாக்கினிச் செந்தூரம்

தூய்மை செய்த அரப்பொடி, தூய்மை செய்த காந்தம், சங்குச் சுண்ணம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மை செய்த நவச்சாரம் இவ்வைந்தும் வகைக்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—முன்னர் காந்தத்தையும், அய அரப் பொடியையும் சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்துப் பின் கெந்தகத்தைச் சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்துப் பிறகு நவச்சாரத்தைச் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து முடிவாகச் சங்குச் சுண்ணத்தைச் சேர்த்து இரண்டு சாமம் அரைத்துப் பீங்கான் தட்டில் போட்டு நன்ருகப் பரப்பி விட்டுக் கடுவெய்யிலில் இரண்டுசாம நேரம் வைக்கவேண்டும். மறுநாள் உதயம் முதல் பத்துமணி வரையில் அரைத்து முன்போல் பீங்கான் தட்டில் பரப்பி வைத்து மாலை ஐந்துமணி வரையில் வைக்க வேண்டும். மறுநாள் காலையில் முன்போல் பத்துமணி வரையில் அரைத்து அதற்குப் பிறகு மாலை வரையில் வெய்யிலில் வைக்கவேண்டும். இவ்விதம் பிரதிதினமும் காலையில் பத்து மணி வரையிலரைத்து மாலையில் வெய்யிலில் வைக்கவேண்டும். இவ்விதம் பதினைந்து நாள் அரைத்தரைத்து வெய்யிலில் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டியது. பதினாரும் நாள் இரண்டு சாமம் அரைத்து ஒரு சிறு மண்கலயத்தில் நிரப்ப வேண்டும். மருந்தானது கலயத்திற்குள் முக்கால் பாகம்தான் இருக்கவேண்டும். பிறகு அந்தக் கலசத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்யாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பெரிய மண்பானையில் இருபதுபடி நெல்லை அல்லது கேழ்வரகை அல்லது கோதுமையை நிரப்பி அதற்குள் முன் கவசித்ததை வைத்து அந்தப் பானையின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து ஒரு கெசம் பள்ளத்திற் புதைத்துவிட வேண்டும். இதில் தண்ணீர் முதலியவை படாமல் மேடான இடமாயிருக்க வேண்டியது. இருபத்தொரு நாள் சென்றபின் இருபத்தோராம் நாள் எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு நன்ருய்ப் பொடித்துக் குப்பியில் சேமித்து வைக்கவேண்டும்.

அளவு :— 3 முதல் 4 குன்றிமணி எடை.

துணை மருந்து .— இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், மிளகுக் குடிநீர், பொதினுக் குடிநீர், நீர்முள்ளிவேர்க் குடிநீர், இன்னும் சமயோசிதமான குடிநீர், பற்பம், இளகம் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள் :— தீமந்தம், செரியாமைக் கழிச்சல், வயிற்றிரைச்சல், வாயுவுகள், நீர்க்கட்டு, பெருவயிறு, குன்ம வலி, பெருங்கழிச்சல், பித்தவெட்டை, மஞ்சள்நோய், சோகை ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— சமயோசிதம்போல் இலகு பத்தியமாகவும், கடின பத்தியமாகவும் வைக்கவேண்டியது.

சங்குச் சுண்ணம் :— பெரும் சங்கைக் கல்லுரலில் இடித்து துணியில் வடிகட்டி எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு ஒரு சாமம் நேரமரைத்து வில்லை செய்து நன்ருய் உலர்த்தி அகலில் வைத்து மேலோடு மூடி இரண்டு சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு 20 பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் சங்கானது சுண்ணமாகி இருக்கும். இதில் மேற்கண்ட எடை நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டியது.

சங்குச் சுண்ணம் வேறுவகை :— ஒரு பெரிய சங்கைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றை அதில் விடவேண்டும், அந்தச் சாருனது சங்குப் பொடிக்குமேல் ஒரு அங்குலம் இருக்கவேண்டியது. இதனை வெய்யிலில் வைத்து வந்தால் எல்லாம் கரைந்து போய்த் தூளாகி இருக்கும். அப்படியே நன்ருய் உலரும்படியாக வெய்யில் வைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து முன்போல் புடமிடச் சுண்ணமாம்.

இன்னும் சங்கைத் துண்டிக்காமல் முழுசாய் வைத்துப் புடமிட்டாலும் சுண்ணமாகிவிடும். ஆனுல் மேற்கண்ட இரு வகைகளில் ஒருவகையாகச் செய்து கொள்வதுதான் மேன்மையாகும். இந்தச் சுண்ணத்தைத் தனியாகவே உபயோகிக்கலாம். இதற்கு பாண்டு, நீர்க்கட்டு, நீர்க்கோவை, மஞ்சள் நோய் ஆகியவைகள் தீரும்.

63. அறுமுகச் செந்தூரம்

தூய்மை செய்த அய அரப்பொடி 12 பலம் (420 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 9 பலம் (315 கிராம்), தூய்மை செய்த வெண்காரம் 8 பலம் (280 கிராம்), தூய்மை செய்த மனேசிலை 6 பலம் (210 கிராம்), தூய்மை செய்த இரசம் 5 பலம் (175 கிராம்), இந்துப்பு 4 பலம் (140 கிராம்), சோற்றுக் கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— கெந்தகத்தையும் இரசத்தையும் கல்வத்தில் தொந்தித்தரைத்து நன்ருய்க் கறுத்தவுடன் தனியே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். மனேசிலையைத் தனியே கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து அதனையும் தனியே எடுத்துக் கொள்ளவேண்டும். வெண்காரம், இந்துப்பு ஆகிய இரண்டையும் சேர்த்தரைத்து மெல்லிய தூளானபின் இதனையும் தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு அயப் பொடியைக் கல்வத்திலிட்டு ஒருமணி நேரம் அரைத்துப் பிறகு

இரச கெந்தகத் தூளைச் சேர்த்துக் கொஞ்சநேரம் அரைத்துப் பிறகு வெண்காரம் இந்துப்புத்தூளைச் சேர்த்துக் கொஞ்சநேரம் அரைத்துக் கடைசியாக மனோசிலைத் தூளைச் சேர்த்துக் கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு எட்டுச் சாமம் அரைக்க வேண்டும். இதனைத் தொடர்ந்தேற்றியாய் அரைக்க வேண்டும் என்னும் நிபந்தனையில்லை. நாள்தோறும் இரண்டு இரண்டு சாமம் அரைத்தால் போதுமானது. எவ்விதமும் எட்டுச் சாமத்திற்குக் குறையாமல் அரைப்பிட வேண்டும் பிறகு ஒரே அடையாகத் தட்டி ஒரு சட்டியில் வைத்து வெய்யிலில் உலர்த்த வேண்டும். ஈரமில்லாமல் நன்ருய் உலர்ந்த பின் சுமார் ஒன்றரைவீசைக் கற்ருழஞ் சாற்றைக் கொள்ளும் படியான குண்டு சட்டியில் மேற்படி வில்லையை வைத்து அதில் முக்கால்வாசி கற்ருழஞ்சாற்றைப் போட்டு நிரப்பி வாய் பொருந்தும்படியான மறுசட்டியால் மூடி ஏழு சீலைமண் வலுவாகச் செய்து கவசத்தின் ஈரமுலரும்படியாகச் சற்று வெய்யிலில் வைத்து அடுப்பேற்றி ஒருசாதி விறகால் எரிக்க வேண்டும். முதல் ஒரு சாமம் தீபாக்கினியாகவும் மற்ருெரு சாமம் கமலாக்கினியாகவும் எரித்துப் பிறகு காடாக்கினியாக நாலுநாள் எரிக்கவேண்டும். அடுப்புடனே வைத்து நன்ருய்க் குளிர ஆறினபின் தான் வழிபடும் கடவுளுக்குத் துதி முதலியவை செலுத்திச் செந்தூரத்தை எடுத்துக் கல்வத்தில் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும். (ஒவ்வொரு மருந்தையும் முடித்து எடுக்கும்போதும் தம் தம் வழிபடு கடவுளைத் தியானித்து எடுக்கவேண்டியது மருத்துவர்களின் கடமை என்பது நாம் எழுதாமலே அவரவர்களுக்குத் தெரிந்ததாகும். கடவுள்மீது நம்பிக்கை வைத்தே எந்த மருந்தையும் நாம் செய்து முடிக்க முயல வேண்டும். மருந்தை அரைக்கும் போதும் எரிக்கும்போதும் கடவுளைத் தியானித்துக் கொண்டே செய்தால் அந்த மருந்தானது சஞ்சீவிக்கு ஒப்பாக இருக்கும் என்பதில் தடையும் உண்டோ? அவ்வித மகான்கள் தான் மண்ணை அள்ளிக் கொடுத்த போதிலும் பொன்னைப் போல வேலைசெய்யும். இவ்விதம் செய்கிறவர்களை பழக்கத்தில் அநேகரைப் பலர் கண்டிருக்கலாம்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :— மேற்ருேல் சீவின சுக்குத்தூள், மிளகுத் தூள், அரிசித்திப்பிலித்தூள், மஞ்சள் கடுக்காய்த்தோல் தூள், தான்றிக்காய்த்தோல் தூள் இவ்வைந்தும் வகை ஒன்றுக்கு 1½ பலம் (52½ கிராம்). இவற்றை ஒன்ருகக் கலந்து ஒரு குப்பியில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தூள்

1 அல்லது 1½ விராகன் எடை, தேன் 1 அல்லது 1½ விராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து காலை மாலை இரண்டுவேளையும் நாற்பது நாள் உபயோகித்து வந்தால், எண்வகைக் குன்மங்கள், எண்பதுவகை வாதநோய்கள், நாற்பதுவகைப் பித்தநோய்கள், இருபதுவகைக் கபநோய்கள், ஆறுவகை ஈளை இருமல் நோய்கள், பதினெட்டுவகை எலிக்கடி நஞ்சுகள், இரைப்பு நோய்கள், காச நோய்கள், இரைப்பிருமல் நோய்கள், மூக்கடைப்பு நோய், சோகை நோய்கள், பாண்டு நோய்கள், நஞ்சு பாகங்கள், நீர்மஞ்சள் நோய், வறட்சி மஞ்சள் நோய் ஆகிய மஞ்சள் நோய்கள், சூலைகள், கிரந்திகள், அதிவேர்வை நோய், சோப நோய், கரப்பான் நோய், கடுப்பு நோய், முதலிய பல நோய்கள் தீரும்.

இதனை அனுபவசாலிகள் தக்கவிதமாக சமயோசிதம் போல் பயன்படுத்திவந்தால் எல்லாச்சுரம், சன்னி முதலிய அநேக நோய்களில் குணம் காணலாம். நமது பரம்பரையிலுள்ள ஒரு பெரிய பண்டிதர் தம் ஆயுள் முழுவதும் இந்த ஒரு செந்தூரத்தை வைத்துக்கொண்டே பெரிய நோய்களை எல்லாம் தீர்த்துப் பிரசித்தி பெற்றுவந்தார். தாம் பயன்படுத்தும் மருந்தானது எல்லா நோய்க்கும் ஒன்றே என்று மக்கள் நினைக்கவொண்ணாதபடி இந்த ஒரு செந்தூரத்தையே சுமார் இருபது, இருபத்தைந்து தனித்தனிக் குப்பிகளில் வைத்திருப்பார். ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியே ஒவ்வொரு குப்பியிலிருந்து மருந்தை எடுத்துக் கொடுப்பார். இதுவும் ஒருவகைச் சாமர்த்தியந்தான்.

மருத்துணவு :— இதற்கு அநேகமாய் இச்சாபத்தியந்தான். ஆயினும் அவரவர்கள் உடல் தன்மை, உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போலவும், சமயோசிதமாகவும் பத்தியத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது மருத்துவர்களின் வைத்திய அறிவைப் பொருத்தது.

64. அறுமுகச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த அயப்பொடி 6 பலம் (210 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 4½ பலம் (157½ கிராம்), தூய்மை செய்த வெண்காரம் 4 பலம் (140 கிராம்) தூய்மை செய்த காந்தம் 3½ பலம் (122½ கிராம்) தூய்மை செய்த ரசம் 2½ பலம் (87½ கிராம்), சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தில் சேர்த்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். இந்துப்பையும் வெண்காரத்தையும் தனியே அரைத்து நன்ருக மைபோல் பொடிசெய்து தனியே எடுத்துக் கொள்ளவும். பிறகு அயத்தையும் காந்தத்தையும் சேர்த்து இரண்டு மணிநேரம் அரைத்துப் பிறகு இரச கெந்தித் தூளைச் சேர்த்துக் கொஞ்சநேரம் அரைத்துப் பிறகு இந்துப்பு வெண்காரத் தூளைச் சேர்த்துக் கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுப் பன்னிரெண்டு சாமம் அரைக்க வேண்டும். இதனையும் கைவிடாமல் தொடர்ந்தேற்றியாய் அரைக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. நாள்தோறும் இரண்டு சாமம் அரைத்தால் போதுமானது. ஆனுல், இதனைப் பாவனை செய்து கொண்டால் மிக்க மேன்மையாய் இருக்கும். அதாவது மேற்படி சாற்றைவிட்டு இரண்டு சாமம் அரைத்தெடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். இது ஒரு பாவனையாம். இதனைப் பின்பு பொடித்து முன்போல் சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து எடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் ஆறு பாவனை செய்து கொள்வதேயாம்.

மேற்கண்ட இரு வகைகளுள் விருப்பமான ஒரு வகையைச் செய்து வில்லை தட்டி வெய்யிலில் வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு குண்டு சட்டியில் ஆலம் பழுப்பை அடிக் காம்பைக் கிள்ளி நீக்கிவிட்டுச் சந்தில்லாமல் அடுக்கிப் பரப்பி அதன்மேல் மேற்படி வில்லையை வைத்து வில்லையின்மீது முன் போலவே ஆலம் பழுப்பைப் பரப்பி வாய் பொருந்தும்படியான மேல்சட்டி ஒன்று மூடி ஏழு சீலைமண் செய்து கவசத்தின் ஈரம் உலர்ந்தபின்பு அடுப்பேற்றி ஒரு சாதி விறகால் எரிக்க வேண்டும். முதல் சாமம் தீபம், இரண்டாம் சாமம் கமலம், பிறகு காட்டுத்தீயாக பத்து சாமம் எரிக்க வேண்டும். ஆகக் கூடிய பன்னிரெண்டு சாமமும் சென்றபின்பு அடுப்புடனே வைத்து நன்ருய்க் குளிற ஆறினபின் தான் வழிபடு கடவுளை வழிபாடு செய்து கவசத்தைப் பிரித்து விதிப்புடன் மேல்சட்டியைத் தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு வில்லையைத் தனியே எடுத்துக் கொள்ளவேண்டும். இரசமானது மேல்சட்டியில் அதிகமாகவும் கீழ்ச் சட்டியில் குறைவாகவும் பதங்கித்து நிற்கும். இந்தப் பதங்கத்தைத் தனித்தனியே எடுத்து வைத்துக்கொண்டு வில்லையை மாத்திரம் பொடித்துச் சிலர் உபயோகிப்பது உண்டு. சிலர் வில்லையுடன் பதங்கத்தைச் சேர்த்துப் பொடித்து உபயோகிப்பார்கள். பதங்கத்

தைச் சேர்த்து உபயோகித்தால் வாய்பிடிக்கும்' பதங்கத்தைச் சேர்க்காமல் உபயோகித்தால் அதிக குணந்தராது. இந்த இருவகையும் நல்ல வழிமுறை அல்லவென பழக்கத்தால் நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. ஆகையால் முன் வில்லையை எடுத்துப் பொடித்துப் பதங்கத்தையும் சேர்த்து முன் கற்றுழஞ் சாற்றை முன்போல் சிறுகச் சிறுக விட்டு இரண்டு அல்லது மூன்று சாமம் அரைத்து முன்போல் ஆலம்பழுப்பைக் கீழ்மேல் இட்டுச் சட்டியிலிட்டு முன்போல் மேல்சட்டி மூடிச் சீலைமண் செய்து 4 சாமம் எரிக்க வேண்டும். குளிர ஆறினபின் எடுத்தால் முதல் தடவை கண்ட பதங்கத்தில் அரைவாசிதான் பதங்கித்திருக்கும். ஆகையால் இன்னும் முன் கண்டபடியே இரண்டு தடவை மடக்கி எரித்துக் கொண்டால் இரசமானது மேலேறிப் பதங்கிக்காமல் மருந்துடனே சேர்ந்து நின்றுபோம். இப்படிச் செய்வதால் மருந்தின் குணமும் மேன்மைப் படுவதுமின்றி வாய்பிடிக்கும் தீக்குணமும் நீங்கிப் போகும். இந்த மருந்துகளைச் சோம்பலின்றித் துன்பத்தைப் பாராது ஊக்கத்துடன் செய்து முடிப்பவர்களுக்கு எல்லாவித நல்வினைப் பயன்களும் உண்டாகும்.

இந்தப் பாகத்தில் தூய்மைசெய் முறைப்படி ஒரு வராகன் எடை (3½ கிராம்), முதல் பத்து விராகன் எடை (35 கிராம்), வரையில் தங்க அரப்பொடியைச் சேர்த்துச் செய்து கொண்டால் மிகச் சிறப்பான குணத்தைத் தரும்.

இதனுடன் தங்கத்தைச் சேர்த்து செந்தூரிக்கும் விதம் :— முதல்தடவை எரித்தெடுத்தபின் அதனுடன் தங்கப்பொடியைச் சேர்த்தரைத்துக் கற்றுழஞ் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி சட்டியில் வைத்து எரித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மூன்று நான்கு தடவை மடக்கி மடக்கி எரித்துக் கொண்டால் முன் செந்தூரத்துடன் சேர்ந்து தங்கமும் செந்தூரமாகிவிடும்.

தீரும்நோய்கள், துணைமருந்து, மருத்துணவு எல்லாம் முன் முறையில் சொல்லியவைகளேயாம்.

குறிப்பு

முன் சொல்லப்பட்டிருக்கும் முறையில் மனோசிலை சேர்க்கப் பட்டிருக்கிறது. காந்தம் சேர்க்கப்படவில்லை; பின் சொல்லப்பட்ட முறையில் காந்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. மனோசிலை சேர்க்கப்படவில்லை; இவ்விரண்டிலும் உள்ள வேறுபாடு இதுதான். ஆனால் குணத்திலோ முதல் சொன்ன முறை

யானது முதல் தரமானது என்றும், பின் சொல்லப்பட்ட முறை யானது இரண்டாம் தரமுள்ளது என்றும் சொல்லலாம். தங்கம் சேர்த்துச் செய்யப்பட்ட முறையானது தாதுக் குறை, விந்து வெளிப்பாடு ஆகியவைகளை நீக்கித் தாதுவிருத்தியை உண் டாக்கும்.

65. அறுமுகச் சூரணம்

பாவனைச் செய்த மண்டூரம் 5 பலம் (175 கிராம்), தூய்மை செய்த அயம் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த காந்தம் 1 பலம் (35 கிராம்), இளவறுப்பாக வறுத்து இடித்து துணியில் வடிகட்டிய அரிசித்திப்பிலித்தூள் 1 பலம், வறுத்து இடித்து துணியில் வடிகட்டிய மிளகுத் தூள் 1 பலம் (35 கிராம்), கீழ்க் கண்டபடி பாவனை செய்த பிரண்டைச் சூரணம் 1 பலம், (35 கிராம்), கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

பிரண்டைப் பாவனை :— முப்பிரண்டை அகப்பட்டால் உத் தமம். அது அகப்படாதபோது சாதாரணப் பிரண்டையை எடுத்துக் கொள்ள வேண்டும். இது அதிக முற்றலாயில்லா மலும் அதிக இளசாயிராமலும் நடுத்தரமாக இருக்க வேண் டியது. இதனை அரை அங்குலமுள்ள துண்டுகளாகத் துண்டித் துக் கொள்ளவேண்டும். பிறகு இதனைப் படியாலளந்து இதற்கு இரண்டு பங்கு புளித்தமோரில் போட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். மறுநாட் காலையில் இந்த மோரை இறுத்துவிட்டு முன்போல் புதிதாகப் புளிப்பு மோரை அதில் விட்டு வெய்யி லில் வைக்கவேண்டும். மறுநாட் காலையில் அந்த மோரை இறுத்துவிட்டு மூன்றுந் தடவையில் முன்போல் புதிதாகப் புளிப்பு மோரை விட்டு வெய்யிலில் வைத்து மறுநாட் காலையில் மோரை இறுத்துவிட வேண்டும். இவ்விதம் மூன்று தடவை செய்வதால் பிரண்டையிலுள்ள கரகரப்பு முதலியன எல்லாம் எடுபட்டு, அதற்கு நல்ல குணமுண்டாகித் தூய்மை அடையும். நாலாம் நாள் முன்னளவு புதிதாகப் புளிப்பு மோரை அதில் விட்டு, அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மோரெல்லாம் அதிலேயே சுண்டும்படியாகச் செய்யவேண்டும். பிறகு எடுத்து அதனை வெய்யிலில் போட்டு உலர்த்திக் கல்லுரலில் இடித்துத் துணியில் வடிகட்டி பத்திரப்படுத்த வேண்டியது. இப்படிப் பாகப்படுத்தினதில் மேற்கண்ட எடை எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்கண்ட தூளைத் தனியாகவே பயன் படுத்தலாம். இதனைத் தயிர், தேன், இஞ்சிச்சாறு ஆகிய தகுந்த துணைமருந்துகளில் கலந்து கொடுத்தால் கழிச்சல், குருதிக் கழிச்சல், குருதி எருவாய்முளை, கபத்தொல்லை,

கால் அசதி, சூட்டு மந்தம், குன்ம நோய் ஆகியவை போம்.

செய்முறை :— அயத்தையும், காந்தத்தையும் கல்வத்தில் இட்டுக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு, ஒரு சாமம் அரைக்க வேண்டும். பிறகு உலரும்படியாக வெய்யி லில் வைக்க வேண்டும். இது ஒரு பாவனையாம். பிறகு அதைப் பொடித்து மறுபடியும் கையாந்தகரைச் சாற்றைவிட்டு முன்போல் அரைத்து முன்போல வெய்யிலில் வைத்து உலர்த்த வேண்டும். இது இரண்டாம் பாவனையாம். இவ் விதம் மடக்கி மடக்கி ஏழு பாவனைகள் செய்து கொள்ள வேண் டியது. பிறகு கல்வத்தில் நன்ருகப் பொடித்து எடுத்து மற்ற சூரணங்களையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு இரண்டு மணிநேரம் அரைத்துக் குப்பியில் சேமித்து வைக்கவேண்டும்.

அளவு :— 2¼ முதல் 3½ வராகன் எடை.

துணைமருந்து :— தேன், பனைவெல்லம், நெய், வெள்ளரி விதை சர்பத், சுரைக்காய் இளகம் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :— பாண்டு, சோகை, பித்தவெட்டை ஆகியவைகள் தீர்ந்து குருதிப்பெருக்கு உண்டாகும்.

மருத்துணவு :— சமயோசிதம்போல் புளி, புகை, போகம் ஆகியவைகளை நீக்கவும்.

குறிப்பு

இந்தச் சூரணத்தை மேற்கண்ட விதமாக பயன்படுத்து வதிலும் கீழ்க்கண்டபடி இளகமாகவும், சம்பீர கற்பமாகவும் உபயோகிக்கலாம். அவை பின்வருமாரும்.

அறுமுக இளகம் :— மேற்கண்ட அறுமுகச் சூரணத்திற்குச் சமனெடை பனைவெல்லம். இதனை நீரில் கரைத்து அடுப் பேற்றி ஒருகொதி வந்தபின் சீலையில் வடிகட்டி அதிலுள்ள அழுக்கு முதலியவற்றை நீக்கி விட வேண்டும். காய்ச்சின பாத்திரத்தின் அடியிலுள்ள மண், சுண்ணும்பு முதலியவைகளை யும் தண்ணீர் விட்டுக் கழுவி நீக்கிப் பின் அந்தப் பாத்திரத்தி லேயே முன்பாகை விட்டுக் காய்ச்சிப் பாகு பதத்தில் கீழிறக்கி மேற்படி சூரணங்களைப் போட்டு மத்தால் நன்ருய்க் கடைந்து இரண்டரைப்பலம் (87½ கிராம்) பசுநெய், இரண்டரைப்பலம் (87½ கிராம்) தேன் ஆகிய இரண்டையும் அதில் விட்டு

நன்ருகக் கலந்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது.

அளவு :— 5 முதல் 7½ வராகன் எடை.

தீரும் நோய்கள் :— மேற்கண்ட நோய்களெல்லாம் தீரும். இது சாப்பிடுவதற்கு சுவையாகவும், பார்வைக்கு நன்ருகவும் இருக்கும். கெட்டுப் போகாமல் நீண்ட நாள் வைத்திருக்கலாம்.

அறுமுக சம்பீர கற்பம் :— மேற்கண்ட அறுமுகச் சூரணம் 10 பலம் (350 கிராம்), நடுத்தரமான எலுமிச்சம்பழம் 10, நல்லெண்ணெய் 10 பலம் (350 கிராம்). மேற்கண்ட எலுமிச்சம் பழங்கள் ஒவ்வொன்றையும் நந்நான்காகப் பிளந்து அதில் உள்ள விதைகளை நீக்கிவிட வேண்டும். ஒவ்வொரு பழத்திலும் மேற்கண்ட சூரணம் 1 பலம் (35 கிராம்), வைத்து ஒரு மண் சட்டியில் அடுக்கி நல்லெண்ணெயை அதன்மேல் விட்டு மறு சட்டியால் மூடி இரண்டடிப் பள்ளத்தில் புதைத்து விடவேண்டும். நாற்பது நாள் சென்றபின் எடுத்து வேளை யொன்றிற்கு ஒவ்வொரு கீற்ருகச் சாப்பிட்டுவர, மேற்கண்ட நோய்களெல்லாம் தீரும்.

அல்லது பழங்களை எடுத்து அம்மியில் வைத்தரைத்துச் சமனெடை பனைவெல்லத்தைப் பாகுசெய்து முன்போல் இளக மாகவும் செய்து கொண்டு உபயோகித்தால் புளிப்பும் இனிப்பு மாகச் சாப்பிடுவதற்கு மிக்க சுவையாக இருக்கும். மேற்கண்ட நோய்கள் தீர்வதுடன் சுவையின்மை பித்தகக்கல், பித்த வாந்தி, உணவேற்காமை, சூட்டுமந்தம் ஆகியவைகள் தீர்ந்து செரிப்புச்சத்து அதிகப்பட்டு சாப்பாடு முதலியவைகள் மிகுதியாகச் சென்று குருதிப்பெருக்கு முதலியவைகள் உண் டாகும்.

66. அறுமுக வடகம்

தூய்மை செய்த அய அரப்பொடி 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த காந்தம் 1 பலம் (35 கிராம்), பாவனை செய்த மண்டூரம் 1 பலம் (35 கிராம்), சிறுபுள்ளடி வேரை உலர்த்தி இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 பலம் (35 கிராம்), கையாந்தகரைச் சமூலத்தை உலர்த்தி இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 பலம் (35 கிராம்), மிளகை இளவறுப்பாக வறுத்து இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு, எள்ளெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் அயத்தையும் காந்தத்தையும் கல்வத்திலிட்டு அரைத்து முன்பாகத்தில் சொல்லி இருக்கிறபடி மூன்று பாவனை செய்து கொள்ள வேண்டும். பிறகு மற்ற நான்கு சரக்குகளையுஞ் சேர்த்து முன்போலவே எலுமிச்சம் பழச் சாற்றைவிட்டு ஒருசாமம் அரைத்து உலர்த்த வேண்டும். மறுபடியும் முன்போலவே எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு ஒரு சாமமரைத்து உலர்த்தவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு பாவனைகள் செய்து, $\frac{3}{4}$ வராகன் எடையுள்ள மாத்திரைகளாக உருட்டுக. மேற்படி நல்லெண்ணெயை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு மேற்கண்ட மாத்திரைகளை அதில்போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து பத்து நாள் வைத்திருந்து பிறகு எடுத்து உபயோகிக்க வேண்டும். கலயத்தில் விடும் எண்ணெயானது மாத்திரைகளின்மீது ஒரு அங்குலம் நிற்க வேண்டியது.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ மாத்திரை.

துணைமருந்து :— சருக்கரை, பனைவெல்லம், வில்வாதி இளகம் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :— பாண்டு, சோகை, பித்த வெட்டை ஆகியவைகள் தீரும், சுவையின்மை, கக்கல், சூட்டுமந்தம் ஆகியவைகளும் குணமாம்.

மருத்துணவு :— சமயோசிதம்போல புளி, புகை ஆகியவைகளைச் சேர்த்தும் சேர்க்காமலும் பத்தியம் வைக்கவேண்டியது. போகத்தை அறவே நீக்கவேண்டியது.

67. அஷ்டபாண்டு விநோத மெழுகு

தூய்மை செய்த அய அரப்பொடி 4 பலம் (140 கிராம்), சிறுபுள்ளடி வேர்ப்பட்டை 4 பலம் (140 கிராம்). (இந்த வேரை நிழலிலுலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்தபின் நன்ருய் இடித்து துணியில் வடிகட்டிய தூளில் மேற்கண்டபடி 4 பலம் எடுத்துக்கொள்ள வேண்டும்). எலுமிச்சம்பழச் சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :—மேற்படி அரப்பொடியை அம்மியில் வைத்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து மெழுகு போலான பின்பு முன்னர் பொடித்த தூளையும் கூடச் சேர்த்து முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வெண்ணெய்போல் ஆனபின்பு எடுத்துக் கொள்ளவும். காற்படி எலுமிச்சம்பழச் சாற்றில்

அதைக் கரைத்து வேறு பாத்திரத்தில் இறுத்துக் கொள்ள வேண்டும், அடியில் அரைபடாமல் இருக்கிற அரப் பொடியை அரித்தெடுத்து முன்போல் அம்மியில் வைத்து முன் போல் பழச்சாற்றை விட்டு அரைக்கவேண்டும். பிறகு முன் போல் எலுமிச்சம்பழச் சாற்றில் கரைத்து இறுத்துக் கொண்டு அடியில் அரைப்படாமல் இருக்கும் அயப் பொடியை முன் போல் அம்மியில் வைத்து அரைக்க வேண்டும். இவ்விதம் அரப் பொடியானது கொஞ்சமும் மிச்சமில்லாமல் கரைத்துக் கரைத்து அரித்தெடுத்து அரைத்து அரைத்துக் கரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும், இவ்விதம் இறுத்தெடுத்த சத்தை எல்லாம் ஒன்ருகச் சேர்த்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு வெய்யிலில் வைத்து வரவேண்டும். நாள்தோறும் மூன்று அல்லது நான்கு தடவை நன்ருய்க் கலக்கிவிட்டும் வரவேண்டும். அதில் தூசு தும்பு விழாதபடி அதன் வாய்க்கு மெல்லிய வலே முதலியவைகளால் வேடு கட்டியும் வைக்க வேண்டும். இவ்விதம் செய்து வந்தால் நீரெல்லாம் சுண்டி மெழுகு பதம் ஆகிவிடும். அந்தப் பதத்தில் எண்பது மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு :— வேளையொன்றிற்கு ஒரு மாத்திரையாக காலே மாலே இரண்டு வேளேயும் நாற்பதுநாள் சாப்பிடவேண்டும்.

துணேமருந்து :— தேன். நெய், சுக்குக் குடிநீர், சோம்புத் தீநீர், சோம்புக் குடிநீர், வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— எண்வகைப் பாண்டு, பித்த வெட்டை, சோகை. மஞ்சள் நோய், நச்சுப்பாண்டு ஆகியவை தீரும்.

மருத்துணவு :— உடற்பண்பு, உடல் வலிமை, நோய் வன்மை ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாக இலகு பத்திய மாகவும், கடின பத்தியமாகவும் வைக்கவேண்டும். குறிப்பாக புளி, புளிப்புப் பண்டங்கள் முதலியவைகளேயே நீக்க வேண்டும்.

68. குமாரவீரியக் காந்தச் செந்தூரம்

தூய்மை செய்த காந்தம் 8 பலம் (280 கிராம்). (இது ஏழு ஊசி பிடிக்கிறதாஞல் மிக்க உயர்வானதாகும்.) துரா இலேச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— காந்தத்தை கல்வத்திலிட்டு நன்ருகப் பொடித்துத் தூளானபின் மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைக்கவேண்டும். இதனை ஒரே முறையில் அரைக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு சாமமாக அரைத்துக் கொள்ளலாம். மேற்கண்ட நான்குசாமம் அரைத்தபின்பு காலணு அகலமுள்ள சிறு பில்லைகளாகச் செய்து உலர்த்தி ஈரமில்லாமல் நன்ருய் உலர்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து அதையும் உலர்த்திக் கெசபுடம் இடவேண்டும். அதாவது: மூன்றடி அகலம், மூன்றடி நீளம், மூன்றடி ஆழம் உள்ள குழி தோண்டி அது நிறைய எருவடுக்கி அதன் நடுப் பாகத்தில் இதை வைத்துப் புடமிடுவதேயாம். புடம் நன்ருய்க் குளிர ஆறினபின் எடுக்க மிகச் சிறப்பான செந்தூரமாய் இருக்கும்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய், சமயோசிதமான இள கங்கள், நெய்கள் ஆகியவைகளாம்.

பயன்படுத்தல் :— இதனை எல்லாவித நோய்களிலும் பயன் படுத்தலாம். இது இன்ன நோய்க்கு உதவும், இன்ன நோய்க்கு உதவாது என்னும் விதியில்லை. இது குருதிப் பெருக்கை உண்டாக்கி நரம்புகளுக்கு முறுக்கேற்றி முது மையைப் போக்கி இளமையை உண்டுபண்டும். ஆகையினுல் இதற்கு குமார வீரியச் செந்தூரமென்று பெயரிடப்பட்டு இருக்கிறது.

மருத்துணவு :— செரிப்புச்சத்திக்குத் தகுந்தவாறு காய்ச் சிக் கற்கண்டிட்ட பாலை, மேற்படி செந்தூரத்தை உட்கொண்ட வுடன் சாப்பிட்டு வரவேண்டும். பால் பாயசம், பால் அல்வா, கோதுமைப்பால் அல்வா, வாதுமை அல்வா, ஆகி யவைபோன்ற சத்துள்ள உணவுகளைப் பயன்படுத்த வேண் டும். அசைவ உணவு உண்பவராஞல் ஆட்டிறைச்சிச் சூப்பு, புலவு, கிச்சடிச் சாதம், பொரித்த ஆட்டிறைச்சி, கோழி முட்டை, கீழ்ச் சொல்லப்படும் சிற்றண்டச் சிந்தாமணி ஆகிய வைகளை உபயோகித்து வரவேண்டும்.

சிற்றண்டச் சிந்தாமணி :— செரிக்கும் சக்திக்குத் தகுந்தபடி ஒன்று அல்லது இரண்டு கோழிமுட்டைகளை உடைத்து ஒரு பாத்திரத்திலிட்டு மஞ்சள்கரு, வெள்ளைக்கரு ஆகிய இரண் டையும் கலந்துப் போகும்படியாகக் கைவிரலால் மத்தித்தால் அல்லது மூங்கில் துடுப்பால் கடைந்தால் எல்லாம் நுரைத்துப்

பொங்கிப் போகும். முன் முட்டைக்கரு அளவு இஞ்சிச் சாறு, அந்த அளவே வெங்காயச் சாறு, அந்த அளவே தேன், அந்த அளவே நல்ல நெய், அந்த அளவே கரும்புச்சாறு ஆகிய எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து நன்ருகக் கலந்து நெய்ப்பசைச் சட்டியில் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து அதனைக் கிளறிக் கொண்டு வந்தால் முடிவில் இளகம்போல் ஆகும். இதனைக் காலையில் சித்தப் படுத்தி மேற்படி செந்தூரத்தை இதில் சேர்த்துச் சாப்பிட வேண்டும் அல்லது செந்தூரத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டுவிட்டு அதன்மேல் இந்தச் சிந்தாமணியைச் சாப்பிட லாம், மாலை செந்தூரத்தை மாத்திரம் தேனில் அல்லது நெய்யில் குழைத்துச் சாப்பிடலாம். இவ்விதம் இருபது நாள் செய்து வந்தால் தாது நலமின்மை, விந்து வெளிப்பாடு ஆகிய வைகள் தீர்ந்து உடல் வலிமை, தாதுவிருத்தி முதலியவைகள் உண்டாகும். உடல்வலிமை உடற்செழிப்பு முதலியவைகளும் அதிகப்படும்.

குறிப்பு

மேற்படி காந்தத்தை மேற்கண்டபடி ஒரே புடத்திலும் செந்தூரித்துக் கொள்ளலாம். அப்படிச் செய்ய வசமில்லாத வர்கள் தூய்மை செய்த ஒருபலம் (35 கிராம்), காந்தத்தை மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து முன்போல் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு இருபது பங்கு எடை வறட்டியில் புடமிட்டுக்கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று அல்லது ஐந்து புடம் போட்டு எடுத்துக்கொண்டால் மிகச் சிறப்பான செந்தூர மாகி இருக்கும்.

இன்னும் இதனுடன் ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தங்கத் தைச் சேர்த்து முன் சாற்றைவிட்டே அரைத்து முன்போல் புட மிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட்டால் தங்கமுஞ் சேர்ந்து செந்தூரமாகிவிடும். அப்படிச் செந்தூர மானதில் வேளை ஒன்றுக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றிமணி எடையை மேற்கண்ட துணைமருந்துகளில் உட்கொண்டு மேற்கண்ட சிற்றண்டச் சிந்தாமணியையும் உபயோகித்து வந்தால் உடல் வலிமை, உள்ள உறுதி, தாது விருத்தி, தாதுச் செழிப்பு, உடல் வளமை முதலியவைகள் எல்லாம் உண்டா கும். இக் குணங்களெல்லாம் காந்தத்தின் குணத்திற்கும், அரைப்பின் அளவிற்கும் புடத்தின் எண்ணிற்கும் தகுந்தது

போலிருக்கும். இக்காலங்களில் தகுந்த காந்தங் கிடைக்காத படியால் இதனைக் கையாளுவதற்குக் கூடாமையாய் இருக்கிறது. இது ஒரு காலத்தில் வராகனெடை 25 (87½ கிராம்) முதல் 30 (122½ கிராம்) வரையில் விற்கப்பட்டும் அநேகரால் கையாண்டும் அனுபவ சித்தமாக நிச்சயிக்கப்பட்ட அரிய முறை. இப்போது நல்ல காந்தங் கிடைக்காவிட்டாலும் எப்போதாயினும் கிடைக்கும். அல்லது நல்ல காந்தத்தை வரவழைத்துக் கொள்ளும் சக்தியுள்ளவர்களும் இருக்கலாம். அப்போது செய்து கொள்ளக்கூடும் ஆகையால் இந்தப் பாகத்தை இங்கு எழுத நேரிட்டது.

69. அயவீரச் செந்தூரம்

கீழ்க்கண்டபடி பாவனை செய்த அயம், கீழ்க்கண்டபடி பாவனை செய்த வாலைரசம், கீழ்க்கண்டபடி பாவனை செய்த வீரம், கீழ்க்கண்டபடி பாவனை செய்த லிங்கம், கீழ்க்கண்டபடி பாவனை செய்த நவச்சாரம், இந்த ஐந்து சரக்குகளும் வகைக்கு 1 பலம் (35 கிராம்), நாயுருவிச் சாறு செல்லத்தக்க அளவு.

அயப் பாவனை :— தூய்மை செய்த அயப் பொடியைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு ஒரு சாமம் மெதுவாய் அரைத்து நீரைவிட்டுக் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மூன்று தடவை செய்து கழுவி எடுத்து வெய்யிலில் உலர்த்தி மேற்கண்ட எடை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பாலரசப் பாவனை :— 2 பலம் (70 கிராம்), வாலை ரசத்தைக் கல்வத்தில் போட்டு 2 பலம் (70 கிராம்), சீனக்காரத்தைச் சேர்த்து தண்ணீர் ஊற்றி ஒருமணி நேரம் அரைக்கவேண்டும். பிறகு தண்ணீர்விட்டு நன்ருய்க் கழுவி இறுத்து நீக்கி முன் போல் 2 பலம் (70 கிராம்), சீனக்காரத்தைப் போட்டு முன் போல் நீர் விட்டு ஒருமணி நேரம் அரைக்க வேண்டும். பிறகு முன்போல் நீர் ஊற்றிக் கழுவி இறுத்து நீக்கிவிட்டு மூன்ருந் தடவையும் 2 பலம் (70 கிராம்), சீனக்காரத்தைப் போட்டு முன்போலவே அரைத்து முன்போலவே கழுவி எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு வெய்யிலில் வைத்து ஈரமெல்லாம் உலர்ந்தபின் கெட்டித் துணியில் வைத்துப் பிழிய வேண்டும், இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினெரு தடவை அல்லது இருபத்தொரு தடவை செய்து மேற்கண்ட நிறை நிறுத்தெடுத்துக் கொள்ளவும்.

வீரப் பாவனை :— பருமனான தென்னங் குரும்பையைக் குடைந்து அதில் வீரத்தை வைத்துக் குடைந்த துண்டுகளினால் அத் துவாரத்தை அடைத்துக் குரும்பையின்மீது மூன்று சீலை மண் செய்து கவசத்தின் எடைக்கு ஆறுபங்கு எடை வறட்டி யில் புடமிடவேண்டும். இந்த ஆறு பங்கு வறட்டியில் மூன்று பங்கைக் கீழடுக்கி அதன் மேல் குரும்பையை அதன் வாயானது மேல் பக்கமாக இருக்கும்படியாக வைத்து மற்ற மூன்று பங்கையும் அதைச் சுற்றிலும் அடுக்க வேண்டியது. வாயின் மேல் ஒரு துண்டு வறட்டி இருந்தால் போதுமானது. குரும் பையின்மீது அதிக வறட்டியை அடுக்கினால் வீரம் ஓடிப்போக ஏதுவாகும். அப்படி இல்லாமல் மேற்கண்ட விதமாகப் புடம் போடுவதே அவி புடமாம். நன்றாய் ஆறினபின் எடுத்து முன் போல் வேறொரு குரும்பையைக் குடைந்து அதிலடைத்து முன் போல் புடம் போடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துப் புடமிட்டு எடுத்துக் கொள்வதே வீரப் பாவனையாம். இதனால் வீரம் தூய்மையாவதுடன் காற்கட்டுமாகும். சக்தி உள்ளவர்கள் நாற்பது அல்லது ஐம்பது தடவைகள் மேற் கண்டபடி செய்துகொண்டால் வீரமானது முழுக் கட்டாகும். இதனையே தனியாக அநேக நோய்களில் பயன்படுத்தலாம். இந்த அய வீரச் செந்தூரத்தில் சேர்ப்பதற்காக மேற்கண்டபடி 10 பாவனைகள் செய்துகொண்டால் போதுமானது. இவ்விதம் செய்த பின்பு மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டியது.

இலிங்கப் பாவனை :— சாதிலிங்கம் 1½ பலம் (52½ கிராம்), பால் சாம்பிராணி 1½ பலம் (52½ கிராம்), தீப கர்ப்பூரம் 1½ பலம் (52½ கிராம்), சாம்பிராணியையும் சூடனையுஞ் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்தால் மெழுகு போல் ஆகும். நன்றாய் மெழுகு பதமாகிற வரையில் அரைத்துப் பத்துப் பாகமாகச் செய்து நாலங்குல சதுரமுள்ள பத்து துணித் துண்டுகளில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு துண்டில் பிளாஸ்திரியைப் போல் தடவி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு துண்டை மேற்படி லிங்கக் கட்டியின் மீது சுற்றிக் கைவிரலால் மெது வாய் அழுத்தி இருதலைப்பையும் திரித்துவிட்டுக் கட்டியைக் குறட்டிற் பிடித்துக் கொண்டு ஐந்தாறு நூற்கனமுள்ள திரி போட்டு விளக்கெண்ணெய் அல்லது நெய்வார்த்த விளக்கில் வாட்டவேண்டும். நான்கு பக்கமும் விளக்குச் சுடரானது சமமாய்ப் படும்படியாகத் திருப்பித் திருப்பி வாட்டவேண்டும். நாலு பக்கமும் தீப்பற்றி எரிந்து அடங்கினபின் தனியே வைத்து நன்றாய்க் குளிர ஆறினபின் மேல் பிடித்திருக்கிற

கருக்கைக் கத்தியால் சுறண்டி நீக்கிவிட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற மற்ருெரு துண்டைச் சுற்றி முன்போல் விளக்கில் வாட்டவேண்டும். எல்லாம் பற்றி எரிந்து அடங்கினபின் தனியே வைத்து நன்ருய்க் குளிர ஆறினபின் முன்போல் கத்தியால் கருக்கைச் சுறண்டி நீக்கி முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற மற்ருெரு துண்டு துணியைச் சுற்றி முன்போல் வாட்டவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவை செய்து கொள்வதே லிங்கப் பாவனையாம். இப்படிப் பாவனை செய்யப்பட்ட லிங்கத்தில் மேற்கண்ட அளவு நிறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

நவச்சாரப் பாவனை :— நாட்டு நவச்சாரமாய் இருந்தால் உத்தமம். அது அகப்படாவிட்டால் சீமை நவச்சாரத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), இது ஒரே கட்டியாய் இருக்கவேண்டும். நாலாங்காய்ச்சல் கம்பி வெடியுப்பு 6 பலம் (210 கிராம்), இதனை நன்ருகப் பொடித்து ஒரு கலயத்தில் அரைவாசியைப் போட்டுச் சமமாய் அழுத்திவிட்டு அதன்மேல் நவச்சாரக் கட்டியை வைக்க வேண்டும். அதன்மேல் மற்ற பாதிக் கம்பி வெடியுப்புத் தூளைப் போட்டுக் கட்டி தெரியாமல் சமமாக மூடி அழுத்திவிட்டு இரண்டு கோழிமுட்டை மஞ்சட் கருவையும், $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), விளக்கெண்ணெயையும் அதில் விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்யாமல் கலயத்தின் எடைக்கு 6 பங்கு வறட்டியில் புடமிடவேண்டும். புடமானது கலயத்தின் கழுத்தளவுதான் இருக்கவேண்டும். புடம் நன்ருய் எரியும் போது ஒருவகை வெடிசப்தம் உண்டாகும். எட்டி இருந்து கொண்டு நீண்ட இரும்புக் குறட்டால் கலயத்தின் மீதுள்ள ஓட்டை மெதுவாக நீக்கிவிட வேண்டும். பிறகு அப்படியே விட்டு வைத்து நன்ருய்த் தீ ஆறினபின் எடுத்துக் கட்டியின் மீதுள்ள வெடியுப்பு முதலியவைகளைச் சுறண்டி நீக்கிவிட வேண்டும். இதுவே நவச்சாரத்தின் பாவனையாம். இப்படிச் செய்வதினுல் ஒருவகைத் தூய்மையும் ஒருவகைக் கட்டுமாம். இப்படிச் செய்தபின்பு மேற்கண்ட அளவு நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

செய்முறை :— மேற்கண்ட ஐந்து சரக்குகளையும் கல்வத்தி லிட்டு ஒன்றுபட நன்ருய்ப் பொடித்து நாயுருவிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுப் பன்னிரெண்டு சாமம் அரைக்க வேண்டும். இந்தப் பன்னிரெண்டு சாமமும் ஒரே தடவையாக அரைக்கவேண்டும் என்னும் நிபந்தனை இல்லை. தினம் இரண்

டிரண்டு சாமமரைத்து உலர்த்திக் கொள்வது ஒரு பாவனை யாம். இவ்விதம் இந்தப் பன்னிரண்டு சாமத்தையும் ஆறு பாவனையாகச் செய்து அரைத்துக் கொண்டால் மிகவும் சிறப் பான குணத்தைத் தரும். மேற்கண்ட பன்னிரெண்டு சாமமும் அரைப்பேறின பின் எல்லாவற்றையும் சிறு வில்லைகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்து வெய்யிலில் உலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு பழையபடி கல்வத்திலிட்டுப் பொடித்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு புது மண் ஓட்டை அடுப்பின்மீது வைத்துச் சூடு கண்ட வுடன் முன் பொடியைப் போட்டு நாயுருவிக் கொம்பால் துளாவி வறுக்க வேண்டும். புகை அதிகமாக எழும்பினால் ஓட்டைக் கீழே இறக்கி வைத்துக் கொண்டு வறுக்க வேண்டி யது. மருந்து அடுப்பின்மீது இருக்கும்போது அடுப்பானது விளக்குப்போல் எரிய வேண்டியது. இந்த மருந்திலுள்ள நுட்ப மெல்லாம் இதனை வறுத்து எடுப்பதிலேதான். சாந்தமாகவும் நிதானமாகவும், பொறுமையுடனும், புத்தியுடனும் செய்தால் எந்த விவகாரத்தையும் பூர்த்தியாகவும், திறமாகவும் செய்து முடிக்கலாம். "அவசரக்காரனுக்குப் புத்திமட்டு" என்பது போல அவசரப்படுவதினால் எல்லாக் காரியமும் கெட்டுப்போக நேரிடும். ஆகையால், முக்கியமாக இந்த மருந்தைச் செய்யும் போது மருந்தையும் தீயையும் கவனித்துச் உசிதம்போல் தீயைக் குறைத்தும் ஓட்டைக் கீழிறக்கியும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியது. இவ்விதம் வறுத்து வந்தால் செந்தூர மானது கருஞ்செம்மையான வண்ணமுள்ளதாக இருக்கும். அதாவது, குருவிக் குருதிபோன்ற சிவந்த வண்ணமாய் இருக் கும். வறுக்கும்போது புகையானது கண்ணில் நேரே படாமல் மிக்க விழிப்புடன் இருக்கவேண்டும். நாயுருவி வேர்களை அல்லது நாயுருவிச் செடிகளைத் துடுப்பைப்போல கட்டிக் கொண்டு துழாவுவது உசிதம். கைவிடாமல் துழாவிக்கொண் டிருக்க வேண்டியதும் இதன் செய்பாகத்தில் முக்கியமான ஒரு அம்சம். இதையும் இதனைச் செய்பவர்கள் கருத்தில் அமைத்து வைக்கவேண்டியது. மருத்துவர்களுக்கு அவசிய மாக வேண்டிய கருவிகளில் இதுவும் முக்கியமான ஒன்று ஆன தாலும் அவசரமான காலங்களில் பயன்படுத்தக் கூடிய பெரிய மருந்துகளில் ஒன்று ஆகையாலும் இதனை அலட்சியம் செய் யாமல் அதிக விழிப்புடனும் அதிக கவனத்துடனும், அதிக நம் பிக்கையுடனும் செய்து எப்போதும் தங்கள் கைவசத்தில் வைத் திருப்பார்களென நம்புகின்றோம். இதில் மிக்க வீறுடைய வீரம் சேர்ந்திருக்கிறதே, அதனால் வாய்வேக்காடு ஆகிய துன்பங்கள் உண்டாகுமே? என ஐயப்பட்டு மலைத்துப் பயப்படலாகாது.

இதனைப் பயன்படுத்துகிற முறையில் பயன்படுத்தினுல் வாய் வேக்காடு முதலிய தீய குணங்கள் ஒன்றுமே உண்டாகாமல் ஆபத்துக்காலங்களில் பயன்படுத்தி அநேகரைக் காப்பாற்ற ஏதுவாகும்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— பனைவெல்லம், இளகங்கள், சுக்கை அரைத்த விழுது ஆகியவைகளாம். வெல்லத்தைக் கையில் வைத்து நைப்பாக்கி அதற்குள் செந்தூரத்தை வைத்துப் பொதிந்து உருட்டி வாயில் போட்டு விழுங்கி விட வேண்டும். முக்குற்றம் முதலிய நோய்களில் பல் கிட்டிக் கொண்டால் முலைப்பால், இஞ்சிச் சுரசம் முதலியவைகளில் கரைத்துச் செலுத்த வேண்டும். உடல் தன்மை, நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி மூன்று நாள், ஐந்து நாள் கொடுக்க வேண்டும். நோய் நாள்பட்டதாய் இருந்து அதிக நாள் பயன்படுத்த வேண்டியதாய் இருந்தால் உடல் தன்மைக்குத் தகுந்தபடி மூன்று நாள் அல்லது ஐந்து நாள் பயன்படுத்தி இடையில் ஒருவாரம் அல்லது பத்து நாள் விட்டு மறுமுறை கொடுக்க வேண்டும். இவ்விதம் மூன்று முறை ஐந்து முறை ஏழு முறை கொடுத்தால் எத்தனை நாள்பட்ட நோயாயினும் வாலறிவன் அருளால் குணமாகி விடும். சில ருக்குத் தொடர்ச்சியாக இருபது நாள் கொடுத்தும் வாய் வேக்காடென்பது கொஞ்சமுங் காணவேயில்லை. ஆகையால் இதனைப் பயன்படுத்திக் கொண்டு வரும்போது பல்லீற்றில் நோவு முதலியவை கண்டாலும், வாய் நீர் அதிகமாக ஊறினு லும், வாய் வெந்தாலும் உடனே மருந்தை நிறுத்திவிட வேண் டியது. மூன்று நாளில் ஐந்து நாளில் வாய் வேகிறது இல்லை ஆயினும் மருத்துவர்கள் கவனித்துக்கொண்டு வரவேண்டியது. அப்படி ஏதேனும் தீயகுணம் காணுகிறதாய் இருந்தாலும், கண்டாலும் கெந்தகப் புளிப்பை (Diluted-Sulphuric Acid) நீரில் விட்டு வாய் கொப்புளித்துக் கொண்டு வந்தால் உடனே சாந்தமாகி விடும் மருந்தை உபயோகிக்கும்போது தாம்பூலந் தரித்துக் கொண்டாலும் இது வேகம் செய்கிறதில்லை. ஆனுல் சாந்தமாகக் குணத்தைத் தரும். இக் கருத்துகளெல்லாம் மருத்துவர்கள் தம்தம் பழக்கத்தால் நிச்சயித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவைகள். ஆயினும் நமது சிற்றறிவிற்கு எட்டினவரையில் நமது பழக்கத்தில் தெரிந்தவைகளை எழுதி இருக்கின்ருேம்.

தீரும் நோய்கள் :— மாரடைப்பு, உருத்திரவாயு, பக்க வாயு, பாரிசவாயு, அண்டவாயு, குருதிவாயு, மேகவாயு முதலிய எல்லா வாயு வகைகளும், எண்வகைக் குன்மங்கள், மேகங்கள், பதின்மூன்று வகைச் சன்னிகள், கருப்பமுற்ற மகளிர்க்குக் காணும் வலிப்பு, மூர்ச்சை, திமிர், கைகால் திமிர்ப்பு ஆகியவைகளும், மேகசூலை, கட்டுச்சூலை ஆகிய சூலை நோய்களும் தீரும். இன்னும் கக்கற்கழிச்சலில் காணும் சீதளம், அதிவேர்வை, கைகால் குரக்கிழுத்தல், கெண்டை யேறுதல் முதலியவைகளும் தீரும். இன்னும் பழக்கமுள்ள வர்கள் உசிதம்போல இங்கு குறிப்பிடாத அநேக நோய்களி லும் இதனைப் பயன்படுத்திக் குணம் கண்டிருக்கிறார்கள். இவ் வகையான மருந்து மருத்துவர்களிடத்தில் எப்போதும் சித்த மாகவே இருக்கவேண்டும் என்பது மருத்துவ அறிவு உள்ள ஒவ்வொருவருக்கும் நன்கு புலப்படும்.

மருத்துணவு :— பழக்கமுள்ளவர்களுக்கு மருந்தின் தன் மையும் வியாதியின் தன்மையும் தெரிந்திருக்குமாகையால் இன்ன நோய்க்கு இன்னதுதான் மருத்துணவு என நாம் இங்கு எழுதுவது அவசியமன்று. அவரவர்களே தக்கவாறு உணவு முதலிய பத்திய விவரங்களை நிதானித்து ஏற்படுத்திக் கொள் வார்களென நம்புகிறோம். முக்கியமாய்ப் புளிப்புப் பண்டங் கள், உவர்ப்புப் பண்டங்கள், முதலியவைகளில் கவனிக்க வேண்டியதேயாம்.

70. அயவீரச் செந்தூரம் (வேறு)

முன் பாகத்தில் சொல்லி இருக்கிறபடி பாவனை செய்யப் பட்ட அய அரப்பொடி, லிங்கம், வீரம், நவச்சாரம் கீழ்க்கண்ட படி பாகஞ் செய்யப்பட்ட கெந்தகம் வகைக்கு 1 பலம் (35 கிராம்), நாயுருவிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை, அளவு, தீரும் நோய்கள், மருத்துணவு முதலியவைகளெல்லாம் மேற்கண்ட முறையில் சொல்லப்பட் டிருப்பது போலவேயாம். முன் பாகத்தில் இரசம் சேர்க்கப் பட்டிருக்கிறது, இந்தப் பாகத்தில் அது சேர்க்கப்படவில்லை. இந்தப் பாகத்தில் கெந்தகம் சேர்க்கப்பட்டு இருக்கிறது, அந்தப் பாகத்தில் அது சேர்க்கப்படவில்லை. இவ்விரண்டிற் கும் உள்ள வேறுபாடு இது ஒன்றேயாம். மற்றவைகளெல் லாம் முன் கண்டது போலவேயாம்.

கெந்தகப் பாவனை :— கெந்தகத்தைப் பொடித்து வைத் துக் கொள்ளவும். ஒரு வாயகன்ற சிறு பானையில் அரைப்படி

குண்டுத் தக்காளிச் சமூலச் சாற்றை விட்டு அதன் வாய்க்குச் சீலைகட்டி அதன்மேல் முன் கெந்தகத் தூளை வைத்து அந்தப் பாத்திரத்தைக் கழுத்தளவு பூமியிற் புதைத்து அதன்மேல் ஒரு மண் தட்டைக் கவிழ்த்து அதைச் சுற்றிலும் அதன் உதட்டில் கால் அங்குல மண்ணைத் தள்ளி அதன்மேல் வறட்டியை வைத்து நெருப்பிட வேண்டும். நன்ருய் ஆறினபின் எடுக்கக் கெந்தகமானது உருகிப் பாத்திரத்துக்குள் இறங்கி இருக்கும். அதை எடுத்து ஈரத்தை உலர்த்திப் பொடித்து அந்தப் பாத்திரத்தில் புதிதாய்க் குண்டுத் தக்காளிச் சமூலச் சாற்றைவிட்டு முன்போல் வேடுகட்டி முன் தூளைப் பரப்பி முன்போலவே புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினெரு தடவைகள் செய்து கொள்வதே கெந்தகப் பாவனையாம். இவ்விதம் பாவனை செய்த கெந்தகத்தில் மேற்கண்ட எடை எடுத்து மேற்கண்ட பாகத்தில் சேர்த்துச் செய்வது மிகவும் உன்னதமான குணத்தைத் தரும். இப்படிச் செய்யக்கூடாத காலங்களில் நமது இரசவாதச் சிந்தாமணி இரண்டாம் பாகத்தில், 442 இலக்கத்தில் ''கெந்தகச் சுத்தி (வேறு)'' என்னும் தலைப்பில் சொல்லி இருக்கிறபடி வெங்காயச் சாற்றில் முன் கண்ட பாவனை செய்து கொள்ளவேண்டும். இங்கு நமது பழக்கத்தை எழுதினேம். வேறு பாகப்படி பாவனை செய்த கெந்தகத்தைச் சேர்த்துச் செய்து கொள்வாரும் உண்டு.

71. அயவீரச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த அய அரப்பொடி 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த பாலரசம் 1 பலம் (35 கிராம்) தூய்மை செய்த வீரம் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த நவச்சாரம் 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—மேற்கண்ட நான்கு சரக்கையும் கல்வத்தி விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டியது. இதில் எவ்வகைச் சாறு முதலியவைகளையும் விடாமலே அரைக்க வேண்டியது. நான்குசாமம் செம்மையாக அரைப்பேறினபின் ஒருபடி கொள்ளும்படியான 2 சட்டியை எடுத்து வாயைத் தேய்த்துச் சந்தில்லாமல் பொருந்தும்படியாக முன்னர் சித்தஞ்செய்து கொள்ளவேண்டியது. பிறகு கையாந்தகரைச் சாற்றைச் சட்டிகளுக்குள் பூசி உலர்த்த வேண்டும். சுமார் ஒரு ஆழாக்குச் சாற்றைச் சுவறச் செய்யவேண்டும். ஈரமில்லாமல் நன்ருய் உலர்ந்த பின்பு முன் மருந்தை ஒரு சட்டியில் போட்டுப் பரப்பி விட்டு மேல் சட்டியை மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி முதல் சாமம் சிறு தீயாக எரித்துப்

படிப்படியாக உயர்த்தி முடிவில் காட்டுத்தீயாக எரிக்க வேண்டும். நான்கு சாமம் சென்ற பின்பு நன்ருய்க் குளிர ஆறவிட்டுக் கவசத்தைப் பிரித்துக் கீழ்ச் சட்டியில் இருக்கிற மருந்தைக் கல்வத்திலிட்டு மேல் சட்டியில் இருக்கிற பதங்கத்தையும் சுறண்டி அதனுடன் சேர்த்து ஒரு சாமம் செம்மையாக அரைக்கவேண்டும். பிறகு இந்த மருந்தை முன்னெரிப்பில் மேலிருந்த சட்டியில் போட்டு முன் கீழிருந்த சட்டியை மேல் வைத்து மூடி முன்போல் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி ஒரு சாமம் எரித்து நன்ருய் ஆறினபின் எடுக்க வேண்டும். பிறகு கவசத்தைப் பிரித்து முன்போலவே அடிச் சட்டியிலிருக்கிற மருந்தையும் மேல் சட்டியில் பிடித்திருக்கிற பதங்கத்தையும் ஒன்ருகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு இரண்டு மணிநேரம் அரைத்து இரண்டாவது எரிப்பில் மேலிருந்த சட்டியில் இட்டுக் கீழிருந்த சட்டியை அதன்மேல் மூடி முன் போல் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி முன்போல் ஒரு சாமம் எரிக்க வேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கி அரைத்து அரைத்து மடக்கி மடக்கி எரித்தால் மேலே பதங்கம் ஏருமல் கீழேயே நின்றுபோகும். அதுதான் பதம். ஆனுல் மூன்று தடவை எரித்துச் சட்டியைப் பிரித்து மேல் சட்டியில் இருக்கிற பதங்கத்தை நீக்கிவிட்டுக் கீழிருக்கிற செந்தூரத்தை எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம். இது சாதாரணமாய்ப் பயன் படுத்தப்பட்டு வருகிறது இவ்விதந்தான். ஆனுல் பதங்கம் மேலே ஏருமல் மடிகிற வரையில் எரித்தால் அதிக வேகமாய் இருக்கும். பாடுபட்டால் பலன் பெறலாம்.

அளவு :— 2 முதல் $2\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், பனைவெல்லம், எலுமிச்சம்பழ இளகம், ஆமலக இளகம், பறங்கிப்பட்டை இளகம், அசுவ கெந்தி இளகம் முதலியவைகளும், இன்னும் இவைபோன்ற வைகளுமாம்.

தீரும்நோய்கள் :— எண்வகைக் குன்மம், சூலை நோய்கள், கைகால் குடைச்சல், லிங்கத்தின் வீக்கம், தடிப்பு நோய்கள், கட்டிகள், மேகவெட்டைகள், குட்ட நோய்கள், ஆகியவை களும், குருதிக் குறைவினுல் உண்டாகும் பாண்டு, சோகை, முதலிய நோய்களும் தீர்ந்து குருதிப் பெருக்கு உண்டாகி உடல் வெளுப்பு மாறி நல்ல குருதி உண்டாகும்.

மருத்துணவு :— இச்சா பத்தியம். இதற்கு நல்ல உணவு வகைகளைச் சேர்த்து வருவதினுலும் நல்ல குணமுண்டாம். ஆனுல் இவற்றையெல்லாம் மருத்துவர்கள் தம்தம் பழக்கப்

பயிற்சியினுல் நிச்சயித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டியது.

72. அயவீரச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த அயப்பொடி 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த வீரம் 1 பலம் (35 கிராம்), சுண்ணும்புத் தெளிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்கண்ட இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படி சுண்ணும்புத் தெளிநீரைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். நான்கு சாமமும் அரைப்பேறின பின் ஒரே வில்லையாகச் செய்து வெய்யிலில் உலர்த்த வேண்டும். நன்ருய் உலர்ந்த பின்பு ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 25 பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். நன்ருய்க் குளிர ஆறினபின் எடுக்க முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும். இதனை எடுத்துக் குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :— 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :—மேற்கண்ட முறையில் சொல்லப்பட்டு இருப்பவைகளேயாம்.

தீரும்நோய்கள் :— எண்வகைக் குன்மம், மேகவாயு, மேகப் பிடிப்பு, பக்கவாதம், ஓடுவாயு, பக்கசூலை, மேகசூலை முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

சுண்ணும்புத் தெளிநீர் :— தாளிக்காத கற்சுண்ணும்பு அல்லது கிளிஞ்சிற் சுண்ணும்பு 1 படி. இதில் 4 படி தண்ணீரை விட்டுக் கலக்கி 4 மணிநேரம் வைத்துத் தெளிவை இறுத்துக் கொள்வதே.

அமிர்த கிரணம்

சகோதரர்களே ! அய பற்பம், அய செந்தூரம், இன்னும் அய சம்பந்தமான பற்ப செந்தூரங்களைத் தூய்மை செய்யாமல் பயன்படுத்தலாகாது என தன்வந்திரி வாகடம் முதலிய நூல்கள் கூறுகின்றன. அவற்றைத் தூய்மை செய்வதால் அவற்றில் உள்ள குற்றங்கள் நீங்கி எல்லாவித நோய்களையும் குணப்

படுத்தும் தன்மை அவற்றிற்கு உண்டாகி விடுகிறது. இவ் விதம் உண்டாவதற்கு அமிர்த கிரணம் எனப் பெயர், அது பின்வரும் விதமாம்.

மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல் இவை வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), இவற்றைச் சிதைத்து $2\frac{1}{2}$ ஆழாக்கு நீரில் போட்டு $\frac{1}{4}$ ஆழாக் காகச் சுண்டவைத்து வடிகட்டின குடிநீரைத் தெளியவைத்துக் கொள்க. அதில் 10 வராகனெடை (35 கிராம்), அய பற்பம் அல்லது அய செந்தூரம் $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்), பசுவின் நெய் ஆகியவைகளைச் சேர்த்து ஈயம்பூசின பாத்திரத் தில் இட்டுக் காய்ச்சிச் சுண்டினபின் இறக்கி வெய்யிலில் வைத்து உலர்த்தி மறுபடியும் கல்வத்தில் அரைத்துக் கொள்க. இவ்விதம் செய்வதால் அது தூய்மை ஆவதுடன் அதில் அமிர்தகிரணமும் உண்டாகிவிடுகிறது. அதனால் பல நன்மை கள் உண்டாம்.

அமிர்தகிரணம் (வேறு)

அய பற்பம் அல்லது அயச் செந்தூரம் 10 வராகனெடை (35 கிராம்), பசுவின் நெய் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்). இரண்டையும் சேர்த்து ஈயம் பூசின பாத்திரத்தில் இட்டுச் சிறு தீயாக எரித்து நெய்ப்பசை போகும்படியாக வறுத்து எடுத்துப் பொடித்துப் பயன்படுத்த வேண்டும்.

இவ்விதம் செய்வதால் மேற்கண்ட பற்ப செந்தூரங்களில் உள்ள எல்லாவகை அசுத்தங்களும் நீங்கி அநேக நன்மை களுக்கு ஏதுவாகி விடுகிறது.

அயம், காந்தம், மண்டூரம் ஆகியவைகள் சேர்க்கப்பட்ட பற்பம் செந்தூரம் ஆகிய எல்லா வகைகளுக்கும் மேற்கண்ட விதியேயாம்.

இந்த மர்மத்தை அறியாத அநேகர் பலவிதத்திலும் ஏமாந்து போகின்றனர்கள். இவையெல்லாம் மருத்துவத் துறையிலுள்ள மறைபொருள்களாகும்.

விண்ணப்பம்

மலர்மிசைஏகினன் அருளினாலும், பெரியோர்களின் வாழ்த்தினாலும் இதுவரையில் அயம், மண்டூரம், காந்தம் முதலியவைகளின் பற்பம், செந்தூரம் ஆகிய முறைகளுள் அருமையான பல முறைகளும் இவை ஒன்றோடு ஒன்று

தொடர்பு கொண்டு இருக்கிற பல முறைகளும் எழுதினேம். இம்முறைகள் ஒவ்வொன்றும் நம் முன்னேர்களுக்கும் நமக்கும் பழக்கபயிற்சியில் சித்தமான பல முறைகளில் இருந்து, நூற்றுக் றுக்கு ஒன்ருகப் பொறுக்கித் தெரிந்தெடுக்கப் பட்டவைகள். மலர்மிசைஏகினன் அருளால் மற்ற பாகங்களேயும் இனி அச்சிடும் அனுபோக வைத்திய ரத்தினகரம் என்னும் நூலில் வகை விபரமாக வெளிப்படுத்துவோம். இந்த நவநீதமானது மிகவும் சிறிய நூலாகையாலும் மேற்கண்டபடி அதிக அருமை யானவைகளே மாத்திரம் இதில் எழுதி வருகின்றபடியாலும் இம்மட்டோடு நிறுத்த நேரிட்டது. இவ்விதமே தாம்பிரம் முதலியவைகளின் பற்பம், செந்தூரம் அவை சம்பந்தமான மாத்திரை முதலிய பிரயோகங்களே எழுத ஆரம்பிப்போம்.

தாம்பிரம்

அதிக பயனுடையதான இந்த உலோகம் பூமியில் சுரங் கங்களில் சாதாரணமாக அகப்படுகிறது. மாசுகளுள்ள இரசமும், மாசுகளுள்ள கெந்தகமும் சமபாகமாகச் சேர்ந்து அதன் உட்சூடு கூடுதலாகித் தங்க வண்ணம் எரிந்து போவதால் தாம்பிரம் உண்டாகிறது என்பது இரசவாத ஆராய்ச்சியாளரின் முடிவாகும். இது முன்னேர்க்கு வெகு காலமாகத் தெரிந்து இதனேப் பற்பித்தும் செந்தூரித்தும் பிரபல மான கடின நோய்களில் பயன்படுத்தி வெற்றியடைந்து வந் தார்கள். இன்னும் இது சம்பந்தமாக உருக்கு மாத்திரை, கண் மாத்திரை, களிம்புகள், தூபங்கள் ஆகிய பலவகை மருந்துக ளாகவும் பயன்படுத்தி வந்தார்கள். ஆனல் அந்த முறைகள் எல்லாம் இரகசியமாகவும், மறைபொருளாகவும் வைக்கப் பட்டு வந்தன. இன்னும் அவ்விதமே வைக்கப்பட்டும் வரு கின்றன. ஆயினும் உலக நன்மைக்காகவும், உயிரினத்தின் மேல் உள்ள அன்பினுலும் பல பாகங்கள் கைமுறையாகத் தொட்டுக் காண்பிக்கப்பட்டு பயன்பட்டு வருகின்றன. அவ் வித முறைகளே நம் முன்னேர்களும், நமது அருமை நண்பர்க ளாகிய பல மருத்துவ அறிஞர்களும், அடியேனும் பல தடவை களில் பயன்படுத்திக் கடினமான நோய்களெல்லாம் நீங்கி இருக்கின்றன. வெகு காலத்திற்கு முன் அலோபதி மருத்து வர்கள் இவ்வித அரிய முறைகளில் நம்பிக்கைக் குறைவு உள்ளவர்களாய் இருந்தபோதிலும் மிகக் கடினமான நோய்கள் எல்லாம் மேற்கண்ட மருந்துகளால் தீர்ந்து வருவதை பழக்கப் பயிற்சியில் தாமே நேரில் பார்த்து வருவதால், மேற்கண்ட ஆங்கில மருத்துவர்களுக்கு இந்த மருந்துகளில் இப்போது

நம்பிக்கை உண்டாகி வருகிறது. நமது சகோதரர்களுள் சிலர் முறைப் பிசகாய் மேற்படி தாம்பிரத்தைப் பற்பித்தும் செந்தூரித்தும் பயன்படுத்துவதால், அவற்றால் நற்குணங்கள் உண்டாவதற்குப் பதிலாகத் தீய குணத்தைக் கண்ணுறும் நமது நண்பர்களும் அதில் நம்பிக்கை இல்லாதவர்களாய்க் காணப்படுகின்றார்கள். இப்படி நேரிடுவது முறைதவறிச் செய்தவர்களைச் சாருமேயொழிய மற்றவர்களைச் சாராது. ஒழுங்காகவும், முறையாகவும் செய்யப்படும் மருந்துகளைச் சொல்லியபடி பயன்படுத்தினால் ஒருபோதும் கெடுதல் நேரிடாது. ஆகையால் பழக்கத் தேர்ச்சியான அரிய பல முறைகளை இங்கு எழுதுகின்றோம். அவரவர்கள் சக்திக்கு ஏற்றது போலவும், நிலைமைக்குத் தக்கவாறும் செய்துகொள்ள ஏதுவாகும்படி பல வகைகளை இங்கு எழுதுகின்றோம். இம் முறைகள் எல்லாம் மிகவும் சிறந்தவைகளும் மிகவும் மறைத்து வைக்கப்பட்டவைகளுமாம். பழக்க பயிற்சியாளர்களான அறி வாளிகளுக்கு இவற்றின் உண்மையும், அருமையும், பெருமை யும் விளங்காமல் போகா. அம்முறைகளை இங்கு எழுதத் துவக்குமுன் தாம்பிரத்தின் பண்பினையும், அதன் வகைகளை யும் இங்கு எழுதுகின்றோம். அவை பின்வருகிற விதமாம்.

தாம்பிரமானது உரமானதும், ஒட்டத் தக்கதானதும், சற்றே கடினமானதுமான உலோகம். இதன் வண்ணம் சிவப்பு; இதைத் தேய்த்தால் ஒருவித நாற்றம் உண்டாகும்; இது மெல்லிய கம்பியாக இழுக்கவும், மெல்லிய தகடாக அடிக் கவும் அதிக நுண்மையான ரேக்குகளாகச் சுற்றவும் வரும். மேலும் இது நேர்த்தியான மின்வாங்கியும் அவ்விதமே நேர்த்தி யான சூடுவாங்கியுமாம். காற்றுப் பட்டால் மென்மையான களிம்புண்டாகும். நெருப்பில் பழுக்கக் காய்ச்சி ஆறவைத் தால் அதன்மேல் சிவந்த ஒருவிதத் தூள் படியும். நெருப்பிற் பழுக்கக் காய்ச்சி உடனே தண்ணீரில் தோய்த்தால் அதன் மேல் சிதள்கள் உண்டாகும். இதில் கெந்தகம், பாடாணம், இரும்பு ஆகியவை பெரும்பான்மையும் கலந்திருப்பதாலும், பச்சை, ஊதா என்னும் வண்ணமுள்ள இருவகை உப்புக்களும் சிறுபான்மையும் கலந்திருப்பதாலும் இதைத் தூய்மை செய்து இதிலுள்ள குற்றத்தை நீக்கியே பயன்படுத்த வேண்டும். முறைப்படி தூய்மை செய்த தாம்பிரத்தைப் பற்பம், செந் தூரம், மாத்திரை, கண் மாத்திரை, உருக்கு மாத்திரை முதலிய வைகளாகச் செய்து முறையே உள்ளுக்கும் வெளிக்கும் பயன் படுத்த வேண்டியது. முறைப்படி சித்தப்படுத்தப்பட்ட தாம்பிரப் பிரயோகங்களால் வேறெந்த மருந்துகளாலும் தீராத

மிகக் கடினமான குட்டம், குன்மம் முதலிய பல நோய்கள் தீரும்.

தாம்பிர வகைகள் :— தாம்பிரமானது பிறப்பு, வைப்பு என இரு வகையாம். இன்னும் அது அநேக வகை மூலிகைகளில் இருந்தும், அநேக பண்டங்களில் இருந்தும், கற்களில் இருந்தும் எடுக்கப்படுகிறது. மனோசிலை கெந்தகம், துருசு, இரும்பு, கடுக்காய், பூநாகம், மயிலிறகு, நிமிளை, தொட்டிப் பாடாணம், தாளகம். வெண்காரம் ஆகியவைகளில் இருந்தும் சில வகை ஈக்கள், சிலவகைப் பாம்புகள் ஆகியவைகளில் இருந்தும் தாம்பிரம் எடுக்கப்படுகிறது. இவற்றுள் மயிலிறகுத் தாம்பிரம் மிக மேன்மையானது. வெண்காரத்தில் எடுக்கப்படும் தாம்பிரமானது எல்லாவற்றைப் பார்க்கிலும் மிகவும் மேன்மையானதாகும். மலர்மிசைஏகினுன் அருளால் இம் முறைகளை எல்லாம் இனி உடனே அச்சிடும் அநுபோக வைத்திய இரத்தினகரத்தில் அல்லது இரசவாத போதினியில் எழுதுவோம்.

தாம்பிரத் தூய்மை

இந் நூலில் அயப் பொடியைத் தூய்மை செய்வதற்காகச் சொல்லி இருப்பது போலவே இதனையும் தூய்மை செய்து கொள்ள வேண்டும். அங்குச் சொல்லியிருக்கிற முறைப்படி செய்து கொண்டால் மருத்துவத்திற்குப் போதுமானதே யாம். ஆயினும், ஆங்காங்கு அவசியமான தூய்மைகளையும் முறையே எழுதி வருவோம்.

தாம்பிரத்தைத் தகடாக பயன்படுத்த வேண்டிய சமயங்களில் தாம்பிரத் தகட்டைக் காய்ச்சிக் காய்ச்சி அயத் தூய்மையில் சொல்லி உள்ள திரவங்களில் முறையே தோய்த்து எடுத்துக் கொள்வதே தாம்பிரத் தகட்டின் தூய்மையாம்.

73. தாம்பிர பற்பம்

(அ) தூய்மை செய்த தாம்பிரத் தகடு 2 வராகனெடை (7 கிராம்), இதனை முன்னர் காலணாவைப் போல் வெட்டிப் பின்னர் நிறுத்துக்கொள்ள வேண்டும். ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சீனக்காரத்தை எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு ஒருமணி நேரம் அரைத்து மேற்கண்ட தகட்டிற்கு இருபுறமும் சமமாகப் பூசி உலர்த்தி 5 பலம் (175 கிராம்), உள்ள நாலு வறட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின் அந்தத் தகட்டை எடுத்து அதன்மேல் உள்ள கருக்கு முதலியவைகளை நீக்கி, முன்போல் ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சீனக்காரத்தைப்

பழச்சாற்றை விட்டு ஒருமணி நேரம் அரைத்து, இருபுறமும் கவசித்து உலர்த்தி முன்போல் புடமிட வேண்டும். இவ் விதமே மூன்றுந் தடவையும் புடமிட்டுக் கொள்ளவும்.

(ஆ) இந்தத் தகட்டைப் பழுக்கக் காய்ச்சி ஒரு பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச் சாற்றை ஒரு மண் பாத்திரத்தில் விட்டு அதில் தோய்க்க வேண்டும். நன்றாய் ஆறினபின் எடுத்து முன்போல் கரிநெருப்பில் பழுக்கக் காய்ச்சிப் புதிதாக ஒரு பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச் சாற்றை மறு பாத்திரத் தில் இட்டு அதில் தோய்க்க வேண்டும். இவ்விதமே மூன்றுந் தடவையும் தோய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

(இ) ஐவிரலிச் சாற்றிலும் மேற்கண்டபடியே மூன்று முறை மேற்படி தகட்டைப் பழுக்கக் காய்ச்சித் தோய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

(ஈ) இவ்விதம் பாகஞ் செய்யப்பட்ட தகட்டை அராவிக் கல்வத்திலிட்டு இரண்டு பலம் (70 கிராம்), நீர்மேல் நெருப்பு சமூலச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்து ஒரே வில்லை யாகச் செய்து, வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். மேற்படி நீர்மேல் நெருப்பு மூலிகை 5 பலம் (175 கிராம்), பொரித்த வெண்காரம் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), இவ் விரண்டையும் வெண்ணெய்போல் அரைத்து, இரண்டு பங்கு செய்து ஒரு பங்கை ஒரு அகலில் தடவி, மற்றொரு பங்கை மறு அகலில் தடவி முன் சித்தப்படுத்தின வில்லையை இவ்விரண் டிற்கும் மத்தியில் வைத்துப் பொருந்தும்படியாக மூடி ஏழு சீலை மண் செய்து நன்றாய் உலர்ந்த பின்பு, இரண்டடி சதுரமான குழியில் வறட்டியை நிறைத்து அதன் நடுவில் வைத்துத் தீயிட வேண்டும். வாலறிவன் அருளினால் ஒரே புடத்தில் தும்பைப் பூப்போன்ற பற்பமாகி விடும். இந்தப் பற்பத்தை எடுக்கும் போதும் பயன்படுத்தும் போதும் தேவாராதனை செய்து ஏழை முதலியவர்களுக்கு அன்னமிடலும் செய்ய வேண்டும். கால வேறுபாட்டினால் ஒரே புடத்தில் பற்பமாகா விட்டால் முன்போலவே நீர்மேல் நெருப்பென்னும் மூலிகைச் சாற்றை விட்டு முன்போல் கவசித்து முன்போல் புடமிடவும். இதனால் பற்பமாகி விடும்.

அளவு :— 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :— பசுவின் நெய் $1\frac{1}{4}$ வராகனெடை. இதில் மேற்கண்ட பற்பத்தை கலந்துகொண்டு காலையில் மாத்திரம் சாப்பிட வேண்டும். இது மிக்க வீறுள்ள மருந்தாகையால் உடல் தன்மையையும், நோய் வலிமையையும் கவனித்துக்

கொடுக்க வேண்டியது. சிலருக்கு மூன்று வேளை மருந்து போதுமானதாகக் காணப்பட்டிருக்கிறது. சிலருக்கோ ஏழு நாள், பதினொருநாள் கொடுத்தும் எவ்வித வேகமும் காணப் படாமல் இருக்கிறது. ஆகையால் உடல் தன்மையை அறிந்து ஆரம்பத்தில் மூன்று நாள் முதல் ஏழுநாள் வரையில் கொடுக்க வேண்டியது.

தீரும்நோய்கள் :— இந்தப் பற்பத்தால் எல்லாவகைக் குட்டங்களும் போகும் என்று சொல்லப்படினும், நலப்படும் குட்டங்களே குணமாகும். எவ்வித குட்ட நோயாளியாயினும் உடலெங்கும் அழுகும்படியான புண்கள் பிறந்து அவைகளில் நுண் புழுக்கள் நிறைந்து இரண்டு கண்களும் கோவைப் பழம் போல சிவந்து வேற்றுக்குரலும் சூட்டு மந்தமும் மிகுகழிச்சலும் தாகமும் உண்டாகில் நலப்படா நிலையாம். இன்னும் இந்தக் குட்ட நோயானது வாதம், பித்தம், கபமென்னும் மூன்று குற்றங்களுள் ஒவ்வொன்றுந் தனித்தனி மேற்படி நோய்க்குக் காரணமாய் இருந்து அதனுடன் மற்றொரு குற்றமும் சேர்ந்து நோய்ச்சேர்க்கையாயினும், மூன்று கூறுகளும் சேர்ந்து முக் குற்றமாயினும் நலப்படா நிலையாம். பெரியோர்களின் சாபம், பதிவிரதைகளின் சாபம் முதலியவற்ருல் உண்டான குட்ட நோய்களும் குணப்படாதேயாம். (இவ்வகை நோய்களை நலப்படுத்த முயற்சி செய்பவர்களையும் தொடருமெனப் பெரி யோர்களால் சொல்லப்பட்டிருப்பதால், இப்பரிகாரத்தில் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்.) பிறப்பிலிருந்தே உண்டான குட்டமும் நலப்படாததாகும். மேற்கண்ட நலப் படாக் குட்டங்கள் நீங்காதவையாம். ஆகையால் அவ்வகைக் குட்டங்களை நீக்கி மற்ற குட்ட நோயாளிகளுக்கு இதில்கண்ட விதமாக மேற்கண்ட பற்பத்தை பயன்படுத்தினுல் வாலறிவன் அருளும், பெரியோர்களின் ஆசியும் இருந்தால் நலம் உண்டாகும்.

மருத்துணவு :— புழுங்கலரிசியைக் கஞ்சியாகச் சமைத்து அதில் நிலைமைக்கேற்றவாறு கால்படி, அரைப்படி, ஒருபடி, இரண்டுபடி மோரை விட்டுக் கலக்கி மருந்து சாப்பிட்ட ஒரு நாழிகைக்குள் குடிக்கச் செய்விக்க வேண்டியது. இந்த மருந் தைச் சாப்பிட்டவுடனே சிலருக்கு அடக்கக் கூடாத பசியும், கோபமும் ஏற்படுகிறது. ஆகையால் மேற்கண்டபடி கஞ்சி செய்து குடித்துக்கொண்டிருந்தால் சாந்தமாகி விடும். பகலி லும் இரவிலும் அவரவர்களுக்கு விருப்பமான உணவுகளைச் சாப்பிடலாம். சிலருக்கு இந்த மருந்து சாப்பிடும்போது

உடலில் எரிவு, பதைப்பு ஆகியவைகள் உண்டாகும். இவை முக்கியமாய் முதல் மூன்று நாளும் அதிகமாக இருக்கும்; வரவரச் சாந்தமாகிவிடும். அதற்காகப் பயப்பட வேண்டியது இல்லை. மருந்தைச் சாப்பிடும்போது வாயு பண்டங்களையும், கரப்பான் பண்டங்களையும் தள்ளி இச்சா பத்தியமாய் இருக்க வேண்டியது. மருந்து சாப்பிடும் போது சிலருக்கு வியர்வை அதிகமாய் வடியும். இந்த வியர்வையுடன் அநேகப் புழுக்களும் வெளிப்படும். இவற்றைப் பூதக் கண்ணுடியால் பார்த்தால் மாத்திரம் தெரிய வருமேயொழிய வெறுங் கண்ணுக்குப் புலப்படாது. இதனை ஆராய்ந்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் பின் வருகிறபடி தேர்வு செய்து அறிந்து கொள்ளலாம்.

பூமியில் ஒரு பள்ளத்தை வெட்டி வாயகன்ற ஒரு பீங்கான் அல்லது மண்சாலைப் புதைத்துச் சிறு தொளைகளிட்ட ஒரு பலகையை அதன்மேல் போட்டு நோயாளியை அதன்மேல் உட்காரவைத்து அவன் உடலிலிருந்து உண்டாகும் வியர்வை, சிறுநீர் ஆகியவை அதில் விழும்படி பக்குவம் செய்ய வேண்டியது. ஏழு நாள் அல்லது பத்து நாளைக்குப் பின் அந்தச் சாலைப் பார்த்தால் புழுக்கள் நெளிவது வெளிக் கண்ணிற்கு நன்ருய்ப் புலப்படும்.

இந்த மருந்தைச் சாப்பிடும்போது முதல் ஏழு நாளைக்கு உள்ளாகவே சிலருக்கு உடம்பு இளைத்துப்போகும். பளபளப்பு மாறிக் கருநிறமாய்ப் போகும். கைகால் அதிகமாக அசந்துபோகும். தன் கையால் சாப்பிட முடியாது. பத்து நாள் சென்றபின் மறுபடியும் முன்போல் முன்கண்டபடி நெய்யில் ஒரு குன்றிமணி எடை பற்பத்தைக் குழைத்துச் சாப்பிட வேண்டும். இவ்விதம் முப்பது நாள் தொடர்ச்சியாகச் சாப்பிட வேண்டும். இந்த முப்பது நாளும் பழைய சாதத்தில் மோரை விட்டு வெங்காயத்தைத் துணைக்கறியாக வைத்துக்கொண்டு சாப்பிட வேண்டும். வெங்காயத்தை நெய்யில் வறுத்தும் சாப்பிடலாம். வேறு ஆகாரம் வேண்டியதிருந்தால் நெய்யுடன் சாப்பிட வேண்டியது. இவ்வித உணவைப் பார்க்கிலும் பழையதும் மோரும் வெங்காயமுமே மிக மேன்மையானதாகக் காணப்படும். நாள் ஒன்றிற்கு மூன்று நான்கு தடவை பழையதைச் சாப்பிட வேண்டும். இந்த முப்பது நாளைக்குள் தடிப்பு, திமிர் முதலியவைகளெல்லாம் வாங்கிச் சாதாரண உடல்போல் ஆகிவிடும். கை காலில் வலிமை, சத்து ஆகியவைகள் உண்டாகிவிடும். படிப்படியாக உடல் வலிமை, உடல் செழிப்பு ஆகியவைகள் உண்டாகும்.

குறிப்பு

இந்த மருந்தைப் பயன்படுத்தி மேற்கண்ட நோய் தீருமானல் நோயாளிகள் செல்வந்தர்களாய் இருந்தால் அவர்களுக்குத் தகுந்த விதமான ஒரு தொகையை ஏற்படுத்தி அதைக் கல்விச்சாலைகளுக்குப் பயன்படுத்தும்படி செய்விக்க வேண்டியது. மருத்துவர்கள் கொஞ்சமும் விரும்பலாகாது.

74. தரம்பிர பற்பம் (வேறு)

(அ) தூய்மை செய்த தாம்பிரத் தகடு 2 வராகனெடை (7 கிராம்), சவ்வீரம் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), நத்தைச் சூரி விதை 20 பலம் (700 கிராம்), குடை மல்லிகை இலைச் சாறு செல்லத்தக்க அளவு.

(ஆ) சுண்ணும்புக்கல் $\frac{1}{8}$ படி, எருக்கம்பால் $\frac{1}{4}$ படி, கோழி முட்டை வெள்ளைக்கரு 6.

செய்முறை :— சவ்வீரத்தைக் கல்வத்திலிட்டு உமிழ் நீரைச் சிறுகச் சிறுக விட்டு ஒருமணி நேரம் அரைத்து மேற்படி தாம்பிரத் தகட்டிற்கு இருபுறமும் சமமாகத் தடவி வெய்யிலில் வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். நத்தைச்சூரி விதையை மூன்று மணிநேரம் தண்ணீரில் ஊறவைத்துப் பிறகு அதை மைபோல் அரைத்து முன் சித்தப்படுத்தின சல்லிக்குக் கவசம் பொதிந்து மூன்று சீலைமண் செய்து மூன்றடி சதுரக் குழிதோண்டி அதில் நிறைய எருவடுக்கி அதற்கு நடுவில் முன் கவசத்தை வைத்துப் புடம் போடவேண்டும். குளிர ஆறின பின் எடுத்தால் தகடானது நொறுங்கிப்போய் இருக்கும். அல்லது நொறுங்கும் பக்குவமாய் இருக்கும்.

அதைக் கல்வத்திலிட்டுக் குடைமல்லிகைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒருசாமம் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி முன் குடைமல்லிகை இலையை அரைத்த விழுது 20 பலம் (700 கிராம்), அதற்குள் முன் வில்லையைப் பொதிந்து மூன்று சீலைமண் செய்து முன்போல் கெசபுடமிடவும். குளிர ஆறினபின் எடுத்துப் பார்த்தால் பற்பமாய் இருக்கும்.

அதன்பிறகு (ஆ) வில் சொல்லியிருக்கிற மூன்றையும் கலந்தரைத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு வைத்தால் செயநீராகும். முன்னெடுத்த பற்பத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்துப் வில்லை செய்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். 20 பலம் (700 கிராம்) மாவிலிங்கப் பட்டையைக்

கொஞ்சம் தண்ணீர் தெளித்து அரைத்து எடுத்து அதற்குள் மேற்கண்ட வில்லையைப் பொதிந்து மூன்று சீலைமண் செய்து ஐந்து பலம் (175 கிராம்), உள்ள இருபது வறட்டியில் புடமிட வேண்டும். புடம் ஆறினபின் எடுத்தால் சித்தரது அருளினல் சுத்த வெண்மையான பற்பமாய் இருக்கும். எல்லாத் தேர்வு களுக்கும் இது ஒத்திருக்கும். இதனுல் எவ்வித துன்பமும் உண்டாகாது.

அளவு :— ½ முதல் 1 குண்டுமணி எடை.

துணைமருந்து :— சகதேவி இலைச்சாறு 2 வராகனெடை (7 கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்), இவ்விரண்டை யும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட் கொண்டுவர, எல்லா வகைச் சுரங்களும் தீரும்.

இஞ்சிச்சாறு 2 வராகனெடை (7 கிராம்), துளசிச்சாறு 2 வராகனெடை (7 கிராம்), மிளகுத்தூள் 8 வராகனெடை (28 கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர எல்லாவகை சன்னி பாத நோய்களும் தீரும்.

பசுவெண்ணெய் 3 வராகனெடை (10½ கிராம்), சிறு நாகப்பூ தூள் 4 வராகனெடை (14 கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்), இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர நாட்பட்ட நிணக்கழிச்சல், நிணக்கடுப்பு, கழிச்சல் ஆகிய வைகள் தீரும்.

ஆலம் விழுது 1½ வராகனெடை (5¼ கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்), கழுநீர் 3 பலம் (105 கிராம்), மேற் படி ஆலம் விழுதை மைபோல் அரைத்துக் கழுநீரில் கரைத்துத் தேனை விட்டுக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். மேற் கண்ட பற்பத்தை அளவுப்படி ஒரு வராகனெடை (3½ கிராம்), தேனில் குழைத்து உட்கொண்டு அதன்மேல் முன் சித்தப் படுத்தி வைத்திருப்பதைப் பருகச் செய்ய வேண்டும். இவ் விதம் செய்து வந்தால் நாட்பட்ட எவ்விதமான கழிச்சலும் தீரும்.

இவ்விதமே நிலைமைக்கு ஏற்றவாறு துணைமருந்துகளில் கலந்துண்ண குன்மவகை எட்டும், மேக வகைகளும், குட்ட மும், குறை நோயும், பெரு நோயும், வாத நோய்களும், வாயு நோய்களும் தீரும். இந்த நோய்களுக்கான இளகங்கள், நெய்கள் முதலானவைகள் பின் எழுதப்படும் ஆகையால்

அவசியமானவர்கள் அங்குப் பார்த்துத் தங்களுக்கு விருப்ப மானபடி செய்து கொள்ளலாம்.

இந்தப் பற்பமானது வாதமுறைக்கும் பயன்படுகின்றபடி யால் பயிற்சி மிக்கோர் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மருத்துணவு :— பால், நெய், மோர் ஆகியவைகளை அதிக மாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அசைவ உணவு உண் பவரானால் இறைச்சி, உப்புக்கண்டம் ஆகியவைகளைச் சேர்த்து பயன்படுத்தவும். நோயின் பலத்திற்குத் தகுந்தபடி அரை மண்டலம் ஒரு மண்டலம் இதனைப் பயன்படுத்த வேண்டியது.

குறிப்பு

இந்தப் பற்பத்தில் தாம்பிரத் தகடு இரண்டு வராகனெடை (7 கிராம்) எனச் சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்விதமே இரண்டு வராகனெடை (7 கிராம்), உள்ள தாம்பிரத் தகடுகள் மூன்று நான்கு ஐந்து சித்தப்படுத்திக் கொள்ளலாம். இதற் காகச் சவ்வீரத்தை மாத்திரம் இரண்டு வராகனெடை (7 கிராம்), தாம்பிரத்துக்கு ஒரு வராகனெடை (3½ கிராம்), கணக்காக அரைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இந்தக் கணக்கின்படியே மேற் கவசங்களையும் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் ஒரே புடத்தில் இரண்டு மூன்று கவசங்களை வைத்துக் கொள்ளலாம். பற்பமாயினபின் செய நீரை விட்டு அரைக்கும்போது எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து அரைத்து ஒரே புடமாகப் போட்டுக் கொள்ளலாம்.

75. தாம்பிர பற்பம் (வேறு)

செப்புத் தகடு 10 வராகனெடை (35 கிராம்), இதனை ஈசல் இறகுபோல் தட்டிக் கொள்ள வேண்டும். பெரிய பாத் திரத்தில் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டுத் தகட்டைக் கரி நெருப்பில் பழுக்கக் காய்ச்சித் தோய்க்க வேண்டும். அதனை தண்ணீர்விட்டு நன்ருய்க் கழுவி விட்டு, முன்போல் காய்ச்சி எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்க்க வேண்டும். பிறகு முன் போலக் கழுவித் தூய்மை செய்ய வேண்டும், இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவை காய்ச்சிக் காய்ச்சித் தோய்க்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் விடும் சாறுனது தகடு ஆழ்ந்திருக்கும்படியாக விடவேண்டியது. பிறகு எலுமிச்சம் பழச் சாற்றில் போட்டு ஓர் இரவு முழுதும் ஊறவைக்க வேண்

டும். மறுநாட் காலையில் தண்ணீரை விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பத்துபலம் (350 கிராம்) ஆகாசத் தாமரையிலை, பத்து பலம் (350 கிராம்) வேலிப்பருத்தியிலை, இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வெண்ணெய்போல் அரைத்து, மேற்படி தகட்டிற்குப் பொதிந்து ஒரு ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து 5 பலமுள்ள (175 கிராம்), நூறு வறட்டியில் புடமிடவும். நன்றாய்க் குளிர ஆறினபின் எடுத்துக் கவசத்தைப் பிரித்தால் தகடானது வெண்மையாக நீறியிருக்கும். அதை அசைக்காமல் ஊதிச் சாம்பலைப் போக்கி நீறியிருக்கும் தகட்டை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை மிகுந்த விழிப்புடன் எடுக்காவிட்டால் சாம்பலும், பற்பமும் ஒன்றாகிக் கைக்கு வராது. இதைச் செய்வதைப் பார்க்கிலும் புடமிட்டெடுப்பதே சிறப்பானதாகும். ஆகையால், சற்று நிதானத்துடன் அமைதியாக வாயில் ஊதினால் சாம்பல் எல் லாம் பறந்து போய்ப் பற்பமாய் இருப்பதெல்லாம் தங்கி நின்று விடும். அவ்விதம் நின்று போனவைகளை எல்லாம் தனியே எடுத்துக் கல்வத்தில் வைத்து சங்கு முதலிய மிருதுவான பொருளினால் பொடித்துக் குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

ஒரு புடத்தில் பற்பமாகாமல் அரைகுறையாய் இருந்தால், மேற்கண்ட இரண்டு இலைகளையும் இடித்துப் பிழிந்த சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைகுறையான பற்பத்தை அரைத்து வில்லை செய்து முன்போலவே முன் இலையிற் கவசித்து முன்போல் புடமிடப் பற்பமாகிவிடும்.

தகடானது கொஞ்சமும் நீறாமல் வைத்தது போலவே இருந்தால் முன் இரண்டு இலையையும் அரைத்து முன் கவசித்தது போல் கவசம்செய்து முன்போல் புடமிடப் பற்பமாகி விடும்.

இதெல்லாம் செய்பவர்களின் புத்தி நுட்பத்தையும், திறமையையும் சேர்ந்தது. இவையெல்லாம் பழக்க பயிற்சியில் தெரிந்துகொள்ள வேண்டியதே தவிர இங்கு எழுதி முடியாது. ஆகையால் எந்த முறையைச் செய்யும்போதும் எழுதின வண்ணம் ஆகாமலிருந்தால் அதன் காரணத்தை நிதானித்து அறிந்து அதற்குத் தகுந்த பரிகாரத்தைச் செய்து பூர்த்தியாக்கிக் கொள்வதே அறிவாளிகளுக்கு அழகு. ஆகையால், விடாமுயற்சி, ஊக்கம், துணிவு ஆகியவை உள்ளவர்கள் தாங்கள் எடுத்த எந்தச் செயலையும் சாதித்தே முடிப்பார்கள்.

சோம்பலானவர்களுக்கும், ஊக்கம், துணிவு இல்லாதவர்களுக்கும் எந்த விவகாரமும் கடினமாகவே முடியும்.

அளவு :— ¼ முதல் ½ குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய், வில்வாதி இளகம் முதலியவைகளாம். இன்னும் நிலைமைக்கேற்ப துணைமருந்துகளிலும் பயன்படுத்தலாம்.

தீரும்நோய்கள் :— குன்மங்கள், மேகங்கள், வாத நோய்கள், ஆகியவைகள் தீரும். இன்னும் சுரம், சன்னி, மூர்ச்சை ஆகிய பிணிகளும் தீரும்.

இஞ்சிச்சாறு $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக ஏழுநாள் பயன்படுத்திவந்தால் குன்ம நோய்கள் தீரும்.

மேற்றேல் சீவின சுக்குத்தூள். மிளகுத்தூள், அரிசித்திப்பிலித் தூள், மஞ்சள் கடுக்காய்த்தோல் தூள், தான்றிக்காய் தோல் தூள், நெல்லிவற்றல் தூள், அசுவகெந்தித் தூள். இவை வகைக்கு ½ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), தேன் $3\frac{1}{2}$ பலம் ($122\frac{1}{2}$ கிராம்), தேனைக் காய்ச்சி மேற்கண்ட தூள்களைக் கொட்டிக் கிளறி இளகமாகச் செய்து கொள்ளவும். ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) மேற்கண்ட இளகத்துடன் மேற்கண்ட பற்பத்தை கலந்து உட்கொண்டுவர, செரியாமை நோய், சூட்டுமந்த நோய். வயிற்றுவலி, ஆகியவைகள் தீர்ந்து, நல்ல பசியை உண்டாக்கும். இவ்விதமே மற்ற நோய்களுக்கும் ஏற்றுற் போல் செய்ய வேண்டியது.

மருத்துணவு :— மேற்கண்ட முறையில் சொன்னவைகளேயாம்.

76. தாம்பிர பற்பம் (வேறு)

காலணாவைப்போல் சக்கரமாகத் துண்டித்த தாம்பிரத் தகடுகள் 5, 7, இவை ஒவ்வொன்றும் $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), இருக்க வேண்டும். இவற்றைப் புளியிலைக் கனமாய்த் தட்டிக் கொள்ளவும் வேண்டும். இவற்றைக் கரி நெருப்பில் பழுக்கக் காய்ச்சி எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்க்க வேண்டும். குளிர ஆறினபின் எடுத்து முன்போல் பழுக்கக் காய்ச்சி முன்போல் எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்க்க வேண்

டும். இவ்விதம் மடக்கி மடக்கி 7 தடவைகள் தோய்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் எலுமிச்சம்பழச் சாற்றைப் புதிது புதிதாக வார்த்துக்கொள்ள வேண்டும், ஒரு தடவை பயன்படுத்திய சாற்றை மீண்டும் பயன்படுத்த லாகாது.

செருப்படையை உலர்த்திப் பொடித்த தூள் 24 பலம் (840 கிராம்), (இது சிறு செருப்படையானாலும் பெருஞ் செருப் படையானாலும் சரியே), ஆவாரை இலையை உலர்த்தி இடித்த தூள் 24 பலம் (840 கிராம்), இந்த இரண்டு தூள்களையும் சேர்த்து நாலு பங்காகச் செய்து தனித்தனியே வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு பங்கில் வாழைக்கிழங்குச் சாற்றை விட்டுப் பிசைந்து இரண்டு ரொட்டியாகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பருமனான வாழைக் கிழங்கை எடுத்து அதனைச் சரிபங்கான இரண்டு துண்டுக ளாகத் துண்டித்து ஒரு துண்டின் நடுவில் குழிதோண்டி அதில் முன்னெடுத்து வைத்திருக்கும் மூன்று பங்குத் தூளையும் ஒன்றாகக் கலந்து அதை இரண்டு பங்காக்கி ஒரு பங்கை வாழைக்கிழங்கின் குழியில் போட்டுப் பரப்பி, அதின்மேல் முன் சித்தப்படுத்தின ரொட்டியை வைத்து, அதன்மேல் முன் சித்தப்படுத்தி இருக்கிற தாம்பிரத் தகட்டைப் பரப்பி வைத்து அதன்மேல் ஒரு ரொட்டியை வைத்து இரண்டு ரொட்டிகளின் வாயும் பொருந்தும்படியாகச் செய்து அதன்மேல் மற்ற பாதித் தூளையும் போட்டு அழுத்தி முன் துண்டித்த வாழைக்கிழங்கை வைத்துப் பொருத்தி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கோணிப் பையைப் பாதியாக அறுத்து நீளமாகத் தைத்து முன் சித்தப்படுத்தின கிழங்கை வைத்துச் சுருட்டிச் சணல் கயிற்றி னால் நன்றாய் அழுத்திக் கட்டி. அதன்மேல் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி, மூன்றடி சதுரக் குழியில் அது நிறைய எருவடுக்கி அதன் மத்தியில் இதை வைத்துத் தீயிட்டு எரித்து நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்க இயற்கையினது அருளால் சுத்த வெண்மையான பற்பமாய் இருக்கும். இதற்குத் தீ அதிக மாக வேண்டி இருப்பதால் வறட்டியுடன் புளியம் புறணி, கொட்டாங்கச்சி, வெள்ளாட்டுப் புழுக்கை ஆகியவைகளையும் கூடச் சேர்த்துப் போட வேண்டியது. எந்த வாழைக்கிழங் கானாலும் சரியே. ஆனால் வாழையானது தார்போட்டதாய் இருக்கவேண்டும். மொந்தை வாழைக்கிழங்குதான் இதற்கு பொருத்தமானதாகக் காணப்பட்டிருக்கிறது. இதனை மேற் கண்டபடி பாகமாகச் செய்தால் தப்பாமல் பற்பமாகிறது.

இது பற்பமாகவில்லை என்றால் செய்பவர்களின் தவறேயன்றி முறையின் தவறாகாது.

அளவு :—1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும்நோய்களும் :— மூங்கிலுப்புத் தூள் 2 குன்றிமணியெடை, அரிசித்திப்பிலித் தூள் 2 குன்றிமணியெடை, தேன் 4 வராகனெடை (14 கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள எல்லாவகை இருமல்கள், இரைப்பிருமல் ஆகியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு 1 வராகனெடை (3½ கிராம்), கருந்துளசிச் சாறு 1 வராகனெடை (3½ கிராம்), தேன் 1 வராகனெடை (3½ கிராம்) இம்மூன்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள கடின இரைப்பிருமல், மூச்சடைப்பு, மூச்சுத் திணறுதல், மாரடைப்பு, உருத்திரவாயு ஆகியவைகள் தீரும்.

இலவங்கப் பட்டைத் தூள் 4 குன்றிமணி எடை, தேன் 2 வராகனெடை (7 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள சுவையின்மை, சூட்டுமந்தம், வயிற்றுச்சூலை ஆகியவைகள் தீர்ந்து, நல்ல பசி உண்டாகும்.

சாலாமிசிறிச் சூரணம் 1 விராகனெடை (3½ கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, தாது விருத்தி, விந்து விருத்தி ஆகியவைகள் உண்டாகும்.

இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்தில் இட அநேக நோய்கள் தீரும். இவையெல்லாம் பழக்கத்தில் தானே தெரிந்து போகும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம். நிலைமைக்கேற்றாற்போல் தகுந்த பத்தியங்களும் வைத்துக் கொள்ளலாம்.

77. தாம்பிர பற்பம் (வேறு)

தாம்பிரத் தகடு 30 வராகனெடை (105 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 8 வராகனெடை (28 கிராம்), வெள்ளாட்டு நீர், பசுவின் கோமயம், எருமைமோர், எலுமிச்சம்பழச் சாறு இவைகள் தனித்தனி செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இத் தாம்பிரத் தகட்டை ஈசலிறகுபோல தட்டி அடித்துக்கொள்ள வேண்டும். இதனைக் கரிநெருப்பில் பழுக்கச் காய்ச்சி வெள்ளாட்டு மூத்திரத்தில் தோய்க்க வேண்டும். வெள்ளாட்டு மூத்திரமானது தகடு அமிழ்ந்திருக்கும்படியாக இருக்கவேண்டியது. ஒரு தடவை தோய்த்த திரவமானது மறுதடவைக்கு ஆகாது. ஆகையால், மறு தடவைக்குப் புதிதாக அந்தத் திரவத்தை விட்டுக்கொள்ள வேண்டும். தகடு ஆறினபின் அதை எடுத்து முன்போல் கரி நெருப்பில் பழுக்கக் காய்ச்சி முன்போல் வெள்ளாட்டு நீரில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவை வெள்ளாட்டு நீரிலும், பசுவின் கோமயத்தில் ஐந்து முறையும், எருமை மோரில் ஐந்து தடவையும், பழச்சாற்றில் ஐந்து தடவையும், மடக்கி மடக்கிக் காய்ச்சிக் காய்ச்சித் தோய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்கண்டதுபோல் ஒவ்வொரு தடவைக்கும் புதிது புதிதாக அந்தந்த திரவங்களை விட்டுக் கொள்ள வேண்டும். ஒரு தடவை பயன்படுத்தியதை மறுதடவை பயன்படுத்தலாகாதென நினைவில் வைத்திருக்க வேண்டும், ஏனெனில் அதில் அசுத்தம் முதலியவை தங்கி இருப்பதே காரணம். பிறகு மேற்கண்ட முறைப்படியும் ஒழுங்காகவும் செய்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்தித் தகட்டை எடுத்துக் கொள்ள வேண்டும்,

கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 2 சாமம் அரைத்து மேற்படி தகட்டில் பூசவேண்டும். இதை ஒரே தடவையாகப் பூசிவிடலாகாது. இதனைப் பத்துப் பாகமாகச் செய்து முன்னர் ஒரு பாகத்தைத் தகட்டின் இருபுறத்திலும் பூசி வெய்யிலில் வைத்து, அது நன்ருய் உலர்ந்தபின் மற்ெருரு பாகத்தையும் பூசி உலர்த்த வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு பாகத்தையும் பூசி, நன்ருய் உலர்த்திக்கொள்ள வேண்டும். இதற்காக ஒரு பாகத்தை எடுத்துக் கொஞ்சம் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு அதற்குச் செல்லத்தக்க அளவு பழச்சாற்றை விட்டுக் குழம்பாகக் குழைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் தகட்டின் இருபுறத்திலும் பூசுவதற்குப் போதுமான அளவு வராது. ஆகையால் மேற்கண்டபடி ஒவ்வொரு பாகத்திலும் வேண்டிய அளவு எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டுக் குழம்பாகக் கரைத்துக் கொள்ள வேண்டும். இப்பாகப்படி செய்யாமல் ஒரே தடவையாகப் பூசிப் புடமிட்டால் ஆகவேண்டிய பக்குவப்படி பற்பமாகாது. இது பழக்கத்தால் தெரியவரும். கெந்தகத்தைப் பூசி உலர்த்தின

தகட்டை ஒரு ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 25 பங்கு எடை வறட்டியில் புடமிடவேண்டும். முற்றும் குளிர ஆறினபின் எடுத்தால் வெண்மையான பற்பமாக இருக்க வேண்டும். அப்படியல்லாமல் களங்கமிருந்தால் இதனைப் பொடிசெய்து முன்போல் ஓட்டில் இட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து புடமிட்டு ஆறினபின் எடுக்கச் சுத்த வெண்மையாக இருக்கும். இதன் செய்முறை பழக்கத்தினுல் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டொரு தடவை செய்தால் இதன் மர்மம் விளங்கிப்போகும். இது கடினமான பாகமல்ல. இது மிகவும் எளிதான முறை. இந்த பாகத்தைச் செய்து கொள்ள முடியாதவர்கள் வேறெந்தப் பாகத்தைத்தான் செய்து கொள்ளப் போகிருர்கள்? அத்தகையினருக்கு யார்தான் என்ன செய்யக் கூடும்? அத்தகையினர்களுக்குச் சாப்பிடுவதும் கூட தொல்லையாகத்தான் இருக்கும்!

அளவு:— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும் நோய்களும்:— வெள்ளுள்ளித் தைலம் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவரச் சூலை நோய்கள் தீரும்.

துளசிச்சாறு $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), பசுவின் நெய் $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்) இம் மூன்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள, பிரமேக நோய்கள் தீரும்.

கையாந்தகரைச் சாறு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 2 வாராகனெடை (7 கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை சேர்த்து உட்கொள்ள, இளைப்பு, இரைப்பு ஆகியவை தீரும்.

இளவறுப்பாக வறுத்திடித்துத் துணியில் வடிகட்டிய திப்பிலித் தூள் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தைச் சேர்த்து உட்கொள்ள இருமல், இரைப்பிருமல், இரைப்பு, ஈளை ஆகியவைகள் தீரும்.

அக்கராகாரத் தூள், இலவங்கத் தூள் இவ்விரண்டும் வகைக்கு $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), நெல்லிக்காய் முறப்பா 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்). இவற்றைக் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள. எரிகுன்மம் முதலிய குன்ம நோய்கள் தீரும்.

இவ்விதமே செரியாமை நோய், மந்தாக்கினி நோய் முதலியவைகளுக்கு அது அதற்குத் தகுந்த துணை மருந்துடன் சேர்த்துக் கொடுக்க அவைகள் தீரும். இவை எல்லாம் மருத்துவர்களின் பழக்க அறிவைச் சேர்ந்தது. மற்ற பரிகாரங்களையும் பழக்கத்தினுல் தெரிந்து கொள்ளவும்.

78. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிரப் பொடி 2 பலம் (70 கிராம்). இதனை 5 பலம் (175 கிராம்) திறமான சீமைத் திராட்சைக் காடியில் போட்டு 24 மணி நேரம் ஊறவைத்து எடுத்து நீர் விட்டுக் கழுவித் தூய்மை செய்து கொள்ள வேண்டும். பிறகு 5 பலம் (175 கிராம்) எலுமிச்சம்பழச் சாற்றில் 24 மணி நேரம் ஊறவைத்து தண்ணீரை விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் எலுமிச்சம்பழச் சாற்றில் மடக்கி மடக்கி இரண்டு தடவைகள் செய்து கொள்ள வேண்டும். பிறகு இந்தப் பொடியை ஈரமில்லாமல் உலர்த்தி இதற்குச் சமன் தூய்மை செய்த கெந்தகத்தை நிறுத்தெடுத்து நுண்மையாகப் பொடித்துத் தனியே வைத்துக்கொள்ள வேண்டும்; ஒரு மண் குகையை நெருப்பில் சுட்டுச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதனுள் முன்னர் மூன்று ஊமத்தை இலையைப் பரப்பவேண்டும். (கரு ஊமத்தையாய் இருந்தால் சிறப்பு; விதையும் கருப்பாய் உள்ள ஊமத்தையானுல் மிகச் சிறப்பு. இவ்விரண்டு வகையும் கிடைக்காவிட்டால் ஊதாநிற ஊமத்தை இலையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதுவும் அகப்படா விட்டால் வெள்ளை ஊமத்தை இலையைத்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும்.) அதன்மேல் கொஞ்சம் கெந்தகத் தூளை எடுத்துப் பரப்பி அதற்குச் சமன் எடைத் தாமிரத் தூளை அதன்மேல் பரப்பவேண்டும். அதன் மேல் மூன்று ஊமத்தை இலையை அடுக்காகப் பரப்பி அதன் மேல் கெந்தகத் தூளைப் பரப்ப வேண்டும். அதன் சமன் எடை தாமிரத் தூளை அதன்மேற் பரப்ப வேண்டும். இவ்விதம் ஒரு குகையில் மூன்று அல்லது நான்கு அடுக்காகப் பரப்பி அதன் மேல் மூன்று ஊமத்தை இலையைப் பரப்பிக் குகைக்குச் சில்லிட்டுப் பீங்கான் ஓட்டை அரைத்துச் சீலைத் துண்டில் தடவி மூசை வாய்க்குச் சீலை செய்ய வேண்டியது. ஒரு சீலை உலர்ந்த பின் மறுசீலை செய்யவேண்டியது. இவ்விதம் ஏழு சீலையானபின் உலர்த்தி ஒரு மண் பாணையில் இரண்டுபடி மணலைக் கொட்டி அதன் நடுவில் முன் சித்தப்படுத்தின மூசையை வைத்து அதன்மேல் இரண்டுபடி மணலைக் கொட்ட வேண்டும். இந்த

மணலானது பாணை நிறையவும் இருக்க வேண்டியது. பாணை வாயைச் சட்டியால் பொருந்த மூடி ஐந்து சீலைமண் செய்து வட்டடுப்பில் வைத்துத் தீபாக்கினியாக இராப்பகல் எரிக்க வேண்டும். அறுபது நாழிகை ஆனபின் அடுப்பிலேயே விட்டு வைத்துக் குளிர ஆறினபின் எடுக்கப் பற்பமாய் இருக்கும்,

அளவு :— 3 முதல் 5 குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய்கள் :— இஞ்சிச்சாறு $1\frac{1}{2}$ விராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் 2 விராகனெடை (7 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க, சீதசுரம் முதலிய சுரங்கள் தீரும்.

அதிமதுரத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தைச் சேர்த்து உட்கொள்ள, பித்த சம்பந்தமான சுரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

இளவறுப்பாக வறுத்திடித்த அரிசித்திப்பிலித் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தைச் சேர்த்து உட்கொள்ள கப சுரமும், கப சம்பந்தமான பல நோய்களும் தீரும்.

வெண்ணொச்சிச் சாறு $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து உட்கொள்ள குன்ம நோய்கள் தீரும்.

புங்கம் வேரை மெல்லியதாகச் சீவி அரைத்துப் பிழிந்த பால் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தையும் கலந்துண்ண இரத்த குன்மம் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த்தோல் தூள் $\frac{1}{4}$ வராகனெடை ($\frac{7}{8}$ கிராம்) கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் $\frac{1}{4}$ வராகனெடை ($\frac{7}{8}$ கிராம்), நவச்சாரத் தூள் 2 குன்றிமணி எடை, தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தைச் சேர்த்து உட்கொள்ள, பித்த குன்மம், கப குன்மம், வலி குன்மம் முதலிய எண்வகைக் குன்மமும் தீரும்.

நல்வேளைச் சாறு, வெண்ணொச்சிச் சாறு, இவை வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 2 வராகனெடை (7 கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வாதசூலை முதலிய சூலை நோய்கள் தீரும்.

நோய் வலிமை, உடல் வன்மை ஆகியவைகளுக்குத் தக்கபடி காலை, மாலை இரண்டு வேளையுமாக அரை மண்டலம் முதல் ஒரு மண்டலம் பயன்படுத்த வேண்டியது.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

இன்னும் மிளகுத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), சீனி சருக்கரை $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), பசுவின் நெய் அல்லது பசுவின் வெண்ணெய் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து காலை, மாலை இரண்டு வேளையுமாக அரை மண்டலம் முதல் ஒரு மண்டலம் உட்கொள்ள, மேகப் படைகள், திமிர்சூலை ஆகியவை தீரும்.

குறிப்பு

மேற்கண்டபடி செய்தால் பெரும்பான்மையும் சுண்ண மாகவே நீறியிருக்கிறது. அதில் கொஞ்சம் அரைத்த மஞ்ச ளுடன் கலந்தால் சிவந்து போகும். அப்படிச் சிவக்காவிட் டால் அது பற்பமாம். எவ்விதமாயினும் குணம் ஒன்றே தான்.

79. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 2 வராகனெடை (7 கிராம்), தூய்மை செய்த மடல்துத்தம் 2 வராகனெடை (7 கிராம்).

செய்முறை :— மேற்கண்ட இரண்டையும் கல்வத்திலிட்டுக் கைவிடாமல் ஒரு சாமம் அரைத்துக் குகையிலிட்டுக் குகை வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்து உலர்த்த வேண்டும். (முன்னர் குகையை நெருப்பில் சுட்டுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் சீலைமண் செய்வதால் ஈரங்கண்டு நெருப்புப் பட்டவுடன் விரிந்துபோக ஏதுவாகும்.) பிறகு மூசையைக் கொல்லுலையில் வைத்து ஊதிக் குகை அழுகின பதத்தில் எடுத்து வைத்து முற்றும் குளிர ஆறினபின் மூசையை உடைத்து எடுக்கப் பற்பமாகி இருக்கும். அல்லது சுண்ண மாய் இருக்கும்.

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய்கள் :— இந்தப் பற்பம் எல்லா நோய்களுக்கும் பயன்படும் ஆகையால் அந்தந்த நோய்க்குத் தகுந்த சுரசம், குடிநீர், இளகம், மணப்பாகு முதலியவை களில் சேர்த்துக் கொடுக்க அந்தந்த நோய்கள் தீரும்.

மருத்துணவு :— முன் சொன்னது போலாகும்.

80. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 1 பலம், (35 கிராம்), முள்ளங்கிக்கிழங்குச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— பொடியைக் கல்வத்திலிட்டு முள்ளங்கிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முதல் தடவை நான்கு சாமம் அரைக்க வேண்டும். பின்பு வில்லை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி ஒரு அடி சதுரக் குழியில் வறட்டியை அடுக்கி அதன் நடுவில் வைத்துப் புடமிடவும். அரைப்பும், புடத் திட்டமும் சரியாய் இருந்தால் ஒரே புடத்தில் பற்பமாகிவிடும். அப்படியில்லாமல் அரை குறையான பற்பமாய் இருந்தால் கல்வத்திலிட்டு முன் போல் முள்ளங்கிச் சாற்றைவிட்டு இரண்டு சாமம் அரைத்துப் புடமிட வேண்டும். இதில் தீ அதிகமாகி விடாமல் சுமாரான தீயாய் இருக்க வேண்டியது. ஏனெனில் இரண்டு மூன்று தடவை மடக்கி மடக்கிப் புடமிட்டுப் பற்பமாக்கிக் கொள்ளலாம்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய், இஞ்சி இளகம், சுக்குக் குடிநீர் முதலியவைகளும், சமயோசிதமான சுரசம், மணப் பாகு ஆகியவைகளுமாம்.

தீரும்நோய்கள் :— மந்தாக்கினி நோய், குன்ம நோய், வயிற்றுப் பொருமல், வாயு நோய்கள் முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :— மேற்கண்டவைகளேயாம்.

81. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி $1\frac{1}{2}$ பலம் ($5\frac{1}{4}$ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு, ஆற்றலரி இலைச் சாறு செல்லத்தக்க அளவு, ஆற்றலரி இலை செல்லத்தக்க அளவு.

செய்முறை :— தாம்பிரப் பொடியை எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் ஊறவைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் முதல்நாள் விட்ட சாற்றை இறுத்துவிட்டுப் புதிய சாற்றை விட்டு அரைக்கவேண்டும். சாருனது பொடியின்மீது அரை அங்குல அளவு நிற்கவேண்டும். இவ்விதம் செய்து நாலாம் நாள் எலுமிச்சம்பழச் சாற்றை யிறுத்து நீக்கி ஆற்ற

லரிச் சாற்றை முன்போலவே விட்டு நாள்தோறும் மாற்றி வரவேண்டும். இவ்விதம் செய்த பின்பு நாலாம் நாள் பொடியிலுள்ள சாற்றை யிறுத்து நீக்கிவிட்டு வெய்யிலில் காயவைக்க வேண்டும். ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு பொடியைக் கல்வத்திலிட்டுப் புதிதாக ஆற்றலரிசிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். பிறகு வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொள் ளவும். மேற்படி ஆற்றலரி இலையை வெண்ணெய்போல் அரைத்துப் பள்ளமான அகலில் ஒரு அங்குல கனம் பூசி அதன் மேல் முன் சித்தப்படுத்தின வில்லையை வைத்து மேல் அக லுக்கும் மேற்படி இலையை அரைத்த விழுதை ஒரு அங்குல கனம் பூசி வாய் பொருந்தும்படியாக மூடி வாய்க்கு ஏழு சீலை மண் செய்து ஈரத்தை உலர்த்திக் கொள்ள வேண்டும். பின் ஒரு சிறு பள்ளந்தோண்டி அதில் ஐந்நூறு பலம் (17 கிலோ 500 கிராம்) விறட்டியை அடுக்கி அதன் நடுவில் முன் கவசத்தை வைத்துப் புடமிடவேண்டும். நன்ருய்க் குளிர ஆறினபின் எடுக்க உயர்ந்த பற்பமாகி இருக்கும். ஒருவேளை செய்பாகத் தவறுதலினுல் முழுமையும் பற்பமாகாமல் அரை குறையான பற்பமாக இருந்தால் அதணைக் கல்வத்திலிட்டு முன்போல ஆற்றலரிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன் போலவே இரண்டு அகலுக்கும் மேற்படி இலையை அரைத்து ஒரு அங்குல கனம் பூசி அதன் நடுவில் வைத்து மூடிச் சீலை மண் செய்து உலர்த்தி இருநூற்றைம்பது பலம் (8 கிலோ 750 கிராம்) வறட்டியில் முன்போல் புடமிடவும். தப்பாமல் பற்பமாகி விடும்.

அளவு:— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து:— மேற்கண்ட முறைகளில் சொல்லியிருக் கிற துணைமருந்துகளும், சமயோசிதமாய்த் தகுந்த துணை மருந்துகளுமாம்.

தீரும்நோய்கள்:— குன்மங்கள், சுவாசகாச நோய்கள், இரைப்பு நோய்கள், மாரடைப்பு நோய்கள், பலவகை வாயுகள், பேதி முதலியவைகள் தீரும்.

மருத்துணவு:— கைப்பு, புளிப்பு, ஆகியவைகளை நீக்க வேண்டும். ஆனல் உடல் பலம், நோய் பலம் ஆகியவை களுக்குத் தகுந்தபடி இலகு பத்தியமாகவும், கடின பத்திய மாகவும் வைக்கவேண்டியது. இவை எல்லாம், மருத்துவர்கள் தத் தம் பழக்கத்தால் நிதானித்துக் கொள்ள வேண்டும்.

COMPLIMENTARY

82. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 1 பலம் (35 கிராம்), விளா இலைச் சாறு செல்லத்தக்க அளவு, விளா இலை செல்லத் தக்க அளவு.

செய்முறை :— தாம்பிர அரப்பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி விளா இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். பிறகு ஒரே வில்லையாகச் செய்து நன்றாய் உலர்த்திக் கொள்ள வேண்டும். மேற்படி விளா இலையை அரைத்த விழுது 25 பலம் (875 கிராம்) இதனை ஒரு உருண்டையாக உருட்டி அதற்குள் முன் சித்தப்படுத்தி வைத் திருக்கிற வில்லையை நடுவில் செருகி, பழையபடி கையினால் உருண்டையை இரண்டு மூன்று தடவை மடக்கி மடக்கி உருட்டி வில்லையானது நடுவில் இருக்கும்படியாகச் சமப் படுத்தி அதன்மேல் மூன்று சீலைமண் செய்து ஒரு அடி சதுர மான குழியில் வறட்டியை அடுக்கி அதன் நடுவில் கவசத்தை வைத்துப் புடமிட வேண்டும். முற்றும் குளிர ஆறினபின் எடுக்க அரைகுறையான பற்பமாய் இருக்கும்.

இந்த அரைகுறையான பற்பத்தைக் கல்வத்திலிட்டு முன் போல் விளா இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். முன்போலவே வில்லை செய்து உலர்த்தி முன்போலவே விளா இலையை அரைத்த விழுதுக்குள் வில்லையை வைத்து முன்போல் சீலைமண் செய்து முன்போல் புடமிட வேண்டும்.

மூன்றும் தடவையும் முன்போலவே புடமிட்டு எடுத்தால் சங்குபோல வெண்மையான பற்பமாய் இருக்கும். இதனை எல்லாவித உடலினர்களுக்கும் கொடுக்கலாம். சுவையின்மை கொஞ்சமும் இராது. எல்லாவித மருந்துகளிலும் சேர்த்து உபயோகிக்கலாம். நல்ல குணத்தைக் கொடுக்கும். இது ஒரு சிறந்த முறை.

அளவு :— 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய்கள் :—இது பொதுவாய் எல்லா நோய்களுக்கும் பயன்படத் தக்கது ஆகையால் மேற்படி முறை களில் சொல்லி இருக்கப்பட்ட துணைமருந்துகளுடனும், இன் னும் அந்தந்த நோய்க்குத் தகுந்த துணைமருந்துகளுடனும் கொடுக்கலாம். நல்ல குணத்தைத் தரும். இது எளிதான முறைகளில் ஒன்றானாலும் சிறந்த முறைகளில் ஒன்றான தாலும் மருத்துவர்கள் இதனைக் கையிருப்பாகச் செய்து வைத் துக் கொள்வார்களென நம்புகின்றோம்.

குறிப்பு

விளா இலையில் இரசம் அரிதாக வருமாகையால் பின் கண்டபடி தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டியது. அதாவது :—விளா மரத்தின்மீது உள்ள புறணியை எடுத்துச் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டும். இந்தச் சாம்பல் ஒரு படியில் மூன்றுபடி நீரை விட்டுக் கலக்கி 24 மணி நேரம் வைத்துத் தெளிவை இறுத்துக் காய்ச்ச உப்பாகும். இந்த உப்பை எடுத்துக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு விளா இலையை இடித்துத் தூளாக்கி இலைக்குத் தக்கபடி மேற்படி உப்பைத் தெளித்து அழுத்திவைத்து மறுநாள் இடித்துப் பிழிந்தால் சாறு வரும். இந்தச் சாற்றை விட்டு முன் சொன்னபடி அரைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்ய இயலாதவர்கள் முன் இலையில் கொஞ்சம் சிறுநீரைத் தெளித்து இடித்துப் பிழிந்து கொள்ள வேண்டியது தான் விதி. அதைத் தவிர வேறு கதியில்லை. இனி அவரவர்கள் சக்திக்கு இயன்ற வகையில் செய்து கொள்ளவும்.

83. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 1 பலம் (35 கிராம்), புளியாரைச் சாறு 10 பலம் (350 கிராம்), மடலரிதாரம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :— தாம்பிரப் பொடியை ஒரு பீங்கான் டம்ளரில் போட்டு மேற்படி புளியாரைச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்து நன்ருகக் கலக்கி விட்டு வரவேண்டும். பிரதிதினமும் மூன்று அல்லது நான்கு தடவை கலக்கிவிட வேண்டும். சாறெல்லாஞ் சுண்டி மெழுகு பதமாகிற வரையில் வெய்யிலில் வைத்து வரவேண்டும். கையில் எடுத்துத் தேய்த்துப் பார்த்தால் நெற நெறப்பில்லாமல் வெண்ணெய் போல் நுண்மையாய் இருக்க வேண்டும். சாறெல்லாம் சுண்டி வற்றிப்போயும் அப்படி நெறநெறப்பு இருக்குமாகில் அதை எடுத்துக் கல்வத்தில் போட்டு முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு நெறநெறப்பில்லாமல் அரைத்துப் பழையபடி அந்த டம்ளரில் வழித்து விட்டு முன்போல ஐந்தாறு பலம் புளியாரைச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்து வரவேண்டும். நன்ருய் மெழுகு பதம் ஆனவுடன் உருண்டையாக உருட்டி உலர்த்திக் கொள்ளவும் வேண்டும். முற்றும் ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து உமிழ் நீரை விட்டு மை போல் அரைத்து மேற்படி உருண்டையைச் சுற்றிலும் இலேசாய்த் தடவி வெய்யிலில் உலர வைக்க வேண்டும். அது

நன்ருய் உலர்ந்தபின் மறுபடியும் பூசவேண்டும். இவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பூசி உலர்த்திக்கொள்ள வேண்டுமே யொழிய ஒரே தடவையாகப் பூசி உலர்த்தலாகாது. பிறகு மேற்படி புளியாரை இலையை அரைத்த விழுது 25 பலம் (875 கிராம்). இதனை மேற்படி உருண்டையின் மீது கவசிக்க வேண்டியது. உருண்டையானது கவசத்தின் நடுவில் இருக் கும்படியாகச் செய்ய வேண்டியது. அதன்மேல் மூன்று சீலை மண் செய்து கவசத்தின் எடையின் 5 பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். முற்றும் ஆறினபின் எடுக்கப் பற்பமாகி யிருக்கும். இது சில சமயம் சிவந்த வண்ணமாயும் இருக்கும். இப்படி ஆவதற்குக் காரணம் மூலிகையின் குண வேறுபாட் டால் உத்தேசிக்கப்படுகிறது. வெண்மையாயினும் செம்மை யாயினும் குணத்தில் எல்லாம் ஒன்றே.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய், மிளகுத் தூள் முதலியவை களும் இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த இளகம், தூள் ஆகியவைகளுமாம்.

தீரும்நோய்கள் :— குன்மம், எரி குன்மம், செரியாமை நோய், பித்த சம்பந்த நோய்கள் முதலிய அநேக நோய்களில் பயன்படுகின்றன. பழக்கத்தால் தக்க துணைமருந்துகளில் பல நோய்களுக்குப் பயன்படுத்தலாம்.

மருத்துணவு :— இச்சா பத்தியம்.

84. தாம்பிர பற்பம் (வேறு)

அடைவைத்த அண்டவோடு 5 பலம் (175 கிராம்), எருக்கம்பால் செல்லத்தக்க அளவு, தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— 2 பலம் (70 கிராம்) உவர்மண்ணை ஒருபடி நீரில் போட்டுக் கரைத்து மேற்படி அண்ட ஓடுகளை அதில் போட்டு அடுப்பேற்றி நன்ருய்க் கொதித்த பின்பு இறக்கி அண்டவோட்டினுள் இருக்கிற சவ்வை நீக்கி நீரை விட்டுக் கழுவித் தூய்மை செய்து கொள்ள வேண்டும். பிறகு வெய்யி லில் உலர்த்தி ஈரமில்லாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனைக் கல்வத்திலிட்டு எருக்கம் பாலைச் சிறுகச் சிறுக விட்டு நாலு சாமம் அரைத்து மெழுகுபோல் ஆனபின் சிறு கலசமும் அதன் வாய் பொருந்தும்படியான மூடியும் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இது சுமார் $\frac{1}{4}$ அங்குல கனம் உள்ளதாய்

இருக்க வேண்டும். அண்ட ஓடானது செம்மையாக அரை படாதிருந்தால் இக்கலயத்தில் வெடிப்பு உண்டாகும், செம்மை யாக அரைபட்டிருந்தால் கலசத்தில் கொஞ்சமும் வெடிப்பு காணுது. சிலசமயம் அப்படி வெடிப்பு கண்டால் அரைப்புப் போதாதென நிதானித்து மறுபடியும் அதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் எருக்கம் பாலே விட்டு அரைத்துப் பதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இது பழக்கத்தால் நன்ருகத் தெரிந்து போகும்.

பிறகு தூய்மை செய்த தாம்பிரப் பொடியை முன் சித்தப் படுத்தி இருக்கிற கலசத்தின் வாய் வரையில் போட்டு நிறைத்து அதன் வாய்க்கு முன் சித்தப்படுத்தி இருக்கிற அண்ட மூடியை யிட்டு முன்னர் வாய்க்கு மூன்று சீலே செய்து பிறகு கலசம் முழுதும் ஏழு சீலேமண் செய்து உலர்த்த வேண்டும். கவசத் தின் எடையின் 30 பங்கு கொண்ட வறட்டியில் குழிப்புடம் இடப் பற்பமாய் இருக்கும். சுத்த வெண்மையாகவும் இருக்கும்.

அளவு :— 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணேமருந்தும், தீரும்நோய்களும்:—நெய், தேன், பறங்கிப் பட்டை இளகம், இன்னும் அந்தந்த வியாதிகளுக்கு ஏற்றதான இளகங்கள், தூள்கள், குடிநீர்கள் ஆகியவைகளில் கொடுக்க அந்தந்த நோய்கள் தீரும்.

மூக்கரட்டை வேர்ப்பட்டைத் தூள் $\frac{1}{4}$ வராகனெடை ($\frac{7}{8}$ கிராம்), பசுவின் நெய் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ் விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் காலே மாலே மட்டும் மூன்று நாள் அல்லது ஏழு நாள் அல்லது பதினெரு நாள் நோயின் சக்திக்குத் தகுந்தபடி பயன் படுத்திவரப் பதினெட்டு வகைச் சூலேயும் தீரும்.

வெண்ணெச்சி வேர்ப்பட்டை, சிற்ருமுட்டி வேர்ப்பட்டை, மாவிலிங்க மரப்பட்டை இம் மூன்றும் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்). இவற்றைச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரில் போட்டுக் காய்ச்சி அரை ஆழாக்காகச் சுண்டவைத்து வடி கட்டித் திப்பி நீக்கி வைத்துக் கொள்ளவும். மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) தேனில் குழைத்து உட்கொண்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற குடிநீரைப் பருக வேண்டும். இவ்விதம் செய்து வந்தால் அண்டவாதம், விதைவாதம், அண்டவீக்கம், குடல்வாதம் முதலிய எல்லா வாத நோய்களும் தீரும். குன்மம், பெருங் கழிச்சல், தீமந்தம், சுரம், சன்னி முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம். நோயின் சக்திக்கும், உடல் சக்திக்கும் தகுந்தாற்போல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பு

இயற்கையினது அருளினாலும், பெரியோர்களின் ஆசியாலும் நாம் இங்கு எழுதிவரும் ஒவ்வொரு பாகமும் மிகவும் அருமையானது என்பதும், மிக்க மறைவாய் வைக்கத் தகுந்தது என்பதும் பல நூல் பயிற்சியுள்ளவர்களும், பகுத்தறிவு உள்ளவர்களும், அதிக பழக்கம் உள்ளவர்களுமான மருத்துவ வல்லுனர்களுக்கு நன்கு புலப்படாமல் இருக்காது. இன்னும் இந்த அருமையான பற்பங்களை உபயோகிக்கும் நோய்கள், அவற்றிற்கான துணைமருந்துகள் முதலியவைகளும் தெரிந்தே இருக்கும். ஆனால் மேற்கண்டபடி பல நூல் ஆராய்ச்சி, பகுத்தறிவு, மிக்க பழக்கம் ஆகிய மூன்றும் ஒருங்கே இருக்கப் பெற்றவர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள். இன்னும் ஒவ்வொரு முறைக்கும் ஏற்றதான துணைமருந்துகளை எல்லாம் எழுதுவதாய் இருந்தாலும் இச்சிறிய நூல் நினைப்பிலும்மிக்க விரிவெய்துமென அச்சமாகவும் இருக்கிறது. இவ்விருவிதத் தொல்லைகளைப் போக்குவதற்காக சத சுலோகம் என்னும் அரிய நூலைக் கூடிய விரைவில் வெளிப்படுத்த மலர்மிசைஏகினான் உதவி செய்வாராக. அந்த நூலில் தனித்தனி ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனி மருந்துகள் சொல்லப்பட்டு இருப்பதால் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்கள் ஒவ்வொருவரும் அதன் மூலமாக வெகு இலகுவாய் எல்லா நோய்களின் பரிகாரங்களையும் தெரிந்து கொள்ளப் பெருத்த உதவியாக இருக்கும். எந்த பொருளுக்கும் காலம் வரவேண்டும். (பருவத்தாலன்றிப்பழா)

85. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிரத் தகடு 2 வராகனெடை (7 கிராம்) வாணகெந்தகம் என்னும் குழாய்க் கெந்தகம் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), வேப்பிலை செல்லத்தக்க அளவு.

செய்முறை :— கெந்தகத்தை உமிழ்நீர் விட்டு ஒருமணி நேரம் அரைத்து மேற்படி தகட்டிற்கு இருபுறமும் கொஞ்சம் கொஞ்சமாகப் பூசி உலர்த்த வேண்டும். அதாவது ஒரு முறை பூசினது உலர்ந்தபின் மறுமுறை பூசவேண்டும். இவ்விதம் அந்தக் கெந்தகம் முழுவதையும் தகட்டில் பூசி உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு வேப்பிலையை

அரைத்த விழுது 20 பலம் (700 கிராம்). இதனை மேற்படி தகட்டில் கவசித்து ஒரு சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு 25 பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்கச் சுண்ணாம்புக் கட்டியைப் போல் பற்பமாகி இருக்கும். மேற்கண்டபடி புடமிட்டால் ஒரே புடத்தில் பற்பமாகி விடும். இப்படிச் செய்யக் கூடாதவர்கள் மூன்று அல்லது நான்கு புடமாகவும் போட்டுக் கொள்ளலாம். அதன் விபரம் :—மேற்படி கவசத்தின் எடைக்கு 5 பங்கு வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்து மறுபடியும முன் போல் அந்த இலையை அரைத்துக் கவசித்து முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று நான்கு புடமிட்டால் மிகச்சிறந்த பற்பமாகி விடும்.

அளவு :— 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய் முதலியவைகளும் மேற்கண்ட முறைகளில் சொல்லப்பட்டிருப்பவைகளுமாம்.

தீரும்நோய்கள் :— உசிதம்போல சுரம், சன்னி, குன்மம், சூலை, வாயு, முதலிய பல நோய்களில் அது அதற்குத் தகுந்த துணைமருந்துகளில் பயன்படுத்த அவை தீரும்.

மருத்துணவு :— முன் கண்டவைகளேயாம்.

86. தரம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிரத் தகடு 1¼ வராகனெடை, இதனைப் புளியிலைக் கனமாகத் தட்டிக்கொள்ள வேண்டும். கோது, கொட்டை முதலியவைகளை நீக்கின புதுப்புளி 1½ பலம் (52½ கிராம்), சத்திச்சாரம், சோசிக்காரம் ஆகிய இரண்டும் வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), அழிஞ்சில் வேர்ப்பட்டை 5 பலம் (175 கிராம்).

செய்முறை :— புளி முதலிய முன் மூன்று சரக்கையும் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் அரைத்துக் கலந்து தாம்பிரத் தகட்டிற்கு இருபுறமும் சமமாகக் கவசித்துக் கொள்ளவேண்டும். பிறகு அழிஞ்சில் வேரை வெண்ணெய்போல் அரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் கவசத்தின் மீது கவசம் செய்ய வேண்டும். அதன்மேல் இரண்டு சீலைமண் செய்து கவசத்தின் பத்துப்பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். ஒரே புடத்தில் இயற்கையின் அருளால் பற்பமாகி விடும். முறை வேறுபாட்டால் பற்பமாகா விட்டால் மறுபடியும் முன்போல் இன்னொரு புடம் இட்டுக்கொள்ள வேண்டும். எவ்விதமும் மூன்று புடத்திற்குள் பற்பமாகி விடும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய், மருத்துணவு முதலியவைகள் எல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு

சோசிக்காரம் என்பதற்கு ஹிந்துஸ்தானியில் சஜ்ஜிகார் என்று பெயர். இது, யவைக் கோதுமையின் வைக்கோலை எரித்துச் சாம்பலாக்கி அதில் எடுத்த உப்பு. இது கிடைக்கா விட்டால் மர உப்பை (Corbonate of potash)ச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

87. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 1 பலம் (35 கிராம்), சிறுபுள்ளடி இலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் மேற்படி பொடியை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் 5 பலம் (175 கிராம்) சிறுபுள்ளடி இலைச் சாற்றை விட்டு 12 மணி நேரம ஊறவைக்க வேண்டும். பிறகு அந்தச் சாற்றை இறுத்துவிட்டுப் பொடியைக் கல்வத்திலிட்டுப் புதிதாக மேற்படி சிறுபுள்ளடி இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். எத்தனை சாமம் அரைத்த போதிலும் அரைத்ததைக் கைவிரல் நுனியால் நெருடிப் பார்த்தால் கொஞ்சமும் நெறநெறப்பு இல்லாமல் வெண்ணெய் போல் இருக்க வேண்டும். கிரமமாக நான்கு சாமம் அரைத்தால் சீக்கிரத்தில் அரைபட்டு இவ்விதம் ஆகிவிடும். பழக்கம் இல்லாதவர்கள் அரைத்தால் சீக்கிரத்தில் அரைபடாது. எவ்விதமாயினும் மேற்கண்ட விதமாகச் சோதித்து அந்தப் பதத்தில் எடுத்து வில்லை செய்து வெய்யிலில் வைத்துக் கொஞ்சமும் ஈரம் இல்லாமல் உலர்ந்த பின்பு ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். புடம் ஆறினபின் எடுக்க மல்லிகைப் பூப்போன்ற வெண்மையான பற்பமாகி இருக்கும். இதில் தீயானது அதிகப்படாமலும் குறைவுபடாமலும் சமமானதாக இருந்தால் மேற்கண்டபடி ஒரே புடத்தில் மல்லிகைப் பூப்போல் பற்பமாகி விடுகிறது. தீ குறைந்திருந்தால் மஞ்சள் வண்ணமாய் இருக்கும். அதை முன் சாற்றை விட்டு இரண்டொரு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் புடமிட்டுக் கொள்ளப் பூரணமான பற்பமாகி

விடும். தீ அதிகமாகி விட்டால் பற்பம் கறுத்துப் போகும். ஆகையால் புடம் போடுகிற இடம், வறட்டியின் கனம் ஆகிய வைகளினுல் இவ்வித வேறுபாடுகள் உண்டாகின்றன. ஆகையால் இந்த விடயங்களை பழக்கத்தால் நிச்சயித்துக் கொள்ள வேண்டியது.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய், மருத்துணவு முதலியவைகள் எல்லாம் மேற் சொன்னவைகளேயாம்.

88. தாம்பிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிரத் தகடு 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), கரு ஊமத்தையிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— வாயகன்ற பத்துப் பலம் கொள்ளும்படியான ஒரு கலயத்தில் மேற்படி தகட்டைப் போட்டு அதில் பத்துப் பலம் கரு ஊமத்தைச் சாற்றை விட்டு ஏழுநாள் ஊற வைத்து அந்தச் சாற்றை யிறுத்துவிட்டு வேறு புதிதாக மேற்படி கரு ஊமத்தை இலைச் சாற்றைப் பத்துப்பலம் விட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திக் கலயத்தின் பத்துப் பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். குளிர ஆறினபின் எடுத்து முன்போல் கலயத்திலிட்டு சாற்றை விட்டு புடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட்டால் பற்பமாகி விடும். கூடுமாலுல் ஆரம்பத்திலேயே கெச புடமாகப் போட்டால் ஒரே புடத்தில் பற்பமாகி விடும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து, பயன்படுத்தல் முதலியவைகள் எல்லாம் மேற்கண்டவைகளே ஆம்.

89. தாம்பிர பற்பம் (வேறு)

தாம்பிரத் தகடு $3\frac{1}{4}$ வராகனெடை அல்லது ஒரு அரையணு. நேர்வாளப் பருப்பு, சிற்ருமணக்கம் பருப்பு, சேராங்கொட்டைப் பருப்பு இம் மூன்றும் வகைக்கு 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), வெள்வங்கம் 3 பலம் (105 கிராம்), நூல் துணி $2\frac{1}{2}$ வீசை (3 கிலோ 500 கிராம்).

செய்முறை :— வெள்வங்கத்தைத் தகடடித்துக் கீழ் மேல் ஆன இரண்டு மூடிகளாகச் செய்து கொள்ள வேண்டும். முன் மூன்று பருப்பு வகைகளையும் அரைத்து பாதியைக் கீழ்

டப்பியில் வைத்து அதன்மேல் முன் செம்புத் தகட்டை அல்லது அரையணுவை வைத்து அதன்மேல் மற்ற பாதியை யும் வைத்து நன்ருய்ப் பக்குவமாய் அழுத்தி, மேல் மூடியை மூடி உள்வைத்த செப்புத் தகடானது நிலையாய் இருக்கும்படி யாக டப்பியைக் கட்டிப்பிடித்து அடையாளம் வைத்துக் கொண்டு ஏழெட்டுச் சீலைமண் செய்து உலர்த்தி முன் துணியை அதன்மேல் பந்து போலச் சுற்றி வாயகன்ற ஓடு அல்லது சட்டியில் வைத்து இரண்டு மூன்று வறட்டிகளையும் துண்டித் துக் கீழ்மேல் அடுக்கிப் புடம் போட வேண்டும். காற்று அடக்கமான இடமாய் இருக்க வேண்டும். நன்ருய் ஆறின பின் எடுக்க வெண்ணிறமான பற்பமாக இருக்கும். எடை குறையாது. சாப்பிடும்போது வாந்தி, சுவையின்மை முதலிய தீய குணங்கள் ஒன்றும் இராது. இது எல்லா நோய்களுக்கும் பயன்படும் ஆகையால் அவரவர்களின் எண்ணத்தின் நிலைக்கு ஏற்றபடி பயன்படுத்திக் கொள்வார்களாக. இதுதான் தாம்பிர வெள்ளை அல்லது தாம்பிர பற்பம் என்று சொல்லப்படும். இதன் செய்பாகம் தவறின் ஒருபோதும் பற்பமாகாது. செய்யும் திறன் இல்லாதவர்கள் முறைகளின் மீது குறை கூறுவது வழமை. இது அநேகந் தடவைகள் செய்து பழக்கப் பட்டதே தவிர புதிதல்ல. இதில் முக்கியம், கவசத்திற்கு உள்ளே வைக்கப்படும் செப்புத் தகடானது நிலையாய் இருக்க வேண்டும். படுக்கையாய் இருந்தால் மணங்கு நெருப்பிட் டாலும் பற்பமாகாது. ஆகையால் இதனை செய்யும்போது மிக்க விழிப்புடன் செய்ய வேண்டும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய்கள் :— கோரைக்கிழங்கு, பற் படாகம், முந்திரிகைப் பழம் அல்லது திராட்சைப் பழம் இம் மூன்றும் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்), இவற்றை ஒரு ஆழாக்கு நீரிலிட்டு அரை ஆழாக்காகக் காய்ச்சி வடிகட்டித் திப்பி நீக்கி வைத்துக் கொள்ளவும். மேற்படி பற்பத்தை அளவுப்படி ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) தேனில் குழைத்துச் சாப்பிட்டு மேலே முன் சித்தப்படுத்தி இருக்கிற குடிநீரைப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் செய்துவர தாபச் சுரம், பித்த சுரம் ஆகியவைகள் தீரும். இன்னும் அந்தந்தச் சுரத்திற்குத் தகுந்த குடிநீர்களுடன் சேர்த்துக் கொடுத்தால் எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

கடுக்காய்த் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), சீரகத்தூள் $\frac{3}{4}$ வராகனெடை ($2\frac{5}{8}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$

கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட அளவுப்படி சேர்த்து உட்கொள்ள சுவாசகாச நோய்கள் தீரும்.

அதிவிடயத் தூள், மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி இந்நான்கின் தூள்கள் வகைக்கு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்) நல்ல தேன் 6 பலம் (210 கிராம்). தேனைக் காய்ச்சி மேற்படி தூள்களைக் கொட்டிக் கலந்து கிளறி இளகம்போல் செய்து வைத்துக் கொள்ளவும். 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) மேற்படி இளகத்துடன் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உண்ண மந்தாக்கினி நோய், செரியாமை நோய், ஆகியவைகள் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச்சாறு $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), சீரகத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள குன்மநோய் தீரும்.

மிளகு 1 பலம் (35 கிராம்) சர்க்கரை 1 பலம் (35 கிராம்), மிளகைப் பொடித்து துணியில் வடிகட்டி இரண்டையும் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), பசுவின் நெய் அல்லது வெண்ணெய் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து அரை அல்லது ஒரு மண்டலம் சாப்பிட மேகப் படைகள், திமிர் சூலை ஆகியவைகள் தீரும்.

இவ்விதமே மற்ற நோய்களுக்கும் அததற்குத் தகுந்த துணைமருந்துடன் கொடுக்க அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

90. தாம்பிர பற்பம் (வேறு)

தாம்பிரச் சல்லிகள் 10. இவற்றுள் ஒவ்வொன்றும் 1, $1\frac{1}{4}$ வராகனெடை இருக்கலாம். இவை கிடைக்காத காலங்களில் தாம்பிரத் தகட்டைத் துட்டைப்போல் துண்டித்து மெல்லியதாகத் தட்டிக்கொள்ள வேண்டும். புளிநறலைக் கிழங்கு 5 பலம் (175 கிராம்), இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும். புளியிலைச் சாறு $\frac{1}{2}$ படி, கெந்தகம் 1 பலம் (35 கிராம்), கீழ்க்காணும் தாம்பிரக் குருசெயநீர் செல்லத் தக்க அளவு.

செய்முறை :— புளியிலைச் சாற்றில் புளிநறலைக் கிழங்கையும், தாம்பிரத் தகடுகளையும் போட்டு அடுப்பேற்றிச் சாறு

சுண்டினவுடன் எடுத்து நீரை விட்டுக் கழுவிக் கொள்ள வேண்டும். இவ்விதம் இன்னும் இரண்டு தடவை காய்ச்சி எடுத்துக் கொண்டால் தாம்பிரமானது தூய்மையாகி விடும். பிறகு கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரை ஊற்றி மெழுகுபோல் அரைத்து மூன்று பங்காக்கி ஒருபங்கை சல்லிகளுக்கு அல்லது தகடுகளுக்குப் பூசிக் காயவைக்க வேண்டும். கெந்தகத்தை ஒரே தடவையாகப் பூசாமல் உலர உலரப் பல தடவைகளாகப் பூசவேண்டும். பிறகு அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி 5 பலம் (175 கிராம்) உள்ள நூறு வறட்டியில் புடமிடவும். பிறகு எடுத்து முன் வைத்திருக்கிற கெந்தகத்தின் ஒரு பாகத்தைத் தகடுகளுக்கு அல்லது சல்லிகளுக்கு முன்போல் பூசி முன் போல் புடமிடவும். மூன்ருந் தடவையும் மற்ெருரு பங்கு கெந்தகத்தைப் பூசி முன்போலவே புடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட்டால் பற்பமாகிவிடும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து, தீரும்நோய் :— மேற் சொல்லி இருக்கிற துணைமருந்துகளில் நோய்களுக்குத் தகுந்தவைகளில் பயன் படுத்த குன்மம், குட்டம், சயம், அண்டவாயு, பெருங்கழிச்சல், வாத நோய்கள், வாயுசம்பந்த நோய்கள், ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— மேற்கண்ட பாகங்களில் சொல்லி இருப்ப வைகளேயாகும்.

தாம்பிரக் குருச்செயநீர்

புளியம்புறணி தேவையான அளவு. (இது பட்டணவாசி களுக்குக் கிடைப்பது அரிதாயினும், புளியந்தோப்புகள் உள்ள நாட்டுப்புறங்களில் மிகு சுலபமாகக் கிடைக்கும். இதற்குச் செலவும் அதிகம் வேண்டியதில்லை.) இதனைக் கொளுத்திச் சாம்பலாக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சாம்பல் படி ஒன்றுக்கு நாலுபடி கணக்காக நீர்விட்டு நன்ருய்க் கலக்கி வைக்கவேண்டும். பிரதிதினமும் இரண்டு மூன்று தடவை கலக்கியும் வரவும். மூன்றுநாட் சென்று நாலாம் நாள் தெளிவை யிறுத்து இரும்புச் சட்டியில் விட்டுக் காய்ச்சி எல்லாம் சுண்டிக் குழம்புப் பதமாய் இருக்கையில் இறக்கி வெய்யிலில் வைத்தால் எல்லாம் உப்பாகிவிடும். இதுவே புளியுப்பாம். இதனைக் கல்வத்திலிட்டுக் குப்பை மேனிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மெழுகுபோல் அரைத்

துக் கொள்ள வேண்டும். பிறகு ஒருசேர் நவச்சாரக்கட்டியை நான்கு பக்கமும் சமமாய் இருக்கும்படியாகச் சீவிச் சரிப் படுத்தி மேற்படி உப்பைக் கட்டியின்மீது ஒரு அங்குல கனம் உள்ளதாகக் கவசம் செய்ய வேண்டும். பிறகு வெய்யிலில் உலர்த்தி அதன்மேல் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒரு ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து அரைகெச சதுரப் புடமிடவும். எல்லாம் சேர்ந்து பற்பமாகி இருக்கும். அதைப் பீங்கான் பாத்திரத்தில் போட்டுப் பனியில் வைக்க வேண்டும். வைக்கும்போது அந்தப் பீங்கானைச் சற்று சாய்வாக வைக்க வேண்டும். காலையில் பார்த்தால் பீங்கான் பக்கத்தில் செயநீரிருக்கும். அதை எடுத்துக் குப்பியில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் ஒருவாரம் பத்து நாள் வைத்து வந்தால் எல்லாம் செயநீராகிவிடும். இதனைக் கற்காரக்குள்ள குப்பியில் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் செய நீரையே தனியாக பல நோய்களுக்கு பயன் படுத்தலாம்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ வராகன் எடை.

துணைமருந்து :— அரிசியை வறுத்து அரைத்த பொரிமா $\frac{1}{2}$ வராகனெடை. இதில் மேற்படி செயநீரை விட்டுச் சாப் பிடவும். வெந்நீர் தண்ணீர் ஆகியவைகளிலும் விட்டுக் கொடுக்கலாம். சருக்கரை முதலியவைகளிலும் சேர்த்துக் கொடுக்கலாம். காலை மாலை இரண்டு வேளையும் ஏழு நாள் கொடுத்தால் போதுமானது.

தீரும்நோய்கள் :— எண்வகைக் குன்மம், வயிற்றுவலி, குன்மக் கட்டி, கௌசைக்கட்டி, உதிரக்கட்டி முதலிய பல நோய்கள் தீரும்.

இந்தச் செயநீரால் நெருப்பிற் கோடும் சரக்குகளைச் சுருக் கிட்டால் அவை நெருப்பிற் கோடாமற் கட்டுப்பட்டுப் போம். இன்னும் இந்த செயநீரால் அநேகவகைப் பற்பங்களும் செய்ய லாம். அம்முறைகளை இனி நாம் எழுதும் அநுபோக வைத்திய ரத்நாகரத்தில் எழுதுவோம்.

இந்தக் குருச் செயநீரை மற்ற இடங்களில் எழுதாமல் இங்கு எழுதப்பட்டதற்கு ஒரு முக்கியக் காரணமுண்டு. அது பின்வருகிறவிதமாம்.

தாம்பிரப் பற்பமானது எல்லாவித சோதனைகளுக்கும் ஒத்திருந்தாலும் சிலருக்குக் கொடுத்தவுடன் வாந்தி, சுவை யின்மை முதலியவைகளை உண்டாக்குகிற குணம் சிற்சில சமயங்களில் சிற்சில பற்பங்களுக்கு உண்டாகிவிடுகிறது.

அனுபவசாலிகளான பலருக்கும் இவ்வுண்மை தெரிந்திருக்கலாம். தாம்பிர பற்பத்தில் புளித்தகாடி, புளித்த தயிர் முதலியவைகளை விட்டுச் சோதித்தால் பச்சை வண்ணமாதல், களிம்பு நாற்றம் வீசுதல் முதலிய தீயகுணங்கள் இல்லாமல் காணப்படுகிறது. ஆனால் அதை உள்ளுக்குப் பயன்படுத்தினால் சிலருக்கு வாந்தி முதலிய சுவையின்மையை உண்டாக்குகிறது. இதனால் நாம் சிந்திக்க வேண்டியதாவது: இந்தப் பற்பங்கள் தூய்மையாக இருக்கிறதாக வெளிக்குத் தோற்றினாலும் உள்ளில் ஏதோ சிறிது குற்றமிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் எவ்வகைத் தாம்பிர பற்பமே ஆயினும் மேற்கண்ட குருச்செயநீரை விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்து பங்கு எடை வறட்டியில் புடம் இட்டு ஆறினபின் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்யப்பட்ட தாம்பிர பற்பமானது எவ்வித கெடுதலும் செய்யாது. தாம்பிரப் பற்பத்திலுள்ள குற்றங்களை இது நீக்கும் குணமுள்ளதாகையால் இதற்குத் தாம்பிரக் குருச்செய நீர் எனப் பெயரிடப்பட்டு இருக்கிறது. இதன் சிறப்புப் பற்றியே பற்பங்களின் முடிவில் எழுதி இருக்கின்றோம். இந்த செய நீரின் அருமை பெருமைகள் பழக்கத்தில் தானே விளங்கிப் போகும் ஆகையால் அதைப்பற்றி அதிகமாக விரித்து எழுதாமல் சுருக்கமாக நிறுத்தினோம். ஆனால் இன்னுமொரு சிறிய செய்தியைப்பற்றி இங்கு சுருக்கிச் சொல்லவேண்டியது அவசியமாய் இருப்பதால் அதைச் சொல்லி முடிக்கின்றோம். அது பின்வருகிற விதமாம்.

எல்லாக் காரியங்களையும் எப்போதும் ஆட்சேபிக்கிற கனவான்கள் எங்கும் இருப்பார்களே! அக்கனவான்கள் இந்தப் பாகத்தைப் பார்வையிட்டால் ஆ ஆ இவ்வளவு புளியுப்பு எடுக்க எவ்விதம் முடியும் என்று சொல்லி ஏங்கி இது உலகிலுள்ள மனிதர்களால் முடியாத காரியமாச்சுதே; இது பூதம், பிசாசு ஆகியவைகள் செய்ய வேண்டிய காரியமாச்சுதே. இன்னும் இதற்குச் செலவு அதிகமாகி விடும் என்று சொல்லித் திகைப்படைந்துவிடுவார்கள். அத்தகையினர்களுக்கும் நமது அனுபவசித்தமான ஒரு முறையைச் சொல்கின்றோம்.

1. நாட்டுப் புறங்களில் புளியமரம் மிகுந்த ஊர்களில் சுண்ணும்புக் காளவாய் போடுவதற்காகப் புளியம் புறணி சேர்க்கப்படுகிறது. அவ்விடங்களில் சாதாரணமாக ஒரு சுமையானது இரண்டணு முதல் நான்கு அணுவிற்குக் கிடைக்

கும். இவ்விதம் நமக்குத் தேவையான வரையில் சேர்த்து எரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளலாம்.

2. சக்தியுள்ளவர்கள் பட்டுப்போன புளியமரத்தை வாங்கி நெருப்பிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கிக் கொள்ள லாம். புளிய மரத்தின் சமூலத்திலும் அந்த உப்பிருக்கிறபடியி ஞலும் குணமும் ஒன்றே ஆகையிஞலும் புளிய மரத்தின் இலே, கிளை முதலிய எல்லா வகைகளில் இருந்தும் உப்பு எடுத்துக் கொள்ளலாம். ஆனல் இதற்குக் கொஞ்சம் செலவு அதிக மாகப் பிடிக்கும்.

3. மேற்கண்ட இரண்டு வகைகளுக்கும் விருப்பம் இல்லா தவர்கள் பின்காணும் இந்த வகையை ஆயினும் திருப்தியுடன் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகின்றோம். அவர்கள் குடும் பத்தில் தினம் இரண்டு மூன்று தடவையாயினும் சமையல் முதலியவைகளுக்கு அடுப்பெரிக்க வேண்டியதும் அவசியந் தானே. அதற்காக வேறுவகை எரிகரும்பு வாங்கவேண்டியதும் அவசியந்தானே. ஆகையால் அந்தக் கரும்பிற்குப் பதிலாகப் புளியஞ்சிருய் புளியங்கொம்பு முதலியவைகளை வாங்கி அடுப்பு எரிக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டால் நாள்தோறும் குடும் பத்திற்குத் தகுந்தபடி ஒரு படியோ இரண்டு படியோ சாம்பல் சித்தமாகிக் கொண்டே இருக்கும். கொஞ்ச நாளைக்குள் எவ்வளவோ சேர்த்து விடலாம். இவ்விதம் எவ்விதச் செலவு மின்றியும் செய்து கொள்ளலாம். (மனம் உண்டானல் வழியும் உண்டாகும்). இங்கு ஒரு செய்தியைக் கவனத்தில் வைக்க வேண்டியது. அதாவது, அடுப்பெரியும்போது இந்த ஒருசாதி விறகே எரியவேண்டும். மற்ற சாதி விறகு கொஞ்சமும் சம்மந்தப்படாமல் அதிக கவனத்துடன் இருக்க வேண்டு மென்பதான ஏற்பாட்டைச் செய்ய வேண்டியதே ஆம்.

4. மேற்கண்ட வகைகளாகவும் செய்துகொள்ள இயலாத வர்கள் ஆங்கில மருந்துக் கடைகளில் விற்கப்படும் நவச்சார வாயு செயநீர் (Solution of Ammonia) (சொலூயூஷன் ஆப் அம்மோனியா) என்னும் மருந்தையாகிலும் வாங்கித் தாம்பிர பற்பம், தாம்பிரச் செந்தூரம் ஆகியவைகளில் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து மேற்கண்டபடி புடமிட்டுக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதால் தாம்பிர பற்பம், தாம்பிரச் செந்தூரம் ஆகியவைகளில் உள்ள குற்றங்கள் நீங்கித் தூய்மையாகிவிடும்.

91. தாம்பிர பற்பம் (வேறு)

தாம்பிர அரப்பொடி 1 பலம் (35 கிராம்). இதனைக் குகையில் வைத்துச் சிவக்கக் காய்ச்சி எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்க்க வேண்டும். சாறுனது பொடி அமிழ்ந்து இருக்கும்படியாய் இருக்க வேண்டும். பிறகு முன் போலவே நெருப்பில் சிவக்கக் காய்ச்சி முன் போலவே பழச்சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் சாற்றைப் புதிது புதிதாக வார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு நீர் விட்டு நன்ருகக் கழுவிவிட்டு வெய்யிலில் உலர்த்திக் கல்வத்திலிட்டுக் கூத்தன்குதம்பைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்துப் வில்லை செய்து உலர்த்தி ஓட்டி லிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி 75 பலம் (2 கிலோ 625 கிராம்) வறட்டியிற் புடமிடவும். புடம் ஆறின பின் மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் கூத்தன் குதம்பைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து முன்போல் வில்லைசெய்து உலர்த்தி முன்போல் கவசித்து உலர்த்தி முன்போல் புடமிட்டுக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட்டுக் கொண்டால் சிறந்த பற்பமாகி விடும். அவசியமானுல் இன்னும் இரண்டொரு புடம் அதிகமாகவும் போட்டுக் கொள்ளலாம்.

அளவு :— 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து :— மேற்படி பற்பங்களில் சொல்லியிருக்கிற துணைமருந்துகளும் இன்னும் சமயோசிதமான துணைமருந்துகளுமாகும்.

தீரும்நோய்கள் :— குன்மம், செரியாமை நோய், சூலை நோய், சுர நோய், சன்னி ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— முன் முறைகளில் சொல்லியவைகளேயாகும்.

92. சூதத் தாம்பிர பற்பம்

தாம்பிர அரப்பொடி 2½ பலம் (87½ கிராம்). இதனைக் குகையிலிட்டுக் கொல்லுலையில் வைத்துப் பழுக்கக் காய்ச்சி ஆகாசத்தாமரை இலைச்சாற்றில் தோய்க்க வேண்டும். சாறுனது பொடி ஆழ்ந்திருக்கும்படியாக இருக்க வேண்டும். ஆறினபின் பொடியை எடுத்து முன்போல் குகையில் வைத்து முன்போல் பழுக்கக் காய்ச்சி முன்போல் ஆகாசத் தாமரைச்

இலைச் சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி நூறு தடவைக்குக் குறையாமல் செய்ய வேண்டியது. இவ்விதம் தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 1 பலம் (35 கிராம்). தூய்மை செய்த பாலரசம் 1 பலம் (35 கிராம்), கோழிமுட்டை வெள்ளைக்கரு, எருக்கம்பால் இரண்டையும் சமமாகச் சேர்த்தது செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்படி தாம்பிர அரப்பொடியையும் ரசத்தையும் கல்வத்திலிட்டு ஒருமணி நேரம் அரைத்து மேற்படி வெள்ளைக்கரு, எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு முதல் தடவை இரண்டு சாமம் அரைத்து அண்டவோட்டில் வைத்து அதன் மேலும் அண்டவோட்டால் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி நூற்றைம்பது பலம் (5 கிலோ 250 கிராம்) வறட்டியில் புடமிடவேண்டும். பிறகு மருந்தை எடுத்து முன்போலவே அண்டக்கரு எருக்கம்பால் விட்டு ஒருசாமம் அரைத்து முன் போல் அண்ட ஓட்டில் வைத்து மேலும் அண்டவோட்டால் மூடி முன்போல் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி முன்போல் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று அல்லது நான்கு புடமிட்டால் தூய்மையான பற்பமாகி விடும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :— முன் முறைகளில் சொல்லப்பட்டவைகளும், சமயோசிதமானவைகளுமாம்.

தீரும்நோய்கள் :— குன்மம், குட்டம், கிரந்தி, சூலை, வாத நோய்கள், தீமந்தம் முதலிய எல்லா நோய்களிலும் பயன் படுத்தலாம்.

மருத்துணவு :— புளிப்புப் பொருள்கள், நல்லெண்ணெய், கடுகு, அகத்திக்கீரை, புகை, புணர்ச்சி இவை ஆகா.

கவனிப்பு :— ஆகாசத் தாமரையை வேருடன் இடித்தால் தான் சாறு வரும்.

விண்ணப்பம்

மலர்மிசையேகினன் அருளாலும், பெரியோர்களின் ஆசியாலும் தாம்பிர பற்ப வகைகளுள் பலவற்றை நாமிங்கு எழுதி இருக்கின்றோம். அவற்றுள் ஒவ்வொன்றும் மிகவும் அருமையானவைகள் என்பது பழக்கப்பட்டவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலச் செவ்வனே விளங்கும். ஒவ்வொரு வகையிலும் பலவகைகளை எழுதுவதின் கருத்தாவது, ஒவ்வொருவரும் தத்தம் விருப்பத்திற்கு இணங்கவும், சக்திக்கு ஏற்றவாறும் செய்துகொள்ள ஏதுவாய் இருப்பதற்கேயாம். இவை

போன்ற அருமையான அநேக பாகங்கள் இன்னும் இருக்கின்றன. இயற்கையினது அருளால் இனி உடனே அச்சிடப்படும் அனுபோக வைத்திய ரத்நாகரத்தில் வகை விபரமாக எழுதுவோம். இந் நூலானது மிகவும் சுருக்கமாக எழுதப்படுவதால் இலைமறை காய்போல் உள்ள அருமையானவைகளும், செய்வதற்கு இலகுவானவைகளும், குணத்தில் மிகவும் சிறந்தவைகளும், பல தடவைகளில் பழக்கப்பட்டவைகளுமான பல பாகங்களை இங்கு எழுதி வருகின்றோம்.

93. தாம்பிரச் செந்தூரம்

கிளிஞ்சிற்சுண்ணம் 40 பலம் (1 கிலோ 400 கிராம்), வெண்மையான நவச்சாரம் 40 பலம் (1 கிலோ 400 கிராம்), தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 2½ பலம் (87½ கிராம்).

செய்முறை :— மேற்படி சுண்ணத்தையும், நவச்சாரத்தையும் பொடித்துப் பீங்கான் பாத்திரத்திலிட்டுப் பனியில் வைக்கச் செயநீராகும். அந்தச் செயநீரைக் குப்பியில் விட்டுக் கல்மூடி போட்டு வைத்துக் கொள்ளவும். மேற்படி தாம்பிரப் பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி சாரச்செயநீரைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி முதலில் 60 பலம் (2 கிலோ 100 கிராம்) வறட்டியில் புடமிட வேண்டும். குளிர ஆறினபின் எடுத்து முன்போல் கல்வத்திலிட்டு அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி இரண்டாவதும் 60 பலம் (2 கிலோ 100 கிராம்) வறட்டியில் புடமிடவேண்டும். பிறகு முன்போலவே அரைத்து வில்லை செய்து உலர்த்திக் கவசித்து மூன்றாவது 70 பலம் (2 கிலோ 450 கிராம்) வறட்டியில் புடமிட வேண்டும். பிறகு முன்போலவே அரைத்து வில்லைசெய்து உலர்த்திக் கவசித்து 4வது 80 பலம் (2 கிலோ 800 கிராம்) வறட்டியில் புடமிட வேண்டும். இவ்விதம் ஏழு புடமிட வேண்டும். ஆனால் முதல் இரண்டு புடங்களும் தவிர மற்றவைகள் ஒவ்வொற்றிற்கும் பத்துப் பத்துப் பலம் வறட்டியை அதிகப்படுத்திக்கொண்டே போகவேண்டும். இவ்விதம் படிப்படியாகவும், கைபாகமாகவும் புடமிட்டால் குங்குமம் போன்ற செந்தூரமாகும்.

அளவு :— 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய் இன்னும் சமயோசிதமான இளகங்களுமாம்.

தீரும்நோய்கள் :— குன்ம நோய்கள், பசிமந்த நோய்கள், பாண்டு நோய்கள், சுரநோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும். நரம்புகளுக்கு முறுக்கேறித் தாது விருத்தி, உடல் வலிமை, மனத்திண்மை முதலியவைகள் உண்டாகும். இன்னும் தகுந்த துணைமருந்துகளுடன் கொள்ள சூலை, கிரந்தி, இரணங்கள், படைகள் முதலிய நோய்களும் தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி, வாயு பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

94. தாம்பிரச் செந்தூரம் (வேறு) எரிப்பு

தாம்பிரத் தகடு 10 பலம் (350 கிராம்). இதனை மெல்லிதாகச் சக்கரமாகத் தட்டிக்கொள்ள வேண்டும். இதனைக் கரிநெருப்பில் பழுக்கக் காய்ச்சி நல்லெண்ணெயில் தோய்க்க வேண்டும். நல்லெண்ணெயானது தகடு ஆழ்ந்து போகும்படி இருக்க வேண்டும். மறுபடியும் தகட்டைப் பழுக்கக் காய்ச்சி முன்போல் நல்லெண்ணெயில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் தோய்த்துக் கொள்ள வேண்டும். பிரதி தடவையும் புதிது புதிதாக எண்ணெயை வார்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதமே மோரில் மூன்று தடவையும், கோமூத்திரத்தில் ஏழு தடவையும் திரிபலைக் குடிநீரில் ஏழு தடவையும் காய்ச்சித் தோய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதால் தாம்பிரமானது தூய்மையாகிவிடும்.

தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 5 பலம் (175 கிராம்), தூய்மை செய்த மனோசிலை, தூய்மை செய்த அரிதாரம், தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த துத்தம் இந்நான்கும் வகைக்கு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :— மேற்கண்ட சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் ஒன்றுபட அரைத்து நன்றாகக் கறுத்தபின்பு தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இரண்டு சாமம் அரைத்தெடுத்து இரண்டு பங்காக்கி ஒருபங்கை ஒரு சட்டியில் பரப்பி அதன்மேல் முன் சித்தப் படுத்தி வைத்திருக்கிற தாம்பிரத் தகட்டை வைக்க வேண்டும். சட்டியில் இருக்கிற பொடியானது தாம்பிரத் தகட்டின் கீழ் எங்கும் சமமாக இருக்கும்படி திட்டப்படுத்தி வைக்க வேண்டியது. பிறகு மறுபாதித் தூளைத் தாம்பிரத் தகட்டின்மீது அது முழுவதும் எங்கும் சமமாக இருக்கும்படி பரப்பித் திட்டப்

படுத்த வேண்டியது. அந்தச் சட்டியின் வாய் பொருந்தும்படியாக மறுசட்டி மூடி ஏழு சீலைமண் செய்து அசையாமல் வைத்து உலர்த்தி மெதுவாய் அடுப்பேற்றிக் காட்டுத்தீயாக இரண்டு சாமம் எரிக்க வேண்டும். அடுப்புடனேயே விட்டுக் குளிர ஆறினபின் எடுத்தால் முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து:— தேன், நெய் இன்னும் சமயோசிதமான இளகம், நெய் ஆகியவைகளுமாகும்.

தீரும்நோய்கள்:— சுர நோய்கள், சன்னிகள், பக்கவாதங்கள், சூலைகள், கிரந்திகள், முதலிய எல்லா நோய்களும் தீரும்.

சரக்கொன்றை இலைச் சாறு 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து, மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள, சலோதர நோய் தீரும்.

விழலரிசியை அரைத்துப் பிழிந்த பால் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண குருதி எருவாய் நோய் தீரும்.

நிலவேம்புக் குடிநீர் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ணச் சன்னிபாத சுரம், சுவாச நோய் ஆகியவைகள் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ணக் கபவாத சுரம், கபம் வாதம் ஆகியவைகள் தீரும்.

நாகப்பழரசம் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இந்துப்புத் தூள் 2 குன்றிமணி எடை. இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ணப் பெருங்கழிச்சல், வயிற்றுப் போக்கு ஆகியவைகள் தீரும்.

கோட்டத் தூள் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண மேற்சுவாச நோய் தீரும்.

வேப்பிலைக்கொழுந்துச் சாறு $1\frac{1}{2}$ வராகனெடை, ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), ஆமணக்கெண்ணெய் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), மேற்படி செந்தூரம் $\frac{1}{4}$ வராகனெடை ($\frac{7}{8}$ கிராம்), இவை எல்லாவற்றையும் கலந்து அம்மை இரணத்தின்மீது தடவிவர, இரணம் சீக்கிரமாக உலர்ந்துபோய்த் தழும்புகள் மாறிப்போகும்.

மருத்துணவு :— புகை, புளி, புணர்ச்சி முதலியவைகளை நீக்கி, இன்னும் சமயோசிதமான மருத்துணவுகளும் வைக்க வேண்டியது.

95. தாம்பிரச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்)—6 வராகனெடை (21 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 18 வராகனெடை (63 கிராம்), தூய்மை செய்த இரசம் 12 வராகனெடை (42 கிராம்) தூய்மை செய்த இலிங்கம் 9 வராகனெடை ($31\frac{1}{2}$ கிராம்), அரிதாரம் 7 வராகனெடை ($24\frac{1}{2}$ கிராம்), மனோசிலை 4 வராகனெடை (14 கிராம்) எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்னர் இரசத்தையும் கெந்தகத்தையும் ஒன்றுபட அரைத்து நன்ருய்க் கறுத்தபின்பு தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். அரிதாரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்விதமே மனோசிலையையும், லிங்கத்தையும் தனித்தனியே பொடித்துத் தனித்தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு தாம்பிரப் பொடியைக் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்துப் பிறகு மற்ற தூள்களை எல்லாம் ஒன்ருகக் கலந்து கல்வத்தில் தாம்பிரப் பொடியுடன் சேர்த்துப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 8 சாமம் (24 மணி) அரைக்க வேண்டும். பிறகு ஒரே வில்லையாகச் செய்து ஒரு பீங்கான் தட்டிலிட்டு வெய்யிலில் உலர்த்த வேண்டும். வில்லையிற் கொஞ்சமும் ஈரமில்லாமல் முற்றும் உலர்ந்த பின்பு செந்தூரச் சட்டியில் மேற்படி வில்லையை வைத்து வாய் பொருந்தும்படியான மேற் சட்டியால் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்து எரிக்க வேண்டும். முதல் சாமம் தீபாக்கினியாகவும், இரண்டாம் சாமம் கமலாக்கினியாகவும், மற்ற இரண்டு சாமம் காடாக்கினியாகவும் எரிக்க வேண்டும். இவ்விதம் நான்கு சாமங்கள் சென்ற பிறகு அடுப்புடனேயே விட்டுக் குளிர ஆறினபின் எடுத்தால் முருக்கம்பூப் போன்ற வண்ணமுள்ள செந்தூரமாகி இருக்கும்.

இந்தச் செந்தூரமானது மிகவும் அருமையானது. இவ்வகை மருந்துகள் புகழ்பெற்ற மருத்துவர்களிடம் அவசியம் இருக்க வேண்டியது. இந்த செந்தூரமானது அநேகமான மாத்திரைகளிலும், சூரணங்களிலும், இளகங்களிலும் சேர்க்கப் படுகின்றன. இவற்றின் துணைமருந்து முதலியவைகளையும், இதனால் தீரும் நோய்களையும் எழுதுவதானால் அதற்கே தனியாக ஒரு நூல் வேண்டும். இந்தக் கருத்துக்களை எல்லாம் நாம் எடுத்துக் காட்டாமலே மருத்துவ அறிஞர்கள் தத்தம் பழக்கத்தின் காரணத்தினாலும், மதிநுட்பத்தாலும் தெரிந்து கொள்வார்களாகையால் சுருக்கமாக இங்கு எழுதி குறிப்பிடு கின்றோம்.

அளவு :— 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும்நோய்கள் :— வாதம் எண்பது, பித்தம் நாற்பது, சிலேத்துமம் தொண்ணூற்ருறு, சூலை பதினெட்டு, குட்டம் பதினெட்டு, குன்மம் எட்டு, கிராணி ஆறு, சோகை, வாயு முதலிய நோய்களெல்லாம் தீரும்.

மருத்துணவு :— உடல் வலிமை, நோய் வலிமை, முதலியவைகளுக்குத் தகுந்தபடி உசிதம்போல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

96. தாம்பிரச் செந்தூரம் (வேறு)

தாம்பிர அரப்பொடி 5 பலம் (175 கிராம்). இதனைக் குகையிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி பழச்சாற்றில் தோய்த்து ஆறினபின் எடுத்து முன்போல் காய்ச்சித் தோய்த்துக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கிக் காய்ச்சிக் காய்ச்சி ஏழு தடவை தோய்த்துக் கொள்ளவும், பிறகு பொடியை ஓட்டி விட்டு இளவறுப்பாக வறுத்துக் கல்வத்திலிட்டு அல்லிப்பூச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைக்க வேண்டும். (இது செவ்வல்லிப் பூவாயிருந்தால் மிகவும் மேன்மையாகும். அது அகப்படா விட்டால் வெள்ளை, கறுப்பு முதலிய அல்லிப் பூவைச் சேர்த்துக் கொள்ளலாம்.) பிறகு வில்லை செய்து உலர்த்தி, நன்ருய் உலர்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடு மூடி 6 சீலைமண் செய்து உலர்த்தி 300 பலம் (10 கிலோ 500 கிராம்) வறட்டியில் புடமிட வேண்டும். புடம் ஆறினபின் மருந்தை எடுத்து முன்போல் அல்லிப்பூச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைத்து வில்லைசெய்து முன்போல் உலர்த்தி முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கிச் செந்தூரமாகிற வரையில் புடமிட வேண்டும். ஆனால் 5-ஆம்

புடத்தில் ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) வீரத்தைச் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும். இன்னும் செந்தூரமாகும் தருணத்தில் அதாவது: மருந்தானது செந்தூரச் சாயலாய் இருக்குந் தருணத்தில் ஒரு வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) லிங்கத்தைச் சேர்த்து அரைத்துப் புடமிட்டுக் கொள்ள வேண்டும். இது சற்றுக் கடினமான முறையாய் இருந்தபோதிலும் இதனுல் உண்டாகும் நலன்கள் அநேகம். இளமையுள்ள உடலினர் முதலிய யாவருக்கும் இதனை பயன்படுத்தலாம். இது நோய்களைச் சாந்தமாகவும் நிச்சயமாகவும் கண்டிக்கிறது. ஆகையால், இவ்வகை மருந்தும் புகழ்பெற்ற மருத்துவர்களிடம் அவசியம் இருக்க வேண்டியது, ஏனெனில் பலவிதமான உடலினர் அவர்களிடம் மருந்துபெற வருவார்கள். இளமையான உடலுக்குச் சற்று வேகமான மருந்து ஏற்றுக்கொள்ளாதாகையால் அந்தக்காலத்தில் பயன்படும்படியாக இந்தவகை மருந்துகளையும் தகுந்த நிலையில் வைத்திருக்க வேண்டியது.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :— மேற்கண்ட முறைகளில் சொல்லப்பட்டு இருப்பவைகளேயாம், இன்னும் உசிதம்போல் தகுந்த துணை மருந்துகளிலும் பயன்படுத்தலாம்.

தீரும்நோய்கள் :— குட்ட நோய்கள், மேக நோய்கள், பெரு நோய்கள், குன்ம நோய்கள், வாத நோய்கள், வாயு நோய்கள் ஆகியவைகள் எல்லாம் தீரும். இன்னும் பலவித நோய்களும் தீரும். ஆகையால் அவைகளை பழக்கத்தால் நிச்சயித்து தெரிந்துகொள்ள வேண்டும். சுரம், சன்னி முதலியவைகளிலும் பயன்படுகிறது.

மருத்துணவு :— உசிதம்போல் இலகு பத்தியமாக வைத்துக் கொள்ளவும்.

97. அட்டலோக மாரண தாம்பிரச் செந்தூரம்

நாம் அயச் செந்தூர முறைகளில் சொல்லி இருக்கிற அட்டலோக மாரண அயச் செந்தூரத்தைப் போல தூய்மை செய்த தாம்பிரத்தைச் செந்துரம் செய்துகொள்ள வேண்டியது.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகள் எல்லாம் உசிதம்போலவும், நினைப்பிற்கு உகந்தவாறும் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது.

98. துவாதச லோகமாரண தாம்பிரச் செந்தூரம்

முன் அயச்செந்தூர வகையில் துவாதச லோகமாரண அயச் செந்தூரத்தில் சொல்லி இருக்கிற பாகப்படியே தூய்மை செய்த தாம்பிரத் தகட்டைச் செந்தூரித்துக் கொள்ள வேண்டும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய், மருத்துணவு முதலிய வைகள் எல்லாம் முன் தாம்பிரச் செந்தூரங்களில் சொல்லப் பட்டு இருப்பவைகளேயாம்.

99. தாம்பிரக் களங்கு

தூய்மை செய்த தாம்பிரம் 5 வராகனெடை ($17\frac{1}{4}$ கிராம்), தூய்மை செய்த கருவங்கம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த சேராங்கொட்டை 19.

செய்முறை :— தாம்பிரத்தைக் குகையிலிட்டு உருக்கி வங்கத்தைக் கொடுத்து இரண்டுஞ் சேர்ந்து உருகினபின் உருக்கு முகத்தில் ஒரு சேராங் கொட்டையைப் போட வேண்டும். தைலம் வாங்கிக் கொட்டை கரிந்துபோன பின் அதை நீக்கிவிட்டு மறு கொட்டையைப் போட வேண்டும். அதிலுள்ள தைலமெல்லாம் வாங்கி அது கரிந்துபோன பின் அதை நீக்கிவிட்டு மறு கொட்டையைப் போடவேண்டும். இவ்விதம் 19 கொட்டைகளையும் ஒவ்வொன்ருகக் கொடுத்து ஆறவிட்டு எடுக்க வெட்டையாய் இருக்கும். அதைக் கல்வத்தில் வைத்துப் பொடித்து துணியில் வடிகட்டி குப்பியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :— தேன், நெய், இன்னும் உசிதமான இளகங்கள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— குன்ம நோய்கள், மேக நோய்கள், பகந்தர நோய்கள், யானைத்தோல் குட்டம், வெட்டை நோய்கள், முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு :— நோய் வலிமை, உடலின் வன்மை ஆகிய வைகளுக்குத் தகுந்தபடி புளி, புகை, புணர்ச்சி முதலிய வைகளை நீக்கி இலகு பத்தியமாகவும், கடின பத்தியமாகவும் வைக்கவேண்டியது.

100. அயத்தாம்பிரச் செந்தூரம்

தூய்மை செய்த தாம்பிர அரப்பொடி 12 வராகனெடை (42 கிராம்), தூய்மை செய்த அய அரப்பொடி 2 வராக னெடை (7 கிராம்), தூய்மை செய்த கௌரிப் பாடாணம், தூய்மை செய்த லிங்கம், தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த கெந்தகம், தூய்மை செய்த அரிதாரம் இவை வகைக்கு 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), வெள்ளாட்டுப்பால் செல்லத் தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும் கெந்தகத்தையும் ஒன்றுபட நன்ருகக் கறுக்கிற வரையில் அரைத்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். அரிதாரத்தை மைபோல் பொடித்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். கௌரியையும் லிங்கத் தையும் சேர்த்தரைத்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண் டும். மேற்கண்ட இரண்டு அரப் பொடிகளேயும் கல்வத்தி லிட்டு மற்ற தூள்களேயும் அதனுடன் சேர்த்து மேற்படி ஆட்டுப்பாலேச் சிறுகச் சிறுக விட்டுக் கைவிடாமல் நான்கு சாமம் அரைக்க வேண்டும். பிறகு வில்லே செய்து உலர்த்திச் சட்டிக்குள் வைத்து மேற்சட்டி மூடி ஏழு சீலேமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினியாக எட்டுமணி நேரம் எரிக்க வேண்டும். அடுப்புடனேயே வைத்துக் குளிர ஆறின பின் எடுக்க முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணேமருந்து :— மேற்சொல்லி இருக்கிற தாம்பிரச் செந் தூரம். அயச் செந்தூரம் ஆகியவைகளின் துணேமருந்துகளில் உசிதம்போல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தீரும்நோய்கள் :—பாண்டு நோய்கள், சோகை நோய்கள், பெருவயிறுகள், குன்ம நோய்கள், மேகப்புள்ளிகள், புண்கள், புரைகள், படைகள், வாயுக்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி முதலியவைகளேத் தள்ளவேண்டும். உசிதம்போல இலகு பத்தியமாகவும், கடின பத்தியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டியது.

101. தாம்பிராதி மாத்திரை

தாம்பிரப் பற்பம் அல்லது தாம்பிரச் செந்தூரம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), சாலாமிசிறித் தூள் 2 பலம் (70 கிராம்), ருமிமஸ்

தகி தூள் 2 பலம் (70 கிராம்), இலவங்கப்பூத் தூள் 2 பலம் (70 கிராம்), மஞ்சள் கடுக்காய்த்தோல் தூள் 2 பலம் (70 கிராம்), எலுமிச்சம்பழச் சாறு 3 படி.

செய்முறை :— எல்லாத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து மேற்படி சாற்றைத் தெளித்து அரைக்க வேண்டும். சாறெல்லாம் சென்று மைபோல் ஆனபின் ஒரு வராகனெடையுள்ள ($3\frac{1}{2}$ கிராம்) மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :—1 மாத்திரை வீதம் காலை, மாலை இரண்டு வேளை யும் நாற்பது நாள் சாப்பிட வேண்டும்.

துணைமருந்து:—சருக்கரை, நெய், தேன் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :— வாத நோய்கள், மூலவாயு முதலிய வாயு நோய்கள், மேக நோய்கள், நச்சுக்கடிகள், பலவகைத் தடிப்புகள், புண்கள், குட்டங்கள், பெருங்கழிச்சல்கள், ஊறல் முதலிய பல நோய்கள் தீரும். பசிதீபனம் அதிகப்படும். தாது செழிப்பு, தாது விருத்தி முதலியவைகள் உண்டாகும்,

மருத்துணவு :— புளி, புகை, ஆகியவைகளைத் தள்ள வேண்டும்.

102. தாம்பிர பூபதி மாத்திரை

தாம்பிர பற்பம் அல்லது தாம்பிரச் செந்தூரம் 45 வராக னெடை ($157\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த இரசம் 10 வராக னெடை (35 கிராம்), தூய்மை செய்த நாபித் தூள் 8 வராக னெடை (28 கிராம்), பொரித்த வெண்காரப் பொரி 7 வராக னெடை ($24\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந் தகம் 6 வராகனெடை (21 கிராம்), தூய்மை செய்த அரிதாரம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த துத்தம் 4 வராகனெடை (14 கிராம்), தூய்மை செய்த துருசு 3 வராக னெடை ($10\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 2 வராகனெடை (7 கிராம்), துளசிச்சாறு, குப்பைமேனிச் சாறு, கரிசலாங்காணிச் சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும், கெந்தகத்தையும் ஒன்றுபட அரைத்து அதனுடன் துருசு, துத்தம் ஆகிய இரண்டையும் சேர்த்து அரைத்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். தாளகத்தைத் தனியே பொடித்து வைத்துக் கொள்ள வேண்

டும். வாளத்தைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் துளசிச் சாற்றை விட்டு அரைத்து வெண்ணெய்போல் ஆனபின் மற்றெல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு மேற்படி துளசிச் சாற்றை விட்டே அரைக்க வேண்டும். இந்தச் சாற்ருல் 4 சாமம் (12 மணி) அரைத்த பின்பு குப்பை மேனிச் சாற்ருல் 4 சாமம் (12 மணி) அரைக்க வேண்டும். அதன் பின்பு கரிசாலைச் சாற்ருல் 4 சாமம் (12 மணி) அரைத்து குன்றிமணி அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். வில்லை மாத்திரைகளாகச் செய்து தாம்பிர பூபதி எனப் பெயர் முத்திரை அழுத்தியும் வைத்துக் கொள்ளலாம்.

அளவு :— 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— அவரவர்களுக்குப் பழக்கமான குடிநீர், சுரசம் முதலியவைகளில் கொடுக்க வேண்டும். இன்னும் தேன், சருக்கரை முதலியவைகளிலும் கொடுக்கலாம்.

தீரும்நோய்கள் :— அறுபத்து நான்கு சுரங்கள், பதிமூன்று வகை சன்னிகள், சயங்கள், காச நோய்கள், வாத நோய்கள், வாயு நோய்கள், தோடங்கள் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— உசிதம்போல் வைத்துக் கொள்ளவும்.

அநுபோக வைத்திய நவநீதம்

முதற் பாகம் முற்றிற்று.

அனுபோக வைத்திய நவநீதம் முதற்பாகம்

பிழைதிருத்தப் பட்டியல்

பக்க எண்	வாக்கிய (வரி) எண்	பிழை	திருத்தம்
33	33	அர அரப்பொடி	அய அரப்பொடி
60	33	29. காந்தபற்பம் (வேறு)	44. காந்தபற்பம் (வேறு)
92	27	இருபத்தோராம் நாள்	இருபத்திரண்டாம் நாள்
93	4	முடி	மூடி
108	28	துடுப்பைப்போல	துடைப்பம்போல
121	29	முன்று	மூன்று
133	32	அரைக்கவேண்டும்	ஊறவைக்கவேண்டும்
136	3	தூய்மைபடுத்திக்	தயார்செய்து
154	12	6 வராகனெடை	அல்லது 6 வராகனெடை

24B
8.37